மொழி இயல்

டாக்டர் **மா. சு. திருமலை,** எம்.ஏ., டி.ஃபில். (கல்கத்தா),
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
இந்திய அரசு, மைசூர்.

டாக்டர் **கி. கருணாகரன்,** எம்.ஏ., பிள்ச்.டி.,
மொழி இயல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1

மா. சு. திருமலை
கி. கருணைகரன்
வெளியீடு — திருமதி. பிருந்தா முத்துசாமி
உரிமை ஆசிரியர்களுக்கு
முதல் பதிப்பு, 1970
விலை ரூ. 5—50

அச்சிட்டது
சிவகாமி அச்சகம்
அண்ணாமலைநகர்

காணிக்கை

மொழியியல் ஆராய்ச்சியில் எங்களுக்கு
ஊக்கமும் ஆக்கமும் தந்து நல்வழி காட்டும்
பேராசிரியப் பெருந்தகையோர்

வங்கம் தந்த மொழிநூல்
மூதறிஞர்
Dr. சுகுமார் சென்

தமிழகம் தந்த மொழியியல்
அறிஞர்
Dr. ச. அகத்தியலிங்கம்

ஆகியோர்க்கு எங்கள் முதல் நூலைப்
பணிவன்போடும் பெருமகிழ்வுடனும்
காணிக்கையாக்குகிறோம்.

மா. சு. திருமலை — கி. கருணாகரன்

முன்னுரை

மொழிகளை ஆராயுங் கலை மிகப் பழைய கலை. தமிழில் தொன்மையான நூல் தொல்காப்பியம் தானே! ஒருகாலத்தில் உலகத்தில் பல இடங்களில் மொழிகளை ஆராய்வது ஒன்றுதான் பெரிய கலையாகவும் இருந்திருக்கிறது. தொன்றுதொட்டு வந்த மொழியியல் கலை இன்று பல அறிவியல்களின் தொடர்பால் எவ்வளவோ உருமாறித் தோற்றம் தருகிறது.

இன்றைய நிலையில் மொழியியலை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றை விளக்க மொழியியல் என்றும், வரலாற்று மொழியியல் என்றும், ஒப்புமை மொழியியல் என்றும் கூறலாம். இவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உடையன. ஒன்றைப் புரிந்துகொள்ள மற்றிரண்டின் உதவியும் தேவை, என்றாலும் விளக்க மொழியியலின் இன்றியமையாமையை மொழியியலார் ஒத்துக்கொள்வார்கள்.

இந்நூல் விளக்க மொழியியலின் ஒரு சில கொள்கைகளை முடிந்த அளவு தெளிவாக எளிய தமிழிலே கூற முயல்கிறது. தமிழிலே கலை நூற்கள் எழுதப்பட வேண்டும் என்ற கொள்கையில் பிடிப்புள்ள நாங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழில் மொழியியல் பற்றி எழுதவேண்டும் என்று விரும்பினேம். இன்று அந்த விருப்பம் நிறைவு பெறுகிறது.

இந்நூல் பலருக்குப் பலவகைகளில் பயன்பட லாம்; பயன்படாமலும் போகலாம். தமிழ்நாட்டின் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும், கல்லூரி–பல்கலைக் கழக மாணவர்களும், பலகலைகளைத் தெரிந்துகொள்ள விரும்பும் பொதுமக்களுமே இந்நூலை எழுதும் போது எங்கள் கண்முன் நின்றவர்கள், அவர்களுக்கு மொழி யின் பல இயல்புகளை, உண்மைகளை, அமைப்புக்களைப் பற்றி எளிய தமிழில் சொல்ல வேண்டும்; அதோடு மொழியை அணுகி ஆராய என்னென்ன முறைகள் இருக்கின்றன என்பதையும், இம்முறைகளை உண் டாக்குவதிலும் பயன்படுத்துவதிலும் ஆராய்ச்சியாளர் கள் எவ்வளவு வேறுபடுகிறார்கள் என்பதையும் சொல்ல வேண்டும்; என்ற இந்த அடிப்படையில்தான் இந் நூல் எழுந்தது.

விளக்க மொழியியலைப்பற்றி இன்னும் எவ் வளவோ சேர்த்திருக்க வேண்டும் என்பதை நாங்கள்

நன்றுக உணர்கிறேம். ஆனால் புத்தக அளவும் செலவும் பலவற்றை விழுங்கிவிட்டன; போகப் போகப் பிற பதிப்புக்களில் சேர்க்க முயல்வோம்.

இந்நூலில் ஆசிரியர் மா. சு. திருமலை எழுதிய பகுதிகள் அவர் அமெரிக்காவில் இருக்கும்போது எழுதியவை. மொழியியலில் உயர்கல்விக்கு ஏற்பாடு செய்து எல்லாவற்றையும் செவ்வனே கவனித்துக் கொண்ட கிழக்கு-மேற்கு நிலையத்தார்க்கும், ஹவாய்ப் பல்கலைக்கழகத்தார்க்கும் பேராசிரியர்கள் ஸ்டான்லி ஸ்டரோஸ்டா, அனடோல்லியோவின் ஆகியோர்க்கும் மிக்க நன்றி.

இந்நூலை எழுதும் போதும் அச்சிடும்போதும் பலர் பலவகைகளில் உதவினர்கள். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி. அவர்களில், குறிப்பாக, இந்நூல் சிறப்பாக அமையப் பல அரிய கருத்துக்களையும், வழிமுறைகளையும், நல்லுதவிகளையும் வேண்டும் போதெல்லாம் தந்து ஊக்கமூட்டிய அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம், M. A., Ph. D. (Kerala), Ph. D. (Indiana), அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த அன்பு நன்றி.

இந்நூல் அச்சாவதற்கு முன்னர், கையெழுத்துப் பிரதிகளைப் படித்துப் பல நல்ல கருத்துக்களைக் கூறி, நூல் அச்சாகும்போது பல்வகைகளில் உதவி செய்த அன்பு நண்பர்கள் டாக்டர் இராம. சுந்தரம், M. A., Ph.D. அவர்களுக்கும், திரு. பொன்.கோதண்டராமன், M.A,, B.O.L.. அவர்களுக்கும், அச்சுப் படிகளை எங்களுடன் பார்த்துத் திருத்தியுதவிய அருமை நண்பர்கள் திரு. க. பாலசுப்பிரமணியன், M.A.,B.O.L. அவர்களுக்கும், டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph.D. அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி. குறுகிய காலத்தில் நூலைச் செவ்வனே அச்சேற்றி உதவிய சிவகாமி அச்சகத்தார்க்கு எங்கள் நன்றியும் பாராட்டுக்களும்.

இந்தியமொழிகளின் நடுவண் நிலையம், மா. சு. திருமலை
இந்திய அரசு, மைசூர்.

மொழியியல்துறை, கி. கருணாகரன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

உள்ளுறை

காணிக்கை

முன்னுரை

உள்ளுறை

1. மொழி 1

2. ஒலியியல் 39

3. ஒலியன் இயல் 63

4. சொல்லியல் 123

5. சொற்றொடர் இயல் 165

6. மொழிப் பரிமாற்றம் 210

7. எழுத்து முறைகள் 226

8. மொழிகளைப் பாகுபடுத்தும் முறைகள் 237

9. கிளைமொழியியல் 256

கலைச்சொல்லகராதி

உதவிய நூல்கள்

1. மொழி

"இயற்கையிலே கருத்தாங்கி
இனிமையிலே வடிவெடுத்துச்
செயற்கைகடந் தியலிசையில்
செய்நடமே வாழியாரோ" — எனத்

தம் தாய்மொழியாம் செந்தமிழைத் தமிழ்த்தென்றல் திரு. வி. க. வாயார வாழ்த்துகிறார்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" — என்று தமிழை வாழ்த்தித் தூது விடுகிறார் ஒரு புலவர். உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்று நம் நெஞ்சம் நெகிழும்படி, நம் மனம் கலங்கும்படி எத்தனையோ வீரர்கள் தமிழுக்காகத் தீக்குளித்து விட்டார்கள்!

இத்தகைய புகழ்மாலைக்கும், தியாகத்திற்கும் உரித்தாகித் திகழ்கிறதே மொழி! ''மாவும் மாக்களும் ஐயறிவினவே; மக்கள் தாமே ஆறறி வுயிரே என்ற்'' மொழி இயலின் தலைவர் தொல்காப்பியர். ஆறறிவின் அடையாளம், தெளிவான அடையாளம், மொழியல் லாமல் வேறென்ன? மொழி இல்லையேல் மனித சமுதாயம் இல்லை! மொழி இல்லையேல் மனித நாகரி கம் இல்லை! மொழி இல்லையேல் மாடனும் வெல்வ தில்லை!

1. மனித மொழியும் விலங்குமொழியும்

மொழியாலே நாம் செய்திப் பரிமாற்றம் செய்கி ரோம். ஆனால் இச் செய்திப் பரிமாற்றத்தை ஐயறிவு படைத்த விலங்குகள் செய்யவில்லையா என்ன? காகா என்று ஒரு காகம் கரைய, காக்கைகள் கூட்டம் கூட்டமாய்க் குழுமுவதைக் காண்கிறோமே! ஒரு நாய் குரைக்கத் தொடங்கினால் தெரு நாய் அனைத் தும் ஒரு சேரக் குரைப்பதைக் கேட்டிருக்கிறோமே! தேனீக்கள் தேனுள்ள மலரைப் பிற தேனீக்களுக்குக் காட்டித்தர ஆட்டம் ஆடிச் செல்வது மொழி இல்லையா?

உயிர் நூல் அறிஞர்கள் உடல் அமைப்பின் முறைகளைக் கொண்டு பிற விலங்குகளில் இருந்து மனிதன் உருப் பெற்ற கதையை விவரிக்கிறார்கள். நீர்வாழ் உயிர்கள், நிலம் வாழ் விலங்குகள் என்ப் பலவாறு பரந்து கிடக்கும் உயிர்க் கூட்டத்தில் கொஞ் சம் கொஞ்சமாக மனித உடல் உருப்பெற்றதைப்

போல, மனித மொழி தோன்றிய கதையை விவரிக்க முடியுமா? காகம் கத்துவதிலிருந்து, புலி உறுமுவதிலிருந்து, நாய் குரைப்பதிலிருந்து, தேனீக்களின் ஆடல் ஒலியிலிருந்து, குரங்கின் ஆர்ப்பரிப்பிலிருந்து மனித மொழி தோன்றியதாகக் காரணகாரியத் தொடர்போடு விளக்க முடியுமா? விலங்குகளுடைய செய்திப் போக்குவரத்திலிருந்து மனிதனுடைய மொழி தோன்றிய கதையை விவரிக்கமுடியுமா?

இதுவரை நடந்துள்ள ஆராய்ச்சிகள் பலவும் மேற்சொன்ன முயற்சி முடியாத காரியம் என்றே சொல்கின்றன. மனித மொழிக்கும் பிற விலங்குகளுடைய செய்திப் போக்குவரத்திற்கும் பல வேற்றுமைகள் — மிக அடிப்படையான வேற்றுமைகள் — இருக்கின்றன. இவற்றை விலங்குகளுடைய செய்திப் போக்குவரத்தோடு ஒப்பிட்டு, அதன் அடிப்படையில் மொழி விலங்குகளிடம் இருந்து தோன்றியதாக விவரிக்க முடியாது என்றே தோன்றுகிறது.

மனித மொழியின் முக்கிய இயல்புகளை நம் அன்றாடப் பேச்சில் இயற்கையாகப் பயன்படுத்துகிறோம். இவ்வியல்புகள் நமக்கு இயற்கையாகப் போய்விட்டன என்பதால் இவற்றை நாம் உணர்ந்தோ உற்றோ கவனிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, நம் மொழியில் ஒலிகள் இருப்பதை அறிவோம். உடல் உறுப்புக்களின் உதவியால் ஒலிகள் பிறக்கின்றன. கண்மூடித் திறப்பதற்குள் எவ்வளவு ஒலிகள் நிறைந்த சொல்லைச் சொல்லி விடுகிறோம். ஒலிகளை

மட்டும் பயன்படுத்தாமல் ஒலிகளைச் சேர்த்து ஒன்றுக் கிச் சொல்லாகப் பயன்படுத்தும் திறமையும் நம்மிடம் இருக்கிறது. அது மட்டுமா? சொற்களை அடுக்கி அவற்றை வாக்கியமாகப் பயன்படுத்துகிற திறமை வேறு நமக்கு இயல்பாகவே தோன்றிவிடுகிறது.

மனித மொழியின் அமைப்பு மிகவும் சிக்கல் வாய்ந்த அமைப்பு ஆகும். மொழியின் எப்பகுதியை யும் எடுத்து அலசிப்பாருங்கள். அப்பகுதியின் உறுப் புக்கள் ஒன்றினுள் ஒன்றாய், ஒன்றினுள் பலவாய் அடங்கி முழுமை பெற்று: இருப்பதைக் காண்பீர்கள். அந்த முழுமைக்குள் ஒழுங்கு இருக்கும்; உறுப்புக்கள் தனித்தனியாய் இருக்கும். ஆனால் பயன்படும் போதோ அவை ஒருமையாய் இயங்கும்.

ஒரு மனிதனுக்குத் தெரிந்த வாக்கியங்களுக்குக் கணக்கு உண்டா? ஆனால் விலங்குகள் செய்திப் போக்குவரத்தில் எண்ணிவிடக்கூடிய செய்திகள் தானே இருக்கின்றன! நாமோ இதுவரை கேட்டி ருக்க முடியாத வாக்கியங்களைக் கண நேரத்தில் உண்டு பண்ணி விடுகிறோம். விந்தையான பொருள் களைத் தருகிற வாக்கியங்களைக் கூட நாம் அறிந்து கொள்கிறோம். மழை காய்கிறது என்பதைக் கூட நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. வெயிலில் நனைந்தேன் என்ற வாக்கியம் வேடிக்கையாகத் தோன் றினாலும் இது மொழிதான் என்பதை உணர்ந்து கொள்கிறோம். இவ்வாறு விதவிதமாகவும், விந்தை யாகவும் கணக்குவழக்கில்லாமல் வாக்கியங்களை உற்

பத்தி செய்யும் திறமை மனித மொழிகளின் முக்கிய இயல்பு ஆகும்.

இன்னோர் இயல்பைக் கவனியுங்கள். இவ்வியல் பின்படி மனித மொழிகளுக்கும் புற உலகத்திற்கும் இரண்டறக் கலந்த உறவு இருக்க வேண்டியதில்லை. மலை என்ற சொல்லுக்கும் உண்மையிலேயே கல்லும், மண்ணும், காடும், மேடும் கலந்த மலையுருவத்திற்கும் என்ன தொடர்பு சொல்ல முடியும்? நாம் கண்ணால் காண்கிற மலையின் உருவத்தையோ இயல்பையோ அப்படியே எழுத்திலோ ஒலியிலோ எதிரொலிக்க முடியுமா? ஆனால் மலையின் இயல்பை மலை என்ற சொல்லிலே ஏற்றி அன்றாட வாழ்வில் பயன் படுத்துகிறோம். அதாவது ஒன்றைக் குறிப்பதற்காக அதைச் சொல்லிலே உருவகம் செய்து விடுகிறோம். ஊமையாய்ப் பிறந்தவர்கள் நம் ஊரில் சாப்பிட வேண்டும் என்பதற்கு அடையாளமாகக் கைக்கும் வாய்க்கும் தொடர்பு படுத்திக் காட்டுவதைக் கண்டிருக்கிறோம். ஆனால் பேசத் தெரிந்த நாமோ பசிக்கிறது; சாப்பிட வேண்டும் என்று வாயாலே ஒலி செய்து, சொல்லாகச் சமைத்து, நம் உணர்வை வெளிப்படுத்தி விடுகிறோம். நம் உணர்ச்சியை உணர்ச்சியின் மூல மாகவே வெளிப்படுத்தாமல் பேச்சிலே, சொற்களால் வெளிப்படுத்தி விடுகிறோம்.

மற்றுமோர் இயல்பும் மனித மொழிக்குச் சிறப்பாக அமைந்திருக்கிறது. இவ்வியல்பால் நேற்று நடந்த செய்தியை இன்று நம்மால் சொல்ல முடி

கிறது. நாளை நாம் என்ன செய்வதாக இருக்கிறோம் என்பதைப் பற்றியும் இன்றே நம்மால் பேச முடிகிறது. இல்லாத ஒன்றைப் பற்றியும் பேச முடிகிறது; இருக்கிற ஒன்றைப் பற்றியும் பொய் சொல்ல முடிகிறது. அதாவது சொற்களைப் பல்வேறு காலநிலைகளில் பயன்படுத்துகிற திறமை நம் மொழியிடம் அமைந்து இருக்கிறது. இது எளிதாகத் தெரியலாம். ஆனால் நம் அன்றாட வாழ்க்கை இத்தகைய மொழி இயல்பால்தான் மிகவும் எளிதாகி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நமக்கு இன்று தெரிந்த செயல்களை, நாம் இன்று உணர்ந்த உணர்வுகளை, நம் ஆராய்ச்சியின் முடிவுகளை நாளை வருகிறவர்களுக்குச் சொல்கிற வசதியை மனித மொழி பெற்றிருப்பதும் இந்த இயல்பாலேதான். தொல்காப்பியர் காலத்தில் தமிழனின் இலக்கிய இலக்கண நிலை எப்படி இருந்தது என்பதையும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் திருவள்ளுவர் மூளையில் தோன்றிய அறிவு விளக்கத்தையும் இன்று நாம் உணர்ந்து பயன்படுத்த மொழியின் இந்த இயல்பே வசதி செய்தது. இப்படி, ஒரு தலைமுறையின் அறிவு இன்னொரு தலைமுறைக்குப் போய்ச் சேருகிற முறைதான் இன்றைய நாகரிக வளர்ச்சிக்கு ஒரு காரணம் என்றும் சொல்ல வேண்டும்.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அறிந்து கொள்கிற செய்திகள் பல. ஒருவன் நல்ல உடை அணிந்தால், மற்றொருவன் அந்த உடை போலவே தானும் அணிய வேண்டும் என்று நினைப்பது இயல்பாக இருக்கிறது. அதைப்போலவே அறிஞர் அண்ணாவின்

பேச்சில் மயங்கி அவர் நடையைப் பின்பற்றித் தாமும் பேச வேண்டும் என்று நினைப்பவர்களும் நினைத்தவர்களும் ஏராளம். அதன் விளைவாக 'தி.மு.க. பாணி' என்ற கம்பீரப் பேச்சுநடை தோன்றிவிட்டதையும் நாம் அறிவோம். இந்தப் 'போலச் செய்யும்' இயல்பு மனித இனத்தின் முக்கிய இயல்பு. இது மொழியிலே நிறைய இருக்கிறது. இந்தப் 'போலச் செய்யும்' இயல்பினால் பேசுபவர், கேட்பவர் இருவருக்குள்ளும் பரிமாற்றம் மிக எளிதிலே நடைபெறுகிறது என்றும் சொல்லலாம். நமக்கு நாமே பேசிக்கொள்ள முடிகிற திறமையும் இருக்கிறது அல்லவா? நாம் பேசுபவராக இருப்பது போலவே கேட்பவராகவும் இருக்கிறோம்.

மேற்சொன்ன இயல்புகளோ மனித மொழியின் சிறப்பு இயல்புகள் என்று சொல்லலாம். இவ்வியல்புகள் விலங்குகளிடம் காணப்பட்டாலும் எல்லா இயல்புகளும் ஒரே விலங்கு இனத்திடம் காணப்படவில்லை; காணப்படுகிற இயல்புகளும் குண அடிப்படையில் மிகவும் வேறுபடுகின்றன என்றே சொல்லவேண்டும். அதாவது மனிதனுடைய மொழி இயல்பும் விலங்குகளுடைய செய்திப் போக்குவரத்து இயல்பும் குண அடிப்படையிலும் இயல்புகளின் எண்ணிக்கை அடிப்படையிலும் வேற்றுமைப்படுகின்றன.

2. மொழியின் தோற்றம்

அப்படி என்றால் மனித மொழி தோன்றியதை எவ்வாறு விளக்குவது? மனித மொழி தோன்றிய

கதை எல்லாருக்கும் புதிராகவே இருந்தி வந்திருக் கிறது. இப்புதிரை விடுவிக்கவேண்டிப் பல சமுதாயங் களிலும் விளக்கம் தோன்றி இருக்கிறது. சைவ சமயத் தில் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தில் இருந்து மொழி தோன்றியதாகக் கருதுகிறார்கள். யூதர்கள் மொழி யைக் கடவுள் தந்தார் என்று கருதிக்கொண்டு ஏன் உலகமெல்லாம் வெவ்வேறு மொழி பேசுகிறார்கள் என் பதற்குப் பாபல் கோபுரத்தைக் காட்டுகிறார்கள். சமுதாய ஒப்பந்தமே காரணம் என்கிறார் ரூசோ. இவையும், இன்னும் பலவும் மொழி தோன்றியதற்குக் காரணமாகச் சொல்லப்படுவதை நாம் அறிகிறோம். ஆனால் இந்நம்பிக்கைகள் மனிதனின் உட்புறச் சொத் தான மொழியின் தோற்றத்திற்கான, காரணத்தை மனிதனுக்கு வெளிப்புறத்திலே காண முயல்கின்றன; முயன்று தோற்றன என்றே சொல்லலாம்.

மொழியின் தோற்றத்தை அறுதியிட்டுக் காட்டு வது இன்றிருக்கும் ஆராய்ச்சிநிலையில் முடியாத காரியம் ஆகும். ஏனென்றால் மொழியின் தோற்றத்தைக் கணிக் கிற முயற்சியில், நாம் கண்கூடாகக் கவனிக்க முடி கிறவை மிகக் குறைவாகவே இருக்கும். மனித நாகரி கம் குறைந்தது பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருந்து வந்திருக்கிறது. இந்த ஆண்டுகளில் மனிதனி டம் மொழி இருந்திருக்கிறது என்று எடுத்துக்கொள் வதில் ஏதும் தவறு இல்லை. அதாவது மனிதனும் மொழியும் சேர்ந்தே இருந்து வந்திருக்கிறார்கள் என்று நாம் சொல்லலாம்.

திட்டவட்டமாக நாம் மொழி தோன்றியதின் காரணத்தைச் சொன்னாலும் அவை பெரும்பாலும் ஊகங்களாகவே இருக்கும். ஊகங்கள் மனிதர்க்கு மனிதர் வேறுபடும் தன்மை வாய்ந்தவை என்பது நாம் எல்லாரும் அறிந்ததே. அறிவியல் அடிப்படையில் மொழியை ஆராய்கிறவர்கள் நிறுவப்பட முடியாத, தக்க காரணங்கள் இல்லாத ஊகங்களை ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்பது நாம் அறிந்ததே.

இதனால் மொழியின் தோற்றத்தைப் பற்றியே நாம் ஒன்றும் சொல்லக்கூடாது, சொல்ல முடியாது என்று பொருளில்லை. மொழி எவ்வாறு இயங்குகிறது, எப்படிப் பயன்படுறது என்பதை அறிந்து கொள்வது நாம் கேட்கிற கேள்வியை இன்னும் குறுகலாக்கும்.

குழந்தைகளிடம் மொழி தோன்றுகிற விதத்தை ஆராய்வது தனி மனிதர்களிடம் எப்படி மொழி தோன்றி வளர்கிறது என்பதைப் புரிந்துகொள்ளப் பயன்படும்.

3. குழந்தையும் மொழியும்

விலங்குகள் போலவே பிறந்ததும் குழந்தை கத்துவதைக் கேட்கிறோம். குழந்தையின் மொழியில் முதலில் பொருளில்லை; பூனைக்குட்டியின் மியாவுக்கும் நாய்க்குட்டியின் குரைப்புக்கும் குழந்தையின் அழு

கைக்கும் பொருள் நிறைந்த வேற்றுமை எதுவும் இல்லை என்றே சொல்லவேண்டும். இப்படி விலங்குகளில் இருந்து வேறுபடாத குழந்தையின் குரல், நாளடைவில் முதிர்ந்து, செம்மையடைந்து, பொருள் நிறைந்து மொழியாக மலர்கிற செயலை நாம் ஆராய்வது மொழி தோன்றிய கதையை, மொழி தோன்றிய முறையைச் சொல்ல உதவலாம்.

குழந்தையிடம் மொழி தோன்றி வளர்வதை மனநூல் ஆராய்ச்சியாளரும் மொழி இயல் அறிஞர்களும் பன்னெடுங்காலமாக ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சியின் விளைவாகப் பல உண்மைகள் தெரியவந்தபோதிலும் முடிவுகளை விளக்குவதில் அறிஞர்களுக்குள் பெரிய வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வேறுபட்ட கருத்துடையோரில் இரண்டு முக்கியக் குழுவினரைக் குறிப்பிட வேண்டும். முதல் குழுவினர் விலங்குகள் பல செயல்களைக் கற்பதற்கும் குழந்தையிடம் மொழி தோன்றி வளர்வதற்கும் வேற்றுமை அதிகம் இல்லை என்றே நினைக்கின்றனர். அதாவது மொழியைக் குழந்தை தன்னுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையாலேயே கற்றுக்கொள்கிறது என்று கருதுகின்றனர். இவர்களுடைய கருத்துப்படி, சுருக்கமாகச் சொல்லப்போனால், குழந்தையிடம் மொழிக்கென்று தனித்திறமை இல்லை என்பதும், அப்படியே இருக்கிற தனித்திறமையும் குறிப்பிடத்தக்க அளவு மொழியைப் பெறுவதிலோ வளர்ப்பதிலோ பெரும் பங்கு பெறவில்லை என்பதும் ஆகும். இவர்கள்

இப்படி நினைப்பதற்கு தக்க பல காரணங்கள் இருக்கின்றன என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் இரண்டாவது குழுவினர் விலங்குகள் கல்விக்கும் குழந்தைகள் மொழியைப் பெறுவதற்கும் நிறைய வேற்றுமை இருக்கின்றது என்று நினைக்கிறார்கள். மனிதனுடைய மொழி உற்பத்தித் திறமையையும், யாரும் முறைப்படிச் சொல்லித் தராவிட்டாலும் குழந்தை மொழியைப் பேசுவதையும் இவர்கள் ஆதாரமாகக் காட்டுகிறார்கள். குழந்தை தானாகவே பேசத் தொடங்குவதால் குழந்தைகளுக்குள்ளேயே மொழியைக் கற்கும் ஆற்றல் இருக்கிறது என்கிறார்கள். இந்த ஆற்றல் மனிதனுக்கே உரியது. இந்த ஆற்றலை விளங்கிக் கொள்வதில்தான் நம் மொழியைப் பற்றிய அறிவின் முன்னேற்றம் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள்

4. குழந்தையின் உடல்நிலை

உலகமெல்லாம் குழந்தை பேசத் தொடங்கும் பருவம் பதினெட்டு முதல் இருபத்து எட்டு மாதங்களுக்குள்ளேதான் வருகிறது. அதாவது எல்லாச் சமுதாயங்களிலும் குழந்தை 18 முதல் 28 மாதத்திற்குள்ளே பேசத் தொடங்கி விடுகிறது. இதற்கு நாம் என்ன காரணம் சொல்ல முடியும்? குழந்தையைப் பராமரிக்கும் தாய்மார்களுக்குத் திடீரெனக் குழந்தையைப் பேச வைக்கவேண்டும் என்று தோன்றிவிடுகிறதா? அல்லது குழந்தையின் தேவை

18 முதல் 28 மாத காலத்தில் மாறிவிடுகிறதா? அதாவது பால்குடி மறக்கத் தொடங்குவதாலோ, சுற்றியிருப்பதை உற்றுக் கவனிக்கத் தொடங்கி, முகம் பார்த்துச் சிரிக்கப் பழகுவதலோ அதன் தேவை மாறி விடுகிறதா? அல்லது அதன் உடல் அமைப்பில் மாற்றங்கள் தோன்றுவதோடு மொழியும் தோன்றி விடுகிறதா?

குழந்தையின் தேவை மாறுகிறது என்று சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்தத் தேவையைக் குழந்தை தன் பேச்சின் மூலமாகத்தான் வெளிக்காட்ட வேண்டும் என்றில்லை. பேச்சின் மூலமாகத்தான் வெளிக்காட்ட வேண்டும் என்றால் பிறவியில் ஊமையான குழந்தைகளின் கதி என்ன? பிறவியில் ஊமையானவை குழந்தைகளாக இருக்கும்போது தங்கள் தேவைகளைச் செம்மையாக வெளிப்படுத்தி விடுகின்றன அல்லவா? தாய்மாரின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது என்பதும், குழந்யின் சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுகிறது என்பதும் ஓரளவுதான் உண்மை. அந்த மாற்றங்களும் வளர்கிற குழந்தையின் வளர்ச்சிக்குத் தகுந்தபடிதான் ஏற்படுகின்றன. குப்புற விழத் தெரியாத குழந்தையிடம் நாம் நடந்து கொள்கிற முறை வேறு, குறு நடை பயிலத் தொடங்கும் குழந்தையிடம் நாம் நடந்து கொள்கிற முறை வேறு என்பதை விவரிக்க வேண்டியதில்லை.

18 முதல் 28 மாதத்தில் குழந்தையிடம் ஏற்படும் மாற்றங்கள் என்ன? முதலில் அதன் உடல்நிலையில் ஒரு முதிர்ச்சி ஏற்படுவதை நாம் எல்லோரும் காண்கிறோம். முதல் நான்கு மாதத்தில் குழந்தையின் தலையாட்டம் நின்று விடுகிறது. சுற்றிலும் தலையணையை அடை கொடுத்தால் குழந்தை வேடிக்கையாக, நாணல் சாய்வது போல, உட்கார்ந்து விடுகிறது. 9 மாதத்திற்குள்ளே பிள்ளையார் போல புத்தர் போலச் சம்மணம் கூட்டி அமர்ந்துவிடும் அழகை நாம் இரசிக்கிறோம். அது தானாக நிற்கப் பழகும் முயற்சி கண் கொள்ளாக் காட்சி. தன் பெருவிரலைத் தரையில் அழுக்கப் பழகிக் கொண்டு அதன் அடிப்படையில் குழந்தை எழுந்து நிற்க முயல்கிறது.

12 முதல் 18 மாத காலத்திற்குள்ளோ குழந்தை அவ்வப்போது எழுந்து நிற்கவும் சடாரென்று கீழே விழுந்து அழவும் செய்கிறது. அதற்குள்ளே ஊர்ந்து ஊர்ந்து தவழும் நடையும், ஒய்யாரச் சிரிப்பும் ஏற்பட்டு விடுகின்றன. வீட்டு ரேழியைப் பிடித்துக் கொண்டு ஒருச் சாய்த்து நடப்பதை இச் சமயத்தில் நாம் கண்டு மகிழ்கிறோம். நாம் அதன் கையைப் பிடித்துக் கொண்டால் குழந்தை தன் பிஞ்சுக் கால்களை முன் தூக்கி வைத்து ஒன்றிரண்டு அடி நடந்தும் விடுகிறது. பொருள்களைப் பிடித்துக் கொள்கிற திறமையும், உற்று உணர்கிற இயல்பும், பிடியைத் தளர்த்தி விடுகிற சாமர்த்தியமும் குழந்தையிடம் இந்த சமயத்தில் ஏற்பட்டுவிடுகின்றன.

18 முதல் 21 மாத காலத்திற்குள்ளோ குழந்தை நடை பழகிவிடுகிறது. அதற்குத் தளராத நடையும் ஏற்பட்டு விடுகிறது அதோடு முன்னேக்கி நடையும் போட முடிகிறது. அதிகச் சிரமம் இல்லாமல் குழந்தை தானாகவே தன் இடத்தில் அமருகிறது. மேலும் இப்போது குழந்தையால் பின்னேக்கி ஊர்ந்து செல்ல முடியும். ஆனால் பொருள்களை அவ்வளவு திறமையாக அதனால் எறிய முடிவதில்லை.

அடுத்த நிலை 24 முதல் 27 மாதத்திற்குள்ளே வருகிறது. இப்போது குழந்தையால் ஓடக்கூட முடியும். ஆனால் திடீரென்று வலப்புறமோ, இடப்புறமோ அல்லது பின்புறமோ திரும்புவதென்றால் சங்கடம். டபக் என்று கீழே விழுந்து விடும். என்றாலும் இடது கால் வலதுகால் என்று அழகாக மாற்றி வைத்து நடக்க முடியும். அதைப்போல நடப்பதில் இருந்து திடீரென்று முழங்கால் போட முடியும். முழங்கால் போடுவதைப் போலவே அழகாக அமரவும் முடியும். படிக்கட்டுகளில் ஏறி இறங்கும் திறமைகூட வந்து விடுகிறது; ஆனால் நம்மைப்போல படிக்கு ஒருகால் வைத்து நடக்கத் தெரியாது!

30 முதல் 33 மாதத்தில் குழந்தையின் கைகளும் விரல்களும் நல்ல திறமை பெற்று விடுகின்றன. பொருள்களைத் தெரிந்து கொள்வதிலும் அவற்றை எடுப்பதிலும், பயன்படுத்துவதிலும் முன்னேற்றம் காணுகிறோம். முன்பு பேனாவைக் கொடுத்தோம் என்றால் அதைப் பிடிப்பதிலோ கோடு கிறுக்குவதிலோ

அவ்வளவாக லாவகம் இல்லை. இப்போதோ கிறுக்குவது கோடாக இருந்தாலும் உடைப்பது நம் பேனாவாக இருந்தாலும் அதைச் செயற்படுத்துவதில் தெளிவு ஏற்பட்டு விடுகிறது.

கடைசியாக 35 முதல் 39 மாதத்திற்குள்ளே குழந்தையால் அழகாக ஓட முடிகிறது. நினைத்த மாத்திரத்தில் வேகத்தைக் கூட்டவோ குறைக்கவோ குழந்தையால் இப்போது இயலும்; திடீரென்று வளைந்து நெளிந்து ஓட்டத்தில் சிரமமில்லாமல் குழந்தையால் திரும்ப முடியும். இப்போது நம்மைப் போலவே படிக்கட்டில் ஒருகால் வைத்து இன்னொரு கால் எடுத்து ஏழில் தரும்படி நடக்க முடியும். பன்னிரண்டு அங்குலத்தை ஒரே குதியில் தாண்டி விடக் கூட முடியும்! முச்சக்கரச் சைக்கிளை அது விடும் அழகை வருணிக்கவும் வேண்டுமா? அது மட்டுமா, சில வினாடிகளுக்குக் குழந்தை ஒற்றைக் காலில் நின்று தவம் கூடச் செய்ய முடியும்!

5. குழந்தையிடம் மொழிதோன்றும் கதை

மேற் சொன்ன மாற்றங்களை நாம் அன்றாட வாழ்வில் நம் குழந்தைகளிடம் கண்டு மகிழ்கிறோம். இம்மாற்றங்கள் பல நிலைகளில் குழந்தையிடம் தோன்றுவதைப் போலவே மொழியும் பல நிலைகளில் குழந்தைகளிடம் தோன்றுகிறது என்று அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். இரண்டு நிலைகளும் இணைந்து தோன்றுகிற ஒற்றுமை விந்தையாக இருக்கிறது.

முதல் நான்கு மாதகாலத்தில் குழந்தை என்ன பேசுகிறது? எதுவும் தெளிவில்லை. வாயை ஆட்டுகிறது; நாக்கைக் குதப்பிக் கொண்டு கொழகொழாப் பேச்சு பேசுகிறது. ஆறு முதல் ஒன்பது மாத காலத்தில் மா, பா என்று மாற்றி மாற்றிச் சொல்கிற நிலையைக் காண்கிறோம். ஆனால் இப்போது பொருள் ஏதும் இல்லாவிட்டாலும் அதன் மழலையில் தெளிவு இருக்கிறது. ஏதோ ஆனந்தமாகத் தெய்வங்களிடம் அவர்கள் மொழியில் பேசிக் கொண்டிருப்பதாக நாம் எண்ணுகின்றோம். இப்போது அதன் நிலை வழவழா என்று ஓயாமல் பேசிக் கொண்டிருப்பது.

அடுத்த நிலையில், 12 முதல் 18 மாதகாலத்தில், குழந்தை சில சொற்களைப் பேசத் தொடங்கி விடுவதைக் கண்டு மகிழ்கிறோம். அங்கே போகாதே, இங்கே வா, அது மாடு என்பன போன்றவற்றிற்கு எதிரொலியாக வருகின்றவை அச் சொற்கள். எதையும் இல்லை என்று அதட்டினால் குழந்தையிட மிருந்து சிறு சொல் வெளிவருவதை இப்போது காண்கிறோம்.

நான்காவது நிலை மிக முக்கியமானது. உடல் அமைப்பில் இந்த நிலையில்தான் நடைபயின்று முன்னேக்கிச் செல்வது ஏற்பட்டது. இதே நிலையில் தான் வேறு பல இயங்கும் தன்மைகளும் தோன்றின. இந்த நான்காவது நிலை 18 முதல் 21 மாதகாலத்தில் ஏற்படுகிறது. 18 மாதத்தில் கிட்டத்தட்ட 20 வார்த்தைகள் சொல்லக்கூடிய குழந்தைக்கு 21-ம்

மாதத்தில் கிட்டத்தட்ட 200 வார்த்தைகள் தெரிய ஆரம்பித்துவிடுகின்றன. அதோடு பல்வேறுபட்ட பொருள்களை, சாமான்களை அடையாளங் காட்டுவதோடு, சின்னச் சின்ன கேள்விகளையும் அர்த்தத்தோடு குழந்தையால் புரிந்து கொள்ள முடிகிறது. அது மட்டுமில்லை. இப்போது குழந்தையால் இரண்டு சொல் உடைய தொடர்களையும் பேசமுடியும்.

இனி 24 முதல் 27 மாத காலத்தில் முந்நூறிலிருந்து நானூறு சொற்கள் வரை குழந்தைக்குத் தெரியும். மூன்று சொற்கள் அமைந்த சொற்றொடர்களைக் குழந்தையால் பேச முடிகிறது. எல்லாவற்றிக்கும் மேலாக மூவிடத்துப் பெயர்களை — நான், நீ, அவன், அவள், அது போன்றவற்றை ஓரளவு பயன் படுத்தத் தொடங்குகிறது.

ஆறுவது நிலையான 30 முதல் 33 மாத காலத்தில் குழந்தைக்குத் தெரிகிற சொற்களின் எண்ணிக்கை வேகமாகக் கூடுகிறது. இப்போது அதன் வாக்கியங்களில் மூன்று, நான்கு சொற்கள் மிக எளிதிலே அமைகின்றன. சொற்களின் வரிசை இயல்பாக வருகிறது; சொற்றொடர்களையும் குழந்தை இயல்பாக அமைத்துக் கொள்கிறது; அதைப் போலவே இலக்கண அமைப்பும் சரியாகிறது. இந்த இலக்கண அமைப்பு குழந்தையின் சுற்றுப்புறத்திலே பேசும் மொழியின் இலக்கணம் போலவே இருக்கிறது. அதாவது ஐயா வருது என்பது இயல்பான பேச்சாக இருக்கிற குடும்பத்தில், குழந்தை இயல்பாக ஐயா வருது என்றே சொல்லும்; ஐயா வருகிறார் என்று சொல்லாது. இவ்வாறு சுற்றுப்புறப் பேச்சின் இலக்

கணம், குழந்தைக்கும் படிந்து விட்டாலும், இன்னும் குழந்தையின் வாக்கியங்கள் பெரியவர்கள் பேச்சை ஒட்டி முழுக்க முழுக்க வருவதில்லை. அதாவது அப்போதும் பேச்சு குழந்தைப் பேச்சாகவே இருக்கும்.

கடைசி நிலையான 36 முதல் 39 மாதகாலத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற்களைக் குழந்தை இயல்பாகப் பயன்படுத்துகிற திறமையைப் பெற்றுவிடுகிறது. இப்போது குழந்தையால் எளிதிலே பேசமுடியும். சிரமமான இலக்கண விதிகளைக்கூடப் பயன்படுத்துகிற திறமை அதற்கு வந்துவிடுகிறது. நான் போனேன்; அவனைப் பார்த்தேன் என்ற இரு வாக்கியங்களை ஒன்றுக்கி நான்போய் அவனைப் பார்த்தேன் என்று ஒரே வாக்கியமாகக்கூடச் சொல்ல முடியும். அதாவது வாக்கியத்திற்குள் வாக்கியத்தை மடக்கிவைத்து ஒரே வாக்கியமாக நீட்டிச் சொல்கிற திறமை, இயல்பானதாகத் தெளிவோடு குழந்தைக்கு ஏற்பட்டு விடுகிறது. இப்படிச் சொல்வதால் மொழியைப் பயன்படுத்துவதற்குத் தேவையான எல்லா இலக்கண விதிகளும் குழந்தைக்குத் தலைகீழ்ப் பாடம் ஆகி விட்டது என்று அர்த்தமில்லை. ஆனால் இப்போது ஆங்காங்கே தவறு ஏற்பட்டாலும் அத்தவறுகள் அடிக்கடி நிகழ்வதில்லை. பெரியோர் பேசும் இயல்பான பேச்சைக் கிட்டத்தட்ட முக்கால்வாசிக்கு மேல் இப்போது குழந்தையால் அடையாளங் கண்டு கொள்ளமுடியும்.

சிலகேள்விகளும் பின்னணியும்

உடல்நிலையில் ஏற்படும் முதிர்ச்சிக்குத் தகுந்தவாறு மொழி நிலைகளிலும் முக்கிய மாற்றம் தோன்று

வது போலத்தெரிகிறது. இவ்வாறு உடல் அமைப்பில் ஏற்படும் மாறுதல்களோடு மொழி தோன்றுகிற நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு தெளிவாகப் புலனாகும். அதாவது மற்ற எல்லாக் காரணங்களையும் விட உடலில் ஏற்படுகின்ற முதிர்வுக்கும் மொழி தோன்றுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது இயல்புதான். ஆனால் இந்தத் தொடர்பு காரண-காரியத் தொடர்பா இல்லையா என்பதை நாம் எப்படிச் சொல்வது? இதற்கு உடலில் முதிர்வு ஏற்படுவதாலேயே மொழி தோன்றுகிறதா அல்லது உடல் முதிர்வும் மொழியின் தோற்றமும் இணைந்தே குழந்தையிடம் தோன்றுகிறதா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும்.

இதுவரை குழந்தை சுற்றுப்புற வாசத்தால்தான் மொழியைக் கற்றுக் கொள்கிறது என்று அறிஞர் பலர் எண்ணினர்; இன்றும் நினைக்கின்றனர் என்பதை முன்பே குறிப்பிட்டோம். என்றாலும் வரவர ஆராய்ச்சியின் முடிவுகளும், முந்திய ஆராய்ச்சி முறைகளில் இருந்த குறைகளும் இம்முடிவைப் பெரிய அளவில் மாற்றிவிட்டன என்றே சொல்லவேண்டும். இன்று நரம்புக்கூறுகளைப் பற்றிய ஆராய்ச்சியும் மூளையின் வியப்பான செய்திகளும், விலங்குகள் பல செயல்களைக் கற்பதற்கும், மனிதன் மொழியைக் கற்பதற்கும், அதைப் பயன் படுத்துவதற்கும் இடையே பெரிய வேற்றுமை இருக்கிறது என்று நிறுவிவிட்டன என்றே சொல்லவேண்டும். இப்போதைய ஆராய்ச்சிகள்

மனிதனுக்குள்ளேயே மொழியின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முயல்கின்றன.

இவ்வாராய்ச்சிகளின் பின்னணியில் நாம் குழந்தையிடம் மொழி தோன்றுவதின் மர்மத்தை அணுகவேண்டும்.

உடல் முதிர்வால் மொழி தோன்றுகிறதா?

முதலில் நாம் உடல் அமைப்பில் முதிர்வு ஏற்படுவதற்கும் மொழி தோன்றுவதற்கும் இடையிலே உள்ள ஒற்றுமைகளைச் சொன்னேம். ஆனால் இந்த இணையான தோற்றம் காரண-காரியத் தொடர்பாக இருக்க வேண்டியதில்லை என்பதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். பொதுவாகக் குழந்தையின் உடல் அமைப்பு-குறிப்பாக வாயில் நாக்கும், தொண்டையில் காற்றுச் சவ்வும்-நன்றாக அமையாததாலேயே குழந்தை தொடக்கக் காலத்தில் மொழியைப் பேச முடியவில்லை என்று தோன்றும். இது உண்மைக்குப் புறம்பானது என்று நிறுவி விடலாம். குழந்தை வழவழா என்று பேசும் காலத்திலேயே அதன் நாக்கும் சவ்வும் ஒருவாறு நல்ல இயல்பிலே இருந்தால்தான் அது வழவழாப் பேச்சைப் பேசமுடியும். பேச்சுக்கு நாக்கு வேண்டும்; அந்த நாக்கைச் சுழற்றிச் சுழற்றிப் பல நிலைகளில் அமைத்துப் பேசுகிற திறமையும் வேண்டும்.. அதோடு நாம் மூச்சு விடும் செய்கையும் பேச்சும் ஒருமித்து இயங்கவேண்டும். ஏனென்றால் உள்ளிருந்து வெளிவரும் காற்றையே நாம் வாய்க்குள்ளும் மூக்குக்குள்ளும் செலுத்தி ஒலியாக வெளிப்படுத்துகிறோம்.

இந்த ஒருமித்துச் செய்கிற செயல் குழந்தையிடம் மிக இளமையிலேயே வந்துவிடுகிறது; ஆனால் கைகளையோ விரல்களையோ, கால்களையோ பிற உறுப்புக்களையோ இலாவகமாக ஒருமித்துப் பயன் படுத்துகிற திறமை எவ்வளவோ பிற்பாடுதான் ஏற்படுகிறது.

உறுப்புக்களின் முதிர்வும் மொழியின் தோற்றமும் தனித்தனி என்பதை இன்னும் பல வகைகளில் உணரலாம். சொற்களைப் பேசுவதற்கு முன் அவற்றை விளங்கிக் கொள்ளும் திறமை குழந்தையிடம் சில மாதங்களுக்கு முன்பே ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலை மற்ற முதிர்வு வகைகளில் இல்லை என்றே சொல்ல வேண்டும். மேலும் குறித்த காலத்தில் கைகால் விளங்காத குழந்தைகளிடம்கூடக் குறித்த காலத்தில் மொழி–பேசுகின்ற திறமை–தோன்றுவதை அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். அதே போல கைகால் விளங்குகின்ற குழந்தைகளிடம் குறித்த காலத்தில் மொழிபேசும் திறமை–தோன்றுதலையும் அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். இரண்டாவது வகையைச் சேர்ந்த குழந்தைகள் ஊமைகள் அல்ல. இக்குழந்தைகளின் புத்திக்கூர்மை குறைவானதும் அன்று; நரம்புகளிலோ, உடல் அமைப்பிலோ எக்குறையும் காணப்படவில்லை. என்றபோதிலும் நாலைந்து ஆண்டுகளுக்குப் பிறகே இவர்கள் திடீரெனப் பேசத் தொடங்கினர்கள். அதாவது உடல் உறுப்புக்கள் நல்லபடி இருந்த போதிலும் மொழியின் தோற்றம் தாமதப்பட்டு வந்தது. இப்படித் தாமதித்து வந்த தோற்றத்தால் உடல் உறுப்புக்கள் முதிர்வதற்கும்; மொழி தோன்றுவதற்கும் தொடர்பில்லை என்பதை அறியலாம்.

இன்னென்றையும் நாம் கவனிக்க வேண்டும்– நீந்துவது, சைக்கிள் ஓட்டுவது, படம் வரைவது போன்ற ஆற்றல்களை எல்லாரும் பயில முடியும். என்றாலும் தனித்தனி நபர்களுக்குள்ளே ஏற்படுகிற வேற்றுமை பெரிது. இவ்வாற்றல்களைக் கிரகித்துக் கொள்ளும் திறமையும் ஒருவரிடமிருந்து இன்னொருவரைப் பார்க்க வேறுபடுகிறது. ஆனால் குழந்தையிடம் மொழி தோன்றுவதில் வேற்றுமை குறிப்பிடத்தக்க அளவில் இல்லை என்றே சொல்லவேண்டும். தனி நபர்களில் அதிக அளவுப் பேருக்கு ஒரே விதமான திறமை ஏற்பட்டுவிடுகிறது; மொழியைப் பேசத் தெரியாதவர் தொகை மிகக்குறைவு; முன்பின் பயிற்சி இல்லாமலேயே பேச்சின் தோற்றமும் விரைவும் இயல்பாகவே அமைந்து விடுகின்றன. இதில் இருந்து உடல் முதிர்வுக்கும் மொழித் தோற்றத்திற்கும் உள்ள காரண–காரியத்தொடர்பு நிச்சயமில்லை என்பதை அறியலாம்.

சுற்றுப்புறச் சூழ்நிலையால் மொழி தோன்றுகிறதா?

இனி சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் குழந்தையிடம் மொழி தோன்றுவதற்கும் இடையில் உள்ள தொடர்பைக் காணலாம். மொழி பேசாத சூழ்நிலையில் குழந்தை இருக்குமானால் குழந்தையிடம் மொழி தோன்றுமா என்பது பல காலமாக இருந்து வருகிற வாத்ப் பிரதிவாதம் ஆகும். ஆனால் பொதுவாகப் பார்த்தால் அறிகிற சூழ் நிலையிலேதான் குழந்தை மொழியாற்றலைப் பெறமுடியும் என்று சொல்லலாம். ஆனால் சூழ்நிலையில் தட்டுத்தடங்கலோ வேற்றுமைகளோ பல இருந்தாலும்

மொழியைப் பயன்படுத்துகிற ஆற்றல் இயல்பாகத் தோன்றுகிறது என்றே சொல்லவேண்டும்.

நம்மில் குசேலர் குடும்பங்கள் பல என்பதை நாம் அறிவோம். ஆறேழு குழந்தைகள் உள்ள குடும்பங்களில், முதல் குழந்தைக்கும் அடுத்துப்பிறந்த குழந்தைகளுக்கும் சூழ்நிலையில் வேற்றுமை இருப்பது இயல்பு. ஆனல் வீட்டின் சூழ்நிலையால் பின்னல் பிறந்த குழந்தைகள் மிக விரைவிலேயே பேசத் தொடங்குவதாகவோ அல்லது பேச்சு நின்று விடுவதாகவோ தகவல் இல்லை. தாய்மாரின் கவனிப்பும், தாய் தந்தையர் குழந்தை கைப்பிள்ளையாய் இருக்கும் போதே மறைந்து விடுவதும் ஏழை பணக்காரர் என்ற வேற்றுமைகளும் மொழியாற்றல் குறித்த காலத்தில் தோன்றுகிற நிலைகளைப் பாதிக்க வில்லை. இதுவே ஆராய்ச்சி சொல்வது என்றாலும் நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலையில் இல்லாத குழந்தைகள், தங்களிடம் குறித்த காலத்தில் பொதுவாகத் தோன்றுகிற திறமையை மழுங்கடித்தும் விடலாம்; அதேபோல அக் குடும்பங்களில் தலைச்சனைவிட மற்ற குழந்தைகளுக்குப் பேச்சைப் புரிந்து கொள்ளும் தன்மை குறைவாகவே இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கிறார்கள். மேலும் அனுதை ஆசிரமங்களில் வளர்க்கப்படும் குழந்தைகளின் பேச்சுத்திறமையும் பொதுவாகக் குறைந்தே காணப்படுகிறது. அவர்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையில் சுதந்திரம் ஏற்படுமானல் எளிதிலே இவர்களைப் பிற குழந்தைகளுக்குச் சமமாகக் கொண்டு வந்து விடலாம். செவிட்டுத் தாய்

தந்தையருக்குப் பிறந்த குழந்தைகள்கூடக் குறித்த காலத்தில் பேச்சுத் திறமையைப் பெற்று விடுகின்றன. காலதாமதம் எதுவும் ஏற்படாவிட்டாலும் இவர்கள் நாளாவட்டத்தில் தங்கள் பெற்றோரிடம் "பேசுவதற்கு" ஒருமுறை என்றும் பிற வயது வந்தவர்களிடம் பேசுவதற்கு இன்னொரு முறை என்றும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இதில் இருந்து சூழ்நிலையின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்தபோதிலும் சுற்றுப்புறச் சூழ்நிலையால்தான் குழந்தையிடம் மொழி தோன்றுகிறது என்று சொல்லிவிட முடியாது.

பயிற்சியால் மொழி தோன்றுகிறதா?

பொதுவாகக் குழந்தைகள் வழவழா கொழகொழா என்று குரல் இடும்போது நாம் அவை பேச முயல்கின்றன என்றும், பேசுவதற்குத் தங்களை ஆயத்தம் செய்கின்றன என்றும்–பழகுகின்றன என்றும் எண்ணுகிறோம். குழந்தை பேசப் பழகி விட்டானே என்றும் வியக்கிறோம். ஆனால் உண்மையில் குழந்தைக்குப் பேசுவதற்குப் பயிற்சியோ, அல்லது பேச்சைக் கேட்கிற முன் அனுபவமோ தேவை இல்லை. ஆறுமாதம் தொண்டை அடைப்பட்டுக்கிடந்த 14 மாத வயதுக் குழந்தை தொண்டை திறந்ததும் தன் வயதுக்கு உரிய மழலைப் பேச்சை மறுநாளே பேசிவிடுகிறது. இது குழந்தை மொழியாற்றல் பெற பயிற்சி ஏதும் தேவை இல்லை என்பதை மறைமுகமாகச் சொல்கிறது.

பேசப்பழக வயது எல்லை உண்டா?

இதுவரை குழந்தையின் உடல் உறுப்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் மொழிநிலைகளில் ஏற்படும் வளர்ச்சிகள் பற்றியும் அதன்பின் சுற்றுப்புறச் சூழ் நிலைகளுக்கும் மொழி ஆற்றல் வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு பற்றியும் கண்டோம். நாம் சிறு குழந்தை யாக இருக்கும் போது நம்மால் பல செய்திகளை எளிதி லே கற்றுக் கொள்ள முடிவது நம் எல்லோருக்கும் தெரியும். ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையுமா என்பது பொருள் நிறைந்த கேள்விதான். அதைப் போலவே தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதும் பல வகைகளில் பொருத்தமானதாகத் தெரிகிறது.

குழந்தை தன் முதல் மொழியை–தாய்மொழியைப் பேசத் தொடங்குவது மிக இளமையிலே ஏற்பட்டுவிட வேண்டும். வயது ஆக ஆக மொழியைக் கற்கிற–இயல் பான திறமை குறைந்து வருகிறது என்றே சொல்ல வேண்டும். மிகச் சிறு வயதில் மூளையின் இருபகுதியும் மொழியைக் கிரகித்துக் கொள்வதிலும் பேசுவதிலும் பங்கு பெறுகின்றன. ஆனால் நாள் ஆக ஆக மூளையின் இடது பகுதி மட்டுமே மொழித் திறமையைக் கட்டுப் படுத்தத் தொடங்குகிறது. இப்படி இடது பக்கம் பழக்கத்திற்கு வந்தபின் நரம்புகள் பாதிக்கப் படுமானால் மீண்டும் பேச்சுத்திறமை வருவது என்பது முடியாத காரியம். சிறுவயதிலேயே இடது பக்கம் பாதிக்கப்பட்டால் வலதுபக்க மூளையில் மொழியைக்

காட்டுப்படுத்தும் திறமை தோன்றலாம். இது பதின் மூன்று வயதுக்குள் தான் நடைபெறும். பொதுவாகவே மொழியின் வளர்ச்சி பதின்மூன்று வயதுக்குள் நடை பெற்று முடிந்துவிட வேண்டும். இதுவரை ஊமையாய் இருக்கும் குழந்தை அதற்குப்பின் பேசுவது இல்லை. மேலும் மன வளர்ச்சி குறைந்த குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக மொழி ஆற்றலை வளர்க்க முடிந்த போதி லும் 13, 14 வயதில் அவர்களுடைய மொழி வளர்ச்சி அப்படியே நின்று போய்விடுகிறது. இதுவும் மொழியைப் பெறுவதில் வயதின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.

முடிவுரை

மனிதமூளை முதிரும் வரலாறு தனித்தன்மை வாய்ந்தது. இது மற்ற உயிர்களின் மூளைகளைவிடப் பல வகைகளில் வேறுபட்டு இருப்பது. மாட்டின் கன்று பிறந்ததும் சிறிது நேரமோ, சிலநாளோ கழித்து ஆடி ஓடத் தொடங்குவதைப் பார்க்கிறோம். மனிதக் குழந்தையால் அதைச் செய்ய முடியவில்லையே என்று வியக்கிறோம். கீழ் நிலைப்பட்ட உயிர்வகைகள் மிக வேகமாக பெரியவை ஆகிவிடுகின்றன. ஆனால் குழந் தையோ பெரியவர் ஆக நெடுநாள் ஆகும். மேலும் மற்ற உயிர்களைக் காட்டிலும் மனித மூளை பெரிதாக இருக்கிறது. அதைப் போலவே மூளையின் இடது, வலது பக்க வளர்ச்சியும் பிரிவும் மனிதனுக்கே உரிய சிறப்பு. இச் சிறப்புக் குணம் பிறக்கும் போதே தோன்றுவதில்லை–என்று முன்பே சொன்னோம். அதற்கென்று தக்க வயது எல்லை இருப்பதையும் கண்டோம்.

மேற் சொன்ன மனித மூளையின் சிறப்புக் குணங்களுக்கும் மொழியின் ஆற்றலுக்கும் தொடர்பு நெருங்கிய தெடர்பு-இருக்கின்றது. என்றாலும் அத்தொடர்பைச் செயல்படுத்துகிற நரம்புக்கூறுகளின் அமைப்பையும், அவை இயங்கும் தன்மையையும், இயங்குவதற்கு உதவி செய்யும் இரசாயன முறைகளையும் இனிமேல் தான் தெளிவாகக் கண்டுபிடிக்கவேண்டும்.

3. மொழியமைப்பில் இரு கருத்து

இதுவரை மனித மொழிக்கும் விலங்குகளுடைய செய்திப் போக்குவரத்துக்கும் உள்ள வேற்றுமைகளையும் குழந்தையிடம் மொழி தோன்றும் கதையையும் கண்டோம். இனி மொழியாராய்ச்சியின் முறைகளைக் காணலாம்

மொழியை ஆராய்கிற துறை மிகப் பழமை வாய்ந்தது. தமிழிலே கிடைக்கக்கூடிய நூல்களிலெல்லாம் தொன்மையானது தொல்காப்பியம் என்பதை அறிவோம். தொல்காப்பியம் தலைசிறந்த இலக்கண நூல் என்பதையும் அறிவோம். திராவிட நாகரிகத்தில் மொழியை ஆராயும் கலை பெரிதாக இருந்ததுபோலவே வடமொழி – ஆரியநாகரிகத்திலும் அதே நிலையைக் காண்கிறோம். ஐரோப்பாவில், கிரேக்க, ரோமப் பேரரசுகளிலும் மொழியாராய்ச்சிக்கலை தொன்று தொட்டுப் பெருமை வாய்ந்ததாக இருந்து வந்திருக்கிறது. சீன நாகரிகத்திலும் மொழியாராய்ச்சிக்கலை அவ்வாறே காணப்படுகிறது. அதாவது ஒரு காலத்திலே மொழியை ஆராய்வதுதான், இலக்கணப் படிப்புத்

தான், படிப்பு என்றும் கல்வி என்றும் கருதப்பட்டது என்று கூடச் சொல்ல முடியும். பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டு ஆங்கிலக் கல்வி முறைகள் பரவிய இடைக் காலத்தில் கூட இலக்கணக்கல்விக்கு "மரியாதை" இருக்கத்தான் செய்தது. ஆனால் எப்படியோ நாளா வட்டத்தில் நம்மை அறியாமலே இலக்கணக் கல்வியைப் புறக்கணித்து விட்டோம்; இலக்கணம் கற்பதன் மூலகாரணத்தையும் மறந்து போனோம்; அதன் விளைவாகப் பல துறைகளிலும் தெளிவில்லாத நிலை ஏற்பட்டு விட்டது.

இன்றைய மொழியை ஆராய்வதும், மொழியின் இயல்புகளைத் தெரிந்து கொள்வதும் பள்ளியில் படிக்கும் இலக்கணத்திற்கு மட்டும் பயன்படவில்லை. அறிவியல் துறையில் பலகோணங்களில் இன்று மொழியின் இயல்புகளை ஆராய்கிறார்கள்.

மேடைப்பேச்சுப் பேச வேண்டுமானால், அதுவும் எல்லாரும் மதிக்கிற அழகு தமிழில் பேச வேண்டுமானால் மொழித்திறமை வேண்டும் அல்லவா? நாடகத்திலும் சினிமாவிலும் மொழித்திறமை தேவைப்படுவது போலக் கேட்போரைத் தன் வயப்படுத்த வேண்டி இன்று அரசியல்வாதிக்கும் மொழித் திறமை கட்டாயம் தேவைப்படுகிறது. நம்மில் பலர் பேச்சின் அழகைச் சுவைப்பதற்கென்றே கூட்டங்களுக்குப் போகிறோமே! தொலைபேசியைத் தயாரிப்பவர்களும் பிற செய்தித் தொடர்பில் ஈடுபாடுடைய பொறியியல் வல்லுநரும் மொழியின் இயல்புகளைப் புரிந்தே

செயல்பட வேண்டி இருக்கிறது. எந்திரத்தால் மொழி பெயர்க்க நினைப்பவர்களுக்கு மொழி அமைப்பின் அறிவு தேவை என்பதைச் சொல்லவும் வேண்டுமா? எல்லாவற்றிற்கும் மேலாக உயிர் நூல் அறிஞர்களுக்கும் மொழி பெரிய புதிராகவும், அவர்கள் அறிவுக்குச் சவால் விடும் விந்தையாகவும் இன்றும் இருந்து வருகிறது.

மொழியைப்பற்றிய மூடுமந்திரங்களைத் தெளிவாக்கிவிட்டால் பல அறிவியல் கலைகளில் பெரிய புரட்சியே ஏற்பட இடமிருக்கிறது. எடுத்துக்காட்டாக மனநூலைப் பார்க்கலாம். எண்ணங்கள் எப்படி உருவாகின்றன என்ற வாதப்பிரதிவாதம் மனநூலில் முடிவே இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. நாம் எப்படிச் சிந்திக்கத் தொடங்குகிறோம்? மனதுக்குள் சிந்தனை ஓடும்போது அந்தச் சிந்தனை சொற்களாகவே அல்லவா ஓடுகிறது? எப்படி மொழி மனதுக்குள்ளே ஓடுகிற ஓட்டமாக மாறியது? அப்படி மாறிய பின் எப்படி சிந்தனையைப் பாதிக்கிறது? நம் மொழி சிந்தனையை எந்த அளவு பாதிக்கிறது? நாம் காணும் காட்சிக்கும் மொழிக்கும் என்ன தொடர்பு? மொழி காட்டும் காட்சியையே நாம் பார்க்கிறோமா என்ன? நாம் காய் என்பதை ஆங்கிலேயர் பழுக்காத பழம் என்கிறார்களே ஏன்? நாம் பொருள்களைப் பிரிக்கிற முறைக்கும் மொழிக்கும் என்ன தொடர்பு?

மேற்சொன்ன கேள்விக்குறிகள் மிகச் சிலவே. மொழியின் விந்தையை எண்ணத் தொடங்கினால் எண்ணற்ற கேள்விகள் எழுகின்றன. ஆனால் இக்

கேள்விகளுக்கு விடை காணப் பல்வேறுபட்ட அறிவியல் கலைகளின் ஒருமித்த ஆராய்ச்சி தேவை. என்றாலும் இந்த ஆராய்ச்சிகள் அனைத்திற்கும் அடிப்படை மொழியின் அமைப்பு என்பதை மனதிலே கொள்ள வேண்டும். பிற அறிவியல் கலைகளிலே மொழியைப் பற்றிக் கண்டுபிடிக்கப்படுகிறவைகள் மொழி அமைப்பு முறைக்கு உகந்ததா இல்லையா என்று பார்த்தே நாம் ஏற்றுக்கொள்ள முடியும். இப்படிச் சொல்வதால் பிற அறிவியல் கலைகளை விட மொழியியல் கலையே மொழியை அணுகுவதில் ஆழம் நிறைந்தது என்று பொருள் இல்லை. மாறாக, பிற கலைகளின் முடிவுகளை வலுப்படுத்த மொழியியல் முடிவுகள் துணை செய்யும் என்றே கொள்ள வேண்டும்.

மொழியை அதன் அமைப்பைக்கொண்டு விளக்குவதிலே மொழியியல்கலை தொன்றுதொட்டுக் கவனம் செலுத்தி வந்திருக்கிறது. தொல்காப்பியத்தைக் கற்றவர்கள், தொல்காப்பியர் எவ்வளவு அழகாக ஆராய்ச்சி அடிப்படையில் மொழியை அணுகுகிறார் என்பதை அறிவார்கள். உயர்திணை, அஃறிணை என்றும், மூவிடம் என்றும், பெயர்களைப் பிரிக்கிற நிலையும், வினைச் சொற்களை விளக்குகிற முறையும் இன்னும் பலவும் தமிழ் இலக்கணத்தின், உலக மொழி இயலின், மணிமுடிகள் என்று சொல்வதில் தவறேதும் இல்லை. இவ்வாறு தொன்றுதொட்டு வருகிற ஆராய்ச்சி அறிவு பல்வேறு ஆராய்ச்சிகளாலும், பல கலைகளின் தொடர்பாலும் மாறுதல் அடைவதும், முன்னேற்றங்கள் காண்பதும் இயற்கையே.

கடந்த ஐம்பதாண்டுக் காலமாக மொழிகளை அறிவியல் அடிப்படையில் அணுக வேண்டும் என்ற கொள்கை மிகப் பெரிய அளவில் ஒத்துக்கொள்ளப் பட்டு வந்திருக்கிறது. அறிவியல் அடிப்படையில் ஆராய்வதின் முக்கிய இயல்பு பொதுவான தன்மைகளை வெளிக்காட்ட உதவும். அதுபோக ஆராய்ச்சியின் தன்மையையே கூட மாற்றிவிட முடியும். தொல்காப்பியரோ, பாணினியோ அவரவர் மொழிகளை ஆராய்வதில் பெரிய புலிகளாக இருக்கிறார்கள். இவர்களது ஆராய்ச்சி முடிவுகள் இமயமலையினும் பெரிதுதான். ஆனால் நம் கெட்ட காலம், தொல்காப்பியர் தந்த முறைகளைத் தெளிவாய்ப் புரிந்துகொண்டு பிற மொழிகளை, மற்ற மனித மொழிகளை, அறிவியல் அடிப்படையில் ஆராயும் கலை பெருகி வளர வழி செய்யாமல் போய்விட்டோம்.

இன்று அறிவியல் கலைகள் பல்கிப் பெருகிய பின்பு மொழியியலில் பொதுத்தன்மை நிறைந்த முடிவுகளைக் காணும் வேட்கை பெருகிவிட்டது. மொழியியலில் மொழியின் அமைப்பை அலசுகின்ற பொதுவிதிகள் செம்மையாக்கப்படுகின்றன. இம்முயற்சிகளின் விளைவாக மொழியின் அமைப்பை அணுகப் பல முறைகள் வெளிவந்திருக்கின்றன. இம் முறைகள் தங்கள் தங்கள் விதிகளின்படி மொழி அமைப்பை விளக்க முற்படுகின்றன. இம்முறைகளில் இரண்டு முறைகளைக் காணலாம்.

முதல் முறையின் கொள்கைப்படி மொழியின் அமைப்பை அகம், புறம் என்று இருவகையாகப்

பிரிக்கலாம். அக அமைப்பில் மூன்று பிரிவுகளும் புற அமைப்பில் இரு பிரிவுகளும் இருக்கின்றன. அப்பிரிவுகளில் ஒரு பிரிவு ஒரு மொழியின் ஒலியன்களையும் அவ்வொலியன்கள் வந்து விளம்புகின்ற நிலைகளையும் விவரிக்கிறது. இன்னொரு பிரிவு சொல்லியன்களையும் சொல்லியன்கள் வந்து விளம்புகிற நிலைகளையும் விவரிக்கிறது. மற்றொரு பிரிவு ஒலியன் இயலையும் சொல்லியன் இயலையும் இணைக்கிற சொல்லொலியன் பிரிவு.

பொதுவாக நம் தமிழ் மொழியாராய்ச்சி முறை முதல் பிரிவை எழுத்ததிகாரம் என்றும் இரண்டாம் பிரிவைச் சொல்லதிகாரம் என்றும் கொண்டது. மூன்றுவது பிரிவைச் சந்தி இலக்கணம் கூறும் பிரிவு என்று சொல்லலாம்.

புற அமைப்பின் இரு பிரிவுகளில் ஒரு பிரிவு ஒலியன் இயலோடும் மற்ற பிரிவு சொல்லியன் இயலோடும் தொடர்பு கொண்டது. முதல் பிரிவை ஒலி இயல் என்று சொல்வோம். இப்பிரிவிலே மொழியில் பயன்படும் எல்லா ஒலிக்கூறுகளைப்பற்றியும் அவை பிறக்கும் முறைகளைப் பற்றியும் அவற்றின் இயல்புகளைப் பற்றியும் ஆராய்கிறோம். இரண்டாவது பிரிவைப் பொருளதிகாரம் என்று சொல்லலாம். ஆனால் இப் பொருளதிகாரத்திலே ஐந்திணைப் பாகுபாடுகளைப் பற்றியோ செய்யுள் மரபுகளையோ, படிமங்களையோ நாம் கருதவில்லை. மாறுகச் சொல்லியன்கள் காட்டும் பொருளின் இயல்புகளைக் கருதுகிறோம்.

புற அமைப்பு என்ற சொல் ஆழம் நிறைந்த பொருளோடேயே இங்கு கையாளப்பட்டிருக்கிறது. இப்பிரிவை ஒத்துக்கொள்கிறவர்களில் பலர் ஒலி இயலும், பொருளதிகாரமும் மொழியாராய்ச்சிக்குப் புறம்பானது என்றே கருதுகிறார்கள். மொழி இயல் அக அமைப்பு முறைகளையே அலசவேண்டும் என்றும் நினைக்கிறார்கள். இவ்விரண்டு பிரிவுகளிலும் பொருளதிகார ஆராய்ச்சியையே இக் கொள்கையினர் ஒதுக்குகிறார்கள். சொற்கள் காட்டும் பொருள்களை ஆராய்வதில் மிகுந்த சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நம் அன்றாட வாழ்வில் உணர்கிறோம். நமக்கு எது அன்பு என்று தோன்றுகிறதோ அது பிறருக்குக் காதலாகத் தோன்றலாம். எது காதல் என்று பிறருக்குத் தோன்றுகிறதோ அது நமக்குக் காமம் போன்று தோன்றலாம். ஒருவரின் முன் அனுபவம் ஒரு சொற் பொருளின் முக்கியத்துவத்தைக் கூட்டவோ, குறைக்கவோ, மறைக்கவோ, மற்றும் மாற்றவோ செய்ய முடியும். பரந்துபட்டுக் கிடக்கிற, மாறுபட்டு நிற்கிற சொற்பொருளை ஆராய்வதில் ஏற்பட்ட சங்கடமும், அகப்பிரிவின் கட்டுக்கோப்பும் இக்கொள்கையினரைப் பொருளதிகாரத்தைக் குறைத்து மதிப்பிடச் செய்கிறது என்று சொல்லலாம்.

ஆனால் மொழியின் முதல்வேலை செய்திப் போக்கு வரத்து என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இச் செய்திப் போக்குவரத்துப் பிறரோடும் இருக்கலாம். நமக்குள்ளேயும் சிந்தனை ஓட்டமாக இருக்கலாம். இவ்வாறு மொழியின் முதல் வேலையாக இருக்கிற

செய்திப் போக்குவரத்தில் பொருள் – அர்த்தம் ஏதும் இல்லாவிட்டால் அது வெறும் ஒலிக்கோவையாகத் தானே இருக்கும்? அதுபோக அக அமைப்பே மொழி என்ருல் முன்னுக்குப்பின் முரணான வாக்கியங்களும் மொழியாகிவிடும். முன்பு சொன்ன இரு வாக்கியங்கள் நினைவுக்கு வருகின்றனவா?

மழையில் காய்ந்தேன், வெயிலில் நனைந்தேன் — இவ் வாக்கியங்களைக் கேட்ட நாம் இவை அமைப்பில் தமிழ் வாக்கியங்கள் என்று தெரிந்து கொண்டாலும் தவறு என்று பொருள் அமைப்பால் கண்டு கொள்ளுகிறோமே? இது பொருளதிகாரம் மொழியாராய்ச்சியில் பெறுகிற பங்கைக் காட்டுகிறது அல்லவா? அது போக முந்திய கொள்கையினர் ஒலிகளை ஒலியன்களில் இருந்து பிரிப்பதற்கும் ஓர் ஒலியனை இன்னோர் ஒலியனிலிருந்து வேறுபடுத்திக் காட்டவும், சொல்லியன்களைப் பிரிவுபடுத்திக் காட்டவும் மேற்சொன்னவைகள் தனித் தனிப் பொருள் காட்டுகின்றனவா என்றே காண்பார்கள். அதாவது முதல் கொள்கையினரும் ஓரளவாவது பொருள் — அர்த்தம் — மொழியிலே பயன்படுவதை ஒத்துக்கொள்கின்றனர்; அதை ஆராய்ச்சியிலும் பயன்படுத்துகின்றனர். இதிலிருந்து மொழியமைப்பிலே பொருள் பெறுகிற பங்கை யாராலும் முழுக்க முழுக்க மறுத்து விட முடியாது என்பதை அறியலாம்.

மேற்சொன்ன முதல் முறையில் உள்ள குறைபாடுகள் பல. இக்குறைபாடுகள் மொழியின் பல இயல்பு

களை வெளிக்காட்டவில்லை; இவ்வியல்புகளுக்கு விளக்கம் தர முயலவில்லை; முடியவுமில்லை. மேலும் உயிர் நூலிலும், உளநூலிலும் ஏற்பட்ட ஆராய்ச்சிகள் இன்னும் வேறுபல உண்மைகளைக் கொண்டுவந்து தருகின்றன. இதனால் முந்திய முறைமேல் மனநிறைவு குறைந்து புதியமுறை தோன்றியது. இம்முறையை 'மாற்றிலக்கண முறை' என்று சொல்லலாம். இம்முறை பழங்காலத்தில் பயன்பட்ட ஒன்றுதான். ஆனால் இடைக்காலத்திலே மதிப்பிழந்து போய்விட்டது. இப்போது மீண்டும் புத்துயிர், புத்தூருவம் பெற்று எழுந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

புத்துயிரும், புத்தூருவமும் பெற்ற இம்மாற்றிலக்கண முறை சாம்ஸ்கி என்பார் 1957-ல் வெளியிட்ட 'சொற்றொடரியல் அமைப்புக்கள்' (Syntactic Structures) நூலில் இருந்து பல்கிப் பெருகத் தொடங்கியது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இது பெற்றிருக்கும் உருமாற்றம் பலப்பல ஆகும். இன்று நம் முன் இருக்கும் மாற்றிலக்கண முறைப்படி மொழி மூன்று உறுப்புக்களைக் கொண்டிருக்கிறது. இம்மூன்று உறுப்புக்களில் முதன்மை பெறுவதும் நடு நாயகமாக இருப்பதும் சொற்றொடர் உறுப்பு ஆகும். மற்ற இரண்டு உறுப்புக்கள் ஒலியனியல் உறுப்பும் பொருளதிகார உறுப்பும் ஆகும். பிந்திய இரு உறுப்புக்களும் நடு நாயகமாக விளங்கும் சொற்றொடர் உறுப்பு "உண்டாக்கித் தள்ளுகிற" வாக்கிய அமைப்புக்களுக்கு ஒலி உருவமும் பொருள் விளக்கமும் மட்டுமே தருகின்றன. அவை சொற்றொடர்களை உண்டுபண்ணுவதில்லை.

சொற்றொடர் உறுப்பில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. முதல் பகுதியை அடிப்படைப் பகுதி எனலாம். மற்றொரு பகுதியை மாற்றல் அல்லது பற்றுசுப் பகுதி எனலாம்.

அடிப்படைப் பகுதியில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. முதல் பிரிவைச் சொற்றொடர் அமைப்பு என்றும், இரண்டாம் பிரிவைச் சொற்களஞ்சியம் என்றும் சொல்லலாம். சொற்றொடர் அமைப்பில், சொற்களோ சொற்றொடர்களோ தொடர்ந்து வந்து அமையும் விதி முறைகள் எழுதப்படுகின்றன. சொற் களஞ்சியத்தில் சொற்களின் இலக்கணப் பாகுபாடும், பொருள் இயல்புகளும் குறிக்கப்படுகின்றன. மேற் சொன்ன அடிப்படைப் பகுதியின் இரு பிரிவுகளும் சேர்ந்து உட்கிடை அமைப்புக்களோ அல்லது உள் ளமைப்புக்களோ உண்டுபண்ணித் தள்ளுகின்றன.

மாற்றல் பகுதியின் விதிகள் சொற்றொடர் அமைப் பில் பல்வேறு மாற்றங்களைப் பற்றுசு வைக்கின்றன என்று சொல்லலாம். உட்கிடை அமைப்புக்களைப் பல வகையில் மாற்றம் செய்விப்பது இவ்விதிகளின் வேலை யாகும். இவ்விதிகளின் பண்புகளைப் பின்னால் பாருங்கள்.

மாற்றல் விதிகளால் பற்றுசு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு ஒலி உருவத்தை ஒலியன் இயல் உறுப்பும், பொருளைப் பொருளதிகார உறுப்பும் கொடுக் கின்றன. மேற்சொன்ன மூன்று உறுப்புக்களும் எவ் வாறு இணைந்து வேலை செய்கின்றன என்பதைப் பின்

வரும் படம் காட்டுகிறது. படத்தைப் பார்க்குமுன் மூன்று முக்கியச் செய்திகளை மனதில் கொள்ளுங்கள்.

மொழியில் மூன்று உறுப்புக்கள் இயங்குகின்றன என்பதை மாற்றிலக்கணக்காரர் எல்லாரும் ஒத்துக் கொள்வதில்லை. ஒத்துக் கொள்பவருள்ளும் அவை எவ்வாறு இணைந்து வேலை செய்கின்றன என்பதில் பலத்த கருத்து வேற்றுமைகள் உண்டு. மூன்றுவதாக, அம்புக்குறிகள் செல்கிற வண்ணமே மொழி நமது உள்ளத்தில் உருவாகிறது என்று கொண்டுவிடக் கூடாது. பின்வரும் படமும், மாற்றிலக்கண முறையும் மனித மொழி நடைபெறும், இயங்கும் விதத்தை விவரிக்க முயல்கின்றன. மனித உள்ளத்தின் உருவத்தையோ, மனித மூளையில் மொழி பரிமாறப்படும் வகையையோ யாரும் இதுவரை தெள்ளத் தெளியப் பரிசோதனைகள் மூலம் நிறுவிவிடவில்லை. நாம் மொழியின் அமைப்புக்களைப் பொருத்தமாக விவரிப்பதற்கு இங்கே முயல்கிறோமே தவிர அவை மனித மூளையில் நடைபெறும், இயங்கும் விதத்தை விவரிப்பதற்காக அல்ல என்பதை எப்போதும் மனதிலே கொள்ள வேண்டும்.

மொழியின் உறுப்புக்கள்
மாற்றிலக்கண முறை



2. ஒலியியல்

மொழியைப்பற்றிய நோக்கில் இப்போது பெரும் புரட்சி ஏற்பட்டிருப்பதைச் சொன்னேம். இப்புரட்சிக்கு முன்னோடியாக மொழிகளே ஆராய வேண்டும் என்கிற வேட்கை ஏற்பட்டது. அப்படி ஆராய்வதற்குச் சிந்தனே நிறைந்த ஆராய்ச்சியாளர்களேயும் மொழியியல் கவர்ந்தது. இக்கவர்ச்சிக்கு ஊக்கம் தந்தது மொழியின் ஒலிகளேப் பற்றிய அறிவு ஆகும்.

மொழிதல், பகர்தல், கூறுதல், விளம்புதல், சொல்லுதல், கழறுதல் என்று பேச்சின் பல்வேறு நிலேகளுக்கும் தமிழில் சொற்களேக் காண்கிறேம். மொழிதல் என்ருலும், வேறு எப்படி அதைச் சொன்னலும், இவற்றிற்கெல்லாம் அடிப்படை பேச்சே ஆகும் என்பதை நாம் அறிவோம். பேச்சின் அடிப்படை ஒலியே என்பதும் நாம் அறிந்ததே. அதை நாம் அன்ருட வாழ்வில் அதிகம் கவனிப்பதில்லே. ஆனல் சளி பிடித்

தவர் பேசுவதைக் கேட்கும்போதும், மற்ற இயல்புக்கு மாருன குரல் வகைகளைக் கேட்கும்போதும் குரலை – ஒலியை – மறைமுகமாக நினைத்துப் பார்க்கத்தான் செய்கிறோம்.

மொழியின் அமைப்பில் ஒலியின் முக்கியத்துவத்தைத் தமிழ் நூலார் நன்கு உணர்ந்திருந்தார்கள். அவர்களைப்போலவே இந்திய நாட்டுப் பிறமொழி நூலாரும் மொழி அமைப்பில் ஒலி பெறும் பங்கை அறிந்திருந்தார்கள். தொல்காப்பியர் இதுகருதியே முதல் அதிகாரத்தை எழுத்ததிகாரம் என்றார். ஒலிகள் பிறக்கும் முறைமையை விளக்க பிறப்பியல் என்ற தனி இயலே அமைத்தார். அவர்போலவே பிற தமிழ் இலக்கண நூலாரும் எழுத்ததிகாரத்தை விரிவுரை செய்ய முயன்றனர்.

ஆனல் மேலைநாட்டில் பழங்காலத்திலே இலக்கண ஆராய்ச்சி பெரிய அளவில் நடைபெற்று வந்த போதிலும், ஒலிகளைப்பிரித்து விவரிக்கிற முறையோ, ஒலிகள் பிறக்கும் வகை முறைகளைப் பற்றிய அறிவோ-பெரிது பட்டிருக்கவில்லை. இந்திய நாட்டு இலக்கண முறைகளைப் பற்றிய அறிவு பெருகியதும், நாம் எப்படி ஒலிகள் பிறப்பதை விவரிக்கிறோம் என்பதைக் கண்டதும், மொழியியலில் ஒரு புரட்சியே நடைபெற்று விட்டது என்று சொல்லலாம்.

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் ஆற்றலைச் சைவ சமயத்தில் விளக்குகிறார்கள். உந்தியில் இருந்து தோன்றும் காற்று, ஒலியாக மாறும் விந்தையைத்

தொல்காப்பியர் விவரிக்கிறார். யூதர்கள் உலகத் தொடக்கம் வார்த்தையிலே இருந்து ஏற்பட்டது என்று நினைக்கிறார்கள். உலகமே ஒலிமயம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பல்வேறு பொருள்களின் அசைவும் ஒலியாக மலர்கின்றது. இதை அன்றாட வாழ்வில் காண்கிறோம். இவ்வொலிகளுக்கும் மனித மொழியின் ஒற்றுமைகளுக்கும் திரள் அமைப்பில் வேற்றுமை நிறைய இல்லை. என்றாலும் மனித மொழியின் ஒலிகள் பயன்படும் விதம் வேறு; அதை நாம் உண்டுபண்ணும் வகையும் வேறு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஒலியை உண்டாக்க நம் உடல் உறுப்புக்கள் - பொதுவாக நுரையீரலிலிருந்து வாய் மூக்குவரை அமையும் ஒலிக்குழல் அமைப்புக்கள் - தேவை என்பதை இயல்பாகவே அறிவோம். தமிழிலே வழங்கும் பல மொழிகள் பேச்சுக்கும் உடல் உறுப்புக்களுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகக் காட்டுகின்றன. வாயைத் திறக்காதே!, வாயைத் திறந்து சொல்லு! ஏன் மென்று விழுங்குகிறாய்? வாயைத் திறந்தால் முத்து உதிர்ந்து விடுமா என்ன? பெரிய வாயாடி! மூச்சு விடாதே! என்பன போன்ற அன்றாடப் பேச்சு மொழிகள் வாய்க்கும் ஒலிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தெரிவிக்கின்றன அல்லவா?

நம்முடைய மூக்கு வழியாக உள்ளே போகும் மூச்சு நுரையீரலை அடைவதை நாம் அறிவோம். நுரையீரலை அடைந்த மூச்சு அதன்பின் வெளியில்

தள்ளப்படுவதையும் பாடநூல்களில் படித்திருக்கி
றோம். இப்படி மூச்சு வெளியே தள்ளப்படும்போது
அது தொண்டையில் உள்ள காற்றுச் சவ்வுகளைத்
தாண்டியே வரவேண்டும். காற்றுச் சவ்வுகள் மூடி
இருக்குமானால் அவை மூச்சைத் தடைசெய்து விடு
கின்றன. நாம் பேசும்போது காற்றுச் சவ்வுகள் மிக
வேகமாகத் திறந்து மூடிய வண்ணமே இருக்கின்றன.
இப்படித் திறந்து மூடும் செயலால் அவை வெளிவரும்
மூச்சைத் துண்டுபடுத்திக் குப்குப் என்று பலவாறு
வெளிவிடுகின்றன. இந்த நிலையில் காற்றுக் குழா
யில் நாவாலோ, உதட்டாலோ, அண்ணத்தாலோ,
தொங்குசதையாலோ நம்மால் பல மாற்றங்களை ஏற்
படுத்த முடியும். இப்படி அவற்றால் பல மாற்றங்களை
ஏற்படுத்திக் கடைசியில் மூச்சை வெளியில் விடும்
போது ஒலி பிறந்து விடுகிறது. இப்படிப் பிறக்கும்
ஒலிகளை மெய்யொலிகள் என்று சொல்லலாம். இவ்
வாறில்லாமல் தங்குதடையின்றி வெளி வருகின்ற
ஒலிகளை உயிரொலிகள் என்று மொழி இயலார்
சொல்லுவார்கள்.

மேலே, மூச்சு உள்ளிருந்து வெளியே வருவதால்
ஒலி உண்டாகும் தன்மையைச் சொன்னோம். சில
ஆப்பிரிக்க மொழிகளில் மூச்சை உள்ளுக்கு இழுக்கும்
போது ஒலி உண்டாகும் முறையும் இருக்கிறது. இம்
முறையைப் பொதுவாக மேற்சொன்ன முறையின் மறு
பக்கம் என்றே சொல்லலாம். ஆனால் உலகத்தில்,
மூச்சை வெளிவிடும்போது ஒலி ஏற்படுத்தும் தன்
மையே மொழிகளில் நிறைய காணப்படுகிறது.

மொழிகளில் பயன்படும் மெய் ஒலிகளை விவரிக்க நாம் மூன்று இயல்புகளைப் பயன்படுத்தலாம். முதல் இயல்பு காற்றுச் சவ்வுகள் அதிர்வதை அடிப்படையாகக் கொண்டது. காற்றுச் சவ்வுகளை இறுக்கமாகக் கொண்டுவந்து மூச்சை முழுக்கத் தடை செய்துவிட முடியும். இப்படி ஏற்படும் ஒலியை மூச்சுத்தடை ஒலி என்று சொல்லலாம். இன்னொரு வகையில் சவ்வுகளை இறுக்கமாகக் கொண்டுவந்தாலும், மூச்சு சவ்வுகளைத் தள்ளித் தாண்டிப் போகச் செய்யலாம். இப்படி செய்யும்போது அதிர்வு ஏற்படுகிறது. அதனால் குரல் நிறைந்த ஒலி ஏற்படுகிறது. தமிழிலே அங்கு, பங்கு, தங்கம் என்ற சொற்களில் வரும் 'க'வுக்கும்; கப்பல், கம்பி, கட்டு போன்ற சொற்களில் வரும் 'க'வுக்கும் உள்ள வேற்றுமை குரல் உள்ளதா இல்லையா என்பதே. காற்றுச் சவ்வுகளை இறுக்கமாகப் பண்ணுமல் சரளமாக விலகி இருக்க வைத்துவிட முடியும். அப்போது அதிர்வு ஏதும் செய்யாமல் மூச்சை வெளியே செலுத்தலாம். அப்படிச் செலுத்தும்போதே கப்பல், கம்பி, கட்டு போன்ற சொற்களில் வரும் குரல் இல்லாத 'க' ஒலி தோன்றுகிறது.

இரண்டாவது இயல்பு காற்றுச் சவ்வுகளுக்கு மேலே வெளிவரும் மூச்சு அடையும் மாற்றங்களைச் சேர்ந்தது ஆகும். காற்றுச் சவ்வுகளைத் தாண்டிய மூச்சை மேலும் பலவகைகளில் மாற்ற முடியும். வெளியே போகவிடாமல் மூச்சை உதட்டாலே தடை செய்துவிட முடியும்; நாக்கு நுனியாலே தடை செய்ய முடியும். பின்னண்ணத்தாலும் தடைசெய்ய முடி

யும். இவ்வாறு காற்றுச் சவ்வுகளுக்குமேலே மாற்றம் விளைவிக்கப் பயன்படும் உறுப்புக்களாலும் ஒலியை விவரிக்கலாம். 'ப' என்பதை உதட்டொலி என்று சொல்வோம் — ஏனென்றால் காற்றுச் சவ்வுகளைத் தாண்டி வந்த ஒலியை உதடுகள் இணைந்து தடை செய்வதால் இந்த ஒலி பிறக்கிறது.

மூன்றாவது இயல்பு மேலே குறிப்பிட்ட உறுப்புக்கள் எவ்வாறு இணைந்து ஒலியை விளைவிக்கின்றன என்பதை விளக்கும். மேலே சொன்ன உறுப்புக்கள் இணைந்து மூச்சைத் திடீரென முழுக்கத் தடைசெய்து விடலாம். இப்படி ஏற்பட்ட தடையை விடுவிப்பதன் மூலம் ஒலியை விளைவிக்க முடியும். மேலே சொன்ன 'ப' என்ற ஒலி இப்படியே பிறக்கிறது. காற்றுச் சவ்வுகளைத் தாண்டிய மூச்சு நேரே வாய்வழியாக வெளியே வரப்பார்க்கிறது. அப்போது உதடுகள் இணைந்து கப் பென்று தடை செய்து விடுகின்றன. தடை நீங்கியதும் 'ப' பிறக்கிறது. இந்த முறையை வெடிப்பொலி என்றும் சொல்லுவார்கள். இத் தடையொலியையும் மூச்சு நிறைந்த ஒலி என்றும் மூச்சு நிறையாத ஒலி என்றும் பிரிக்கலாம். மூச்சு நிறையாத ஒலி பிறக்கும் போது — தடை விலகியதும் நிறைய மூச்சு வெளியில் வருவதில்லை. தமிழிலே இருக்கிற க, ச, ட, த, ப முதலியவை தடையொலிகளே. இத் தடையொலிகள் மூச்சு நிறையாத தடையொலிகள். தெலுங்கு மற்றும் இந்தி போன்ற மொழிகளில் மூச்சு நிறைந்த தடையொலிகளும் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக [p^h] என்ற மூச்சு நிறைந்த தடையொலியைச் சொல்ல

லாம். இது தமிழிலே பயன்படும் 'ப' என்ற ஒலி போலவே பிறப்பினும், தடை விலகும்போது மூச்சு நிறைய வெளி வருகிறது. உங்கள் உதட்டு அருகில் உள்ளங்கையை வைத்துக்கொண்டு தமிழ்ச் சொல்லான பழம் என்பதையும், இந்திச் சொல்லான — என்பதையும் சொல்லிப் பாருங்கள். முந்திய சொல்லைக் கூறும்போது குறைந்த மூச்சும், பிந்தியதைச் சொல்லும்போது நிறைய மூச்சும் வெளிவருவதை உணர்வீர்கள். இந்தியில் மூச்சு நிறையாத தடையொலிகளுக்கு இணையாக மூச்சு நிறைந்த தடையொலிகளும் பின்வருமாறு உள்ளன.

[k] [c] [ʈ] [t] [p]

[kʰ] [cʰ] [ʈʰ] [tʰ] [pʰ]

மேற்சொன்ன முறை தடையொலி பிறப்பதை விளக்குகிறது. தடைசெய்து ஒலியை உண்டாக்குவது போல இரு உறுப்புக்களை முழுக்க இணைக்காமல் சிறிது இடம் விட்டும் மூச்சை வெளி விடலாம். இப்படி மூச்சு வெளியே போகும்போது உறுப்புக்களை உரசிக் கொண்டு மூச்சு போவதால் ஒலி ஏற்படும். இந்த ஒலிகளை உரசொலி அல்லது உரசல ஒலி என்று சொல்வோம். ஆங்கிலத்தில் பயன்படுகிற [s] ஒலி இந்த வகையைச் சேர்ந்ததுதான். அதாவது, இதில் மூச்சுத் தடை செய்யாமல் உரசிச் செல்ல வைப்பதால் இந்த ஒலி உண்டாகிறது. இன்றைய தமிழில் சொல்லுக்கு முதலில் வருகிற சகர ஒலி பெரும்பாலும் இப்படியே பிறக்கிறது.

இன்னொரு வகை ஒலிகள் மூக்கொலிகள் ஆகும். காற்றுச் சவ்வைத் தாண்டி வரும் மூச்சு வாய் வழியே வெளியில் போகாமல் மூக்கு வழியே வெளியில் போவதால் மூக்கொலிகள் ஏற்படுகின்றன. இவ்வாறு மூச்சு வாய்வழியே போகாமல் மூக்கு வழியே போவதற்குப் பின்னண்ணச் சதை உதவி செய்கிறது. இந்தச் சதை கீழிறங்கி வாய்க்குழாயை அடைத்து விடுகிறது.

'லகர ஒலிகள்' பிறக்கும்போது மூச்சு நாவின் மேல்புறமாக, முன்பாக வெளிவருவதில்லை. அதாவது, விடும் மூச்சு முன்னவழியே வருவதில்லை; நாவின் பக்கவாட்டிலே சிதறி வெளிவருகிறது.

காற்றுச்சவ்வுகளுக்கு மேலே இருக்கிற உறுப்புக்கள் அதிர்வு செய்வதால் 'ரகர ஒலிகள்' தோன்றுகின்றன.

வருடொலி என்பது மிகவும் குறைந்த கால அளவில் உண்டாக்கப்படும் ஒரு வகை ஒலியாகும். இதனை கண நேரத்தில் உண்டாகும் தடையொலி எனக் கொள்ளலாம். நாவின் அணரிய நுனி மேலெழுந்து முன்னேக்கி விரைந்து விழும்போது அண்ணத்தை ஒரு முறை தட்டுவதால் இவ்வொலி உண்டாகிறது. இவை வன்னா ஒலியாகவோ, மற்ற ஒலியாகவே இருக்கலாம்.

தமிழில் 'படம்' [paṛō] என்ற சொல்லில் வரும் [ṛ] என்பது வருடொலியாகும்.

இவ்வாறு ஒலி பிறப்பதில் பயன்படும் உறுப்புக்களை அசையும் உறுப்புக்கள், அசையா உறுப்புக்கள் என இருவகையாகப் பிரிக்க முடியும். அசையும் உறுப்புக்கள் அசையா உறுப்புக்களோடு சேர்ந்து ஒலிகளைப் பிறப்பிக்கின்றன. அவ்வொலிகள் குரல் நிறைந்தவையா இல்லையா என்பது காற்றுச் சுவடுகளின் நிலையைப் பொறுத்தது ஆகும். மேலும், அப்படிச் சேர்வதால் ஏற்படும் ஒலிகளை அவை பிறக்கும் இயல்புகளால் பலவகையாகப் பிரிக்கமுடியும்.

அட்டவணை 1: தமிழிலே பயன்படும் மெய் ஒலிகளை மேற்சொன்ன மூன்று இயல்புகளோடு பொருத்திக் காட்டுகிறது. இதில் பிறப்பிடம் என்பது அசையும், அசையா உறுப்புக்களின் சேர்க்கையைக் குறிக்கிறது. பிறக்கும் இயல்பு தடையொலியா மூக்கொலியா என்பன போன்ற இயல்புகளைக் குறிக்கும். குரல் மற்றும் மூச்சு நிறைந்தவையா என்பதையும் பிறக்கும் இயல்போடு காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2: இந்தி மொழியில் பயன்படும் ஒலிகளைக் காட்டுகிறது. இந்த அட்டவணையிலும் தமிழே போன்று பிறப்பிடமும் பிறப்பியல்பும் மற்றவையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இரண்டு அட்டவணைக்கும் இடையிலே உள்ள வேற்றுமைகளைக் கவனியுங்கள். ஒரு மொழி பயன்படுத்துகிற ஒலிகள் பிறமொழிகள் பயன் படுத்துவதை விட வேறுபட்டு இருப்பதில் வியப்பில்லை. மற்றொரு மொழியின் அட்டவணையைப் பாருங்கள். இப்போது

அட்டவணை 1: தமிழ் மெய்யொலிகள்

பிறக்கும் இயல்பு	பிறப்பிடம்							
	உதடு/ இதழ்	இதழும் பல்லும்	பல்	பல்லீறு	வளவு	அண் ணம்	பின் னண் ணம்	குரல் வளை
தடையொலி								
குரலில்லா	p		t		ʈ		k	
குரல் நிறை	b		d		ɖ		g	
உரசல் தடை யொலி								
குரலில்லா						c		
குரல் நிறை						j		
உரசல் ஒலி								
குரலில்லா				s				
குரல் நிறை	β		ð					h
மூக்கொலி	m		n̪	n	ɳ	ɲ	ŋ	
லகர ஒலி				l	ɭ	ʎ		
ரகர ஒலி				r				
வருடொலி					ɽ			
அரையுயிர்		v				y		

அட்டவணை 2 : இந்தி மெய்யொலிகள்

பிறக்கும் இயல்பு	பிறப்பிடம்							
	உதடு/ இதழ்	இதழும் பல்லும்	பல்	பல்லீறு	வகீவு	அண்ணம்	பின்னண்ணம்	குரல்வகீ
தடையொலி								
கு. இ	p		t		ʈ		k	
மூ. நி. கு. இ	p^h		t^h		$ʈ^h$		k^h	
கு. நி	b		d		ɖ		g	
மூ. நி. கு. நி	b^h		d^h		$ɖ^h$		g^h	
உரசல் தடையொலி								
கு. இ						c		
மூ. நி. கு. நி						c^h		
கு. நி						ɟ		
மூ. நி. கு. நி						$ɟ^h$		
உரசல் ஒலி								
கு. இ		f		s				ɦ
கு. நி				z				h
மூக்கொலி	m		n	n	ɳ	ñ	ṅ	
லகர ஒலி				l				
ரகர ஒலி				r				
வருடொலி					ɽ $ɽ^h$			
அரையுயிர்	w	v				y		

இனி 'இ' என்று சொல்லும் போது என்ன நடை பெறுகிறது என்று கவனியுங்கள். நாவின் முன் பகுதி மேலே எழும்பிப் போகிறது. உதடு குவியவில்லை. இதனால் 'இ' யை இதழ் குவியாத முன் மேல் ஒலி என்கிறோம்.

'உ' என்று சொல்லும்போது பின் நாக்கு மேலே போகிறது. அதனால் இதை இதழ் குவியும் பின் மேல் ஒலி என்று சொல்லலாம்.

இனி 'எ' என்று சொல்லும்போது என்ன நடை பெறுகிறது என்பதையும் கவனியுங்கள். நாவின் முன் பகுதி மேல் நோக்கி எழும்புகிறது. ஆனால் இப்படி எழுவது 'இ' ஒலிக்கு எழுந்த உயரத்தைவிடக் கூடுதல் இல்லை என்பதையும், 'அ' ஒலியின் கிடக்கையையும் விட அதிகம் என்பதையும் நாம் உணரலாம். மேலும் இப்போது இதழும் குவிவதில்லை. அதனால் இதழ்குவியாத முன் இடை ஒலி என்று 'எ' ஒலியைச் சொல்லலாம். 'ஒ' ஒலி உண்டாகும் போதும் நாவின் உயரம் 'உ' ஒலியின் உயரத்தைவிடக் குறைவாகவும் 'அ' ஒலியின் உயரத்தைவிடக் கூடுதலாகவும் இருக்கிறது. அதாவது இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட இடைநிலையைக் கொண்டிருக்கிறது. நாவின் பின் பகுதி இவவாறு இடைநிலைக்கு எழுகிறது. மேலும் 'எ' போல் இல்லாமல் இப்போது இதழ் குவிந்திருக்கிறது. இதனால் 'ஒ' ஒலியை இதழ் குவிந்தபின் இடை ஒலி என்று சொல்லலாம்.

இவ்வைந்து உயிர் ஒலிகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

உயரம்	முன், இதழ் குவியா	நடு, இதழ் குவியா	பின், இதழ் குவி
மேல்	*i*		
இடை	*e*		*o*
கீழ்		*a*	

இவ்வைந்து ஒலிகளின் அடிப்படையில் இன்னும் பல்வேறு ஒலிகளைப் படைக்க முடியும். முதலிலே நாவின் உயரத்தை இன்னும் பல நிலைகளில் பிரிக்க முடியும். மேல் என்னும் நிலையை இரண்டாகப் பிரித்து மேல் என்றும் கீழ்-மேல் என்றும் சொல்லமுடியும். அதாவது இந்த கீழ்-மேல் நிலை இடைநிலைக்கு மேலே இருக்கும். ஆனால் மேல் என்னும் உயரத்தை விடக் கீழே இருக்கும். இதைப்போலவே இடை என்பதை **உயர்-இடை** என்றும், இடை என்றும், **கீழ்-இடை** என்றும் பிரிக்கலாம். இதில் உயர்-இடை என்பது கீழ்-மேலுக்குக் குறைந்த உயரமாகவும், கீழ்-இடை என்பது கீழ் உயரத்திற்கு (கிடக்கைக்கு) மேலாகவும் இருக்கும். மேலும் கீழ் என்பதை **உயர்-கீழ்** என்றும்; **கீழ்** என்றும் இருவகையாக நாம் பிரித்துவிடலாம்.

இப்போது உயர்-கீழ் என்பது கீழ் நிலையைவிட உயர மாகவும், கீழ்-இடையைவிடத் தாழ்வாகவும் இருக்கும்.

மேற்கண்ட நாவின் உயரவகையைப் போலவே இதழ் குவியும் குணத்தாலும் இன்னும் பல ஒலிகளை உண்டு பண்ணலாம். எடுத்துக்காட்டாக 'இ' என்னும் ஒலி இதழ் குவியாத முன்மேல் ஒலி என்றோம். இதழ் குவியாத தன்மையை இதழ் குவியச் செய்து இதழ் குவியும் முன்மேல் ஒலியை உண்டு பண்ணலாம். இதனால் நாவின் முன் பகுதியில் எழும் ஒலிகளை இதழ் குவிந்தவை இதழ் குவியாதவை எனப் பிரிக்க முடியும். இதைப்போலவே நடு ஒலிகளையும் இதழ் குவிந்தவை குவியாதவை என்றும், பின் ஒலிகளைக் குவிந்தவை குவியாதவை என்றும் பிரிக்க முடியும்.

தமிழிலே 'ஐ' என்ற ஒலியும் 'ஔ' என்ற ஒலியும் பயன்படுவதை நாம் அறிவோம். ஐயர் என்ற சொல்லை அய்யர் என்று எழுதுவதை நாம் பார்க்கிறோம். ஔவை என்ற சொல்லும் பல இடங்களில் அவ்வை என்றே எழுதப்படுகிறது. இந்த 'ஐ' என்ற ஒலியை ஈரொலிகளின் சேர்க்கை என்று தமிழ் இலக்கண நூலார் சொல்வார்கள். இந்த ஈரொலிகள் மொழியிலே பயன்படுவது இயற்கையாகவே இருக்கிறது. ஆனால் இவ்வாறு ஒன்றுபடும் இரண்டு ஒலிகளின் சேர்க்கையில் ஒன்றே மிகுந்த தெளிவோடு துலங்கும். இத்தெளிவு உயிர் ஒலிகளின் இயல்பு என்று சொல்ல வேண்டும். உயிர் ஒலிகள் தோன்றும்

பின் கண்ட அட்டவணை உயிர் ஒலிகளின் வகைகளைத் தருகிறது

உயரம்	முன்		நடு		பின்	
	இதழ் குவியா	இதழ் குவி	இதழ் குவியா	இதழ் குவி	இதழ் குவியா	இதழ் குவி
மேல்	i	ü = y	ɨ̇	u̇	ï	u
கீழ் மேல்	I	Ü	ɨ	U̇	Ï	U
உயர் இடை	e	ö	ė	ȯ	ë = r	o
இடை	E	Ω̈	Ė = ə	Ω̇	Ë	Ω
கீழ் இடை	ɛ	ɔ̈ = œ	ɛ̇	ɔ̇	ɛ̈ = ʌ	ɔ
உயர் கீழ்	æ	ɯ̇	æ̇	ɯ̇	ä	ɯ
கீழ்	a	ɒ	ȧ	ɒ̇	ä	ɒ

போது காற்றுச் சவ்வுகளுக்கு மேலே ஏதும் தடை நிகழ்வதில்லை என்று கண்டோம்.

ஈரொலி தோன்றும் போதும் தடை ஏற்படுவதில்லை என்பதை எளிதில் உணரலாம். ஆனால் இந்த ஈரொலியில் என்றே துலங்கும் இயல்பு கொண்டு இருக்கிறது. அதாவது *[ai]* என்பதில் *[a]* என்ற ஒலியே துலங்குகிறது. அதனால் 'அ' வை உயிர் ஒலி என்றும் *[i]* யை இந்த இடத்தில் அரையுயிர் ஒலி என்றும் சொல்லலாம். அரையுயிர் ஒலி பிறக்கும் போதுள்ள நாக்கு உயரம் மற்ற உயிர் ஒலிகள் பிறக்கும் போதுள்ள நாக்கு உயரத்தைவிட எப்போதும் கூடுதலாகவே இருக்கும்.

இரண்டு உயிரொலிகள் சேர்ந்து வருவதால் அவை ஈரொலி என்றும் அவற்றில் ஒன்று அரையுயிர் ஒலி என்றும் கண்மூடிக் கொண்டு சொல்லிவிட முடியாது. ஏனென்றால் பல மொழிகளில் இரண்டு உயிர் ஒலிகள் ஒன்று சேர்ந்து வந்தாலும் இரண்டு உயிர் ஒலிகளாகவே உச்சரிக்கப்படுகின்றன. அதாவது அவற்றின் துலங்கு தன்மை குறைவதில்லை.

இனி மூக்கொலிகளைக் காணலாம். தமிழிலே எழுதும்போது அவன் *[avan]* என்று எழுதுகிறோம். பழம் *[palam]* என்றே எழுதுகிறோம். மரம் *[maram]* என்றே எழுதுகிறோம். இவ்வாறு மூக்கொலி சொல்லுக்குக் கடைசியில் வரும்போது அவற்றை முழுக்க எழுதிவிடுகிறோம்.

ஆனால் தமிழில் பேச்சு வழக்கிலே எழுத்துக்களின் படி சொல்வதில்லை. பின் காணும் எடுத்துக்காட்டுக் களைப் பாருங்கள்.

/ *avan* /	→	[ʌvẽ]	அவன்
/ *maram* /	→	[mʌrõ]	மரம்
/ *palam* /	→	[pʌlõ]	பழம்
/ *paṇam* /	→	[pʌṇõ]	பணம்
/ *kuṇam* /	→	[kuṇõ]	குணம்
/ *payam* /	→	[pʌyõ]	பயம்
/ *kaṭan* /	→	[kʌṛõ]	கடன்

மேற்கண்ட நிலைகளில் கடைசி எழுத்துக்க ளான மூக்கொலிகள் பேசும்போது போய்விடுகின்றன. அவற்றிற்கு மாறுக முந்தி இருக்கிற உயிர் ஒலிகளின் மீது மூக்கினத்தின் இயல்பை ஏற்றி விடுகின்றோம். இது மூக்கினமாதல் என்று சொல்லப்படும்.

உயிர் ஒலிகள் மூக்கினமாகி ஒலிக்கப்படுவதைப் போலவே வலைநா ஒலியாகவும் ஒலிக்கப்பட முடியும். நாக்கின் நுனி முன்பின் வளையும் தன்மை கொண் டதை நாம் அறிவோம். உயிர் ஒலி உண்டாகும் போது தடை ஏதும் செய்யாமல் நாவின் நுனி எழுந்து பின்னேக்கி வளைய முடியும். அப்போது வலைநா குணத்தோடு உயிர் ஒலி பிறந்துவிடுகிறது.

இயல்பாக எல்லா உயிர் ஒலிகளும் குரல் நிறைந் தவையே. ஆனால் குரல் இல்லாத உயிர் ஒலிகளையும்

உண்டுபண்ண முடியும். முணுமுணுக்கும் போதும், கிசுகிசுத்துப் பேசும்போதும் ஒலியில் குரல் தன்மை இல்லை. ஆனால் சில மொழிகளில் இயல்பாகவே குரல் இல்லாத உயிரொலிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

கடைசியாக, உயிர் ஒலிகளை விறைப்பாகவோ மென்மையாகவோ ஒலிக்க முடியும். தமிழிலே பொதுவாக எல்லாக் குற்றியல் ஒலிகளும் மென்மையாகத் தோன்றுகின்றன எனலாம்; நீட்டல் ஒலிகள் விறைப்பாகத் தோன்றுகின்றன என்றும் சொல்லலாம்.

ஒலிகளை இதுவரை மெய்யொலிகள் என்றும் உயிரொலிகள் என்றும் பிரித்து அவற்றைப் பல வகைகளாகத் தொகுத்தோம். மேற்சொன்னவை தவிர்த்துப் பேசும்போது இன்னும் மூன்று இயல்புகளை மொழிகள் பயன்படுத்துகின்றன. அவற்றை அளவை, அழுத்தம், இசை என்ற தலைப்புக்களிலே குறிக்கலாம்.

அளவை என்பது ஒலி குற்றியல் ஒலியா, நீட்டல் ஒலியா என்பதைக் குறிப்பது ஆகும். தமிழ் மொழியில் குற்றியல் ஒலிகளும் நீட்டல் ஒலிகளும் பயன்படுகின்றன. தமிழில் கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் குற்றியல் ஒலிகளும் நீட்டல் ஒலிகளும் தோன்றுவதைக் காணலாம்.

/ viṭu /	[viṭɤ]	விடு
/ vi:ṭu /	[vi:ṭɤ]	வீடு
/ eṭu /	[eṭɤ]	எடு
/ e:ṭu /	[e:ṭɤ]	ஏடு

/ paṭu /	[p∧ɽ]	படு
/ pa:ṭu /	[pa:ɽ]	பாடு
/ koṭu /	[koɽ]	கொடு
/ ko:ṭu /	[ko:ɽ]	கோடு
/ muṭi /	[muɽi]	முடி
/ mu:ṭi /	[mu:ɽi]	மூடி
/ kapam /	[k∧βõ]	கபம்
/ kappam /	[k∧ppõ]	கப்பம்
/ ka:tu /	[ka:ðɨ]	காது
/ ka:ttu /	[ka:ttɨ]	காற்று
/ ka:ṭu /	[ka:ɽɨ]	காடு
/ ka:ṭṭu /	[ka:ʈʈɨ]	காட்டு
/ ka:cu /	[ka:sɨ]	காசு
/ ka:ccu /	[ka:ccɨ]	காய்ச்சு
/ pa:ku /	[pa:hɨ]	பாகு
/ pa:kku /	[pa.kkɨ]	பாக்கு

இரண்டையும் ஒப்பிட்டுக் கண்டே இது குறுகியது, அது நீண்டது என்று சொல்ல முடியும். பொதுவாக ஒரு மொழியின் அடிப்படையைக் கொண்டே அளவையைக் கவனிப்பார்கள்.

அழுத்தம் ஆங்கில மொழியில் பயன்படுகிறது. cat [kæt] என்ற சொல்லைப் பயன்படுத்தும்போது [æ] என்ற உயிர் ஒலி அழுத்தம் பெறுகிறது. ஆங்கிலத்தில் குற்றியல் ஒலி, நீட்டல் ஒலி என்று இல்லை என்றும்

அழுத்தக் குணத்தின் விளைவே இருக்கிறது என்றும் சொல்வார்கள். நுரையீரலிலிருந்து வெளியே தள்ளப் படும் வேகத்தைப் பொறுத்து அழுத்தத்தைத் தீர் மானிக்க வேண்டும். மேலும் உச்சரிப்பில் விறைப்பு இருக்கிறதா என்பதைக் கொண்டு — அதாவது பயன் படும் தசைகள் விறைப்பாக இருக்கிறதா என்பதைக் கொண்டு முடிவு செய்ய வேண்டும். இந்த அழுத் தத்தைப் பல நிலைகளில் பதிவு செய்கிறார்கள். அவற்றை குறைவு, சமம், கூடுதல் என்று அள விடலாம்.

இசை காற்றுச் சவ்வுகளின் விறைப்புத் தன்மை யையும் அவை அதிர்கின்ற வேகத்தையும் சார்ந்து இருக்கிறது. தமிழிலே இசை பெரும் பங்கு பெறுகிறது என்றே கருதப்படுகிறது.

பொருள் வேறுபாடுகள் எழுத்து மொழியில் தனித் தனிச் சொல்லியன்களால் விளக்கப்படுகின்றன. ஆனால் பேச்சு மொழியிலோ இவை பலவகையான 'இசை மட்டங்களினால்' உணர்த்தப்படுகின்றன. இசை மட்டங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: உயர் இசை, இயல்பு இசை, கீழ் இசை என்பனவாகும். இவற்றை முறையே 3, 2, 1 என்ற எண்களால் குறிக்கின்றோம். இவற்றின் இசை அளவி கீழே தரப்பட்டுள்ளது.

'அவன் வந்தான்' என்பதை நாம் இசையை மாற்றுவதால் பல்வேறு பொருள்களில் நம்மால் பயன் படுத்த முடியும்

1. ↓ ↓
2 1
அவன் தந்தான் ↓ 'he came'

2. ↓ ↓
2 3
அவன் வந்தான் ↑ 'he came' (exclamation)

3. ↓ ↓
1 2
அவன் வந்தான் ↑ 'did he come?'

4. ↓ ↓
3 1
அவன் வந்தான் ↓ 'he came' (rediculing)

இசை அளவி

1. 

2. 

3.



4.



3. ஒலியன் இயல்

ஒலியியலின் நோக்கம் சொல்லுவதைச் சொல்லுகிற மாதிரியே எழுதவேண்டும் என்பதாகும். இந்த நோக்கம் நடைமுறைக்கு உதவாது. ஏனென்றால் மனிதனின் தொண்டையில் எழும் ஒலி நயங்களுக்குக் கணக்கு வழக்கு ஏதுமில்லை. நாமே இதை அன்றாட வாழ்வில் கவனிக்கின்றோம். சளிபிடித்தவுடன் நம் குரல் மாறுகிற தன்மையை நாமறிவோம். மேலும் ஒரு சொல்லை ஒருமுறை உச்சரிப்பது போலவே மறு முறையும் உச்சரிக்கிறோம் என்பதற்கு ஏதும் ஆதாரமில்லை. மாறாக ஒவ்வொரு முறையும் வெவ்வேறு விதமாக உச்சரிக்கிறோம் என்று பௌதிக ஆராய்ச்சி தெளிவாக்குகிறது.

தமிழிலே கப்பல் என்ற சொல்லில் உள்ள [k] யையும், அங்கு என்ற சொல்லில் உள்ள [g] யையும், பகல் என்ற சொல்லில் உள்ள [h] யையும் உச்சரிக்கின்றோம்.

ஒலியியலின் படி நாம் எழுத வேண்டுமென்றால் மூன்று வெவ்வேறு எழுத்துக்களையல்லவா பயன் படுத்த வேண்டும் ? தமிழ் நாட்டில் சிலமாவட்டங்களில் [h] என்பதற்குப் பதில் [ɣ] யை உச்சரிக்கிறார்கள். சொல்லுவதைச் சொல்லுவது போலவே எழுதுவதென்றால் எண்ணிறந்த எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டும். எந்தவிதமான ஒழுங்கும் இருக்க முடியாது. பல பொருள் மிகுந்த பொது தன்மைகளை நாம் அறிந்து கொள்ளவும் முடியாது. அதாவது மேலே சொன்ன சொற்களை எடுத்துக் கொள்ளுங்கள் அச்சொற்களில் [k] ஒலி சொல்லுக்கு முதலிலும், [g] ஒலி மூக்கின ஒலிக்குப் பின்பும், [h] இரு உயிரொலிகளுக்கு இடையிலும் வருகின்றன. ஒன்று வருகின்ற இடத்தில் இன்னொன்று வருவதில்லையல்லவா ? இந்த நிலையில் ஏன் அவற்றை ஓர் ஒலிக்கூட்டமாக எடுத்துக்கொள்ளக் கூடாது ? இக்கேள்விகளுக்கு ஒலியியல் பதில் தருவதில்லை.

மொழியை விவரிப்பதில் ஒலியியலின் பங்கு பெரிதில்லை என்றே அமெரிக்க மொழியியலார் கடந்த முப்பது ஆண்டுகளாகக் கருதினர். ஒலிகளை அப்படியப்படியே பயன்படுத்தினாலும் இவ்வொலிக் கூட்டங்கள் ஓர் எல்லைக் கோட்டுக்கு உள்ளே ஒன்று போலவே தோன்றுவதையும் அவர்கள் கண்டனர். அந்த எல்லைக் கோட்டுக்குள்ளேயும் ஒலிகளை வழங்குவதில் சீரமைப்பு இருப்பதை அவர்கள் கண்டனர். மொழிகளில் எழுத்துருவம் எப்படியெல்லாம் பயன்படுகிறது என்பதையும் அலசி ஆராய்ந்தனர். அந்த எழுத்துரு

வங்கள் பல நிலைகளில் பல்வேறு வகையாக உச்சரிக்கப்பட்டாலும் அதைக் கேட்பவரும், எழுதுபவரும், எப்படியோ சமாளித்துக் கொள்வதையும் அவர்கள் கண்டனர். மொழியை அங்கம் அங்கமாகப் பிரித்து ஆராய்கின்ற முயற்சியின் விளைவும் இதோடு சேர்ந்து கொண்டது. இவை தவிர நடைமுறையில் ஒலியியலின் பல சிரமங்களையும் கண்டனர். ஒருவர் ஒரு மொழியில் பல ஒலிகளை விவரிக்கிறார். இன்னொருவரோ அவ்வொலிகளைக் கேட்டதேயில்லை எனச் சாதிக்கிறார். இவ்விருவரின் பயிற்சி முறைகள் வேறுக இருக்கலாம் அல்லது இவர்களுக்கு முன்பு தெரிந்த மொழிகளின் தொடர்பாகவும் இந்த விளைவு ஏற்படலாம். [தமிழிலே பிக்சர் picture என்ற ஆங்கிலச் சொல்லை பிச்சர் என்றே கிராமப் புறங்களில் உச்சரிக்கிறார்கள். இதற்குக் காரணம் தமிழ் மொழியின் இயல்பே.] அதனால் மொழிகளில் பொருள் பிரிக்கப் பயன் படும் ஒலிக் கூட்டத்தைப் பற்றிய ஆராய்ச்சி எழுந்தது. அதன் விளைவாக எழுந்த ஒலியன் என்ற கருத்து மொழியியலில் பெரும் புரட்சியை விளைவித்தது என்றே சொல்லவேண்டும். இப்போது சொல்லை வெறும் ஒலிகளாலான பிண்டமாக விவரிக்கத் தேவையில்லை. நன்றாக உருட்டித் திரட்டி ஒலியினால் ஆக்கப் பட்ட உருவம் என்று விவரிக்க முடியும். இதனால் ஒலியியல் இப்போது இரண்டாம் படிக்குத் தள்ளப் பட்டுவிட்டது. ஒலியியலின் வேலை மொழியில் பயன்படும் உருவங்களின் ஒலிகளை விவரிப்பது. அப்படி விவரிக்கப்பட்ட ஒலிகளை ஒழுங்குபடுத்தி, ஒலியன்

களாக மாற்றி அவை வழங்கும் நிலைகளை விவரிப்பது ஒலியன் இயலின் வேலையாகிவிட்டது.

இதற்கு முந்திய பகுதியில் ஒலிகளை வகுப்பது பற்றி அறிந்தோம். ஒலிகளை, அவை பிறக்கும் இடம் பற்றியும், இயல்புகள் பற்றியும் பிரித்தோம். ஒரு மொழியில் எண்ணிறந்த ஒலிகள் பயன்படலாம். அவ்வொலிகள் பிறக்கும் இடங்களையும் இயல்புகளையும் விவரிப்பதோடு, அவை எப்படி ஒலியன்களுக்குக் கீழே, சீராக வழங்கப்படுகின்றன என்பதையும் நாம் ஆராயவேண்டும். அப்படி ஆராய்வது ஒலிகளை ஒலியன்களாக மாற்றும்.

ஒலியன்கள் என்ருல் என்ன என்பதைத் திட்டவட்டமாகச் சொல்வதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். என்ருலும் பொதுவாக ஒலியனின் இயல்பைச் சொல்ல முடியும். பின்கண்ட சொற்களை எடுத்துக்கொள்ளுங்கள்.

[n ∧ ɳɖɪ]	நண்டு
[t ∧ ɳɖɪ]	தண்டு
[v ∧ ɳɖɪ]	வண்டு
[c ∧ ɳɖɪ]	சண்டு
[k ∧ ɳɖɪ]	கண்டு

இச்சொற்களில் முதலில் வரும் ஒலிகள் தவிர்த்துப் பிற அனைத்தும் ஒரே வகையில் அமைந்திருக்கின்றன. ஆனல் இச்சொற்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருளைத் தருகின்றது என்பதை நாமறிவோம்.

அதாவது ஒரேஒரு இடத்தில் வருகின்ற ஒலிகளால் பொருள் வேறுபாடு நடைபெறுகிறது. இப்படிப் பொருளை வேறுபடுத்தப் பயன்படும் ஒலிகளை ஒலியன் என்று சொல்லலாம். இதைப் பொதுப்படையான விளக்கமென்றே எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒலியன்களைக் கண்டுதெளியப் பொதுவாக நான்கு விதிகள் பயன் படுகின்றன. அவற்றைக் கீழே ஆராய்வோம்.

ஒலிகளை ஒலியன்களாக அமைக்க முதலில் ஒலியியல் அடிப்படையில் மொழியில் வழங்கும் ஒலிகளை அட்டவணைப் படுத்திக் கொள்ளவேண்டும். எடுத்துக் காட்டாக முன்பு காட்டப்பட்ட தமிழ் ஒலிகளின் அட்டவணையைப் பாருங்கள். அப்படிப்பட்ட அட்டவணை ஒன்றை நாம் முதலில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு மொழிக்கு எப்படி அந்த அட்டவணையை அமைப்பது? தமிழ் பேசுகிற ஒருவரிடமிருந்து பல சொற்களை ஒலி எழுத்துக்களில் எழுத வேண்டும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் சொற்களைக் கவனியுங்கள்.

1.	[ʌmma:]	அம்மா
2.	[ʌppa:]	அப்பா
3.	[ʌkka:]	அக்கா
4.	[tʌɳɳi]	தண்ணீர்
5.	[pa:mbu]	பாம்பு

6.	[*ka:ɽɛ*]	காடு
7.	[*kʌmmʌlɛ*]	கம்மல்
8.	[*ka:ðɛ*]	காது
9.	[*kʌrɛppɛ*]	கருப்பு
10.	[*ka:sɛ*]	காசு
11.	[*pʌŋgɛ*]	பங்கு
12.	[*tʌŋgõ*]	தங்கம்
13.	[*cʌŋgɛ*]	சங்கு
14.	[*kʌŋgɛ*]	கங்கு
15.	[*vɪ:ŋgɛ*]	வீங்கு

இவ்வாறு நாம் சேகரித்திருக்கிற சொற்களில் அம் மொழியில் பயன்படும் எல்லா ஒலிகளும் வந்திருந்தால் நல்லது. இப்படி வந்திருக்குமா இல்லையா என்று கண்டுகொள்ளச் சிறப்பான வழி ஏதுமில்லை. ஆனால் போகப்போக நம் ஆராய்ச்சியின் விளைவாகவே எளிதில் எல்லா ஒலிகளையும் ஒலியெழுத்தில் குறித்து விட்டோமா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இப்படி ஒலியெழுத்தில் குறிக்கப்பட்ட சொற்களை அகர வரிசைப் படுத்திய பின்னால் ஒலிகளைத் தனியே எடுத்து அட்டவணையாக அமைக்க வேண்டும். இந்த அட்டவணையின் அடிப்படையில் ஒலியன்களைக் கண்டு பிடிக்கும் முயற்சி தொடங்குகிறது.

இந்த முயற்சியின் முதல் வேலை ஒலிகளுக்குள் ஒற்றுமை ஏதேனும் இருக்கிறதா என்று காண்பதாகும். ஒலிகளுக்குள் ஒற்றுமை அவை பிறக்கும்

அடிப்படையிலோ, மற்ற இயல்புகளின் அடிப்படையிலோ இருக்க முடியும். எடுத்துக்காட்டாகத் தமிழிலே பயன்படும் இரு ஒலிகளைப் பாருங்கள்: [p] மற்றும் [b] இரண்டும் உதட்டொலிகள். அவை குரல் நிறைந்ததா இல்லையா என்ற குணத்தின் அடிப்படையிலேதான் வேற்றுமைப்படுகின்றன. [t] மற்றும் [d] என்ற ஒலிகளை எடுத்துக் கொள்ளுங்கள். இவையும் பிறக்கும் இடம் ஒன்றாய் இருந்தாலும் குரல் என்னும் குண அடிப்படையில் வேற்றுமைப் படுவதை நாம் காண்கிறோம். மேலும் [ṭ], [ḍ] மற்றும் [ṛ] ஒலிகளை எடுத்துக் கொள்ளுங்கள். இம்மூன்றும் வளை நாவொலிகள் என்ற ஒற்றுமையைப் பெற்றிருக்கின்றன. [k], [g] மற்றும் [h] ஒலிகள் பின்னண்ணத்திலும் அதற்கும் பின்னும் பிறக்கின்றன என்ற ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன. மூக்கின ஒலிகள் எல்லாம் மூக்கின் வழியே பிறக்கின்ற ஒற்றுமையைக் காட்டுகின்றன.

இவ்வாறு ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற ஒலிக் கூட்டங்களைத் தனியே பிரித்தெடுக்க வேண்டும். தமிழிலே ஒலி ஒற்றுமையுடைய ஒலிகள் பின்வருமாறு ஆகும்:

1. (p)	2. (t)	3. (ṭ)	4. (c)	5. (k)	6. (m)	(ṁ)
(b)	(d)	(ḍ)	(j)	(g)	(ṇ)	(m̃)
(β)	(δ)	(ṛ)	(s)	(h)	(n)	(n̲)
				(r)		

7. (*y*) (*v*) 8. (*r*) (*l*) (*l*) 9. (*i*) (*i:*) 10. (*e*) (*e:*) 11. (*e*) (*o*)

12. (*o*) (*o:*) 13. (*u*) (*u:*) 14. (∧) (*a:*) 15 (*e*) (*ẽ*) 16. (*o*) (*õ*) 17. (*u*) (*ũ*)

இவ்வாறு இணையிணையாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஒலிக் கூட்டங்களை இனிமேல் தனியாக ஆராய வேண்டும். ஓர் ஒற்றுமையுடைய ஒலிக்கூட்டம் (*k*), (*g*), (*h*) என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். இப் போது நம்வேலை இவ்வொலிகள் ஒவ்வொன்றும் தமி ழிலே ஒலியனைக் பயன்படுகின்றனவா இல்லையா என்று காண்பது ஆகும்.

1. (*k*∧*pp*∧l*ɨ*) கப்பல்
   (*k*∧ll*ɨ*) கல்
   (*k*∧*ṛ*∧l*ɨ*) கடல்
   (*k*∧*ṇṇɨ*) கண்
   (*cukkɨ*) சுக்கு

2. (*t*∧*ṅgõ*) தங்கம்
   (*c*∧*ṅgɨ*) சங்கு
   (*p*∧*ṅgɨ*) பங்கு
   (*nuṅgɨ*) நுங்கு
   (*tu:ṅgɨ*) தூங்கு

3. (*t*∧*h*∧*ṛɨ*) தகடு
   (*p*∧*h*∧*ṭṭɨ*) பகட்டு

(*n*∧*hō*)	நகம்
(*pa:hō*)	பாகம்
(*ta:hō*)	தாகம்

மேற்கண்ட மூன்று வரிசைகளில் உள்ள சொற்களைக் கவனியுங்கள். அச் சொற்களில் [*k*] ஒலி எவ்விடங்களில் வருகின்றது? [*g*] ஒலி எவ்விடங்களில் வருகின்றது? [*h*] ஒலி எவ்விடங்களில் வருகின்றது? என்பவற்றை உற்றுப் பாருங்கள். [*k*] ஒலி எப்போதும் சொல்லுக்கு முதலிலும், இரட்டித்துமே வருவதைக் கவனியுங்கள். [*g*] ஒலி எப்போதும் மூக்கின ஒலிக்குப் பிறகே வருகிறது. [*h*] ஒலி எப்போதும் இரண்டு உயிரொலிகளுக்கு இடையிலேயே வருகிறது என்பதையும் கவனியுங்கள். இவ்வாறு ஒன்றுக்கொன்று ஒற்றுமையுள்ள இம்மூன்று ஒலிகளும் ஒரே இடத்தில் வருவதில்லை என்று பார்க்கிறோம். அதாவது [*k*] வரும் இடங்களில் [*g*] வோ [*h*] வோ வருவதில்லை. அதுபோலவே [*g*] மற்றும் [*h*] வரும் இடங்களில் [*k*] வருவதில்லை என்பதையும் அறிகிறோம். இப்படி ஒலி ஒற்றுமையுடைய ஒலிகள் மாறி வழங்கினால் அவ்வொலிகளை ஒரே ஒலியனின் கீழ் அடக்கலாம். மேற்கண்ட மூன்று ஒலிகளும் மாறி வழங்குவதால் அவற்றை ஒலிபனின் மாற்றொலிகள் என்று சொல்ல வேண்டும். இம்மாற்றொலிகளை [ ] என்ற கோட்டுக்குள் அடக்கிக் காட்டலாம். ஒலியனை / / என்ற சாய்வு வரிக்குள் அடக்கியும் காட்டலாம். இப்படிக் காட்டுவது பார்த்த மாத்திரத்தில் ஓர்ஒலி மாற்றொலியா அல்லது ஒலியனா என்று அறிந்து கொள்ள உதவும். பொதுவாகவே ஒலிகளைக்

குறிக்க [ ] என்ற கோடுகளையும், ஒலியன்களைக் குறிக்க / / என்ற சாய்வு வரிகளையும் மொழியியலார் பயன்படுத்துகின்றனர்.

இப்படி மாறி வழங்கும் இயல்புகளோடு ஒலிகள் எதிர் நிற்கவும் செய்வதால் ஒலியன்களை அடையாளம் காணமுடியும். ஒலி ஒற்றுமையுடைய [r], [l] [ɻ] மற்றும் [ɭ] கூட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது நம் வேலை இவை தனித்தனி ஒலியன்களா? அல்லது ஒரே ஒலியனுக்குள் அடங்கும் மாற்றொலிகளா? என்று காண்பதாகும். முதலில் அவை மாறி வழங்குகின்றனவா இல்லையா என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டும். அதற்குப் பின்கண்ட சொற்களைக் கவனியுங்கள்.

(v∧ri)	வரி
(v∧li)	வழி
(v∧ɭi)	வலி
(k∧li)	கலி
(k∧ɭi)	களி
(k∧ri)	கரி
(k∧rɛ)	கரை
(k∧lɛ)	கலை
(k∧ɭɛ)	களை

மேற்கண்ட சொற்களில் மூன்றொலிகளும் வரும் இடங்களைப் பாருங்கள். [r] இரு உயிரொலிகளுக்கு இடையே வருகிறது. இதைப்போல அதே இடத்தில்

[l]-ம் [ɭ]-ம் வருகின்றன. வரி, வழி, வலி போன்ற சொற்களில் பொருள் வேற்றுமைப் படுத்துவதில் [r], [l] மற்றும் [l] ஒலிகளே முதன்மை பெறுகின்றன. இங்கே, இவை இவ்வாறு பொருள் நிறைந்த வேற்றுமைகளாக எதிர் நிற்கின்றன. இப்படிப் பொருள் வேற்றுமை தந்து எதிர் நிற்கின்ற ஒலிகளைத் தனித்தனி ஒலியன்களாகவே எடுத்துக் கொள்ளவேண்டும்

மேற்கண்ட முறையைப் பின்பற்றி மொழியின் எல்லா ஒலிகளையும் பொதுவாகக் கண்டுகொள்ள முடியும் என்றாலும் மேலுமிரண்டு விதிமுறைகளையும் மொழியியலார் பின்பற்றுகிறார்கள். இம்முறைகளைச் சீரமைப்பு விதி என்றும் சிக்கன விதி என்றும் சொல்லலாம். இவ்விதிகள் எளியனவாய்த் தோன்றினாலும் மிக முக்கியம் வாய்ந்தனவாகும்.

சீரமைப்பு விதியின்படி மொழியில் பயன்படும் ஒலியன்கள் சீராய் அமைந்திருக்கவேண்டும். தமிழிலே க, ச, ட, த, ப, ற என்ற ஒலிகளைப் பயன்படுத்துகிறோம். அதற்கு இணையாக ங, ஞ, ண, ந, ம, ன என்ற மூக்கின ஒலிகளையும் பயன்படுத்துகிறோம். பின்கண்ட இந்தி மொழியின் தடையொலி வரிசைகளைப் பாருங்கள்.

p	*t*	*ṭ*	*c*	*k*
pʰ	*tʰ*	*ṭʰ*	*cʰ*	*kʰ*
b	*d*	*ḍ*	*j*	*g*
bʰ	*dʰ*	*ḍʰ*	*jʰ*	*gʰ*

இவ்வாறு அமைந்திருப்பது இயல்பு என்று மொழியறிஞர்கள் நினைக்கிறார்கள். என்றாலும் சீரமைப்பு என்பதைத் தெளிவாகவோ திட்டவட்டமாகவோ சொல்ல முடியாது. மொழிக்கு மொழி அது வேறுபடுகிறது. ஆனால் நமக்கு முன்பின் பழக்கமில்லாத மொழியின் ஒலியன்களை அடையாளம் காண இவ்விதி வேறு வகையில் பயன்படுகிறது என்றே சொல்லவேண்டும். எடுத்துக்காட்டாகத் 'தாடோ' மொழியை ஆராய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் முதலில் (*p*) ஒலியையும், (p^h) ஒலியையும் உடைய சொற்களைப் பார்க்கிறோம். அதைப்போலவே (*t*) ஒலியையும் (t^h) ஒலியையும் பார்க்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் (*k*) ஒலி ஒன்றை மட்டும் பார்க்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். இப்போது நம்மிடம் பின்கண்ட தடையொலி அட்டவணையே கிடைக்கிறது.

p	*t*	*k*
p^h	t^h	

(*k*) ஒலிக்கு இணையாக (k^h) ஒலியைக் காணமுடியவில்லை. நம் அட்டவணையில் காலியிடம் விழுகிறது. இதற்குக் காரணம் நம்முடைய சொற்களின் எண்ணிக்கைக் குறைவாகவும் இருக்கலாம். அதனால் மேலும் உற்றுக் கவனிக்கத் தொடங்குகிறோம். இத்தகைய காலி இடங்கள் இயல்புக்கு மாறுனவையாக இருக்கலாமென்றே மொழியியலார் கருதுகின்றனர். இப்படி உற்றுக் கவனிக்க உதவுவது இந்த விதி ஆகும்.

ஆனால் இவ்விதியை எந்த முறையில், எந்த அளவில் பயன்படுத்துவது என்பதில் நிறைய வேற்றுமைகள் உண்டு. மேற்சொன்ன தாடோ எடுத்துக்காட்டை மீண்டும் பாருங்கள். நாம் தொடர்ந்து (k^h) ஒலி தாடோவில் பயன்படுகிறதா என்று பார்த்துக் கொண்டேயிருக்கும்போது (x) ஒலியைக் காண்கிறோம். இவ்வொலி உரசல் ஒலியென்பதை அறிவோம். இந்த உரசல் ஒலி மட்டுமே தாடோவில் பயன்படுகிறது; (k^h) ஒலி வருவதேயில்லை. ஆனால் சில குக்கிசின் குழு மொழிகளில் (k^h) ஒலியே பயன்பட்டு

p	t	k
p^h	t^h	k^h

என்ற சீரமைப்பைக காண்கிறோம். இதனால் (k^h)-ம், (x)-ம் தாடோவில் ஒன்றே என நினைக்கத் தோன்றும். அது தவறில்லை. உண்மையில் (k^h) ஒலியே நாளாவட்டத்தில் (x) ஒலியாகத் தாடோ மொழியில் மாறிவிட்டது. இந்த உண்மைகளை நாம் புரிந்து கொண்ட பிறகு (x) ஒலியை (k^h) ஒலியனாக ஏற்றுக்கொண்டு அட்டவணையில் ஏற்படும் காலியிடத்தை அடைப்பதா வேண்டாமா என்று எண்ணத் தொடங்குகிறோம். இது செயற்கையாகத் தோன்றினாலும் வரலாற்று அடிப்படையில் சரியே என்று தோன்றும்.

தமிழிலே ஆறு மூக்கொலியன்கள் இருக்கின்றனவா இல்லையா என்பது ஒரு பிரச்சினையாகும். க, ச, ட, த, ப, ற என்பதற்கு இணையாக ங, ஞ, ண, ந,

ம, ன, என்ற ஒலியன்களை வைத்துக் கொள்வது சீரமைப்புத் தருகிறது. ஆனால் இந்தச் சீரமைப்பு உண்மைக்கு எதிரிடையாக இருக்கலாம். ஏனென்றால் மூக்கின ஒலிகள் வழங்குவதின் அடிப்படையில் அவற்றை ஆறுக்கும் குறைந்த ஒலியன்களாக எடுத்துக்கொள்ள முடியும்.

மேற்சொன்ன சீரமைப்பு விதியும், சிக்கன விதியும் முன்னுக்குப்பின் முரண்படுவது போலத் தோன்றுகிறது. சிக்கனம் என்றால் குறைந்த ஒலியன்களை அமைத்துக் கொள்வதா அல்லது மொழியின் அமைப்புக்குத் தக்கபடி ஒலியன்களை அமைத்துக் கொள்வதா என்று பல பிரச்சினைகள் எழுகின்றன. எதைச் சிக்கனம் என்று சொல்வது? எதை எளிமை என்று சொல்வது? இரண்டு விவரிப்புகளுக்கு இடையில் எதை உயர்வென்று மதிப்பது? குறைந்த எண்ணிக்கை உயர்வென்றால் அக்குறைந்த எண்ணிக்கையால் மொழியின் சீரமைப்பு பாதிக்கப்படுவதை முன்பு கண்டோம். அதுபோகச் சில சமயங்களில் ஒன்றிரண்டு ஒலியன்கள் கூடுதலாக இருப்பது நாம் விவரிக்கும் மொழியின் தன்மையைச் சிறப்பாக வெளிக்காட்ட முடியும். இக்காரணங்களால் இச்சிக்கன விதியை, எளிமை விதியை இதுவரை மொழியியலார் தெளிவாகக் காட்டாமலேயே இருந்தனர்.

மேற்சொன்ன விதிகளின் அடிப்படையைக் கொண்டு தமிழில் பின் கண்ட மெய் ஒலியன்களை அமைக்கலாம்.

அட்டவணை — தமிழ் மெய்யொலியன்கள்

	இதழ்/உதடு	இதழும் பல்லும்	பல்	பல்லீறு	வளைவு	அண்ணம்	பின் அண்ணம்
தடையொலி	*p*		*t*		*ṭ*	*c*	*k*
மூக்கொலி	*m*			*n*	*ṇ*		
லகர ஒலி				1	*ḷ*	*l*	
ரகர ஒலி				*r*			
அரையுயிர்		*v*				*y*	

பின்வரும் அட்டவணையில் மேற்கண்ட ஒலியன்களுக்குரிய மாற்றொலிகளும் அவை அமரும் இடங்களோடு தருகிறோம். வலப்புறத்தில் எடுத்துக் காட்டுக்களுள்ளன.

அட்டவணை

ஒலியன்	மாற்றொலி	வரும் இடமும் எடுத்துக்காட்டும்		
/p/	(β)	ஈருயிர்க்கு இடையிலும் இவற்றை அடுத்தும்	l, r	
		/kapaɾu/	(k∧β∧ɾ#)	கபடு
		/iyalpu/	(iy∧lβ#)	இயல்பு
		/toɾarpu/	(toɾ∧rβ#)	தொடர்பு
	(b)	ஒத்த மூக்கின ஒலியை அடுத்து		
		/kampu/	(k∧mb#)	கம்பு
		/tampi/	(t∧mbi)	தம்பி
		/pa:mpu/	(pa:mb#)	பாம்பு
	(p)	மற்ற இடங்களில்		
		/po:/	(po:)	போ
		/po:ɾu/	(po:ɾ#)	போடு
		/ka:ppu/	(ka:pp#)	காப்பு

/t/ (ð) ஈருயிர்க்கு இடையில்

/ka:tu)	(ka:ðɨ)	காது
/atu/	(∧ðɨ)	அது

'd) ஒத்த மூக்கின ஒலியை அடுத்து

/kante/	(k∧n̪dɛ)	கந்தை
/cante/	(c∧n̪dɛ)	சந்தை
/pantu/	(p∧n̪dɨ)	பந்து

(t) மற்ற இடங்களில்

/tappu/	(t∧ppɨ)	தப்பு
/taṭi/	(t∧ɾi)	தடி
/pattu/	(p∧ttɨ)	பத்து

/ṭ/ (ɾ) ஈருயிர்க்கு இடையில்

/keṭe/	(KEɾɛ)	கிடை
/pa:ṭu/	(pa:ɾɨ)	பாடு
/vi:ṭu/	(vi:ɾɨ)	வீடு

(ḍ) ஒத்த மூக்கின ஒலியை அடுத்து

/maṇṭe/	(m∧ɳɖɛ)	மண்டை
/caṇṭe/	(c∧ɳɖɛ)	சண்டை
/taṇṭe/	(t∧ɳɖɛ)	தண்டை

	(ṭ)	மற்ற இடங்களில்		
		/ṭappa:/	(ṭ∧ppa:)	டப்பா
		/poṭṭi/	(poṭṭi)	பெட்டி
/c/	(s)	ஈருயிர்க்கு இடையிலும் (பல நேரங்களில் c ஆக சொல் முதலிலும்)		
		/ka:cu/	(ka:sɨ)	காசு
		/vi:cu/	(vi:sɨ)	வீசு
		/co:ru/	(co:rɨ)	சோறு
		/cakati/	(c∧h∧ði)	சகதி
	(j)	ஒத்த மூக்கின ஒலியை அடுத்து		
		/pancu/	(p∧ñjɨ)	பஞ்சு
		/kanci/	(k∧ñjɨ)	கஞ்சி
		/mancu/	(m∧ñjɨ)	மஞ்சு
	(c)	மற்ற இடங்களில்		
		/cirippu/	(cIrIppɨ)	சிரிப்பு
		/maccu/	(m∧ccɨ)	மச்சு
		/pacce/	(p∧ccɛ)	பச்சை
/k/	(h)	ஈருயிர்க்கு இடையிலும் *l*, r இவற்றை அடுத்தும்		
		/pake/	(p∧hɛ)	பகை
		/koḷke/	(koḷhɛ)	கொள்கை

	/ka:kō/	(ka:hō/	காகம்
	/ma:rkaḷi/	(ma:rh∧ḷi)	மார்கழி

(g) ஒத்த மூக்கின ஒலியை அடுத்து

/panku/	(p∧ŋgɛ)	பங்கு
/va:nku/	(va:ŋgɛ)	வாங்கு

(k) மற்ற இடங்களில்

/ka:ṭu/	(kaɽɛ)	காடு
/katavu/	(k∧ð∧vɛ)	கதவு
/pa:kku/	(pa:kkɛ)	பாக்கு

/m/ (m) /ma:nu/ (ma:nɛ) மான்

/muṭi/	(muɽi)	முடி
/ammi/	(∧mmi)	அம்மி
/vimmu/	(vɪmmɛ)	விம்மு

n/ (n̲) பல்லினத் தடையொலிக்கு முன்னால்

/mante/	(m∧n̲dɛ)	மந்தை
/pantu/	(p∧n̲dɛ)	பந்து

(ñ) அண்ணத் தடையொலிக்கு முன்னால்

/pancu/	(p∧ñjɛ)	பஞ்சு
/mancu/	(m∧ñjɛ)	மஞ்சு
/kanci/	(k∧ñji)	கஞ்சி

	(ṅ)	பின்னண்ணத் தடையொலிக்கு முன்னால்		
		/nunku/	(nuṅgɨ)	நுங்கு
		/tonku/	(toṅgɨ)	தொங்கு
		/panku/	(paṅgɨ)	பங்கு
	(n)	மற்ற இடங்களில்		
		/ni:/	(ni:)	நீ
		/panni/	(p∧nni)	பன்றி
		/pani/	(p∧ni)	பனி
/ṇ/	(ṇ)	/maṇi/	(m∧ṇi)	மணி
		/taṇṇi/	(t∧ṇṇi)	தண்ணீர்
		/naṇɖu/	(n∧ṇɖɨ)	நண்டு
/l/	(l)	/tale/	(t∧lɛ)	தலை
		/kallu/	(k∧llɨ)	கல்
		/kammalɨ/	(k∧mm∧lɨ)	கம்மல்
/ḷ/	(ḷ)	/va:ḷi/	(va:ḷi)	வாளி
		/kaḷḷu/	(k∧ḷḷɨ)	கள்
		/koḷke/	(koḷhɛ)	கொள்கை
/r/	(r)	/ra:vu/	(ra:vɨ)	இரவு
		/iru/	(lrɨ)	இரு
		/poru/	(porɨ)	பொறு
		/varu/	(v∧rɨ)	வறு

/v/ (ʋ) உயிரொலிக்கும் மெய்யொலிக்கும் நடுவில்

/kavru/	(kʌʋɾɨ)	கயிறு
/pavnu/	(pʌʋnɨ)	பவுன்

(v) மற்ற இடங்களில்

(va:)	(va:)	வா
(va:ttu)	(va:ttɨ)	வாத்து
(vavva:)	(vʌvva:)	வெளவால்

/y/ (ɨ) இறுதியிலும், உயிரொலிக்கும் மெய்யொலிக்கும் நடுவிலும்

(tay)	(tʌɨ)	தை
(payru)	(pʌɨɾɨ)	பயிர்

(y) மற்ற இடங்களில்

(ya:ru)	(ya:ɾɨ)	யார்
(ya:ne)	(ya:nɛ)	யானை
(pa:yi)	(pa:yi)	பாய்
(ka:yi)	(ka:yi)	காய்

ஒலியியலில் அளவை, அழுத்தம், இசை என்ற மூன்று ஆற்றொழுக்கு ஒலிகளைப் பற்றிப் படித்தோம். இவற்றில் அளவையைப் பற்றிய ஒலியன்களை மேலே கொடுத்திருக்கிறோம். அழுத்தம் மற்றும் இசை என்ப வற்றையும் பல மொழிகளில் பொருளை வேறுபடுத்த வேண்டிப் பயன் படுத்துகிறார்கள். இவைகளைப் பற்றியும் ஒலியன் இயலில் நாம் ஆராய வேண்டும்.

ஆங்கிலத்தில் அழுத்தம் ஒலியனாக இயங்குகிறது. பிரெஞ்சு மொழியில் இசை பயன்படுகிறது. குக்கி-சின் மற்றும் நாகர்களுடைய மொழியில் ஓசை என்றொரு வகை பயன்படுகிறது. இவற்றைப் பேசும் சொற்களிலிருந்தோ, தொடரிலிருந்தோ பிரிக்க முடியாது. இப்படிப் பிரிக்க முடியாத ஒலிகளைப் பிரிபடா ஒலி என்று சொன்னால் மேற்சொன்ன ஒலியன்கள் பிரிபடும் ஒலிகள் என்றுகின்றன. இப்பிரிபடா ஒலிகளையும் ஒலியன்களாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கருதுவர் மொழியியலார்.

மொழியில் உள்ள ஒலியன்களை அடையாளம் கண்டுகொள்வதோடு ஒலியன் இயலுடைய வேலை முடிந்துவிடாது. இவ்வொலியன்கள் ஒன்றோடொன்று எப்படிப் பின்னிப் பிணைந்து மொழியிலே வழங்குகின்றன என்பதையும் நாம் விளக்க வேண்டும். சில ஒலியன்கள் சொல்லுக்கு முதலிலே மட்டும் வரலாம். இடையிலோ, கடைசியிலோ வராமல் இருக்கலாம். சில ஒலியன்கள் கடைசியிலே மட்டும் வரலாம்; இடையிலோ முதலிலோ வராமல் இருக்கலாம். தமிழில் லகர, ரகரமோ, டகரமோ, சொல்லுக்கு முதலில் வருவதில்லை என்பதை அறிவோம். ஆனால் தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களில் அவை சொல்லுக்கு முதலில் வருவதையும் நாம் அறிவோம். சில ஒலியன்கள் ஒன்றையடுத்து ஒன்று வருவதில்லை. இப்பண்புகளையெல்லாம் ஒலியன் இயல் ஆராயவேண்டும். அப்படி ஆராய்வதால் மொழியின் உண்மையியல்பு தெரியும். மொழியில் பயன்படும் ஒலியன்களைச் செங்கற்கள்

என்று சொல்லலாம். செங்கற்கள் ஒன்றின்மேல் ஒன்று அடுக்கப்பட்டுக் கட்டிடம் எழும்புகிறதல்லவா? அதேபோல ஒலியன்களால் எழும்பிக் கட்டிடமாகிற மொழியைப் புரிந்து கொள்ளவேண்டுமானால் அவை எப்படி ஒன்றின்மேல் ஒன்று அடுக்கப்படுகின்றன என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

பின்வரும் அட்டவணை தமிழிலே மெய்யொலியன்கள் தோன்றும் இடங்களைக் காட்டுகின்றன.

அட்டவணை—தமிழ் மெய்யொலியன்கள் தோன்றும் இடங்கள்

ஒலியன்	முதல்	இடை	கடை
p	✓	✓	இல்லை
t̪	✓	✓	இல்லை
ṭ	✓	✓	இல்லை
c	✓	✓	இல்லை
k	✓	✓	இல்லை
m	✓	✓	இல்லை
n̪	✓	✓	இல்லை
ṇ	இல்லை	✓	இல்லை
ɻ	✓	✓	இல்லை
l̪	இல்லை	✓	இல்லை
l	இல்லை	✓	இல்லை
r	✓	✓	இல்லை

v	√	√	இல்லை
y	√	√	இல்லை

பின்வரும் அட்டவணை தமிழிலே உயிரொலியன்கள் தோன்றும் இடங்களைக் காட்டுகின்றன.

அட்டவணை — தமிழ் உயிர் ஒலியன்கள் தோன்றும் இடங்கள்

ஒலியன்	முதல்	இடை	கடை
i	√	√	√
i:	√	√	√
e	√	√	√
e:	√	√	√
a	√	√	√
a:	√	√	√
o	√	√	√
o:	√	√	√
u	√	√	√
u:	√	√	√
ẽ	இல்லை	இல்லை	√
ã:	இல்லை	இல்லை	√
õ	இல்லை	இல்லை	√
ũ	இல்லை	இல்லை	√

மேலே ஒலியன்கள் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் வருவதை அட்டவணைகளில் கண்

டோம். ஓர் ஒலியன் மற்றோர் ஒலியனோடு அல்லது மற்ற ஒலியன்களோடு சேர்ந்து வருவதையும் ஒலியனியலில் நாம் காட்ட வேண்டும்

சங்ககாலத் தமிழிலே மெய்யொலிகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து சொல்லுக்கு முதலிலே வருவதில்லை. ஆனால் இக்காலப் (பேச்சுத்) தமிழில் மெய்யொலிகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து சொல்லுக்கு முதலில் வருவதைக் காண்கிறோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பாருங்கள்.

வரிசை எண்	ஒலியன் சேர்க்கை	எடுத்துக்காட்டு	
1	*pn* –	*pna:ti*	பிணதி
2	*pl* –	*pla:*	பலா
3	*pḷ* –	*pḷa:cci*	பிளாச்சி
4	*pr* –	*pra:ntu*	பருந்து
5	*tḷ* –	*ṭla:yrō*	தொள்ளாயிரம்
6	*tr* –	*truvla:*	திருவிழா
7	*ty* –	*tya:kō*	தியாகம்
8	*cl* –	*cla:mpu*	சிலாம்பு
9	*kṭ* –	*kṭe:ri*	கிடாரி
10	*kl* –	*kle:cō*	கிலேசம்
11	*kḷ* –	*kḷa:kka:yi*	கிளாக்காய்
12	*kr* –	*kra:mpu*	கிராம்பு
13	*mr* –	*mrutankō*	மிருதங்கம்

14	*ny –*	*nya:yō*	நியாயம்
15	*vḷ –*	*vḷa:cu*	விளாசு
16	*vr –*	*vro:ti*	விரோதி
17	*vy -*	*vya:ti*	வியாதி

சொல்லுக்கு இடையிலேயும் மெய்யொலியனகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக் காட்டுக்களைப் பாருங்கள். அவற்றில் இருவகை ஒலியன் சேர்க்கைகளையே காண்கிறோம். முதல் வகையில் ஒரே ஒலியனின் இருவடிவத்தையும் இரண்டாம் வகையில் இரு வேறுபட்ட ஒலியன்களையும் காண்கிறோம்

முதல் வகை:

வரிசை எண்	ஒலியன் சேர்க்கை	எடுத்துக்காட்டு	
1	*- pp –*	*uppu*	உப்பு
2	*- tt –*	*kattu*	கத்து
3	*- ṭṭ –*	*kaṭṭu*	கட்டு
4	*- cc –*	*pacce*	பச்சை
5	*– kk –*	*na:kku*	நாக்கு
6	*– mm -*	*kummi*	கும்மி
7	*- nn -*	*kannu*	கன்று
8	*- ṇṇ -*	*aṇṇi*	அண்ணி
9	*– ll –*	*kallu*	கல்
10	*– ḷḷ –*	*kaḷḷu*	கள்

11	– *vv* –	*cavvu*	சவ்வு
12	– *yy* –	*kayyi*	கை

இரண்டாம் வகை

வரிசை எண்	ஒலியின் சேர்க்கை	எடுத்துக்காட்டு	
1	– *pl* –	*karuve:ple*	கருவேப்பிலை
2	– *ṗl* –	*ma:ṗle*	மாப்பிள்ளை
3	– *pr* –	*aprõ*	அப்புறம்
4	– *mp* –	*kompu*	கொம்பு
5	– *nt* –	*cantu*	சந்து
6	– *nc* –	*pancu*	பஞ்சு
7	– *nk* –	*panku*	பங்கு
8	– *nm* –	*nanme*	நன்மை
9	– *ny* –	*ma:nyõ*	மாணியம்
10	– *ṇṭ* –	*vaṇṭu*	வண்டு
11	– *ṇm* –	*uṇme*	உண்மை
12	– *ṇy* –	*puṇyõ*	புண்ணியம்
13	– *lp* –	*iyalpu*	இயல்பு
14	– *lr* –	*cilre*	சில்லரை
15	– *lv* –	*celvõ*	செல்வம்
16	– *ly* –	*kalya:ṇõ*	கல்யாணம்
17	– *ḷk* –	*koḷke*	கொள்கை
18	– *ḷm* –	*to:ḷmuṭi*	தோள்முடி

19	– *ḷn* –	*cu:ḷnele*	சூழ்நிலை
20	– *ḷr* –	*veḷrikka:yi*	வெள்ளரிக்காய்
21	- *ḷv* -	*ke:ḷvi*	கேள்வி
22	- *rp* –	*toṭarpu*	தொடர்பு
23	- *rt* –	*ertu*	எருது
24	- *rc* –	*varce*	வரிசை
25	- *rk* -	*ma:rkaḷi*	மார்கழி
26	- *rm* –	*ti:rma:nõ*	தீர்மானம்
27	– *rn* –	*a:rnu:ru*	அறுநூறு
28	– *rṇ* –	*ka:rṇõ*	காரணம்
29	– *rl* –	*verlu*	விரல்
30	– *rḷ* -	*urḷe*	உருளை
31	- *rv* –	*pa:rve*	பார்வை
32	– *ry* –	*ka:ryõ*	காரியம்
33	– *vt* –	*pavti*	பகுதி
34	– *vṭ* –	*ka:vṭi*	காவடி
35	– *vc* –	*pavcu*	பவுசு
36	- *vn* –	*pavnu*	பவுன்
37	– *vl* –	*pavlu*	பகல்
38	- *vḷ* -	*ivḷavu*	இவ்வளவு
39	- *vr* –	*cevru*	சுவர்
40	– *yt* -	*ka:yiõ*	காகிதம்
41	– *yc* -	*vaycu*	வயது
42	– *yk* –	*vayka:ci*	வைகாசி

43	– *ym* –	*ca:yma:nõ*	சாய்மானம்
44	– *yn* –	*mayna:*	மைனா
45	– *yl* –	*kuylu*	குயில்
46	– *yr* –	*payru*	பயிர்
47	– *yv* –	*teyvõ*	தெய்வம்

இக்காலத் தமிழில் இரண்டுக்கு மேற்பட்ட ஒலியன்களின் சேர்க்கைகளைக் கூட சொல்லுக்கு இடையிலே காண முடிகிறது. எடுத்துக்காட்டாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பாருங்கள்.

வரிசை எண்	ஒலியன் சேர்க்கை	எடுத்துக்காட்டு	
1	– *ttn* –	*na:ttna:*	நாத்தனார்
2	– *ttr* –	*a:ttrõ*	ஆத்திரம்
3	– *tty* –	*cattyõ*	சத்தியம்
4	– *ṭṭn* –	*paṭṭni*	பட்டினி
5	– *ṭṭl* –	*kaṭṭlu*	கட்டில்
6	– *ṭṭr* –	*paṭṭre*	பட்டரை
7	– *kkr* –	*akkramõ*	அக்கிரமம்
8	– *mpḷ* –	*a:mpḷe*	ஆம்பிள்ளை
9	– *mpr* –	*ca:mpra:ṇi*	சாம்பிராணி
10	– *ntr* –	*e:ntrõ*	ஏந்திரம்
11	– *ltt* –	*va:lttu*	வாழ்த்து
12	– *lcc* –	*pukalcci*	புகழ்ச்சி
13	– *rpp* –	*ti:rppu*	தீர்ப்பு

14	– rtt –	arttõ	அர்த்தம்
15	– rc –	atirceci	அதிர்ச்சி
16	– rkk –	ce:rkke	சேர்க்கை
17	– ypp –	va:yppu	வாய்ப்பு
18	– ytt –	vayttiyẽ	வைத்தியன்
19	– ykk –	va:ykka:	வாய்க்கால்
20	– ymp –	aympatu	ஐம்பது
21	– ymk –	ca:ymka:lõ	சாயுங்காலம்
22	– yntr –	ca:yntrõ	சாயந்திரம்
23	– rtty –	ca:ma:rttyõ	சாமர்த்தியம்

சொல்லுக்குக் கடையிலே மெய்யொலியனே, மெய்யொலியன் சேர்க்கைகளோ இக்காலத் (பேச்சுத்) தமிழில் வருவதில்லை. உயிரொலியன்களும் மூக்கினமாகிய உயிரொலியன்களுமே சொல்லுக்குக் கடையில் வருகின்றன.

மேலே ஓர் ஒலியன் மற்றோர் ஒலியனோடு அல்லது மற்ற ஒலியன்களோடு சேர்ந்து வருவதைப் பற்றிப் பார்த்தோம். ஒலியனியலில் அசை பற்றியும் சொல்லப்படுதல் வேண்டும். ஒரு சொல்லில் அதிக ஒலிப்பை உடைய ஒரு ஒலி அசை ஒலியாகும். இது பெரும்பாலும் உயிரொலியாக இருக்கும்.

பேசும் பொழுது நாம் ஒலித் தொடர்களை (வார்த்தைகள் போன்றவற்றை) உண்டாக்குகிறோம். அத் தொடர்கள் ஒன்றே அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோ

உள்ள ஒலித்திரள்களின் குழுக்களால் அமைந்தவையாகும். இக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையும் நுரையீரல் சுருங்கி விரியும் போது வெளிப்படுத்தப்படும் காற்றால் உண்டாகின்றன. இக் குழுவில் ஒரு உச்ச அளவு இசையுடைய ஒலி ஒன்று அவசியம் இருக்கும். இதனை அடுத்து இரு பக்கங்களிலும் அதனை நோக்கக் குறைந்த அளவு இசையுடைய ஒலிகள் அமையும். இவை ஒலி அமைப்பில் நோக்கும் போது குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் நிரல் நிரையாக வைத்தது போல் இருக்கும். இதனையே மொழியியலார் அசை என்று கூறுவர்.

அசையில் உச்ச அளவு ஒலி ஒன்று கட்டாயம் இருக்கவேண்டும். ஆனால் அசைமுதல் அசையீறு இவை இரண்டும் அல்லது ஏதேனும் ஒன்று அல்லது இவை இல்லாமலும் இருக்கும். உச்ச அளவு இசை உடைய ஒலியை அடுத்து வரும் ஒலிகளை அசை முதல் என்றும் அசையீறு என்றும் சொல்லலாம்.

ஒரு குற்றியல் அல்லது நீட்டல் உயிரொலியானது ஒரு அசையின் முடியாக அமைகிறது. ஒவ்வொரு உயிரொலி – அசை முடிக்கும் ஒரு மெய்யொலி அல்லது இரு மெய்யொலிகளின் சேர்க்கை அசை முதலாகவும் அதேபோல் ஒரு மெய்யொலி அல்லது இரு மெய்யொலிகளின் சேர்க்கை அசையீறுகவும் இருக்கும்.

அசையை இடம் நோக்கி மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன, 1. முதல் அசை, 2. இடை அசை, 3. கடை அசை என்பனவாகும். மேலும்

அசையை அதன் இயல்பு நோக்கி இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை திறப்பசை, மூடசை என்பனவாகும். அசை முடி மட்டும் நின்று அசையீறுக்கு இடம் தந்து நின்ருல் அது திறப்பசையாகும். மூடசை என்பது அசையீற்ருல் முடிவதாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைகள் மேலே சொல்லப்பட்டுள்ள அசையின் வகைகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

முதல் அசை :

பேச்சுத் தமிழில் பதினெறு வகையான முதல் அசைகள் உள்ளன. அவைகளாவன *v, v̄, cv, c v̄ ccv, ccv̄, vc, v̄c, cvc, cv̄c, vcc, v̄cc. cvcc, cv̄cc, ccvc, ccv̄c* என்பனவாகும்.

திறப்பசை

வகை	எடுத்துக்காட்டு	
v	*o – ṭe*	உடை
v̄	*a: – ṭu*	ஆடு
cv	*ma - ṭi*	மடி
cv̄	*ma: - nu*	மான்
ccv	*tru - ṭu*	திருடு
ccv̄	*vya: – ti*	வியாதி

மூடசை

வகை	எடுத்துக்காட்டு	
vc	*uṇ - me*	உண்மை
v̄c	*a:k – ku*	ஆக்கு
cvc	*kaṭ - ṭu*	கட்டு
cv̄c	*ka:ṭ – ṭu*	காட்டு
vcc	*ent – rō*	எந்திரம்
v̄cc	*a:mp – ḷe*	ஆண் பிள்ளை
cvcc:	*kerp – pō*	கர்ப்பம்
cv̄cc:	*ca:yn – trō*	சாயந்திரம்
ccvc:	*trav - yō*	திரவியம்
ccv̄c:	*pra:n – tu*	பருந்து

முதல் அசையின் இவ்வகைகளை எல்லாம் ஒன்று சேர்த்துச் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது போல் கொடுக்க முடியும்.

(*c*) (*c*) *v̆* (*c*) (*c*) —

இடை அசை

பேச்சுத் தமிழில் ஏழுவகையான இடை அசைகள் உள்ளன. இவைகளில் நான்கு திறப்பசைகள்; மற்ற மூன்று மூடசைகளாகும். அவைகளான, *cv, cv̄, ccv, ccv, cvc, cvc, cv̄cc* என்பனவாகும்.

திறப்பசை

வகை	எடுத்துக்காட்டு	
cv:	*ka – ta – vu*	கதவு
cv̄:	*ti:r – ma: - ni*	தீர்மானி
ccv:	*em – pḷa – tu*	எண்பது
ccv:	*o: – mat - tra: – kõ*	ஓமத்திராவகம்

மூடசை

வகை	எடுத்துக்காட்டு	
cvc	*ma - yak – ku*	மயக்கு
cv:c	*puṇ - ṇa:k – ku*	புண்ணுக்கு
cv:cc:	*ca: – ma: –rt – tyõ*	சாமார்த்தியம்

இடை அசையின் இவ்வகைகளை எல்லாம் ஒன்று சேர்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது போல் கொடுக்க முடியும்.

— [c] [c] [c̆] [c̄] [c] —

கடை அசை

பேச்சுத் தமிழில் ஏழு வகையான கடை அசைகள் உள்ளன. இவற்றில் நான்கு திறப்பசைகள்; மற்ற மூன்று மூடசைகளாகும். அவைகளாவன:

cv, cv̄, ccv̄, cv̄c, cv̄c ccv̄c

திறப்பசை

வகை	எடுத்துக்காட்டு	
cv	*o: - ṭu*	ஓடு
cv̄	*ap - pa:*	அப்பா
ccv	*ra:t – tri*	இராத்திரி
ccv̄	*na:t – tna:*	நாத்தனர்

மூடசை

வகை	எடுத்துக்காட்டு	
cvc	*kam – mal*	கம்மல்
cv̄c	*vaṇ – ṇa:n*	வண்ணன்
ccvc	*ca:yn - trõ*	சாயந்திரம்

கடை அசையின் இவ்வகைகளை எல்லாம் ஒன்று சேர்த்துக்கீ ழேகொடுக்கப்பட்டுள்ளது போல் கொடுக்க முடியும்.

— (*c*) (*c*) $\breve{V}$ (*c*)

சொல்முதல் ஒலியன் சேர்க்கை.

இரண்டாம் உறுப்பு.

முதல் உறுப்பு

ஒலியன்		n	l	*l*	r	v	y
p		1	2	3	4		
t				5	6		7
c			8				
k	9		10	11	12		
m					13		
n							14
v				15	16		17

சொல் இடை ஒத்த வடிவ ஒலியன் சேர்க்கை.

இரண்டாம் உறுப்பு.

முதல் உறுப்பு

ஒலியன்	p	t	ṭ	c	k	m	n	ṇ	l	ḷ	v	y
p	1											
t		2										
ṭ			3									
c				4								
k					5							
m						6						
n							7					
ṇ								8				
l									9			
ḷ										10		
v											11	
y												12

சொல் இடை வேற்றுவடிவ ஒலியன் சேர்க்கை.

இரண்டாம் உறுப்பு.

முதல் உறுப்பு ஒலியன்	p	t	ṭ	c	k	m	n	ṇ	l 1	ḷ 2	r 3	v	y
t													
ṭ													
c													
k													
m	4												
n		5		6	7	8							9
ṇ			10			11							12
l	13										14	15	16
ḷ					17	18	19				20	21	
r	22	23		24	25	26	27	28	29	30		31	32
v		33	34	35			36		37	38	39		
y		40		41	42	43	44		45		46	47	

ஒலிகளை மற்றுமொருவகையில் ஆராய்வது இன்று அதிக அளவு பழக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது. இது பழைய முறைதான். ஐரோப்பாவில் கிட்டத் தட்ட நாற்பதாண்டுகளுக்கு முன்னலேயே இம் முறையைப் பின்பற்றத் தொடங்கினர்கள். இதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் ட்ரூபெட்ஸ்காய் என்ற ருசிய அறிஞராவார். இம்முறையைச் சிறப் பியல்புமுறை என்று சொல்லலாம்.

இதுவரை நாம், ஒலிகளை மெய் என்றும், உயிர் என்றும் பிரித்துக்கொண்டு மெய்யொலிகளால் உண் டாகும் ஒலியன்களையும் உயிரொலிகளால் உண்டாகும் ஒலியன்களையும் விளக்கினேம். தமிழில் வழங்கும் [p] ஒலி குரல் நிறையாத உதட்டொலி என்றே சொன் னேம். இதில் குரல், உதடு ஆகிய இருதன்மைகள் இருக்கின்றன. இப்போது [t] என்ற ஒலியைப் பாருங் கள் இதில் குரல்,பல்லீறு என்ற இருநிலைகள் இருக் கின்றன. இரண்டுக்கும் குரல் இல்லை. இனி [k] என்ற ஒலியிலும் குரல் இல்லை. இது பின்னண்ணத் தால் பிறக்கிறது. இம் மூன்று ஒலிகளிலும் குரல் இல்லை. இந்த உண்மையை இரு முறையில் வெளிச் சொல்லாமல் சிக்கனமாக ஒரு முறையில் சொல்ல வழி இருக்கிறதா ?

மேலும் [p], [b] மற்றும் [m] ஒலிகளை எடுத்துக் கொள்ளுங்கள். இம்மூன்றிலும் உதடு என்னும்

இயல்பு இருக்கிறது. [k], [g] மற்றும் [ŋ] ஒலிகளை எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றில் பின்னண்ணம் என்ற பொது இயல்பு இருக்கிறது. [t] [d] மற்றும் [n] என் பதில் ஈறு என்ற பொது இயல்பு இருப்பதைப் பார்க் கிறோம். இம் மூன்று வகை ஒலிக் கூட்டங்களில் பல இயல்புகள் பொதுவாகவும், சில இயல்புகள் வேறுக வும் இருக்கக் காண்கிறோம். முதல் குழுவை உதட் டாலும், இரண்டாம் குழுவைப் பின்னண்ணத்தாலும், மூன்றும் குழுவைப் பல்லீறுலும் வேறுபடுத்திக் காட்ட முடியும்.

இவ்வாறு இயல்புகளைக் கொண்டு மட்டும் ஒலிகளை விவரிப்பதில் பல நன்மைகள் இருப்பதாக மொழியி யலார் கருதுகிறார்கள். முதலில் இவ்வியல்புகள் ஒரு மொழியில் அமைக்கப்படும் ஒலியன்களைவிட எப்போ தும் குறைவாகவே இருக்குமென்று சொல்லலாம். இரண்டாவது இவவியல்புகளை, ஒலிகளைப் பிறப்புவிக் கும் உறுப்புக்களோடு பொருத்திக் காட்டுவதால் பல பயன்கள் உண்டு. இவ்வியல்புகள் மனித மொழி களின் இயல்புகள் என்று கொள்ள முடியும். அதாவது எல்லா மொழிகளுக்கும் பொதுவான இயல்புகள் இவை என்று கொள்ளமுடியும்.

ஒலியியலில் ஒலிகளை மட்டும் விவரிப்பதைக் கண் டோம். ஒலியன் இயல் தொடக்கத்தில் ஒலிகளை விவரிப்பதால் மட்டும் பயன் இல்லை என்று கண் டோம். சிறப்பியல்புக் கொள்கைக்காரர் இவ்விரண் டையும் ஒத்துக்கொள்கின்றனர். ஆனால் ஒலியன்

இயலே பொதுத்தன்மைகள் நிறைந்த முடிவுகளை வெளிக்காட்டும் என்பதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஏன் அப்படி ஒத்துக்கொள்ள முடியாதென்பதற்குப் பல ஆணித்தரமான காரணங்களையும் அவர்கள் காட்டுகிறார்கள்.

முதலில் பேச்சில் காணப்படுகிற எல்லா ஒலிகளையும் நம்மால் எழுத்திலே வடிக்க முடியாது. அப்படி நம்மால் எழுத்திலே வடிக்க முடிந்தாலும் அதனால் ஏதும் பயன் இல்லை. இலக்கண அடிப்படையில் தேவைப்படும், பயன்படும் ஒலிகளைக் குறிப்பதே நம் நோக்கமாக இருக்க வேண்டும். முந்திய ஒலியியல் அறிஞர்கள் பேச்சை நாம் பேசுவதுபோல எழுத்தில் வடிப்பதிலேயே மிதந்த அக்கரை காட்டினர். அவர்கள், மொழிக்குமொழி பயன்படும் ஒலியன்கள் எண்ணிக்கை வேறுபடுகிறது என்ற கருத்தையே பெரிதாக எண்ணினர். எல்லா மொழிகளும் மனிதராலேயே பேசப்படுவதால், மனிதர் உடலமைப்புப் பொதுவாக ஒன்றுபட்டிருப்பதால் மொழிகளின் இயல்புகளில் பொதுத்தன்மை நிறைந்திருக்க வேண்டும் என்ற உண்மையைப் பெரிதாக நினைக்கவில்லை. ஒரு மொழியில்காணப்படும் ஒலிகளுக்கும் பிறமொழிகளில் காணப்படும் ஒலிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையின் காரணத்தை அவர்கள் பெரிது படுத்தவில்லை. இவற்றைக் கருத்தில்கொண்டு மனிதர்களுடைய ஒலிகளை ஆராயும்போது எல்லா ஒலிகளுக்கும் பொதுவான இயல்புகளை அறிஞர்கள் கண்டார்கள். ஓர் ஒலியை விவரிக்க இவ்வியல்புகளின் சேர்க்கையைச் சொன்

னல் போதுமானது என்றும் நம்புகிறார்கள். இனி இயல்புகளையும் அவ்வியல்புகளின் சேர்க்கையையும் நாம் காணலாம்.

மனிதனுடைய ஒலித்திறமையின் அடிப்படையில் இயல்புகளைப் பிரிக்க முடியும் என்று சொன்னேம். உலகமெல்லாம் மனிதர்கள் பேசும் திறமையைப் பெற்றிருக்கிறார்கள். இந்த ஒலிக்கும் திறமையைப் பதினொன்று இயல்புகளாக ஒருசாரார் பிரிக்கின்றனர். அப்பதினொன்று இயல்புகள் பின்வருமாறு :-

உயிர் இயல்பு இவ்வியல்பை உடைய ஒலிகள் வாய் வழியாய்ப் பிறக்கின்றன. பிறக்கும்போது வாய் வழியில் தடை ஏதுமில்லை. அப்படியே தடைகள் இருக்குமானால் அத்தடையின் உயரமோ, நெருக்கமோ மொழியில் இ அல்லது உ ஒலி தோன்றுவதை விட அதிக அளவில் இல்லை என்று சொல்ல வேண்டும்.

துலங்கு இயல்பு இவ்வியல்பை உடைய ஒலிகள் தாம் பிறக்கும்போது இயற்கையாகவே குரல் தன்மை பெற்றுப் பிறக்கின்றன. 'இ' என்ற ஒலியில் இயற்கையிலேயே குரல் இருக்கிறது. 'ப்' என்ற ஒலியிலோ இயற்கையில் குரல் தன்மை ஏற்படவில்லை. குரல் தன்மையை நாம் வேண்டுமானால் ஏற்றிக்கொள்ளலாம். அப்போது அவ்வொலி (b) ஆகிவிடுகிறது.

மெய் இயல்பு இவ்வியல்பை உடைய ஒலிகள் பிறக்கும்போது ஒலிக்குழாயின் நடுவில் தடையோ

உராய்வோ ஏற்படுகின்றது. தமிழில் (t) என்ற ஒலியைப் பாருங்கள். பல்லீற்றில் நாவின் முன்பகுதி சென்று தடை ஏற்படுத்துவதால் இவ்வொலி தோன்றுகிறது, என்று முன்பே கண்டோம்.

மேல், கீழ், பின் என்ற இயல்புகள் நாவின் உடம்பு அமர்கின்ற நிலையைப் பொறுத்து ஏற்படுகின்றவையாகும். மேல் என்ற இயல்பு நா தன்னுடைய இயற்கையான படுக்கை நிலையிலிருந்து மேலே எழும்புவதால் ஏற்படுகிறது. கீழ் என்ற இயல்பு நா அதனுடைய இயற்கையான படுக்கை நிலையிலிருந்து கீழே செல்வதால் ஏற்படுகிறது. பின் என்ற இயல்பு நா அதனுடைய இயற்கையான படுக்கை நிலையிலிருந்து பின்னேக்கி இழுக்கப்படும்போது ஏற்படுகிறது என்று சொல்ல வேண்டும்.

முகட்டு இயல்பு நாக்கின்வரை கோட்டுப்பகுதி அதன் இயற்கையான படுக்கை நிலையிலிருந்து மேல் நோக்கி எழும்போது இவ்வியல்பையுடைய ஒலிகள் பிறக்கின்றன.

வெளி இயல்பு இவ்வியல்புகளைக் கொண்ட ஒலிகள் பல்லீற்றுக்கும், முன்னண்ணத்திற்கும் அப்பால், அதாவது, அவற்றைத் தாண்டி ஏற்படும் தடையால் பிறக்கின்றன.

குவியியல்பு கொண்ட ஒலிகள் பிறக்கும்போது தசை நார்கள் விறைப்புத் தன்மையைப் பெறச்செய்கிறோம். இவ்விறைப்புத் தன்மை வேண்டுமென்றே

குறித்த ஒலியில் நன்றாகத் தெரியுமாறு காற்றுச் சவ்வுகளுக்கு மேலுள்ள உறுப்புக்களால் ஏற்படுத்தப்படுகிறது. காற்றுச் சவ்வுகளை அதிரவைப்பதில் குரல் இயல்பு ஒலிக்குக் கிடைக்கிறது.

தொடர் இயல்புள்ள ஒலிகள் பிறக்கும்போது ஒலிக் குழாயில் தடை ஏதும் இருப்பதில்லை. நெருக்கம் ஏற்பட்டாலும் அது ஒலியைத் தடை செய்கிற அளவில் இருப்பதில்லை.

மூக்கியல்பு கொண்ட ஒலிகள் தோன்றும்போது தொண்டையில் இருக்கும் தொங்குச்சதை கீழிறங்குகிறது. அப்படிக் கீழிறங்குவதால் மூக்குக் குழாயின் வழியாகக் காற்று மூக்குவழியே வெளிவர இடம் ஏற்படுகிறது.

இழு இயல்பு உள்ள ஒலிகள் தோன்றும்போது காற்று தாண்டிச் செல்லும் வழியில் ஒருவித ஆரவாரத் தன்மை ஏற்படுகிறது. இந்த ஆரவாரத் தன்மையால் உண்டாகும் ஒலி காற்று தாண்டிச் செல்லும் வழியின் அமைப்பை பொருத்து இருக்கும். அமைப்பு என்பது காற்று தாண்டிச் செல்லும் கோணத்தையும் குழாயின் மேற்புறத்தையும் சார்ந்து இருக்கிறது என்று சொல்ல வேண்டும். இந்த இழு இயல்பு துலங்கு தன்மை இன்மையும் தொடர் இயல்பு இருப்பதுமான ஒலிகளிலே காணப்படும்.

விறைப்பு இயல்பு என்பது குரல்வளைக்கு மேலே உள்ள ஒலியுறுப்புக்கள் ஓர் ஒலி உண்டாகும்போது

எந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் குறிக்கும். விறைப்பு இயல்பு உள்ள ஒலிகளை உண்டுபண்ண ஒலியுறுப்புக்கள் கணிசமான முயற்சி செய்து விறைப்புத் தன்மை பெறுகின்றன. விறைப்பில்லா ஒலிகள் தோன்றும்போது உறுப்புக்கள் கணிசமான முயற்சி ஏதும் இல்லாமல் தளர்ந்த நிலையிலே இருக்கின்றன.

மேற்சொன்ன இயல்புகளுக்கும், முன்பு நாம் கண்ட ஒலியியல் பிரிவுகளுக்கும் இடையே நிறைய வேற்றுமை இல்லாததுபோலத் தோன்றும். அது ஒரு வகையில் உண்மையே. ஒலியியலில் ஒலி உண்டாக்கப் பயன்படும் உறுப்புக்களின் அடிப்படையில் ஒலிகள் பிரிக்கப்படுவதைக் கண்டோம். இயல்புகளின் பிரிவு முறையும் உறுப்புக்களின் அடிப்படையையே கொண்டிருக்கிறது. ஆனால் இப்போது சில ஆண்டுகளாகவேதான் உறுப்புக்களின் அடிப்படையில் ஒலிகளைப் பிரிக்கிற எண்ணம் வலுத்திருக்கிறது. அதற்கு முன் கேட்பதில் உணரப்படும் இயல்புகளின் அடிப்படையிலேயே ஒலிகளைப் பிரிப்பதில் ஆர்வம் இருந்தது. ஆனால் இரண்டுக்கும் இடையில் ஒற்றுமை இருப்பதுபோலத் தோன்றுவது மேம்போக்கானது என்றே சொல்ல வேண்டும். முதலில் ஒலியியலில் ஓர் ஒலி உண்டாகப் பயன்படும் இயல்புகளை இன்னொரு ஒலி பெற்றிருந்தாலும் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வெளிதாகத் தெரியாது. ஒவ்வொரு ஒலியும் ஒவ்வொரு தனி முறையாக அமையும். ஆனால் இயல்புகளின் அடிப்படையில் பிறக்கும்போது இயல்புகளே

முதன்மை பெறும். எந்த ஒலியும் இந்த இயல்புகளின் சேர்க்கையைக் கொண்டே விளக்கப்படும்.

இயல்புகளின் அடிப்படையில் தமிழில் பயன்படும் ஒலிகளைப் பின்வருமாறு அட்டவணையில் காட்டலாம்.

அட்டவணை : 1

உயிரொலிகளின் சிறப்பியல்புகள்

சிறப்பியல்புகள்	i	i:	e	e:	a	a:	o	o:	u	u:
உயிர்	+	+	+	+	+	+	+	+	+	+
மெய்	–	–	–	–	–	–	–	–	–	–
பின்	–	–	–	–	–	–	+	+	+	+
கீழ்	–	–	–	–	+	+	–	–	–	–
மேல்	+	+	–	–	o	o	–	–	+	+
விறைப்பு	–	+	–	+	–	+	–	+	–	+
துலங்கு	+	+	+	+	+	+	+	+	+	+

அட்டவணை : 2

மெய்யொலிகளின் சிறப்பியல்புகள்

சிறப்பியல்புகள்	p	t	ʈ	c	k	m	n	ɳ	l	ɭ	r	v	y
துலங்கு	–	–	–	–	–	+	+	+	+	+	+	+	+
உயிர்	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
மெய்	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+
மேல்	–	–	–	–	+	–	–	+	–	+	–	+	+
பின்	–	–	–	–	+	–	–	–	–	–	+	+	–
கீழ்	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
வெளி	+	+	–	–	–	+	+	–	+	–	+	+	–
முகட்டு	–	+	+	+	–	–	+	+	+	+	+	–	–
குவி	+	–	–	–	–	–	–	–	–	–	–	+	–
தொடர்	–	–	–	–	–	–	–	–	+	+	+	+	+
மூக்கு	–	–	–	–	–	+	+	+	–	–	–	–	–
இழு	–	–	–	+	–	–	–	–	–	–	–	–	–

விறைப்பு.....

குரல்.....

மேற்கண்ட அட்டவணையை நன்றாகக் கவனியுங்கள். இடதுபுறமுள்ள பத்தியில் காணப்படுவன மனித மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவான இயல்புகள். வலதுபுறம் செல்கிற வரிசைகள் ஒரு மொழியிலே பயன்படுபிற ஒலிகளின் வகைகள் ஆகும். இங்கே அவை தமிழில் பயன்படுகிற ஒலிகளைக் குறித்து நிற்கின்றன. ஒவ்வொரு இயல்பும் ஒரு குறிப்பிட்ட ஒலியில் உண்டா இல்லையா என்பதைக் குறிக்கக் கூட்டல் (+) மற்றும் கழித்தல் (–) அடையாளங்கள் இருக்கின்றன. ஓர் ஒலியின் வரிசையில் இருக்கும் இயல்புகளின் கூட்டு மொத்தம் சேர்த்தே அந்த ஒலி தோன்றுகிறது என்பது பொருள். எடுத்துக்காட்டாகத் தமிழ் ஒலியான [P]யை எடுத்துக்கொள்வோம் அதன் இயல்புகள் என்ன என்பதைக் கீழேபாருங்கள்.

துலங்கு	–
உயிர்	–
மெய்	+
மேல்	–
பின்	–
கீழ்	–
வெளி	+
முகட்டு	–
குவி	+
விறைப்பு	–
குழல்	–

குசல் –

தொடர் –

மூக்கு –

இழு –

மேற் கூறப்பட்டவற்றின் விளைவாக [p] என்னும் ஒலியின் இயல்புகள் மெய் என்றும், வெளி என்றும், குவி என்றும் காண்கிறோம். மற்ற இயல்புகள் இதில் கழித்தல் பெறுவதால் சேரவில்லை. மெய்யென்னும் இயல்பால் ஒலிக்குகுழாயில் தடையோ உராய்வோ ஏற்படுகின்றது. என்பதை அறிகிறோம். வெளி என்னு மியல்பால் முன்னண்ணத்தையும், பல்லிற்றையும் தாண்டி தடை ஏற்படுகிறது என்பதை அறிவோம். குவி என்னும் இயல்பால் உதடுகள் குவிகின்றன என்பதை அறிகிறோம். தொடர் இயல்பால் இழு போன்ற தொடர் இயல்பு இல்லை என்பதை அறிகிறோம். மூக்கு என்ற இயல்பால் இவ்வொலி மூக்கு வழியாகச் செல்லவில்லை யென்பது தெளி வாகிறது. அதாவது இருக்கிற இயல்புகளை எடுத்துக் கொண்டு, இல்லாத இயல்புகளால் பிற ஒலித்திரளி லிருந்து இவ்வொலியை வேறுபடுத்திக் காட்ட முடி யும். இப்படிக் கண்டு கொள்ளும் முறையால் [p] என்ற ஒலியின் முழுக் குணமும் நமக்குத் தெரிய வருகிறது.

இம்முறையின் நன்மைகள் ஒலியனியல் ஆராய்ச் சியால் தெரிய வரலாம். முன்பு /p/ என்ற ஒலியன் மூன்று மாற்றொலிகளைக் கொண்டிருக்கிறது என்று

சொன்னேம். அவை எந்த இடங்களில் வருகின்றன என்பதையும் கண்டோம். இம் மூன்று நிலைகளுக்கும் மூன்று விதிகளை ஏற்படுத்தினேம். [p] ஒலி - சொல்லுக்கு முதலிலும், இரட்டிக்கும் போதும் தமிழிலே பயன்படுகிறது என்றோம். [b] மூக்கின ஒலிகளை அடுத்து வரும்போது பயன்படுகிறது என்றும் சொன்னேம். [β] ஒலி இரு உயிரொலிகளுக்கு இடையிலே வரும்போது ஏற்படுகிறது என்றும் சொன்னேம். இப் படிச் சொல்வதில் ஓர் ஒலியனை மட்டும் கணக்கில் கொள்கிறோம். ஆனால் /k/ என்ற ஒலியனின் மாற்றொலிகளை எடுத்துக்கொள்ளுங்கள். [k] ஒலி சொல்லுக்கு முதலிலும் இரட்டிக்கும் போதும் வருகிறது. [g] ஒலி மூக்கின ஒலியை அடுத்துத் தோன்றும்போதே வருகிறது. [h] ஒலி இரு உயிரொலிகளுக்கு இடையிலேயே தோன்றுகிறது. அதாவது /p/ ஒலியனின் மாற்றொலிகள் தோன்றும் இடங்களும் /k/ ஒலியனின் மாற்றொலிகள் தோன்றும் இடங்களும் ஒருமித்து இருப்பதைக் காணுங்கள். சொல்லுக்கு முதலிலும், இரட்டிக்கும் பொழுதும் ஒலியன்களின் ஓர் இயல்பு நிலைத்தும், மூக்கின ஒலியை அடுத்து வரும்போது இரண்டும் குரல் என்னும் இயல்பை அடைவதும் உயிரொலிகளுக்கு இடையிலே வரும்போது இழு என்னும் பொது வியல்பை அடைவதும் செய்கின்றன. இது மிக முக்கியமான ஒற்றுமை. பொதுத்தன்மை நிறைந்த விதிகள் செய்வதின்மூலம் இவ்வொற்றுமையைத் தெளிவாகச் காட்டலாம். விதிகளின் எண்ணிக்கையும், குறைவாகவே இருக்கும். அதாவது /p/ மற்றும் /k/ ஒலியின்களின் விதிகளைத் தனியே சொன்னால் குறைந்

தது நாலு விதிகள் தேவைப்படும். முதல்விதி மூக்கி னத்தை அடுத்துவரும் போது ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கவும் இரண்டாவது விதி உயிரொலிகளுக்கு இடையிலே வரும்போது ஏற்படும் மாற்றத்தைக் குறிக் கவும் பயன்படவேண்டும். விதிகள் ஒன்றுக இருப் பினும் ஒலியன்கள் வேறுக இருப்பதால் அதே விதியை இரு முறை சொல்லவேண்டியிருக்கிறது. பொதுத் தன்மையை வெளிக்காட்ட முடியவில்லை.

ஆனால் இயல்புகளின் அடிப்படையில் பிரித்தோ மென்றால் இரு விதிகளே போதும். /p/ மற்றும் /k/ இரண்டும் தடையொலிகள் என்பதை அறிவோம். எனவே பொதுவான இயல்புச் சேர்க்கைப் பின்வரு மாறு ஆகும்.

–	துலங்கு
+	மெய்
–	குரல்
–	தொடர்
.	மூக்கு
–	இழு

இது தடையொலியின் பொது இயல்புச் சேர்க்கை யாகும். இவ்வியல்புச் சேர்க்கை மூக்கின ஒலிகளை அடுத்து குரல் இயல்பு பெறுகிறது. உயிரொலிகளுக்கு இடையிலே இழு மற்றும் தொடர் இயல்புகளைப் பெறு கிறது. இவற்றைப் பின்கண்ட இருவிதிகள் காட்டு கின்றன.

$$\begin{bmatrix} - \text{துலங்கு} \\ + \text{மெய்} \\ - \text{குரல்} \\ - \text{தொடர்} \\ - \text{மூக்கு} \\ - \text{இழு} \end{bmatrix} \rightarrow \left\{ \begin{array}{l}] \div \text{குரல்}] / [+ \text{மூக்கு} — \\ \\ \left[\begin{array}{l} + \text{தொடர்} \\ + \text{இழுபு} \end{array} \right] / [+ \text{உயிர்} = [+ \text{உயிர்}] \end{array} \right\}$$

மேற்சொன்ன இருவிதிகளும் /p/ மற்றும் /k/ ஒலியன்களின் மாற்றொலிகள் தோன்றும் இடத்தை மட்டும் விளக்கவில்லை. பொதுவாகத் தமிழிலிலே பயன்படும் பிற தடையொலிகளின் மாற்றொலிகள் தோன்றுவதையும் அவை விளக்குகினறன. இப்போது /t/ ஒலியனின் மாற்றொலிகளான]t],]d] மற்றும் [s] தோன்றுவதையும் இதே விதியால் விளக்கிவிட முடியும். /c/ ஒலியனின் [ct], [[] மற்றும் [s] மாற்றொலிகள் தோன்றுவதையும் விளக்கிவிடமுடியும். அதே போல /ṭ/ ஒலியனின் மாற்றொலிகளான [ṭ]: [ɖ] மற்றும் [ṛ] இவற்றையும் ஒரு சிறு மாறுதலோடு விளக்கிவிடலாம். அதாவது தனித்தனி ஒலியனின் மாற்றொலிகளுக்குத் தனித்தனி விதிகள் ஏதும் இப்போது தேவைப்பட வில்லை. மாற்றொலிகள் அமைவதை மிகச்சில பொது விதிகளாக்கொண்டு விளக்கிவிட முடியும். இது நமக்கு மொழியை விவரிப்பதில் தெளிவுதருவதோடு சிக்கன மாகவும் இருக்கும்.

மேற்சொன்ன இயல்புகளின் விவரமும், அவை பயன்படும் முறைகளும் மிகச்சுலபமாக இருப்பதாகப் பலருக்குத் தோன்றும். இயல்புகளையும் அதன் அடிப்

படையில் நடைபெறும் ஆராய்ச்சிகளையும் அறிமுகப் படுத்துவதே இங்கு எம் நோக்கம். அதனுலேயே மிக எளிய முறையில் விளக்க முற்பட்டிருக்கிறோம். மேற் சொன்னவை போக எவ்வளவோ விதிமுறைகளை நாம் அறிந்துகொள்ளவேண்டும். முதலில் ஓர் ஒலியின் முக்கிய இயல்புகளை எப்படி அறிவது? அதாவது ஓர் ஒலியை விவரிக்கும்போது அவ்வொலியின் எல்லா இயல்புகளையும் நாம் விவரிக்க வேண்டுமா? அல்லது வேறுபடுத்திக் காட்டுகிற இயல்புகளை மட்டும் விவரித் தால் போதுமா? என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படி வேறுபடுத்திக்காட்டும் இயல்பு களை மட்டும் குறிப்பது என்றால் அவற்றிற்குள் எதை முதலில் குறிப்பது? எதை அடுத்துக் குறிப்பது? என்ற கேள்விகளுக்கும் பதிலைத் தேடவேண்டும். இன்ன சில விதிகள் அமைப்பிலும் குணத்திலும் ஒற்றுமைப்பட்டி ருந்தால் அவ்வொற்றுமைகளை எப்படி ஒரே விதியின் கீழே கொண்டுவருவது? மேலும் வேற்றுமைகளை எவ் வாறு தெளிவாகக்காட்டுவது? என்ற கேள்விகளுக் கும் பதிலைத் தேடவேண்டும். அவை போகச் சில விதிகள் அல்லது சில இயலபுகளின் சேர்க்கை உலக மொழிகள் எதிலும் பயன்படாமலிருக்கலாம். அச் சேர்க்கைகள் என்ன என்பதையும் நாம் அறிந்து கொள்வது மனிதமொழியின் குணத்தை இன்னும் தெளிவாக்கும். இன்னும் குறிப்பாக இசை, அழுத் தம், அளவை இவற்றை எப்படி இயல்புகளின் அடிப்படையிலே பிரிப்பது? என்ற கேள்விக்கும் பதில் காணவேண்டும். இவையும் இன்னும் பலவும்

இன்று மொழி ஆராய்ச்சியாளர் சிந்தனையில் இடம் வகித்துக் கொண்டிருக்கின்றன. பலவற்றிற்கு விடை யிருந்தாலும் இன்னும் பல புதிராகவே இருக்கின்றன. நம்முடைய நோக்கம் அறிமுகமே என்பதால் மிக ஆழ மாகப்போக வாய்ப்பில்லை.

ஆனால் ஒலிகளையும் ஒலியன்களையும் விட்டுவிட்டுச் சொல்லாராய்ச்சியில் புகுமுன் இரு சொற்களுக்கிடை யில் ஒலிகளுக்கு ஏற்படும் மாற்றத்தை நாம் சொல்லி யாகவேண்டும். தமிழ்நூலார் இதனைச் சந்தி இலக் கணம் என்பர். கல்+தூண் என்பது கற்றூண் என்று சங்க காலத்தில் வழங்கப்பட்டது. நல்+தூண் என்பது நற்றூண் என்று வழங்கப்பட்டது. காவற் பெண்டின் கவிதை நினைவுக்கு வருகிறதா?

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனே என வினவுதி.....

சொல்லாராய்ச்சியின் அடிப்படையில் கல்-; கற்- என இரண்டு மாற்றுச் சொற்கள் ஒரே பொருளைக் குறிக்க நிற்கின்றன என்று சொல்வோம். ஆங்கிலச் சொற்கள் இரண்டைப் பாருங்கள்.

knife: knives : : kn∧yf : kn∧yv

wife: wīves : : w∧yf : w∧yv

இதில் ஒருமையில் ஓரொலியும், பன்மையில் இன் னேர் ஒலியும் ஒரே சொல்லைக் குறிக்க வருகின்றன. இவ்விரண்டு ஒலிகளுக்கும் பொதுவாக F என்று ஏற் படுத்தி அதைச் சொல்லொலியன் என்று ஒலியியல்,

ஒலியன் இயல் என்று மொழியை ஐவகை உறுப்பாய்ப் பிரிப்பவர்கள் கூறுவார்கள். ஆனால் இயல்புகளின் அடிப்படையில் ஒலியை ஆராய்பவர்கள் இவ் வாதத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் கருத்தில் சொல்லொலியனே ஒலியனாகிறது. ஒலியன் என்ற ஒன்றைத் தனியே படைத்து அதையும் இந்தச் சொல்லொலியனையும் இவர்கள் தனியே எடுத்துக் கொள்வதில்லை. அதாவது ஒலியியல், ஒலியன் இயல், சொல்லொலியன என்ற மூன்று பிரிவுகளை மறுத்து இவர்கள் வரை முறை ஒலியியல் என்றும் வரன் முறை ஒலியன் இயல் என்றும் இருவகையிலே ஆராய்வார் கள். வரன் முறை ஒலியியல் ஒரு மொழியில் பயன் படும் ஒலி இயல்புகளையும், தனித்தனிச் சொற்களில் பயன்படும் விதிமுறைகளையும் விளக்கும் என்று சொல்லலாம். வரன்முறை ஒலியன் இயல் சொற் களுக்கு இடையிலே காணக்கிடக்கும் விதிமுறைகளை விளக்கும். அதோடு சொற்களின் அடிப்படை உருவம் என்ன என்பதையும் தெளிவாக்கி அதன் அடிப்படை யில் விதிகளை இயங்கச் செய்யும்.

ஐவகை இலக்கணக்காரர் ஒலியன் இயலில் பொருள்-அர்த்தம் படுகிற பங்கைக் குறைத்தே மதிப் பிட்டனர். தம்பி நம்பி என்ற சொற்களில் (t) வும், (n) வும், பொருள் வேறுபடுத்தப் பயன்படுகின்றன என்பதை அவர்கள் மறுக்கவில்லை. ஆனால் இவ்வாறு வேறுபடுத்துவதோடு அதன் பணி முடிந்துவிட்ட தெனக் கருதினார்கள். ஆனால் மாற்றில்க்கணக்காரர் இதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்தனர். இப்போது

பொருள் வேறுபாடு மட்டும் ஒலியனின் கடமையன்று. அவ்வொலியனின் இயல்புகளை நன்முக விளங்கிக் கொள்ள, அல்லது அவ்வொலியன்களின் மாறுதல்களை விளக்க இலக்கண விதிகளும் தேவை என்பதை மாற்றிலக்கணக்காரர் வலியுறுத்துகின்றனர். ஒலியன் இலக்கணத்தை விட்டுத் தனித்து இயங்க முடியும் என்பது இலக்கண ஆராய்ச்சிக்கும், ஒலியாராய்ச்சிக்கும் நெருங்கிய இன்றியமையாத உறவு இல்லை என்பதும் ஐவகை இலக்கணக்காரர் முடிவு. ஆனால் மாற்றிலக்கணக்காரர் அவற்றை மறுத்து ஒலியை விளங்கிக்கொள்ள இலக்கண அறிவு தேவை என்று வலியுறுத்துகிறார்கள் இவற்றின் விளைவை அடுத்த அதிகாரங்களில் காண்போம்.

எண்ணிக்கை அளவு (Functional load or frequency)

ஒலியன்களின் எண்ணிக்கை அளவு பற்றியும் ஒலியனியலில் சொல்லியாக வேண்டும். எண்ணிக்கை அளவை என்பது ஒரு குறிப்பிட்ட ஒலியனின் வருகை எண்ணிக்கையையும் அதன் சதவீதத்தையும் குறிக்கும். இதன்படித் தமிழில் உள்ள உயிரொலியன், மெய்யொலியன் ஆகியவற்றின் வருகை எண்ணிக்கையும் சதவீதமும் கணக்கிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்து [1] என்னும் சங்க நூலில் உள்ள

---

1 Reference: Dr. S. Agesthialingom 'Description of the Language of Patirruppattu'

(Ph. D. thesis submitted to Kerala University, 1952)

ஒலியன்களின் வருகை எண்ணிக்கையும் அதன் சதவீதமும் (percen-tage) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உயிரொலியன்கள்

அ	*a*	46.04%
ஆ	*a:*	33.26%
இ	*i*	24.56%
உ	*u*	20.14%
ஏ	*e:*	12.17%
ஓ	*o:*	9.93%
ஊ	*u:*	5.94%
எ	*e*	5.67%
ஈ	*i:*	5.46%
ஒ	*o*	3.59%

மெய்யொலியன்கள்

ம	*m*	11.34%
க	*k*	11.02%
ர	*r*	9.78%
ந	*n*	9.59%
வ	*v*	9.27%
ப	*p*	8.97%
ய	*y*	7.83%

த	*t*	7.18%
ட	*ṭ*	5.00%
ல	*l*	5.00%
ச	*c*	4.36%
ற	*R*	3.35%
ண	*ṇ*	2.78%
ழ	*l*	2.22%
ர	*ṭ*	1.69%
ஞ	*ñ*	0.13%

ஆய்வுக்குத்[2] தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியை (11443 ஒலியன்கள்)[2] அடிப்படையாகக்கொண்டு, இக்காலத் தமிழுக்கு ஒலியன்களின் எண்ணிக்கை அளவும் (frequency) அவற்றின் சதவிகிதமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உயிர்ஒலியன்கள்

அ	*a*	23.2%
உ	*u*	20.1%
இ	*i*	17.1%

---

2 *'A Descriptive Grammar of the Dialect of the kollimalai tribes'*

— K. Karunakaran

(Ph. D thesis submitted to Annamalai University, 1969)

ஆ	*a:*	14.5%
எ	*e*	12 3%
ஒ	*o*	3 95%
ஏ	*e:*	2.9%
ஓ	*o:*	2.85%
ஊ	*u*	1.7%
ஈ	*i:*	1·4%

மெய்யொலியன்கள்

ந	*n*	12.7%
ர	*r*	10.68%
ம	*m*	9.8%
ப	*p*	9.67%
வ	*v*	9.65%
க	*k*	9.3%
ட	*ṭ*	8.9%
த	*t*	8.35%
ச	*c*	8.51%
ய	*y*	4 .95%
ள	*ḷ*	3.57%
ல	l	3.2%
ண	*ṇ*	0.72%

4. சொல்லியல்

மொழியின் உறுப்புக்களாக முதலில் ஐந்து பகுதி களைச் சொன்னேம். அவற்றில் ஒலிகள் பிறக்கும் வகைகளையும், அவ்வொலிகளில் ஒலியன அடை யாளம் காணும் முறையையும் இதுவரை பார்த்தோம் அவற்றோடு ஒலியன்கள் சொற்களுக்கு இடையிலே வரும்போது சொல்லொலியன் தோன்றுவதையும் சுருக்கமாகக் கண்டோம். இனி இம்மூன்று உறுப்புக் கள் போக மேலும் இரண்டு உறுப்புக்கள் இருக்கின் றன. இவற்றில் ஒன்று இலக்கண உறுப்பு ஆகும். இவ்விலக்கண உறுப்பை மொழியின் நடுநாயகம் என்று சொல்வதில் தவறு இல்லை.

மொழியை ஐந்துறுப்புக்களாகப் பிரித்து ஆராயும் ஆராய்ச்சியாளர் இலக்கண உறுப்பை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பார்கள். அவை சொல்லியலும், சொற்றொடர் இயலும் ஆகும். சொல்லியலில் சொல்லி யன்களையும் அவை வந்து வழங்குகின்ற தன்மைகளை யும் ஆராய்கிறார்கள். சொற்றொடரியலில் சொற்களும்,

சொற்றொடர்களும் ஒன்றையடுத்து ஒன்று தொடர்ந்து வந்து வழங்கும் இயல்புகளை ஆராய்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால், சொற்றொடர் இயல் வாக்கியங்களையும் வாக்கியங்களின் பகுதியையும் ஆராய்கிறது என்றும் சொல்லியல் சொற்கள் உண்டாகும் தன்மையை ஆராய்கிறது என்றும் சொல்லாம். இவ் விரண்டு பகுதிகளுக்கும் உள்ள தொடர்பு நெருக்கமானது. இதனால் சிலர் இலக்கண உறுப்பை இரண்டாகப் பிரிப்பதே இல்லை. மாறாக இலக்கண உறுப்பை ஒரு உறுப்பாகவே கொள்கிறார்கள்.

சொல்லியலில் சொல்லியன்களையும் அவை வந்து வழங்குகின்ற தன்மையையும் ஆராய்கிறார்கள் என்றோம். சொல்லியன் என்றால் என்ன? முதலில் ஒலியன்களால் ஆனது சொல்லியன் என்பதைச் சொல்லியாக வேண்டும். ஒலியன் இயலில் ஒலியன்களை அடையாளங்கண்டு கொள்ளப் பல விதிமுறைகளைப் பயன்படுத்தினோமல்லவா? அவைபோன்றே சொல்லியனை அடையாளங் கண்டுகொள்ளப் பல விதிமுறைகள் பயன்படுகின்றன. ஆனால் ஒலியனுக்கும் சொல்லியனுக்கும் ஓர் அடிப்படை வேற்றுமை உண்டு. ஒலியன் பொருள் காட்டுவதில்லை. /p/ என்ற ஒலியனுக்கு ஏதும் தனித்த பொருளைச் சொல்ல முடியாது. அதை ஒலிகளின் திரள் என்றே நாம் கருதுவோம். ஆனால் இதே ஒலியனுக்கு ஏதும் பொருள் இருக்குமானால் அதைச் சொல்லியன் என்று சொல்வோம். அதாவது உருவம் மட்டும் உள்ள ஒலித்திரளை ஒலியன் என்றும்; உருவமும் பொருளும் நிறைந்ததைச் சொல்லியன் என்றும் நாம் சொல்லலாம்.

தமிழிலே சொல் என்பது வார்த்தைகளைக் குறிக்கப் பயன்படுகிறது. இச்சொல்லுக்கும் சொல்லியனுக்கும் ஏதேனும் வேற்றுமை உண்டா? பொதுப்படையாகப் பேசும்போது, மரம், மரங்கள், தாய், தாய்மார் ஆகிய இந்நான்கையும் சொல்லென்றே கூறுவோம்; அப்படியே நினைத்துத் தனித்தனிச் சொல்லாக எழுதுவோம். அதாவது மரம் என்பது நமக்கு ஒரு சொல்லே; மரங்கள் என்பதும் ஒரு சொல்லே. மரம், கள் என்ற இருபிரிவாக இச்சொல்லைப் பிரிக்க முடிந்தாலும்; பகுதி விகுதி என்று பிரிக்க முடிந்தாலும் இருபிரிவையும் ஒரே சொல்லாக எண்ணுகிறோம். அதன் அடிப்படையில் இரண்டுக்கும் இடையிலே இடம் ஏதும் விடாமல் ஒரு சொல்லாகவே எழுதுகிறோம்.

ஆனால் சொல்லியன் என்ற கருத்துப்படி மரங்கள் என்ற சொல்லில் இரு சொல்லியன்கள் இருக்கின்றன. ஒன்று மரம் என்பது; இன்னொன்று கள் என்பது ஆகும். இவ்வாறு சொல்லியன்களை அடையாளம் கண்டு கொள்வது எப்படி? இதற்கு ஒலியனின் விதிமுறைகள் போலவே இதற்கும் விதி முறைகள் இருக்கின்றன. முன்பு ஒலியனைக் கண்டுகொள்ளத் தமிழ் பேசுபவரிடம் இருந்து பலசொற்களை ஒலி எழுத்தால் எழுதினோம் அல்லவா? அதுபோலவே மேலும் சொற்களை நாம் சேகரிக்கவேண்டும். அவ்வாறு சேகரித்த பின்கண்ட சொற்களைப் பாருங்கள்.

சொல் அட்டவணை

1. மரம்	3. தாய்
2. காய்	4. தாய்மார்

5. அக்காமார்
6. அண்ணன்மார்
7. ஓடுகின்றன
8. பாடுகின்றன
9. நடக்கின்றன
10. மரங்கள்
11. காய்கள்
12. பிள்ளை
13. பிள்ளைகள்
14. பெண்
15. பையன்கள்
16. பெண்கள்
17. பையன்
18. பாடுகிறான்
19. பாடுகிறாள்
20. படிக்கிறான்
21. படிக்கிறாள்

மேற்கண்ட அட்டவணையில் பல சொல்லுருவங்கள் ஒரே உருவத்திலும் ஒரே பொருளிலும் மீண்டும் மீண்டும் வருவதைப் பாருங்கள். எடுத்துக்காட்டாக மரங்கள், காய்கள், பிள்ளைகள், பையன்கள், என்ற சொற்களில் -கள் என்ற உருவம் மீண்டும் மீண்டும் அதே தோற்றத்தில் வருகிறது. அப்படி வருகிற இடங்களில் எல்லாம் அந்த –கள் என்ற உருவத்திற்கு ஒரே பொருள் இருக்கிறது. இங்கே அதன் பொருள் ஒன்றிற்கு மேற்பட்ட பன்மையைக் குறிப்பது என்பதை நாம் அறிவோம். அதாவது –கள் என்ற உருவம் 'பன்மை' என்ற பொருளை அது தோன்றும் மேற்கண்ட் சொற்களில் குறிக்கிறது. முன்பு சொல்லியன் என்பது ஒலியனின் கூட்டமென்றும்; அவ்வொலியனே ஒலியன்களோ பொருளைக் குறிக்கும் என்றும் சொன்னேம். அதன் அடிப்படையில் - கள் என்பதைப் பன்மையைக் குறிக்கும் சொல்லியன்

என்று கொள்ளவேண்டும். மீண்டும் பல சொற்களை இவ்வாறு நாம் ஆராய்வதின் அடிப்படையில் நம் முடிவு உறுதிப்படுகிறது. ஒலியனுக்கு மாற்றொலிகள் இருப்பது போல சொல்லியனுக்கும் மாற்றுச் சொற்கள் இருக்கின்றன.

சொல்லியன்களை இருவகையாகப் பிரிக்கலாம். தனித்து நின்று வழங்கமுடிகிற, பொருள் தருகிற சொல்லியன்களைத் தனிச்சொல்லியன் என்றும், தனியே நிற்காது, எப்போதும் சார்ந்தே நின்று பொருள் தருவதைச் சாரியைச் சொல்லியன் என்றும் சொல்லலாம். தனிச் சொல்லியன் என்பதற்கு மரம், மரங்கள், தாய்மார், மனிதன் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இச் சொற்கள் அனைத்தும் தனித்து நின்று வழங்குகின்றன அல்லவா? ஆனால் - கள், - கிறு, - கின்று போன்ற விகுதிகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றிற் கென்று தனியே பொருள் இருப்பினும் அவை மொழியில் தனியே வழங்குவதில்லை; பிற சொற்களைச் சார்ந்தே வழங்குகின்றன. இவ்வாறு வழங்குபவற்றைச் சாரியைச் சொல்லியன் என்று சொல்லவேண்டும்.

இனி மரங்கள், தாய்மார் முதலிய சொற்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவையும் தனித்து நின்று வழங்கமுடியும். இதனால் இவற்றையும் தனிச்சொல் என்றே சொல்லவேண்டும். ஆனால் இவற்றைப் பகுத்துக்காட்ட முடியும். அப்போது 'மரம்' என்றும் 'கள்' என்றும் மரங்கள் என்ற சொல் பகுக்கப்படுகிறது. இவ்வாறு பகுக்கப்பட்ட பின் மரம் என்ற சொல்லே தனித்து வழங்க முடிகிறது. - கள் என்பது சாரியை ஆகிவிடு

கிறது. ஆனல் மரம் என்ற சொல்லே மேற்கொண்டும் தனிச் சொல்லாகப் பகுக்க முடியாது. இந்நிலையில் மரம் என்ற சொல்லினை மிகச் சிறிய தனித்த சொல் லினன் என்று நாம் சொல்லலாம்.

இவ்வாறு சொற்களைத் தனிச்சொல் என்றும் சாரியை என்றும் பிரிப்பதில் பல பயன்கள் உண்டு. அவற்றில் முக்கியமானவை இரண்டு ஆகும். முதலில் மொழியிலே வழங்குகிற எல்லாச் சொற்களை யும் பல சொல்லினன் உறுப்புக்களாகப் பிரித்துக் காண முடியும். இப்படிப் பிரித்துக் காண்பதால் சொற்கள் அமையும் முறையை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அப்படிப் புரிந்துகொண்டபிறகு ஒரு மொழியின் பொதுத் தன்மைகளைத் தெளிவாக நம்மால் எடுத்துச் சொல்ல முடியும். இரண்டாவது ஒரு மொழி யில் குறிக்கப்படும் பொருள்களின் தன்மைகளையும் நாம் கூறுகூருகக் காண இம்முறை உதவும். மரங்கள் என்ற சொல்லே மரம் என்றும் கள் என்றும் பிரித் தோம். அதற்கு அடிப்படைத் தத்துவம் பொருள் பன்மையில் இருப்பதை நாம் உணர்வது ஆகும். அதாவது இருவேறு நிலைகள் இங்கே பயன்படு கின்றன. அவை பொருளும், பொருளின் பன்மை நிலையும் ஆகும். இது நாம் வாழும் உலகை எந்த நோக்கிலே பார்க்கிறோம், உணர்கிறோம் என்று புரிந்து கொள்ளப் பயன்படும்.

மேலே தனிச்சொல் என்றும் சாரியை என்றும் இருவகையாகச் சொல்லினங்களை நாம் பிரித்தோம்.

அல்லவா? ஒரு சொல்லில் ஒன்றே ஒன்றிற்கு மேற்பட்ட சாரியையோ இருக்குமானால் அதை நாம் கூட்டுச்சொல் என்று சொல்ல வேண்டும். தாய்மார் என்ற சொல்லில் தாய் என்பது தனியாக இயங்கக் கூடிய சொல்லியன் என்பதை நாம் அறிவோம் – மார் என்பது பன்மை குறிக்கும் சாரியை என்பதையும் நாம் அறிவோம். எனவே 'தாய்மார்' என்ற சொல்லில் ஒரு சாரியை இருப்பதை நாம் உணர்கிறோம். அதனால் தாய்மார் என்பதைக் கூட்டுச்சொல் என்று சொல்லவேண்டும். இனி நீரோடை என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுங்கள். இது சொல்தானே அல்லது சொற்றொடரா என்று நம்மால் விவாதிக்க முடியும். என்றாலும் எழுதும் போது இடம்விட்டு எழுதுவதில்லை. எனவே எடுத்துக்காட்டாக ஒரு சொல்லே என்று கொள்வதில் தவறில்லை. இச் சொல்லில் இரு சொல்லியன்கள் ஒன்று சேர்ந்து இருக்கின்றன. அவை நீர் என்பதும் ஓடை என்பதும் ஆகும். இச்சொல்லியன்கள் இரண்டும் தனிச் சொல்லியன்களாகத் தனித்து நின்று பொருள் தர முடியும் அல்லவா? அதாவது நீரோடை என்ற சொல்லில் இரு தனிச் சொல்லியன்கள் சேர்ந்து இருக்கின்றன. இவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட தனிச் சொல்லியன்கள் மட்டுமே சேர்ந்து ஒரு சொல்லாக வருமானால் அதை நாம் இணைச்சொல் என்று சொல்ல வேண்டும்.

சொல்லியன்கள் ஒன்றையடுத்து ஒன்று அமையும் முறையைச் **சொல்லியன் அமைப்பு** எனலாம். இச்சொல்லியன் அமைப்பு உலக மொழிகளிலே இரு

வகையிலே நடைபெறுகிறது என்று மொழியியலார் கண்டிருக்கிறார்கள். இம் முறைகளைச் சொல்லாக்கம் என்றும் சொற்பொருள் சேர்க்கை என்றும் சொல்லலாம். இவ்விரண்டு முறைகளும் கூட்டுச்சொல் எந்த முறையில் உண்டாகிறது என்பதை விளக்க உதவும்.

பிரிவு, கசிவு, பிளவு, நுழைவு, குழைவு, நிலவு, தொலைவு, போன்ற சொற்களைக் கவனியுங்கள். இச் சொற்களைக் கூட்டுச்சொற்கள் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் – வு என்ற சாரியை இவற்றில் இருக்கின்றது. இக் கூட்டுச் சொல் சேர்ந்த பின் கண்ட வாக்கியத்தைக் கவனியுங்கள்.

உனக்கும் எனக்கும் இடையிலே பிரிவு இருக்கிறது. இதில் பயன்படும் பிரிவு என்ற கூட்டுச்சொல் வருகின்ற இடத்தில் தனிச்சொல்லியன் வந்து வழங்க முடியும். எடுத்துக் காட்டாக பின் கண்டவைகளைப் பாருங்கள்:—

உனக்கும் எனக்கும் இடையில் மரம் இருக்கிறது
சிலை
கதவு
திரை
காசு

இச் சொற்கள் ஒரு வாக்கியத்தில் வந்து வழங்கும் போது அவ்வாக்கியத்தின் இலக்கண அமைப்பு எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. அதாவது இருக்

கிறது என்ற வினைத்தொடர் ஒருமையிலேயே இருக்கிறது; மாற்றம் ஏதும் அடையவில்லை. இவ்வாறு இலக்கண அமைப்பில் மாற்றம் எதுவும் தேவைப்படாமல் கூட்டுச்சொல் வருகின்ற இடத்தில் தனிச் சொல் ஈயன் வந்து வழங்குமானால் அக்கூட்டுச்சொல் சொல்லாக்க முறையால் தோன்றிய ஒன்று என்று சொல்ல வேண்டும். அக்கூட்டுச் சொல்லில் அடிப்படைச்சொல் ஒன்று இருக்கிறது என்றும் கொள்ள வேண்டும். அவ்வடிவப்படைச் சொல்லியன் மேல் இன்னொரு சாரியை சேர்ந்து கூட்டுச்சொல் உண்டாகி இருக்கிறது என்றும் கொள்ளவேண்டும்.

மேற்கண்ட வாக்கியத்தை மீண்டும் பாருங்கள்: உனக்கும் எனக்கும் இடையில் பிரிவு இருக்கிறது. பிரிவு ஒருமை என்பதை நாம் இயல்பாக உணர்கிறோம். இதற்குப் பதிலாக பிரிவுகள் என்ற கூட்டுச் சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்போது நமக்குக் கிடைக்கிற வாக்கியம் உனக்கும் எனக்கும் இடையில் பிரிவுகள் இருக்கிறது என்பது ஆகும். இவ்வாக்கியம் தமிழ் வாக்கியம் என்று நாம் அடையாளம் கண்டுகொண்டாலும் இதில் ஏதோ தவறு இருக்கிறது என்பதை உணர்கிறோம். இது இலக்கண அமைப்பில் ஏற்பட்டிருக்கும் தவறு ஆகும். இத் தவறு நீக்கப்பட வேண்டுமானால் இருக்கிறது என்ற ஒருமை வினைத்தொடர் பன்மையாக்கப்பட வேண்டும். இப்போது உனக்கும் எனக்கும் இடையில் பிரிவுகள் இருக்கின்றன என்ற இயல்பான தமிழ் வாக்கியம் கிடைக்கிறது.

உனக்கும் எனக்கும் இடையிலே பிரிவுகள் இருக்கின்றன என்ற வாக்கியத்தில் பிரிவுகள் வரும் இடத்தில் மரம், சிலை, கதவு, திரை, காசு என்ற சொற்களைப் பயன்படுத்த முடியுமா என்று பார்ப்போம். அப்படி முயலும் போது இலக்கணத் தவறுடைய வாக்கியங்களே கிடைக்கின்றன. இத்தவறை நீக்க இருமுறை உண்டு. ஒரு முறையின்படி நாம் இருக்கின்றன என்ற பன்மை வினைத்தொடரை இருக்கிறது என்ற வினைத்தொடராக மாற்ற வேண்டும். இரண்டாவது முறையின்படி நடந்தால் மரம், கதவு, சிலை, திரை, காசு என்ற தனிச்சொல்லியன்களை – கள் என்ற சாரியை சேர்த்து கூட்டுச் சொல்லாகச் செய்ய வேண்டும். அதாவது இந்த இரண்டு முறையில் எதைப் பயன்படுத்தினாலும் இலக்கண அமைப்பில் நாம் மாற்றங்கள் செய்தே ஆக வேண்டும். இவ்வாறு ஒரு கூட்டுச் சொல் வரும் இடத்தில் தனிச் சொல் வர முடியவில்லை என்றால் அக் கூட்டுச் சொல் சொற்பொருள் சேர்க்கையால் உண்டாகி இருக்கிறது என்று சொல்லலாம்.

சொல்லியலில் சொல்லாக்கமும், சொற்பொருள் சேர்க்கையும் மிக முக்கியப் பங்கு பெறுகின்றன. சொற்களின் அமைப்பைப் புரிந்து கொள்ள அவை தேவை என்று சொல்லவும் வேண்டுமா? சொற்களின் அமைப்புக்கு அப்பால் இலக்கணவிதி முறைகளையும் அவ்விதி முறையில் பயன்படும், வினைச்சொல், பெயர்ச்சொல், வினையடை, பெயரடை, எண், பால், இடம் என்ற எல்லா இலக்கணப் பிரிவுகளையும் புரிந்து

கொள்ளப் பொதுவாகச் சொல்லாக்கமும், சிறப்பாகச் சொற்பொருள் சேர்க்கையும் மிகவும் பயன்படுகின்றன. எனவே மொழியின் இயல்பைப் புரிந்து கொள்ள முயல்பவர்கள் இவ்விரு முறைகளையும் தெளிவாக மனதிலே கொள்ள வேண்டும்.

இதுவரை நாம் சொல்லியன்களைப் பற்றித் தெரிந்து கொண்டதன் அடிப்படையில் ஒரு மொழியில் உள்ள சொல்லியன்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதல் வகையில் தனிச் சொல்லியன்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்வோம். பொதுவாக ஒரு மொழியில் தனிச் சொல்லியன்களே அதிகமாக இருக்கும். இச் சொல்லியன்களில் பல பொதுவாகச் சொல்லாக்கத்திற்கும் சொற்பொருள் சேர்க்கைக்கும் சேர்ந்தே பயன்படலாம். இரண்டாவது வகையில் சொல்லாக்கத்திற்குப் பயன்படும் சாரியைச் சொல்லியன்களைக் கொள்ளவேண்டும். முன்பே – வு என்ற சாரியைச் சொல்லியன் தமிழிலே பயன்படுவதைக் கண்டோம். மையீற்றுப் பண்புப் பெயர்களை இலக்கணம் படித்தோர் அறிவார்கள். மைவிகுதி சாரியைச் சொல்லியனே ஆகும். தமிழிலே எண்ணிறந்த சொற்கள் சொல்லாக்கத்திற்குப் பயன்படும் சாரியைச் சொல்லியன்களால் உண்டாகி இருக்கின்றன. அவற்றை இனங் காண்பதே நல்ல பயிற்சியாகும். சில சொல்லியன்கள் சொல்லாக்க முறையால் வந்தவையா இல்லையா என்று தீர்மானிப்பதில் சிரமம் உண்டு. - பு என்பது சொல்லாக்கச் சாரியை. இது

நண்பு, பண்பு, நோன்பு, போன்றவற்றில் பயன்படுகிறது. அன்பு என்பதில் இருக்கும் – பு சொல்லாக்கச் சாரியைதானே? கம்பு என்பதில் இருக்கும் – பு என்பதின் நிலைமை என்ன?

மூன்றாவது வகையில் சொற்பொருள் சேர்க்கைக்குப் பயன்படும் சாரியைச் சொல்லியன்களை நாம் அடக்கி விடலாம். இச்சாரியைகள் ஒரு மொழியில் பொதுவாகக் குறைந்த அளவிலேயே இருக்கும். ஆனால் இலக்கணப் பிரிவுகளை வேற்றுமைப் படுத்துவதற்கு இவை மிகவும் தேவையாகும். – கள் என்ற சாரியைச் சொல்லியன் பன்மை என்ற இலக்கணப் பிரிவைக் காட்டுகிறது என்பதை அறிவோம். 'வேற்றுமை விகுதிகள்' என்று கூறப்படுபவையும் இவற்றைச் சேர்ந்தவையே.

ஒரு கூட்டுச்சொல்லை விவரித்துக்கூற இம்மூன்று வகைகளைச் செய்துகாட்டினால் மட்டும் போதாது. முதலில் அக்கூட்டுச் சொல்லின் ஒலியன்கள் எந்த வகையைச் சேர்ந்தன என்று நிர்ணயிக்க வேண்டும். மரங்கள் என்ற சொல்லையும், நண்பு என்ற சொல்லையும் எடுத்துக் கொள்வோம். மரங்கள் என்ற சொல்லை மரம், கள் என்ற இரு உறுப்பாகப் பிரித்து விடுகிறோம். மரம் என்பது முதல் வகையைச் சேர்ந்த தனிச் சொல்லியன் என்பதைச் சொல்ல வேண்டும். அதன் பின் – கள் என்பது எந்த வகை என்பதை அறுதியிட வேண்டும். அது மூன்றாம் வகை என்பதை அறிவோம்.

இவ்வாறு சொல்லியன்கள் எந்த வகையைச் சேர்ந்தன என்று அறுதியிட்ட பின்னால் அவை சொல்

அமைப்பில் வருகின்ற வரிசையைச் சொல்ல வேண்டும். மரங்கள் என்ற சொல்லில் மரம் என்ற சொல்லியன் முதலிலும், -கள் என்ற சொல்லியன் அதை அடுத்தும் வருகின்றன அல்லவா? இச்சொல் வரிசை முறையை விளக்குவது பின்னால் இலக்கணப் பிரிவுகள் வரிசையை விளக்கவும் உதவும். சொல்லியன்கள் வந்து வழங்குகின்ற வரிசைகளைச் சொன்ன பிறகு அச் சொல்லியன்கள் ஒன்றையடுத்து ஒன்று வரும் போது, ஒன்றோடு ஒன்று இணையும்போது, ஏற்படும் மாற்றங்களையும் விளக்க வேண்டும். மரம் என்பதும் -கள் என்பதும் சேரும்போது என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன? முதலில் மரம் என்பதில் கடைசியில் இருக்கும் இணையிதழ் மூக்கொலி -கள் என்பதில் இருக்கும் பின்னண்ண வெடிப்பொலியோடு கலந்து பின்னண்ண மூக்கொலியாக மாறிவிடுகிறது. இரண்டாவது -கள் என்பதில் இருக்கும் குரல் குறைந்த பின்னண்ண வெடிப்பொலி குரல் நிறைந்த பின்னண்ண வெடிப்பொலியாக மாறி விடுகிறது. இம் மாற்றங்களையும் நாம் தெளிவாக்க வேண்டும் இம் மாற்றங்கள் ஒரு மொழியில் பொதுத் தன்மை வாய்ந்து வழங்கப்படும். அப்பொதுத்தன்மைகளை அறிந்து கொள்வது சொல்லியல் ஆராய்ச்சிக்குப் பயன் தரும். மேலும் ஒரு சொல்லுக்கே உரிய சிறப்புக் குணங்களையும் — எந்த இடத்தில் அழுத்தம் பெறுகிறது எந்த இடத்தில் அமைதி அடைகிறது என்பதையும் நாம் விளக்க வேண்டும்.

கூட்டுச் சொல்லில் இருக்கிற முதல் வகையைச் சேர்ந்த சொல்லியனைப் பகுதி என்றும், மற்ற வகைகளைச்சேர்ந்த சொல்லியனை விகுதி என்றும்பிரிக்கலாம்.

சொல்லடுக்கு

மரம்
மரங்கள்
மரமே
மரத்துக்கு
மரத்தில்
மரத்தால்
மரத்தோடு
மரத்தை
மரத்தின்

என்ற சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் மரம் என்ற சொல்லியனே முதலில் இருக்கிறது. இச் சொல்லியன் முதல் வகையைச் சேர்ந்தது ஆகும். இதை நாம் பகுதி என்று சொன்னோம். இவ்வாறு விகுதிகளால் வேறுபட்டாலும் ஒரே (அதே) பகுதி யைக் கொண்டிருக்கிற சொற்களைச் சொல்லடுக்கு என்று சொல்ல வேண்டும். சொல்லியலில் சொல் லடுக்குகளைக் கண்டுகொள்வது மிகவும் தேவை யாகும். சொல்லடுக்குகளின் அடிப்படையில் இலக் கணப் பிரிவுகளை ஏற்படுத்த முடியும். மரம் மரங்கள் என்றவற்றைக் கொண்டு ஒருமை பன்மை என்று தீர் மானிக்கிறோம். மரத்துக்கு, மரத்தால் போன்ற வற்றைக்கொண்டு இன்னின்ன வேற்றுமைகள் தமிழிலே பயன்படுகின்றன என்பதையும் தீர்மானிக்க முடியும்.

சொல்லியல் நடைமுறை

ஒரு சொல்லடுக்கில் இருக்கிற சொற்கள் என்னென்ன மாற்றங்களைச் சொல்லியல் நடைமுறையால் அடைகின்றன என்பதை நாம் விவரிக்க வேண்டும். சொல்லியல் நடைமுறைகளின் விளைவாகவே சொல்லடுக்கில் இருக்கும் சொற்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிற்கின்றன. ஐந்து வகையாகச் சொல்லியல் நடைமுறைகளை நாம் பிரிக்க முடியும். அவை விகுதி சேர்த்தல், உள் மாற்றம், இரட்டைக்கிளவி, முழு மாற்றம், மாற்றமின்மை என்பன ஆகும். விகுதி சேர்த்தல் மூன்று வகையாகும். பின் விகுதியே தமிழில் பெரும்பாலும் பயன்படுகிறது: மரம் → மரங்கள்; நட → நடத்து; போ → போனான்; போதல் முதலியன. முன் விகுதி ஆங்கிலத்திலே பயன்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்களைப் பாருங்கள்.

fix	→	in fix
opposed	→	un opposed
possible	→	impossible

தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களிலும் முன் விகுதி பயன்படுகிறது.

அவசியம்	→	அனவசியம்
ஆசாரம்	→	அனாச்சாரம்

என்பன எடுத்துக்காட்டுக்கள். முன்விகுதி பகுதிக்கு முன்னும் பின் விகுதி பகுதிக்குப் பின்னும் சேர்க்கப் படும். இடைவிகுதியோ பகுதிக்கு இடையிலே சேர்க் கப்படும். அரேபிய மொழியில் இடைவிகுதிகள் பயன் படுத்தப்படுகின்றன. எடுத்துக் காட்டாக கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் பாருங்கள்.

1. * ktb 'write'

   katib 'writing (person)'

   katab 'he wrote'

   kita·b 'book'

   maka·tip 'places for writing'

   maktab 'place for writing'

2. * gls 'sit'

   galas 'he sat'

   ga·lis 'sitting (person)'

உள்மாற்றம் என்பது அடிச்சொற்களில் ஏற்படும் ஒலி மாற்றத்தைக் குறிப்பது ஆகும். உருவிலும் பொருளிலும் ஒன்றுபட்ட சில சொற்கள் தங்கள் அடிப் படைச் சொற்களில் வேற்றுமைப்பட்டு இருக்கலாம். இவ்வேற்றுமை ஒன்றிரண்டு ஒலியன்களைச் சேர்ந்து இருக்கலாம். ஆங்கிலச் சொற்களான sing : sang : sung என்பவை ஒரே சொல்லடுக்கைச் சேர்ந்தன என் பதை அறிவோம். இச் சொல்லடுக்கின் அடிப் படைச் சொல் sing என்று கொண்டால் இரு சொற்

களில் sing ஐக் காணவில்லையல்லவா? அச்சொற்களில் ஒலியன்கள் மாறி இருக்கின்றன. இவ்வாறு மாறி இருக்கும். ஒலியன்கள் அடிப்படைச் சொல்லினுடைய உள்மாற்றங்களைக் குறிக்கின்றன என்று சொல்ல வேண்டும். மரம் → மரங்கள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் உள்மாற்றங்களாகவே சிலர் கொள்வார்கள்.

இரட்டைக் கிளவி நம் எல்லாருக்கும் மிகவும் பழக்கமான நடைமுறை ஆகும். இதில் இருவகை உண்டு என்று நம் இலக்கண நூலார் சொல்கின்றனர். முதல் வகையில் வழங்குகிற தொடரைப் பிரித்தால் அடிப்படைச்சொல் தனித்து நின்று பொருள் தருவதில்லை. பட பட, கட கட, சல சல, தொள தொள என்று தமிழிலே அடுக்கிக்கொண்டே போகலாம். இன்னொரு வகையில், பிரித்தபோதிலும் அடிப்படைச் சொல் தனித்து நின்று பொருள் தர முடியும். திடீர் திடீர், படீர் படீர், என்பன இதில் சேரும். தமிழிலே பொதுவாக எந்த சொல்லையும் இரட்டைக் கிளவியாக ஆக்கி விட முடியும். படம் என்ற சொல்லை படம் கிடம் என்கிறோம். பெஞ்சு கிஞ்சு, சட்டை கிட்டை, வெளிச்சம் கிளிச்சம், ஞானம் கீனம், தானம் கீனம் என்று நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு சொல்லாக்கம் செய்கிறோம். இதில் இருவிதிகள் இருக்கின்றன. முதல் விதி சொல்லின் முதல் அசையை நீக்கிவிட்டு கி என்னும் அசையைச் சேர்க்கிறது. இரண்டாம் விதி முதல் அசைப்பில் இருக்கும் உயிரொலி நெட்டுயிர் என்றால் சேர்க்கும் அசையின் உயிரும் நெட்டுயிராக இருக்கும்படிச் செய்

கிறது. இவ்விரண்டு விதிகளும் சேர்ந்தே இயங்குகின்றன. இவ்விதிக்குக் ககர அசைகளும் விலக்கு இல்லை என்பதைப் பின்கண்ட சொற்கள் விளக்குகின்றன.

கழி	→	கழி கிழி
கடி	→	கடி கிடி
காடி	→	காடி கீடி
காடு	→	காடு கீடு

ஆனால் கி அல்லது கீ என்கிற அசைச்சொல் முதலில் வரும்போது என்ன நடைபெறுகிறது? முதலில் இச்சொற்களை இரட்டைக்கிளவியாக நாம் பயன்படுத்துகிறோமா என்பது நிச்சயமில்லை. இரண்டாவது அப்படிப் பயன்படுத்தும்போது மாற்றம் ஏதும் செய்ய வழி இல்லை; அப்படியே பயன்படுத்துகிறோம்.

தமிழில் இரட்டைக்கிளவி பெருமளவில் பயன்படுவதுபோல முண்டா மொழிகளிலும் இரட்டைக்கிளவி பெருமளவில் பயன்படுகிறது.

முழு மாற்றம் ஏற்படும்போது ஓர் அடிப்படைச் சொல் முழுக்க மாறிவிடும். go என்ற அடிப்படைச் சொல்லின் இறந்த காலம் went என்பதை அறிவோம். இதில் go என்ற அடிப்படைச் சொல்லே இல்லை. முழு மாற்றம் நடைபெற்றிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

மாற்றமின்மை என்ற சொல்லைவிட ஒன்றுமில்லா மாற்றம் என்பதே மிகவும் பொருத்தம்போலத் தெரிகிறது. ஆங்கிலத்தில் cat, mat, girl, boy போன்ற சொற்களுக்குப் பன்மை cats, mats, girls, boys என்பன என்பதை உற்றிவோம். ஆனல் sheep என்ற சொல்லுக்குப் பன்மை என்ன? sheep என்பதேயாகும். இந்நிலையில் sheep என்பதில் மாற்றமின்மை அல்லது ஒன்றுமில்லா மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். இது தேவைதானு என்ருல் இலக்கணத்தில் தேவைப்படுகிறது என்றே சொல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக

A cat is running The cats are running

A girl is running The girls are running

A boy is runing The boys are running

A sheep is running ஆனல் The sheep are runuing

Sheep என்பது பன்மைதான் என்பதை 'are' என்னும் விணைச்சொல் (copula) இருப்பதால் அறிகிறேம். ஆனல் உருவத்திலே மாற்றமில்லை. அவ்விடத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை ஒன்றுமில்லா மாற்றம் ஏற்படுகிறது என்று சொல்லி அச்சொல்லைப் பிற சொல்லின் இயல்போடு ஒப்பிட்டுக் காட்ட முடியும்.

இதுவரை கூட்டுச் சொற்கள் அமையும் அமைப்பையும் அவை அடையும் மாறுபாடுகளையும் நாம் கண்டோம். இணைச்சொற்கள் இரண்டு அல்லது இரண்

டுக்கு மேற்பட்டவை சேர்ந்து ஏற்படுகின்றன என் றும். சொற்றொடருக்கும் இணைச் சொல்லுக்கும் ஏதேனும் வேற்றுமை உண்டா என்பதை இனிக் காணலாம். முதலில் ஏதும் வேற்றுமை உண்டா என்பதை ஒரு மொழியின் அடிப்படையிலேயே நாம் நிதானிக்க வேண்டும். எல்லா மொழிகளுக்கும் பொதுவான முடிவாக நாம் சொல்ல முடியாது.

தமிழிலே பொதுவாக இணைச் சொல்லுக்கும் சொற்றொடருக்கும் வேற்றுமை உண்டு என்று சொல்ல லாம். தீப்பெட்டி என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுங் கள். இது இரு சொல்லியன்களால் ஏற்பட்ட போதி லும் இணைச் சொல்லாகவே பயன்படுகிறது. ஒரு சொற்றொடரில் ஒரு சொல் போலவே பயன்பட முடி யும். தீக்கும் பெட்டிக்கும் இடையில் நாம் நேரம் விட்டுச் சொல்வதில்லை. தீப்பெட்டி என்ற இணைச் சொல்லின் இடையிலே வேறு சொல்லைத் திணிக்க முடியாது. அழகான பெண் என்ற சொற்றொடரை எடுத்துக் கொள்ளுங்கள். இச் சொற்றொடரின் இடை யில், அழகான, நல்ல பெண் என்று நாம் 'நல்ல' என்ற சொல்லைச் சேர்த்துவிட முடியும். அதேபோல கைபடாத ரோஜா என்ற சொற்றொடரின் இடையிலும் அழகான, நல்ல போன்றவற்றைச் சேர்த்துவிட முடியும்.

ஒரு இணைச் சொல்லை விவரிக்க வேண்டுமானால் முதலில் இணைச்சொல்லில் இருக்கிற சொற்கள் என்ன இலக்கணப் பிரிவைச் சேர்ந்தன என்பதை நாம் தீர் மானிக்க வேண்டும். சொற்கள் சேர்வதால் ஏற்படும்

இணைச் சொல்லும் எந்த வகுப்பைச் சேர்ந்தது என்றும் நாம் தீர்மானிக்க வேண்டும். பின்பு இணைச் சொல்லின் உறுப்புக்கள் எந்த வரிசையில் வருகிறது என்பதையும் நாம் தீர்மானிக்க வேண்டும். அதன்பின் ஒலியன்களில் ஏற்படும் மாற்றத்தையும் விவரிக்க வேண்டும். இம்முறைகள் நாம் முன்பு கூட்டுச் சொல்லுக்குச் செய்ததில் இருந்து வேற்றுமைப்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இலக்கணப் பிரிவுகள்

இதுவரை சொல்லியன் என்றால் என்ன என்பதைப் பார்த்தோம். சொல்லியன்களை ஒரு மொழியில் அடையாளம் கண்டுகொள்வது எப்படி என்பதையும் பார்த்தோம். சொல்லுக்கும் சொல்லியனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பார்த்தோம். அதன்பின் சொல்லியன்களை மூன்று வகையாகப் பிரித்தோம். அவற்றுள் முதல்வகை தனிச் சொல்லியன்கள் என்பதைக் கண்டோம். மற்ற இருவகைகளும் சாரியைச் சொல்லியன்கள் என்பதையும் குறித்துக் கொண்டோம். இச்சாரியைச் சொல்லியன்கள் எவ்வாறு சொல்லாக்கத்திற்கும் சொற்பொருள் சேர்க்கைக்கும் பயன்படுகின்றன என்பதையும் கண்டோம். சொல்லாக்கம் என்றால் என்ன என்பதையும் சொற்பொருள் சேர்க்கை என்றால் என்ன என்பதையும் விளக்கினோம். அதன்பின் சொல்லியன்களைச் சொல்லடுக்குகளாகக் கொண்டு ஆராய்வதின் தேவையைச் சொன்னோம். ஒரு சொல்லடுக்கில் உள்ள சொல்லியன்களுடைய

உருவ ஒற்றுமைகளை ஒலியன் இயல் விதிகளால் விளக்குவது பற்றியும் சொன்னோம். அவைபோக சொல்லியன்களில் ஏற்படும் உருவ வேற்றுமைகளையும் சொன்னோம்.

இவை மட்டும் சொல்லியலில் செய்தால் போது மென்று நினைப்பவர்களும் இருக்கலாம். ஆனால் உருவ ஒற்றுமை வேற்றுமைகளும் அவை அடையும் மாற்றங் களோடும் சொல்லியல் நின்றுவிடக் கூடாது. அப்படி நின்றுவிட்டால் மொழியின் இயல்புகளை நாம் கண்டு பிடிக்கத் தவறிவிட்டோம் என்றே சொல்ல வேண்டும்.

மொழியில் பயன்படும் சொல்லியன்கள் அவற்றின் உருவ ஒற்றுமைகளைக் கொண்டுமட்டும் மொழியில் பயன்படுகின்றன என்றே பல வகுப்புக்களாகப் பிரி கின்றன என்றே சொல்ல முடியாது. சொல்லியன்கள் அவை பயன்படும் விதத்தாலும் பலபல வகுப்புக் களாக, குழுக்களாக அமைகின்றன.

எடுத்துக்காட்டாக கல், மண், மரம், மனிதன், ஆண், பெண், மாடு, கன்று, பசு என எண்ணிறந்த சொற்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றுள் பல வற்றிற்கு ஒன்றுடன் ஒன்று உருவ ஒற்றுமை இல்லா விட்டாலும் அவை எல்லாவற்றிற்கும் சில பொதுக் குணங்கள் இருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். இச் சொற்கள் எல்லாவற்றையும் நாம் - கள் என்ற விகுதி சேர்த்துப் பன்மையாக்கலாம். இச் சொற்கள் அனைத்தும் வேற்றுமை உருபுகளை ஏற்கும். இவ்வியல்பு களின் மொத்தப் பேராக நாம் பெயர்ச்சொல் என்ற

தொடரைச் சுட்டிக் காட்டுவோம். இச்சொற்கள் பல நிலைகளில் பயன்படும் விதம் கருதியே இவ்வியல்புகள் எல்லாம் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வியல்புகளை விவரிப்பதும் சொல்லியலிலே செய்யப்பட வேண்டும். அதாவது உருவ ஒற்றுமை, வேற்றுமைகளோடும் அவை அடையும் மாற்றங்களோடும் சேர்த்து சொல்லியன்கள் பல குழுக்களாக, இலக்கணப் பிரிவுகளாகப் பயன்படும் முறைமையையும் நாம் விளக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் சொல்லியல் ஆராய்ச்சி உயிர் பெற முடியும். அது இல்லாதவரை சொல்லியல் ஆராய்ச்சியை வெற்றுடல் என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறு ஏன் இச்செய்தியை நாம் அழுத்தமாகக் கூற வேண்டும்? இலக்கணப் பிரிவுகள் ஏனைதானை வென்று எந்த மொழியிலும் அமையவில்லை. அவை அமைகின்ற முறையிலும் அவை காட்டும் பொருளிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. அதுபோக மனிதன் எப்படித் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைத் தன் மொழியில் அடக்க முயல்கிறான், தன் மொழியால் காண்கிறான் என்பதற்கு இலக்கணப் பிரிவுகளே உறுதுணையாகும். நம் சிந்தனை படரும் வகைகளை மீண்டும் மீண்டும் நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள இலக்கணப் பிரிவுகளே துணை செய்யும். மேலும் உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் பல இலக்கணப் பிரிவுகள் ஓரளவு ஒற்றுமையுடையனவாய் இருக்கின்றன. இவ் வொற்றுமைகளை நாம் அலசுவது மனித மூளைக்குள்ளே என்னென்ன இலக்கணப் பிரிவுகள் இயல்பாகவே அமைந்திருக்கின்றன; அப்படி இயல்பாக அமைந்தவற்றை

மனிதன் என்னென்ன வகைகளில் மாறுதல் அடையச் செய்து ஒவ்வொரு மொழியிலும் பயன்படுத்துகின்றான்; என்பன போன்ற மிக முக்கியமான கேள்விகளுக்கு விடை காணவும் பயன்படும்.

அது என்ன? என்ற கேள்விக்குப் புத்தகம் என்பது பதிலாக இருக்கலாம்; அல்லது அது புத்தகம் என்பதும் பதிலாக இருக்கலாம். அதாவது நாம் சொற்களைப் பயன்படுத்தும்போது தனியாகவும் பயன்படுத்துகிறோம்; சேர்த்தும் பயன்படுத்துகிறோம். இது நம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். சொற்களைச் சேர்த்துப் பயன்படுத்தும்போது சொற்கள் பல இனங்களாக அமைவதில் வியப்பு ஏதும் இல்லை என்பது போலத் தெரிகிறது. சொற்கள் என்ன தன்மையில் பயன்படுகின்றன என்பதைக் கொண்டு இனம் இனமாக மொழியில் இயல்பாகவே அமைந்து விடுவது போலத் தோன்றுகிறது. இச்சொற்களின் இனங்களையே இலக்கணப் பிரிவுகள் என்று சொல்கிறோம்.

பள்ளியிலே படிக்கும்பொழுது பெயர்ச்சொல் என்றும், வினைச்சொல் என்றும் உயர்திணை, அஃறிணை என்றும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்றும், என்னவெல்லாமோ படிக்கிறோம். ஆனால் நம் கெட்ட காலம் அப்பிரிவுகள் நம் மண்டையில் நிற்பதில்லை. ஏதோ படிக்கிறோம். பிறகு மறந்துவிடுகிறோம். ஆனால் உண்மையில் பெயர்ச்சொல் என்றும், வினைச்சொல் என்றும் பிரித்துக் காண்பது உலகத்தை நாம் பல பிரிவுகளுக்குள் இயல்பாக அடக்க முயலும் முயற்சி

யாகும். இப்பிரிவுகள் நம் மொழியில் மட்டும் இல்லாது மனித மூளையில் எங்கோ ஒளிந்துகொண்டிருக்கின்றன என்றுகூடச் சொல்வதில் தவறு இல்லை. நம்மைச் சுற்றி இருக்கும் உலகை நம் மொழி காண்கிற கண்ணோட்டமே இலக்கணப் பிரிவுகள் என்று சொல்லலாம்.

ஆங்கில நூலார் இலக்கணப் பிரிவுகள் எட்டு என்று கொள்கின்றனர். அவை பெயர்ச்சொல், வினைச் சொல், திணைப்பெயர், பெயரடை, வினையடை, இடைப் பெயர், இணைப்பு மற்றும் விளி என்பன ஆகும்.

பெயர்ச்சொல் என்றால் என்ன? ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது என்போம். பொருளின் பெயரோடு பல செய்திகளும் தமிழிலே இதனோடு வழங்கப் படுகிறது அல்லவா? ஆள் என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுங்கள். இது மனிதத் தன்மையைக் காட்டுகிறது. பெண் என்ற சொல் மனிதத் தன்மையையும் காட்டலாம்; அப்படி காட்டாதபோது பெண்மையை மட்டும் குறிக்கவும் பயன்படலாம். குதிரை என்பது ஓர் உயிரைக் குறிப்பதோடு விலங்கு என்ற செய்தியையும் தருகிறது அல்லவா? வீடு என்பது வீட்டைக் குறிப்பதோடு உயிரற்றது என்ற பொருளையும் தொக்கி நிற்கச் செய்கிறது அல்லவா? மனம் என்பது என்ன? புலம் என்பது என்ன? நாம் கண்ணால் காண முடியாத நுண் பொருட்கள் அல்லவா? இவை குறிக்கும் சொற்களும் பெயர்ச்சொல்லே ஆகின்றன. தண்ணீர் என்பது குளிர்ந்த நீர் என்ற பொருளைத் தருகிறது.

அதைத் தனிச் சொல்லாகப் பெயர்ச்சொல்லாகக் குழம்பு தண்ணீராய்ப் போய்விட்டது என்று சொல்லும் போது நாம் பயன்படுத்துகிறோம். அப்போது தண்ணீர் என்பது திரவம் என்ற பொதுப் பெயரையே குறிக்கிறது அல்லவா?

பெயர்ச்சொற்களுக்கு மூன்று சிறப்பு இயல்புகள் இருக்கின்றன. அவை எண், பால், வேற்றுமைச் சொல்லியன்களோ ஏற்றல். இம்மூன்றும் உலக மொழிகள் பலவற்றில் பெயர்ச்சொல்லைக் குறிக்கப் பயன்படுகின்றன என்று சொல்லலாம். எண் என்றால் ஒன்று, பலவா, இரட்டையா என்பதைக் குறிப்பது. 'ஒன்றல்லவை பல தமிழ்நடை என்றிசினோர்' தமிழ் இலக்கணக்காரர். சில மொழிகளில் ஒன்று, இரட்டை, பல என்று பெயர்ச்சொல்லைப் பிரிப்பார்கள். தமிழிலோ, மாடு ஒருமை, மாடுகள் பன்மை என்பவை போதும்.

பால் ஆண்பால், பெண்பால், இரண்டுமல்லாத அலி என்று மூன்று வகைப்படும். பெயர்ச்சொற்கள் பால் குறிக்கும். கண்ணன் என்பது ஆண்பாலைக் குறிக்கிறது அல்லவா? 'சக்கிலியன்' என்ற சொல்லில் -அன் விகுதி இருந்து அது ஆண்பாலைக் குறிக்கிறது. வண்ணன் என்பதில் - ஆன் விகுதி ஆண்பாலைக் குறிக்கிறது. தலைவி என்பதில் -வி விகுதி பெண்பாலைக் குறிக்கிறது. ஆனால் தமிழிலே சொற்களின் உருவம் மட்டும் கொண்டு ஆண்பால் பெண்பால் என்று நாம் குறிப்பதில்லை. அதாவது எந்த வித உருமாற்றம்

இல்லாவிட்டாலும் பொருள் இயல்பாலேயே பெண் பாலைக் குறித்துவிடுகிறோம். பூங்கொடி, மலர் விழி, மரகதம் என்ற சொற்களில் பெண்பால் விகுதி ஏதும் இல்லை. இருப்பினும் அவை எடுக்கும் வினை முற்றுப்பால் காட்டும் ஈறுகளைக் கொண்டு அச் சொற் களைப் பெண்பால் என்கிறோம். இது நாம் உருவத் தைக் கொண்டுமட்டும் இலக்கணப் பிரிவுகளை ஏற் படுத்துவது கூடாது என்பதைச் சொல்கிறது அல்லவா? வேற்றுமை என்பது ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலையை வேறுபடுத்திக் காட்டுவது என்றே பொதுவாகச் சொல்லலாம். தமிழிலே 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' 'விளி கொள்வதன் கண் விளி யோடு எட்டே' என்று இலக்கண ஆசிரியர் வகுத்திருக் கின்றனர். இவ்வேற்றுமை தமிழிலே பெயர்ச்சொல் லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் வேற்றுமை காட்ட மிகவும் பயன்படுகிறது.

வினைச்சொற்கள் வேற்றுமை விகுதிகளை ஏற்ப தில்லை. அவன் நடந்தான் என்ற வாக்கியத்தைப் பாருங்கள். இதில் அவன் பெயர்ச்சொல் தொடர் என்றும், நடந்தான் வினைச்சொல் தொடர் என்றும் சொல்லுவோம். நடந்தான், கடந்தான், வந்தான் என்ற வினைச்சொற்களை ஒப்பிட்டுக் காண்பதன் மூலம், அடிச்சொற்கள் என்ன என்று நாம் காணமுடிகிறது. இவ்வடிச்சொற்கள் வினைச்சொற்கள்; ஏனென்றால் இவை காலங்காட்டும் விகுதிகள் கொண்டிருக்கின்றன. தமிழ் வினைகள் காலங்காட்டும் விகுதிகளையும், பால்

காட்டும் விகுதிகளையும் பெறும் என்பதைப் பள்ளியில் படித்திருக்கிறோம்.

இனி வந்தவன், போனவன் என்ற சொற்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவற்றிலும் வினையடிச் சொற்கள் இருக்கின்றன; நட, போ என்பவை அவை. அவ் வினையடிச் சொற்களை அடுத்து காலங்காட்டும் விகுதிகள் வருகின்றன; அவற்றின் பின்னால்-அன் என்ற பால் இடம் காட்டும் விகுதிகளும் வருகின்றன. அதனால் இவற்றை வினைச்சொல்லாகக் கொள்ள முடியுமா? முடியாது என்பது உறுதி. ஏனென்றால் நாம் வந்தவனை, போனவனை என இச்சொற்களை வேற்றுமை விகுதி ஏற்கச் செய்ய முடியும். ஆனால் வினைச்சொற்கள் தமிழிலே வேற்றுமை விகுதி ஏற்பதில்லை. அதனால் இச் சொற்களைத் தமிழ் இலக்கண நூலார் வினையாலணையும் பெயர் என்று சொல்வார்கள்.

வினையைக்காட்டுகிற வினைச்சொற்களின் அமைப் புப் பொதுவாக எல்லா மொழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றே சொல்லலாம், ஒரு சொல் வினை யைக் காட்டுவதால் வினைச்சொல்லுக்குத் தகுந்த அர்த் தம் இருக்கவேண்டும்; அவ்வர்த்தத்தைக் காட்டப் பல விகுதிகளையும் சேர்த்திருக்க வேண்டும் என்று சொல் வதில் தவறு ஏதும் இல்லை. வினைச்சொற்கள் ஒரு வினை நடக்கிற காலத்தைக்காட்டலாம். தமிழிலே பேரழகி போகிறாள் என்ற வாக்கியத்தைப் பாருங்கள். இதில் போகிறாள் என்பது வினைச்சொல் தொடர் என்பதை யும், அவ்வினைச்சொல் தொடரில் போ என்பது வினை

என்பதையும் பின் கண்ட வாக்கியங்களோடு ஒப்பிடும் போது தெரிகின்றன அல்லவா?

பேரழகி போகிருள்
மரகதம் வருகிருள்
வள்ளி நடக்கிருள்
மலர்விழி பார்க்கிருள்

மேற்கண்ட வாக்கியங்களை பின் கண்டவற்றோடு ஒப்பிடலாம்.

மனிதன் போகிறான்
ஆடு போகிறது
மாடு வருகிறது

போகிருள் என்பதில் போ-வை வினையடியாக எடுத்துக் கொண்டோம். மிஞ்சி இருப்பது-கிருள் என்பதாகும். இதை-கிறான் என்பதோடு ஒப்பிட-ஆன் மற்றும்-ஆள் விகுதிகள் பாலைக் குறிக்கின்றன என்ற முடிவுக்கு வருகிறோம். எஞ்சி இருப்பது-கிறு-என்ற சாரியைச் சொல்லியன். இவ்வாக்கியங்களில் எஞ்சி நிற்கும் பொருளும் நிகழ்காலம் என்பது ஆகும். எனவே -கிறு-என்பதை நிகழ்காலச் சாரியைச் சொல்லியன் என்போம். இல்வாறு தமிழிலே வினை காலம் காட்டுகிறது; வினையைச் செய்வாரின் பால், இடம், எண்ணும் காட்டுகிறது.

ஆங்கிலத்தில் நிலைமை என்ன? இன்றைய ஆங்கில வினையில் இடமும், எண்ணும் பாலும் பேரளவில் பயன்படவில்லை என்றே சொல்லவேண்டும்.

I go

We go

They go என்ற, வாக்கியக் கோவையில் goஎன்ற வினையே தன்மையில் ஒருமை பன்மையையும், படர்க்கையில் பலர்பாலையும் குறிக்கிறது. ஆனால் மூவிடத்துப் பெயர்கள் ஆங்கிலத்தில் பெயர்ச்சொல் தொடராக வருகின்றன. அதனால் நமக்கு வேண்டிய செய்திகள் இடம் பெற்றுவிடுகின்றன. தமிழிலே நான் வருகிறேன், நீ வருகிறாய், என்று மூவிடத்துப் பெயர்களைக் கொண்டும் நாம் வாக்கியங்கள் சொல்லலாம். அதற்கு மேல் இயல்பாக வருகிறேன், வருகிறாய் என்று மூவிடத்துப் பெயர்களைப் பெயர்ச்சொல் தொடராக கொள்ளாமலும் வாக்கியம் ஏற்பட முடியும். ஆனால் இன்றைய தமிழில் வழங்கும் பின் கண்ட இரு வாக்கியங்களைப் பாருங்கள்:-

நாம் வருகிறோம்

நாங்கள் வருகிறோம்

இவ்வாக்கியங்களைச் சுருக்கி வருகிறோம் என்று மட்டும் பயன்படுத்தினால் பொருள் மயக்கமே ஏற்படும். முதல் வாக்கியம் பேசுபவரையும் யாரிடம் பேசுகிறார்களோ அவரையும் சேர்த்துக் கூட்டு மொத்தமாகப் பொருள் தருகிறது. ஆனால் இரண்டாவது வாக்கியமோ நாங்கள் மட்டும் வருகிறோம், நீ / நீர் / நீங்கள் வரவில்லை என்று யாரிடம் பேசுகிறார்களோ அவரை விலக்கியே சொல்கிறது. அதனால் வருகிறோம் என்று மட்டும் சொன்னால் மேற்கண்ட இரு பொருளில் எதைச்

சொல்கிறேம் என்பது தெளிவில்லை. பேசப்படும் சூழ் நிலையின் இயல்பையே பொருள் தெளிவுக்கு நாம் நம்பியிருக்க வேண்டி இருக்கும்.

தாடோ மொழியில் வினைச்சொல் காலம் காட்டு கின்றது; எண்ணைக் குறிக்கின்றது; செய்வோரின் இடத்தைக் குறிக்கின்றது, ஆனால் இச் சொல்லியன் அமையும் இடங்கள் ஓரளவு வேற்றுமைப் பட்டன என்றே சொல்ல வேண்டும்.

keima:	kasune	I write	நான் எழுதுகிறேன்
keiho:	kasunuve	we write	நாம் எழுதுகிறேம்
naima:	nasune	you (sg) write	நீ எழுதுகிறாய்
naiho:	nasunuve	you (pl) write	நீங்கள் எழுதுகிறீர்கள்
ama:	asune	He/she/it writes	அவன்/அவள்/அது எழுதுகிறான்/ள்,/றது
ama:ho:	asunuve	They write	அவர்கள்/அவை எழுது - கிறார்கள்/ கின்றன.

மேற்கண்ட வாக்கியங்களில் உள்ள வினைத்தொடர் களைப் பாருங்கள். அவற்றில் நிரந்தரமாய் இருக்கும் பொருள் என்ன? 'எழுது' என்ற பொருள் அல்லவா? இவற்றில் நிரந்தரமாய் இருக்கும் சொல்லியன் என்ன? /sun/ என்பது தானே? sun என்னும் சொல்லியன் தாடோ மொழியில் 'எழுது' என்னும் பொருள் தரும் வினையடியாக இருக்கிறது. இடத்தைக் காட்டுகின்ற-தன்மையா, முன்னிலையா, படர்க்கையா என்று

காட்டுகிற சொல்லியன்கள் ka– என்பதும் na– என்பதும் a– என்பதும் ஆகும். அவை முறையே தன்மையையும், முன்னிலையையும், படர்க்கையையும் காட்டுகின்றன. இவை வினையடிக்கு முன்பாகச் சேர்க்கப்படுகின்றன. ஆனல் தமிழிலோ, பால் இடம் காட்டும் சொல்லியன்கள் வினையடிக்குப் பின்னலேயே சேர்க்கப்படுகின்றன. மேலும் இன்னென்றையும் கவனியுங்கள். தாடோ மொழியில் நிகழ்காலத்தைக் காட்டுவதற்கென்று சொல்லியன்கள் ஏதும் சேர்க்கப் படவில்லை. ka– என்பது தன்மையைக் காட்டும் சொல்லியன் என்றும். –sun– என்பது வினையடி என்றும். –e என்பதை ஒருமை காட்டும் சொல்லியன் என்று தற்காலிகமாகக் கொண்டு –uve என்பதைப் பன்மை காட்டும் சொல்லியன் எனக் கொள்ளலாம். அப்படி என்றல்

keima:	kasune	நான் எழுதுகிறேன்
keiho:	kasunuve	நாம் எழுதுகிறோம்

என்ற வாக்கியங்களில் நிகழ்காலச் சொல்லியன் எங்கே போயிற்று? தாடோ மொழியில் நிகழ்காலத் திற்கு என்று தனியாகச் சொல்லியன்கள் குறிக்கப் படுவது இல்லை. அவை ஏதும் இல்லாமலே நிகழ்காலம் குறிக்கப்படுகிறது. ஆனல் இறந்தகாலமும் எதிர் காலமும் அவற்றிற்கென்று தனித்தனிச் சொல்லியன் களைக் கொண்டிருக்கின்றன என்றே சொல்ல வேண்டும்.

மேற்கண்ட விளக்கம் உங்களுக்கு என்ன சொல்லு கிறது? வினைச்சொல்லின் அமைப்புக்கள் மொழிக்கு மொழி மாறுபடலாம். இவ்வாறு மாறுபாடுகள் இருப்ப தால் ஒரு மொழியின் அமைப்பே இன்னொரு மொழியில் இருக்கும் என்று பிடிவாதமாக நினைக்கக் கூடாது. ஒரு மொழியை விவரிக்க வேண்டுமானால் அம் மொழி யின் இயல்புக்குத் தக்கவாறே நாம் விவரிக்க வேண் டும். நமக்குத் தெரிந்த மொழிகளைப்பற்றிய அறிவு இதற்குப் பயன்படுவதில் தவறு இல்லை. ஆனால் நமக்குத் தெரிந்ததே உண்மை என்று நினைக்கக் கூடாது. இன்னொன்று, மொழிகளுக்குள் அமைப்பிலே உயர்வு தாழ்வு ஏதும் இல்லை. அவரவர் மொழிகளின் அமைப்பு அம்மொழிகளைப் பேசுபவர்களுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் இயல்பாகவே ஏற்பட்டுவிடுகிறது. இவ்வுண்மைகளை மனதிலே கொள்ளாவிட்டால் மொழி யாராய்ச்சியால் ஏதும் பயனில்லை.

துணை வினைச் சொற்களும் சில மொழிகளில் இருக் கின்றன. இச் சொற்கள் பல்வேறுபட்ட கால நிலை களைக் காட்டப் பயன்படலாம். ஆங்கிலத்தில் பயன் படும் shall, will, have, do, be, may, can, must. ought என்பவை துணை வினைச் சொற்களே ஆகும். இவை எவ்வாறு காலங்களைக் காட்டப் பயன்படுகின்றன என் பதைப் பின்கண்ட எடுத்துக்காட்டுக்களில் பாருங்கள்:

நிகழ்வு	I walk
இறப்பு	I walked
எதிர்வு	I shall walk

நிகழ் முடிவு	I have walked
இறப்பு முடிவு	I had walked
எதிர் முடிவு	I shall have walked

இவை செயப்பாட்டு வினைக்கும் பயன்படுகின்றன. I have been cheated; you have been found இதற்கு எடுத்துக்காட்டு.

சில மொழிகளிலே இணைக்கும் வினையென்னும் வினைச்சொல் உண்டு. தமிழிலே நான் ஆண்மகன் என்று இரு பெயர்ச்சொல் தொடர்களாலேயே வாக்கியம் அமைத்து விடுகிறோம். ஆனால் ஆங்கிலத்தில் இதே வாக்கியத்திற்கு – இரு தொடர்களுக்கு இடையிலே ஓர் இணைக்கும் வினைச்சொல் பின்வருமாறு தேவைப்படும்:

I am a man
I am a boy

மேற்சொன்னவை வினையின் சில இயல்புகளே ஆகும். இவற்றிற்கும் மேலே செய்வினையா, செயப்பாட்டு வினையா என்பதும், காரண வினையா என்பதும் குறிப்பு வினையா ஏவல் வினையா என்பதும் போன்ற நிறைய வேறுபாடுகள் உண்டு. அவை தமிழிலே முன்பு வழங்கிய வகையை நம் பழம்பெரும் இலக்கண நூல்களில் கண்டு மகிழுங்கள். இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிடுதல் அவசியம. வினைகளைப் பல்வேறு வகையாகப் பிரித்து ஆராய்வதில் மிகுந்த கவனம் வேண்டும். இலக்கணத்தில் வினைச்சொல் பெறும் பங்கு

பெரிது என்பதை முன்பே பார்த்தோம். மேலும் வினைச்சொல்லே பல மொழிகளில் ஆராய்வதற்குக் கடினமாக இருக்கிறது. ஆற அமரச் சிந்தித்து மொழியின் இயல்பைப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு வினைச்சொற்களைப் பிரிக்க வேண்டும். இதுவரை இங்கு சொன்ன வகையில் இருந்து மொழிகளில் பயன்படும் வினைகள் பல விதங்களில் வேறுபட்டு நிற்கலாம். அவற்றை நாம் ஆராயும்போது திறந்த மனதுடன் ஆராய வேண்டும் என்பது தெரியவரும்.

இனி, பெயரடையின் இயல்புகளைச் சிறிதளவு காணலாம். ஒரு பெயர்ச்சொல்லுக்கோ முழுவிடப் பெயருக்கோ அடையாக வரும் சொல்லைப் பெயரடை என்று சொல்கின்றனர் மொழி நூலார்.

அழகான பெண் என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். இதில் பெண் என்பதைப் பெயர்ச்சொல் என்று அறிவோம். இப் பெயர்ச்சொல்லுக்கு அடையாக, அப் பெயர்ச்சொல்லின் குணத்தை ஏற்றவோ இறக்கவோ, காட்டவோ, விளக்கவோ ஏற்றவாறு அடையாக 'அழகான' என்ற சொல் பயன்படுகிறது. எனவே 'அழகான' என்றது பெயரடைச்சொல் என்போம்.

தனிச்சொல் மட்டுமே பெயரடையாக வரவேண்டும் என்றில்லை. தமிழிலே எண்ணிறந்த பெயரடைகள் ஒன்றையடுத்து ஒன்று வர முடியும். அழகான, அற்புதமான, கருவிழிக்கண் கன்னி என்பதில் கன்னி என்பது பெயர்ச்சொல், கருவிழிக்கண் என்பது

இணைச்சொல், அற்புதமான, அழகான என்பவை பெரடைகள். கன்னி என்பது தவிர மற்றனைத்தும் பெயரடை இயல்புகள் தாங்கியே இவ்வாக்கியத்தில் வந்திருக்கின்றன என்பதைப் பாருங்கள். இதில் இருந்து பெயர்ச்சொல்லேகூடப் பெயரடையாக வருவதுண்டு என்பது தெரிகிறதல்லவா?

தமிழிலே பெயரடைகள் பெயர்ச்சொல்லுக்கு முன் பாகவே வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட எடுத் துக்காட்டுக்களில் பெயரடைகள் அவை அடைவு செய்யும் பெயர்ச்சொல்லுக்கு முன்பாகவே வந்துவிடு வதைப் பாருங்கள். ஆங்கில மொழியிலும் பொதுவாக இந்நிலையே இருக்கிறது எனலாம்.

Beautiful girl என்பதில் beautiful என்ற பெயரடை பெயர்ச்சொல்லுக்கு முன்பே வருகிறது. ஆனால் *A girl, beautiful and attractive walked in the street* என்ற வாக்கியத்தில் beautiful, attractive என்ற பெயரடைகள் பெயர்சொல்லுக்குப் பின்னரே வருகின்றன. இவ்வாறு வருவதை எதிர்ப்பெயரடைவு அல்லது பின்பெயரடைவு என்று நாம் சொல்லலாம்.

தாடோ மொழியில் பெயரடைவுகள் பெயர்ச் சொல்லுக்குப் பின்னாலே வரும் தன்மை உடையன. பெரிய மனிதன் என்பதை மனிதன் பெரிய என்ற வரிசையில் சொல்கிறார்கள். எடுத்துக்காட்டாகப் பின் வருபவற்றைக் கவனியுங்கள் :

mi:	ali:n	மனிதன் பெரிய 'பெரிய மனிதன்'
mi:	xat	மனிதன் ஒரு 'ஒரு மனிதன்'

ஒரு மொழியில் பெயரடைகள் என்பதை உருவத் தோற்றத்தால் மட்டும் நிர்ணயிக்க முடியாது. பெயர்ச் சொல் பெயரடையாக வருவதை மேலே கண்டோம். போகிற மனிதன் என்பதில் போகிற என்ற வினை யமைப்புப் பெயரடையாகப் பயன்படுகிறது. இவ்வாறு வேறு இலக்கணப் பிரிவுகளும் பெயரடையாகப் பயன் படலாம். அதாவது சொல்லியன்கள் பயன்படும் முறைமை கருதியே அவற்றைப் பெயரடைகளா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டும். இவ்விதி மற்ற இலக்கணப் பிரிவுகளுக் கண்டுகொள்ளவும் பயன்பட வேண்டும்.

பெயரடைகள் பயனிலைத் தொடருக்குப் பெயரடை யாக வர முடியும்; செய்வான் தொடருக்கும் பெயரடை யாக வரலாம்; செயப்படு பொருளுக்கும் பெயரடை யாக வரலாம். இவற்றை விளக்குகிற பின் கண்ட ஆங்கில வாக்கியங்களைப் பாருங்கள்:

He seemed very *angry* (predicative adjective)

His money proved inadequate (subjective complement)

We found the money inadequate (objective complement)

- -வினையடை என்றால் என்ன? இது சிரமமான கேள்வி. பொதுவாக வினைச்சொல்லை அடைவு செய் யும் சொல்லை வினையடைச்சொல் என்று சொல்லலாம். பின்கண்ட வாக்கியங்களைக் கவனியுங்கள்:

இளங்கோ வேகமாகப் போனான்

இளங்கோ ஏரிக்கரைப் பக்கமாகப் போனான் இவ்விரண்டு வாக்கியங்களிலும் 'வேகமாக' என்பதும் 'ஏரிக்கரைப் பக்கமாக' என்பதும் 'போனான்' என்ற வினைச்சொல்லை அடைவு செய்கின்றன என்பதைக் கவனியுங்கள். இதனால் இவ்விரண்டு சொற்களையும் வினையடை என்று சொல்லலாம்

வினையடைகளின் வகைகள் மிகப்பல ஆகும். ஏன், எதற்கு, எப்போது, என்பவையும் வினையடைகளே என்று மொழிநூலார் சொல்வார்கள். எங்கே என்பதும் எப்படி என்பதும் இவற்றைச் சேர்ந்தவையே. அவ்வாறு, அவ்விதம் என்பனவும் வினையடைகளே என்று சொல்ல வேண்டும். ஆனால், அதனால் என்பனவும் இவற்றிலே அடங்கும். தமிழிலே வினையடைகள் பற்றி இலக்கண நூல்களில் பாருங்கள்.

ஆங்கிலத்தில் The book is on the table என்ற வாக்கியத்தில் on 'மேல்' என்ற சொல் அது குறிக்கிற table 'மேசை' என்ற பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வருகிறது. 'on' என்பது இவ்விடத்தில் மேசைக்கு முன்னால் வந்து அதே வாக்கியத்தில் வருகிற 'the book' என்கிற பொருளைச் சம்பந்தப்படுத்துகிறது. இவ்வாறு பயன்படும் சொல்லியன்களை முன்வரும் இடப்பெயர் என்று சொல்லலாம். தமிழிலே இந்த இடப்பெயர் பெயர்ச்சொல்லுக்குப் பின்பாகவே வருகிறது. 'புத்தகம் மேசை மேல் இருக்கிறது.' என்ற வாக்கியத்தைப் பாருங்கள். இவ்வாக்கியத்தில் மேல் என்ற இடப்

பெயர் மேசை என்ற பெயர்ச்சொல்லுக்குப் பிறகு வந்து புத்தகம் என்றதோடு அதைத் தொடர்பு செய்கிறது. இவ்வாறு பெயர்ச்சொல்லுக்குப் பின்னால் வருவதைப் பின்வரும் இடப்பெயர் என்று சொல்லலாம்.

தமிழிலே அவனும் நானும் போனோம் என்பதில் 'உம்' என்ற சாரியைச் சொல்லியன் அவன் என்னும் சொல்லையும் நான் என்னும் சொல்லையும் சேர்க்கப் பயன்படுகிறது அல்லவா? இச் சாரியை அல்லது சாரியைகளை நாம் சேர்க்கைச் சாரியை என்று சொல்லலாம் தமிழிலே 'மற்று' என்ற சொல்லும் சேர்க்கைச் சாரியை யாகவே பயன்படுகிறது. 'உம்' என்ற சாரியை சேர்க்கப்படுகின்ற எல்லாச் சொற்களிலும் கடைசியில் வரும்போது தெளிவான சேர்க்கைப் பொருள் ஏற்படுகிறது.

நீயும் நானும் வள்ளியும் மேகலையும் போகலாம். இதில் பயன்படும் எல்லாப் பெயர்ச்சொற்களும்-உம் என்ற சாரியை பெறுகின்றன. அப்படிப் பெறுவிட்டால் அது இயல்பான தமிழ் வாக்கியம் இல்லை என்பதை உணருகிறோம்.

ஆனால் 'நீ, நான், வள்ளி, மேகலை, மற்று தங்கம் போகலாம்' என்ற வாக்கியத்தில்-உம் சாரியை ஏதும் இல்லாமல் கடைசிச் சொல்லுக்கு முன்பாக 'மற்று' என்னும் சொல்வரச் சேர்க்கைப் பொருளை உணருகிறோம். இதை மேலும் இயல்பானதாக்க 'நீ, நான், வள்ளி, மேகலை மற்றுத் தங்கம் எல்லாரும் போகலாம்' என்று 'எல்லாரும்' என்ற தொடரைச் சேர்க்க

வேண்டும். இப்போது 'எல்லார்' என்று சொல்லப் பட்ட அனைவரையும் சேர்க்கிற ஒரு சொல்லும்,-உம் என்ற சேர்க்கைச் சாரியையும் வந்து அமைகின்றன.

இனி, கடைசியாக, உணர்ச்சி வெளிப்பாடுகளைக் காணலாம். மெய்ப்பாட்டியல் உணர்ச்சி வெளிப்பாடு களைப் பற்றித் தமிழிலே ஆராய்கின்றது. உணர்ச்சி களை வெளியிடும் சொற்களை இலக்கணப் பிரிவாகக் கொள்ள வேண்டுமா என்று சிலர் விவாதிப்பதுண்டு. முதலில் அந்தோ, ஐயோ, ஓ, ஆ, சீ, சீசீ, சே, சேசே என்ற பல சொற்கள் உணர்ச்சிகளை மட்டுமே வெளிக் காட்டப் பயன்படுகின்றன. இச் சொற்களைச் சிறப் பாக எந்த இலக்கணப் பிரிவிலும் அடக்கிவிட முடி யாது. இரண்டாவது அட கடவுளே, அட ராமா, சீ மூதேவி போன்ற பல சொற்கள் வேறுபல இலக்கணப் பிரிவைச் சேர்ந்த சொற்கள்தான். கடவுள், ராமன், மூதேவி என்பவற்றைப் பெயர்ச்சொல் பிரிவில் அடக்க முடியும் அல்லவா? ஆனால் மேலே கொடுத்துள்ள வாக்கியங்களில் அவை பொதுவாகப் பேசுபவரின் உணர்ச்சியைக் காட்டுகின்றன என்றே சொல்ல வேண்டும். இவ்வுணர்ச்சி வெளிப்பாட்டைக்காட்ட நாம் ஓர் இலக்கணப்பிரிவு தனியே ஏற்படுத்துவதில் தவறில்லை. அவை பயன்படும் பொருளை விளக்க மிகவும் உதவும். இதுவரை இலக்கணப் பிரிவுகள் என்ற தலைப்பிலே பெயர்ச்சொல்லின் இயல்புகளைப் பற்றியும் அவை மூவிடப்பெயராக வருதல், பன்மை விகுதி பெறுதல், பால் விகுதி பெறுதல், மற்றும் வேற்றுமை உருபு ஏற்றல் அதன் பண்பு என்றும்

ஆராய்ந்தோம். அதையடுத்து வினைச்சொல்லின் இயல்புகளையும், அவை காலம் காட்டுதல், பால் காட்டுதல், எண் காட்டுதல் என்பவை பற்றியும் கண்டோம். அவற்றையடுத்துப் பெயரடைகளின் இயல்புகளையும், வினையடைகளின் இயல்புகளையும் அறிந்தோம். மேலும் இடப்பெயர்களின் இயல்புகளையும் சேர்க்கைப் பொருள் தரும் சாரியைகளின் இயல்பையும் கண்டோம். கடைசியாக உணர்ச்சி வெளிப்பாடுகளைக் கூறும் இலக்கணப் பிரிவையும் சுருக்கமாகக் கண்டோம்.

கடைசியாகப் பல எச்சரிக்கைகள் இங்கே தேவைப்படுகின்றன. முதலில் எல்லா மொழிகளிலும் மேற்கண்ட இலக்கணப் பிரிவுகளே பயன்படும் என்று கருதிவிடக் கூடாது. இலக்கணப் பிரிவுகள் கூடியோ குறைந்தோ இருக்கலாம். இரண்டாவது, எல்லா மொழிகளிலும் இலக்கணப் பிரிவுகளும் ஒரே இயல்பைக் கொண்டிருக்கும் என்று நினைத்துவிடக் கூடாது. தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் வினையமைப்பில் இருக்கும் வேற்றுமைகளையும் தமிழுக்கும் தாடோவுக்கும் இடையிலே வினையமைப்பில் இருக்கும் வேற்றுமைகளையும் முன்பே கண்டோம். ஒரு மொழியின் இலக்கணப் பிரிவுகளின் இயல்பை அம்மொழியின் இயல்புப் படியே விவரிக்க வேண்டும். நமக்குத் தெரிந்த மொழிகளின் இயல்பை அம்மொழிமேல் திணிக்கக் கூடாது. மூன்றாவது, இலக்கணப்பிரிவுகள் வந்து வழங்குகின்ற வரிசை மொழிக்கு மொழி மாறுபடலாம். எடுத்துக்காட்டாகத் தாடோ மொழியில் மூவிடம்

காட்டும் சாரியைச் சொல்லியன் விகுயடிக்கு முன் னுல் வருவதையும் தமிழிலே மூவிடம், (பால்) காட்டும் சொல்லியன்கள் விகுக்கும் பின்னுல் வருவதையும் மனதிலே கொள்ளுங்கள். பொதுவாகவே ஒரு மொழியை விவரிக்க பிறமொழி அறிவு எவ்வளவோ தேவைப்பட்டாலும், உதவி செய்தாலும் நாம் விவரிக்க இருக்கிற மொழியறிவே அடிப்படையாக இருக்க வேண்டும். மனித மொழிகளைப் பற்றிய அறிவு பொது அறிவு. அப் பொது அறிவின் அடிப்படையில் நாம் விவரிக்க இருக்கிற மொழியின் சிறப்பு இயல்பு களை உணர்ந்து கொண்டு அம்மொழியின் இயல்புக்கு ஏற்றபடி அதன் அமைப்பை விளக்க வேண்டும்.

5. சொற்றொடர் இயல்

நாம் முதலில் இலக்கண உறுப்பை இரண்டாகப் பிரித்துக் கொண்டோம். சொல்லியலில் சொல்லியன்களையும் அவை வந்து வழங்குகின்ற தன்மைகளையும் சொற்கள் உண்டாகும் தன்மைகளையும் ஆராய்கிறார்கள் என்றோம். சொற்றொடர் இயலில் சொற்களும் சொற்றொடர்களும் ஒன்றையடுத்து ஒன்று தொடர்ந்து வந்து வாக்கிய உறுப்புக்களாகவும் வாக்கியங்களாகவும் வந்து வழங்குகின்ற தன்மைகளை ஆராய்கிறார்கள் என்றோம். மேற்போக்காகப் பார்த்தால் இவ்வாறு பிரித்துக் கொள்வதில் தெளிவு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் உண்மையில் இரண்டு பிரிவுகளும் ஒன்றுக்கொன்று நெருக்கமானவை ஆகும். நாம் முன்பு சொற்றொடர் இயலில் இலக்கணப் பிரிவுகளைப் பார்த்தோம் அல்லவா? இவ்விலக்கணப் பிரிவுகளை நிர்ணயிக்க சொற்றொடர் இயலே பெரும் துணை செய்கிறது என்று சொல்ல வேண்டும். அழகு ஆடவன் என்ற தொடரைப் பாருங்கள். அழகு என்ற சொல்

தனித்து வழங்கினால் நுண்பொருள் குறிக்கும் பெயர்ச் சொல் என்பதையும் ஆடவன் என்பது ஆண்பால் குறிக்கும் பெயர்ச்சொல் என்பதையும் அறிவோம். ஆனால் அழகு ஆடவன் என்ற தொடரிலோ அழகு என்றது ஆடவன் என்ற பெயருக்கு அடைவு செய்யப் பயன்படுகிறது. ஆடவன் என்ற சொல்லைத் தழுவி நிற்கிறது. இவ்விடத்தில் அழகு என்ற பெயர்ச்சொல் பெயரடையாகப் பயன்படுகிறது. இது பெயரடை யாகப் பயன்படுகிறது என்பதைத் தீர்மானம் செய்ய நமக்குச் சொற்றொடர் இயல் அறிவே துணை செய்கிறது என்று சொல்ல வேண்டும்.

மேலே சொல்லியலில் சொல்லியன் உருவங்களை யும் அவை அடையும் மாற்றங்களையும் காண்பதோடு நின்றுவிடக்கூடாது என்பதைப் பார்த்தோம். சொற் கள் இயல்பாகவே, சொற்றொடர் இயலின் துணை இல்லாமலேயே எவ்வளவு செய்திகளை நமக்குச் சொல் கின்றன என்பதைப் பால், எண் முதலிய இலக்க ணப் பிரிவுகளால் உணர்ந்தோம். அதைப் பின் பற்றியே ஏழு அல்லது எட்டு வகை இலக்கணப் பிரிவு களின் இயல்புகளைச் சொல்லியலிலேயே கண்டோம். ஆனால் சொற்கள் ஒன்று சேர்ந்து வருகின்றபோது அவை என்ன தன்மையில் என்ன இலக்கணப் பிரி வாகப் பயன்படுகின்றன என்பதைச் சொற்றொடர் இயலே நமக்குச் சொல்ல முடியும்.

சொற்றொடர் இயலில் நாம் வாக்கியங்களின் உறுப்புக்களையும் அவை வந்து வழங்குகின்ற வரிசை

களையும், முறைமைகளையும் இயல்புகளையும் ஆராய்கிறோம் என்று சொல்லலாம் வாக்கியத்தை முதலில் தொடராகப் பிரித்துக்கொள்வது இங்கு பெரும்பாலான வழக்கம் என்றும் சொல்லலாம். இலக்கணப் பிரிவுகளுக்கு ஏற்ற தொடர்கள் இருக்கின்றன. பெயர்ச் சொல் தொடர் என்றும் வினைச்சொல் தொடர் என்றும், பெயரடைத் தொடர் என்றும் வினையடைத் தொடர் என்றும் பலவாறு தொடர்களைப் பிரித்துக் கொள்ள முடியும். இவற்றுள் பெயர்ச்சொல் தொடரும் வினைச்சொல் தொடரும் பொதுவாகப் பெரிய தொடர்கள் ஆகும். இவ்விரு தொடர்களின் உள்ளுறுப்பாகவே பெயரடை மற்றும் வினையடைத் தொடர்கள் போன்றவை இயங்குகின்றன என்று சொல்லலாம்.

தொடர்கள் அமைப்பதில் மொழிகளுக்குள் வேற்றுமை உண்டு. தமிழிலே வழங்கும் பெயர்ச்சொல் தொடரைப் பாருங்கள். *'சிங்கமும் புலியும் கரடியும் வாழ்கிற'* என்பது காடு என்ற பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்பதாக அச்சொல்லுக்கு முன்பே வந்து விடுகிறது. ஆனால் தாடோ மொழியில் தலைமை பெறுகின்ற பெயர்ச்சொல் முதலிலும் அப் பெயர்ச்சொல்லைத் தழுவுகின்ற அடைகள் அவற்றிற்குப் பின்னுமே வந்து நிற்கின்றன. மேற்கண்ட பெயர்ச்சொல் வரிசையில் உள்ள வேற்றுமைகள் போலவே பிற தொடர்களிலும் ஒரு மொழி இன்னொரு மொழியில் இருந்து வேறு படலாம்.

தொடர்களின் உள்ளுறுப்புக்கள் அத் தொடருக்குள் எவ்வாறு ஒன்றையடுத்து ஒன்று நிற்கின்றன

என்பதோடு நம் ஆராய்ச்சி நின்றுவிடக் கூடாது. தொடர்புகளின் உள்ளுறுப்புக்கள் அமைகின்ற வரிசையை நாம் கவனித்த பிறகு அத்தொடர்கள் ஒரு வாக்கியத்தில் ஒன்றையடுத்து ஒன்றுக எப்படி அமைந்து வழங்குகின்றன என்பதையும் நாம் விளக்க வேண்டும்.

கண்ணன் வந்தான் என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். சொல்லியல் அடிப்படையில் 'கண்ணன்' என்பது பெயர்ச்சொல் என்றும் 'வந்தான்' என்பது வினைச்சொல் என்றும் அறிவோம். இவ்விரண்டும் ஒரு வாக்கியமாகப் பயன்படுகிற விதத்தை நாம் இப்போது விளக்க வேண்டும். கண்ணன் என்பது பெயர்ச்சொல் தொடராகும். பெயர்ச் சொல்லைத் தலைமையாகக் (head) கொண்டிருக்கிற தொடரைப் பெயர்ச்சொல் தொடர் என்று சொல்லலாம். வந்தான் என்பது சொற்றொடர் இயலில் வினைத் தொடர் ஆகிறது. வினைசசொல்லைத் தலைமையாகக் கொண்டிருக்கிற தொடரைப் பொதுவாக வினைச்சொல் தொடர் என்று சொல்லலாம். இவ்விரண்டு தொடர்களும் ஒன்றையடுத்து ஒன்று நிற்க நமக்குக் கண்ணன் வந்தான் என்ற வாக்கியம் கிடைக்கிறது.

கண்ணன் வந்தான் என்ற வாக்கியம் சிறிய வாக்கியம். இச்சிறிய வாக்கியத்தைப் பலவகைகளில் பெரிய வாக்கியமாக ஆக்க முடியும். முதலில் பெயர்ச் சொல் தொடரில் இருக்கும் பெயர்ச்சொல்லுக்கு ஒரு பெயரடை 'அழகான' என்பதைக் கொடுப்போம். இப்போது, அழகான கண்ணன் வந்தான் என்ற வாக்கியம்

நமக்குக் கிடைக்கிறது. இவ்வாக்கியத்தில் அழகான என்ற பெயரடை கண்ணன் என்ற பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்கிறது அல்லவா? இப்போது பெயர்ச்சொல் தொடரின் அமைப்பு என்ன? முதலில் பெயரடையும் அதற்குப்பிறகு பெயர்ச்சொல்லும் இருக்கின்றன. இவை இரண்டும் ஒரு தொடராக மாறி வாக்கியத்தில் இருக்கும் வினைத்தொடரோடு சேர்ந்து பொருள் தருகின்றன. 'அழகான' என்ற அடை வினையைக் குறிக்கவில்லை; இங்கு பெயரையே தழுவுகிறது. இவ்வாறு இரு சொற்கள் ஒன்றையடுத்து ஒன்று நிற்கும் முறையை அடுத்து நிற்பவை என்று சொல்ல வேண்டும்.

அடுத்து நிற்பவை என்ற கருத்தை IC என்று ஆங்கிலத்தில் சுருக்கமாகச் சொல்வார்கள். தமிழிலே அ. நி என்று நாம் சுருக்கமாக எழுதலாம்.

அடுத்து நிற்பவை என்ற கருத்து சொற்றொடர் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது. சொற்கள் ஒன்றை ஒன்று அடுத்து நிற்பதை நாம் புரிந்துகொண்டால் வாக்கியத்தில் பயன்படும் சொற்களைப் பல அடுத்துநிற்கும் தொடர்களாகப் பிரித்து விடலாம். மேலும் இவ்வாறு அடுத்து நிற்கும் தொடர்களைப் பெயர்ச்சொல் தொடர் என்றும் வினைச்சொல் தொடர் என்றும், பெயரடைத் தொடர் என்றும் பல வாறு இனங்கண்டுகொண்டு அவற்றின் அடிப்படையில் வாக்கியத்தின் உறுப்புக்களுக்கு விளக்கம் தரலாம்.

சொற்றொடர் இயலில் எச்சொல் எச்சொல்லை அடுத்து நிற்கிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிந்துகொள்ள நாம் பல நேரங்களில் வாக்கியத்தில் பயன்படும் சொல்லியன்களுடைய பொருளையும் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. *King of England's daughter* என்ற தொடரைப் பாருங்கள். இதில் உரிமையைக் காட்டக் கூடிய சொல்லியன் —S இங்கிலாந்து என்ற சொல்லை யடுத்து உருவில் இருக்கிறது. ஆனால் இதன் பொருளே இங்கிலாந்து அரசனின் மகள் என்பதுதானே. இவ் விடத்தில் பொருட்தெளிவால் —S என்ற சொல் லியன் இங்கிலாந்து அரசன் என்ற முழுத்தொட ரையும் அடுத்து நிற்பதாக நாம் அறிகிறோம். மற்ற நேரங்களில் தொடர்களுடைய ஒலிப்பு முறையால் இசை, அழுத்தம் என்பவற்றால், அடுத்து நிற்ப வைகளை அடையாளம் கண்டு கொள்ள முடியும். அவள் பெண் வீட்டுக்குப் போகிறாள் என்ற வாக்கி யத்தில் இருவகையான அடுத்து நிற்பவை இருக்கின் றன. இவ்விருவகையை நாம் பேசும் சூழ்நிலை தெளி வாக்கலாம்; அல்லது நாம் பேசும்போது இடம் விட்டுப் பேசுகிற ஒலிப்பு முறையாலும் தெளிவாக்க லாம். அவள்பெண் என்று அவளுக்கும் பெண் ணுக்கும் இடையே நேரம் விடாது ஒன்றுகச் சொல் லும் போது அவளுடைய பெண் வீட்டிற்குப் போகி றாள் என்ற பொருள் கிடைக்கிறது. இடையே நேரம் விட்டுப் பேசும் போது அவள் (தன்னுடைய) பெண் வீட்டிற்குப் போகிறாள் என்ற பொருள் கிடைக்கிறது. ஆனால் இவ்விரண்டும் போக இன்னுமொரு மிக

முக்கிய முறை இருக்கிறது. அதைப் பின்னல் பாருங்கள்.

இனி அடுத்து நிற்பவைகளைக் கோடிட்டுக் காண முயலுவோம். இவ்வாறு கோடிட்டுக் காண்பது சட்டென்று ஒரு சொற்றொடருக்கும் இன்னொரு சொற்றொடருக்கும் இடையே உள்ள உறவை வெளியாக்கும். ஒரு சொல் தொடருக்குள்ளே இன்னொரு சொல் தொடர் வருவது இயல்பு. அவ்வாறு ஒன்றுக்குள் ஒன்று அடங்கி இருப்பதையும் கோடிட்டுக் காட்டுகிற முறையால் நாம் தெளிவாக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக வாக்கியத்தில் ஏற்படும் பொருட் குழப்பத்தை அடையாளம் கண்டு கொண்டு அதற்குரிய காரணத்தைக் கண்டு பிடிக்கவும் கோடிட்ட முறை பயன்படுகிறது.

கண்ணன் வந்தான் என்பது வாக்கியம். இதில் கண்ணன் என்ற சொல் வந்தான் என்பதோடு அடுத்து நின்று கண்ணன் வந்தான் என்ற வாக்கியத்தைத் தருகிறது. இனி அழகான கண்ணன் வந்தான் என்பதில் அழகான என்பது கண்ணனையே அடுத்து நிற்கிறது:—



இந்த அழகான கண்ணன் என்ற தொடர் முழுமையாக வந்தான் என்பதை அடுத்து நிற்கிறது.



இனி அழகான கண்ணன் வேகமாக வந்தான் என் பதில் வேகமாக என்பது வந்தான் என்பதை அடுத்து நிற்கும் வினையடைத் தொடர் ஆகும். ஆகவே வேக மாக வந்தான் என்ற முழுமையான தொடர் இப்போது இருக்கிறது. இது அழகான கண்ணன் என்ற தொடரை முழுமையாக அடுத்து நிற்கிறது. இப்போது:-



அதாவது நாம் ஒரு தொடரில் உள்ள உறுப்புகளுக்கு இடையில் இருக்கும் அடுத்து நிற்கும் உறவையும், பிறகு அத்தொடர் முழுமையாக இயங்கிப்பிற முழுமையான தொடரொடு கொள்கிற அடுத்து நிற்கும் உறவையும் விளக்குகிறோம்; சிறு தொடரின் உறுப்புக் களில் இருந்து பெருந்தொடரின் உறவுவரை விளக்கு கிறோம்.

இவ்வுறவுகளை இன்னுமொரு முறையாலும் பின் வருமாறு விளக்கலாம். முதலில் வாக்கியம் என்பதை எழுதிக் கொள்வோம்.

கண்ணன் வந்தான்



இதில் கண்ணன் என்பது பெயர்ச்சொல்தொடர். வந்தான் என்பது வினைச்சொல் தொடர் ஆகும். எனவே



என்பது கிடைக்கிறது. இப்போது அழகான கண்ணன் வந்தான் என்பதைப் பாருங்கள்.



அழகான கண்ணன் என்பது பெயர்ச்சொல் தொடர். இதில் அழகான என்பது பெயரடை என்பதும் கண்ணன் என்பது பெயர்ச்சொல் என்றும் நாம் அறிவோம். எனவே பெயர்ச்சொல் தொடரை இரண்டாகப் பிரித்துப் பெயரடை என்றும் பெயர் என்றும் வரிசைப்படி குறித்தோம். இனி அழகான கண்ணன் வேகமாக வந்தான் என்பதைப் பார்க்கலாம். வேகமாக வந்தான் என்பது வினைத்தொடர் என்பதை அறிவோம். வேகமாக என்பது வினையடை, வந்தான் என்பது வினை. இவ்வரிசைப்படிப் பின் கண்ட "வரிமரம்" நமக்குக் கிடைக்கிறது.



கீழிருந்து மேலே போங்கள். பெயரடையும் பெயரும் சேர்ந்து பெயர்ச்சொல் தொடர் கிடைக்க வினையடையும் வினையும் சேர்ந்து வினைச்சொல் தொடர் கிடைக்கிறது. அதற்கு மேலே பெயர்ச்சொல் தொடரும் வினைச்சொல் தொடரும் ஒன்று சேர

வாக்கியம் கிடைக்கிறது. இனி மேலிருந்து கீழே வாருங்கள். வாக்கியம் முழுமையாக இருக்க, இரு பிரிவுகளாகப் பெயர்ச்சொல் தொடரும் வினைச்சொல் தொடரும் கிடைக்கின்றன. பெயர்ச்சொல் தொடர் மீண்டும்– இரு பிரிவடைவதால் பெயரடையும் பெயரும் நமக்குக் கிடைக்கின்றன. வினைச்சொல் தொடர் இருபிரிவாகி வினையடையும் வினையும் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றிக்குக் கீழே அந்தந்த சொல் இடம் பெறுகிறது.

வாக்கியங்களில் பெயர்சொல் தொடரும் வினைச் சொல் தொடரும், பெயரடையும், வினையடையும், பெயரும் வினையும் மேலே குறித்தபடிதான் இயங்க வேண்டும் என்பதில்லை. வினைச்சொல் தொடரே இல்லாமலும் தமிழிலே வாக்கியங்கள் வழங்கலாம். அழகான கண்ணன் சுறுப்சுறுபான மனிதன் என்ற வாக்கியத்தை கவனியுங்கள். இதில் வினையே இல்லை எனலாம். இதை பின்கண்டவாறு நாம் வரிமரத்தில் காட்டலாம்.



முன்பு அவள் பெண்வீட்டுக்குப் போகிருள் என்ற வாக்கியத்தில் இருவகையான அடுத்து நிற்கும் முறை உள்ளன என்றும் அவற்றைத் தனித்தனியே கோடிட்டுக் காட்ட பொருட் குழப்பத்திற்குக் காரணம் கண்டு கொள்ள முடியும் என்றும் கூறினேம். அவற்றைக் கிழே காணலாம்.

முதல் வகை:-



இரண்டாவது வகை:-



இரண்டுக்கும் இடையே உள்ள வேற்றுமை என்ன? பெண் என்ற பெயர்ச்சொல் எந்த இடத்தில் இருக்கிறது என்பது ஆகும். முதல் வரிமரத்தில் பெண் என்ற சொல் வாக்கியத்திற்கு நேரடியாகக் கீழே இருக்கிற பெயர்ச்சொல் தொடரைச் சேர்ந்து இருக்கிறது. அதனால் செய்வான் இடத்தைப் பெறுகிறது. ஆனால் இரண்டாம் வரிமரத்தில் பெண் என்ற சொல் வினைச்சொல் தொடருக்குக் கீழே வருகிற பெயர்ச் சொல் தொடரைச் சேர்ந்து இருக்கிறது. இவ்விடத்தில் இது (மறைமுகச்) செயப்படுபொருளைக் குறிக்கிறது என்று சொல்ல வேண்டும்.

இவ்வாறு இரண்டு பொருள்களுக்கும் இருவேறு வரிமரம் இருப்பதே பொருள் மயக்கத்திற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும்.

முதலில் நாம் கண்ட பெரும்பாலான வாக்கியங்களில் பெயர்ச்சொல் தொடரும் வினைச்சொல் தொடரும் அடுத்து வருகின்றன. இவ்வகை வாக்கியத்தைத் தமிழிலே செய்வான்—செய்வினை வாக்கியம் என்று சொல்லலாம். உலக மொழிகளில் செய்வான்—செய்வினை வாக்கியங்களே அதிகம் எனலாம். ஆனால் செய்வான்—செய்வினை என்ற வரிசையிலேயே அவை வர வேண்டும் என்பதில்லை. சில மொழிகளில் செய்வினை—செய்வான் என்று கூட வரலாம். தமிழில் கூட பொருளை அழுத்திக் கூற நாம் செய்வினை—செய்வான் முறையில் வாக்கியத்தை அமைக்கிறோம்.

போகிறது மாடு

வேகமாகப் போகிறது முரட்டு மாடு

இவ்விரண்டு வாக்கியங்களிலும் தொடருக்குள்ளே இருக்கும் சொற்களின் வரிசை மாறவில்லை என்பதைக் கவனியுங்கள். அதாவது மாடு முரட்டு என்றே போகிறது வேகமாக என்றே சொற்றொடர் மாறவில்லை. இது தமிழிலே உள்ள இயல்புகளுள் ஒன்று ஆகும். ஆனால் உற்றுக் கவனியுங்கள். நாம் சொற்கள் வரிசையை அப்படியே மாற்றுகிறோம் என்று வைத்துக் கொள்வோம்.

நமக்கு இப்போது,

போகிறது வேகமாக மாடு முரட்டு

என்ற வாக்கியம் கிடைக்கிறது இதில் போகிறது வேகமாக மாடு என்றவரைக்கும் நமக்கு இயல்பான தமிழாகத் தோன்றுகிறது. கடைசி முடிவு முரட்டு ஆக இருப்பது சரிஇல்லாததை உணருகிறோம். இதைச் சற்று மாற்றினால் போகிறது வேகமாக முரட்டு மாடு என்ற இயல்பான வாக்கியம் நமக்குக் கிடைக்கிறது. இது எதைக் காட்டுகிறது? பெயர்ச்சொல்தொடரில் வரிசைகளை மாற்றினால் பொருட் தெளிவின்மையும், இயல்புக்கு மாறான வாக்கியமும் ஏற்பட வழி செய்கிறோம். அதாவது பெயர்ச்சொல்தொடர் வரிசையைப் பொதுவாக மாற்ற முடியாது. ஆனால் வினைச்சொல்தொடரின் வரிசையை நாம் மற்ற முடியும்—வினைச்சொல் தொடரின் உள்ளுறுப்புக்களைப் பொருட்சேதம் ஏற்படாதவாறு நம்மால் மாற்ற முடியும். இவ்வுறுப்புக்களில் வினையடை வினைக்கு முன்னும் வரலாம்; பின்னும் வரலாம். ஆனால் பெயரடையோ பெயருக்கு முன்பே வரவேண்டும்.

மேற் சொன்ன விவரங்கள் பொதுவாக சொற்றொடர்களில் பயன்படும் சொல்லியன்களையும் அவை வந்து வழங்குகின்ற வரிசைகளையும் பிற தொடர்பான சிசப்திகளையும் சொல்கின்றன. ஆனால் மாற்றிலக்கண முறையில் இன்னும் பல மிகவும் முக்கியமான செய்திகள் சொல்லப்படுகின்றன. இந்நூலின் முற்பகுதியில் மாற்றிலக்கண முறையில் மொழியின் மூன்றுறுப்புக்

களைச் சுருக்கமான அளவில் கண்டோம். சொற்றொடர் இயல் மொழியின் நடுநாயகம் என்றும் அச்சொற் றொடர் இயல் உண்டு பண்ணும் தொடர்களுக்கு ஒலி உருவமும் பொருள் விளக்கமும் ஒலியனியல் மற்றும் பொருளியல் முறைபடக் கொடுக்கும் என்றும் முன்பு கண்டோம்,

மனிதனை நாம் பேசும் இயந்திரமாக உருவகித்துக் கொள்ளலாம். அவன் மனதிலே எண்ணிறந்த எண்ணங்கள் உருப் பெறுகின்றன. இதை நம்முடைய அன்றாட வாழ்விலே அனுபவிக்கிறோம். அவ்வெண் ணங்களின் அமைப்புக்கள் என்ன, உருவங்கள் என்ன என்பவை பற்றித் தெளிவான முடிவுகள் இல்லை. ஆனால் அம்மனிதன் வாய்விட்டுப் பேசக்கூடியதை நாம் குறித்துக் கொள்ள முடியும். ஒரு மனிதனால் எண்ணிறந்த, உண்மையிலேயே அளவிட முடியாத அளவுக்கு வாக்கியங்களைப் பேச முடிகிறது. ஒரு வாக்கியம் இன்னொரு வாக்கியத்தைப்போல் இருப்பது மிக அரிது. நாம் ஒரு தடவை சொன்ன வாக்கியத்தை இயல்பாக மீண்டும் சொல்வதில்லை. மனிதனுடைய வாக்கிய உற்பத்தித் திறமை வியக்கும் படியான ஆற்றல் கொண்டிருக்கிறது. மனிதனால் எண்ணிறந்த வாக்கியங்கள் படைக்க முடிவதேபோல அவனால் எவ்வளவு பெரிய நீளமான வாக்கியத்தையும் படைக்க முடியும். தமிழிலே வாக்கியங்களை நீட்டிக் கொண்டே போக முடியும் என்பதை நாம் எல்லாரும் அறிவோம். எல்லா மொழிகளிலும் ஒரு வாக்கியத்தை மைல் கணக்கில் நீட்டிச் சொல்லக் கூடிய இயல்பு

பொதிந்து கிடைக்கிறது. ஆனால் அவ்வாறு நீட்டிச் சொல்லாமல் தடை செய்ய அதற்கென்று வரன் முறைகளும் எல்லா மொழிகளிலும் இருக்கின்றன. பொருள் மயக்கம் தருகிற நிலைகளிலும் மனிதன் பொருளைப் பெரும்பாலும் சரியாகப் புரிந்து கொள் கிறான். *மழையில் காய்ந்தேன்; வெயிலில் நனைந்தேன்* என்ற வாக்கியங்கள் தமிழில் இயல்பான இலக்கண அமைப்பாக இருந்த போதிலும் ஒத்துக் கொள்ள முடியாத வாக்கியங்கள் என்று நாம் சொல்வோம். முரட்டு மாடு என்பதில் இலக்கண அமைப்புப் பொருந்துவதையும் மாடு முரட்டு என்பது பொருந்தா இலக்கண அமைப்பாக இருப்பதையும் நம்மால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. அதாவது நாம் உண்டு பண்ணும் எண்ணிறந்த வாக்கியங்களில் எவை பொருந்தும் இலக்கண அமைப்பு உடையவை எவை பொருந்தா இலக்கண அமைப்பு உடையவை என்று தீர்மானிக்கிற ஆற்றலும் நமக்கு இருக்கிறது.

மேற்கண்ட மிக முக்கிய இயல்புகளை விளக்குவ தாகவே மொழி இலக்கணம் இருக்க வேண்டும், என்று மாற்றிலக்கண அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வறிஞர்களில் தலைமையானவர் சாமஸ்கி என்பவர். இவருடைய புத்தகம் 'சொற்றொடர் அமைப்புக்கள்' 1957-இல் வெளிவந்ததும் மொழியியலில் பெரும் புரட் சியே ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும். அது வரை சொல்லியன்களையும் சொல்லியன் வந்து வழங்கு கிற வரிசைகளையும் சொற்றொடர்கள் அமைகின்ற முறைமைகளையும் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வாக்கியத்துக்குள் இன்னொருவாக்கியம் பொதியும் முறைகள் தெளிவாகத் தெரியாமலே இருந்தன. எனக்குச் சொந்தமான விளக்கு எரிகிறது என்ற வாக்கியத்தைப் பாருங்கள். இது வெளிப்புறம் ஒரே வாக்கியமாகத் தோன்றினாலும் உட்புறமோ குறைந்தது இரண்டு வாக்கியங்களைக் கொண்டிருக்கின்றது.

அவை பின்வருமாறு ஆகும்:

1. விளக்கு எனக்குச் சொந்தமானது
2. விளக்கு எரிகிறது

இவ்விரு வாக்கியங்களும் இணைந்து எனக்குச் சொந்தமான விளக்கு எரிகிறது என்ற ஒரு வாக்கியம் கிடைக்கிறது. இதே வாக்கியத்துக்குள் இன்னும் எத்தனையோ தனித்தனி வாக்கியங்களைப் பொதித்து விட முடியும். எனக்குச் சொந்தமான, பிறர் யாருக்கும் உரிமை இல்லாத, கல்கத்தாவில் இருந்து கொண்டு வந்த விளக்கு எரிகிறது என்று அனுமான் வால் போல் நீட்டிக் கொண்டே போகலாம். இவ்வுண்மைகளை எல்லாம் முந்திய விவர முறைகள் தெளிவாக்கவில்லை. மொழி இயல்புகளை, மொழியின் உண்மைகளை எப்படித்தான் விவரிப்பது? இதற்கு மூன்று முறைகள் நமக்கு இதுவரை தெரியும். முதல் முறையில் எப்படி மொழியின் அமைப்பைக் கண்டு கொள்வது என்று விவரிப்பது ஆகும். முந்திய பகுதிகளில் ஒலியனைக் கண்டுபிடிப்பது எப்படி என்றும் சொல்லியனைக் கண்டு பிடிப்பது எப்படி என்றும் சொன்னோம் அல்லவா? அவை போன்றவற்றைக் கண்டு பிடிப்பு முறை என்று

மாற்றிலக்கணக்காரர்கள் சொல்கிறார்கள். இம்முறை களைத் தெளிவாக இப்போது சொல்ல முடியாது என்பது அவர்கள் கருத்தாகும். ஒலியனையும் சொல்லியனையும் கண்டு பிடிப்பது அவ்வளவு பெரிதல்ல. ஆனால் எண்ணிறந்த வாக்கியங்களை உண்டு பண்ணுவதும், அவைகளை வேற்றுமைப் படுத்திப் புரிந்து கொள்வதும், பொதிய வைப்பதும் போன்றவற்றைப் பற்றித் தெளிந்த அறிவு நமக்கு இப்போது இல்லை. அப்படிப்பட்ட அறிவு இருந்தாலே மனித மொழியை அதன் அமைப்பைக் கண்டு பிடிக்கிற முறைகளை விளக்க முடியும்.

கொடுக்கப்பட்ட இலக்கணங்கள் இரண்டில் எது உயர்வு என்று இயந்திரம் மாதிரி கண்ணை மூடிக் கொண்டு தீர்மானிக்க உதவும் வகை இரண்டாவது வகையாகும். இதற்கேற்ற முன்னேற்றம் இதுவரை இல்லை. மேலும் தீர்மானமுறை முந்திய கண்டுபிடிப்பு முறையைச் சேர்ந்தது என்பது வெளிப்படை.

மூன்றுவது முறையில் கண்டுபிடிக்கும் முறைகளைப் பற்றியோ தீர்மானிக்கிற முறைகளைப் பற்றியோ கவலைப்படாமல் கொடுக்கப்பட்ட இலக்கணங்களின் தராதரத்தை நிர்ணயிக்க முயல்வது ஆகும். நம் கையில் கிடைப்பது எப்போதும் ஓர் எண்ணிக்கைக்கு உட்பட்ட வாக்கியங்கள்தான். இந்த எண்ணிக்கைக்கு உட்பட்ட வாக்கியங்களில்இருந்து எப்படி இலக்கணம் எண்ணிறந்த வாக்கியங்களை உண்டுபண்ணுகிறது என்று நாம் கவனிக்கவேண்டும். ஒரு மொழிக்குக்

கொடுக்கப்படுகிற இலக்கணங்களில் எது நாம் வேண்டுகிற முறையில் இக்காரியத்தைச் சாதிக்க முடிகிறது என்று தராதரம் செய்ய வேண்டும். இப்படித் தராதரம் செய்வதில் எளிமை என்ற உரைகல்லும் பயன்பட வேண்டும்.

நாம் எதற்காக மொழியை விவரிக்கிறோம்? அப்படி விவரிப்பதால் மொழியின் அமைப்பைப் பற்றித் தெரிந்துகொள்ளமுடியும் என்பதால் விவரிக்கிறோம். அவ்வமைப்பின் அடிப்படையில் மொழியின் இலக்கணத்தைப் படைக்கின்றோம். பொதுவாக மொழி என்பது வாக்கியங்களின் கோவை என்று சொல்ல வேண்டும். துண்டு துண்டாகப் பேசினாலும் பொருள் உள்ள வாக்கியங்களே மொழியில் பயன்படுகின்றன. நாம் கருதும் பொருளை ஒலிக்கும் ஒலியோடு இணைத்துப் பார்ப்பதில் நாம் பயன்படுத்தும் விதிகளே மொழி என்றும் சொல்ல முடியும். பேசுபவர் ஒரு பொருளை மனதில் கருதி ஒலிகளால் பேச்சை வடிக்கிறார். கேட்பவர் ஒலிகளைக் காதில் வாங்கிப் பேசுபவர் என்னதான் சொல்கிறார் என்பதைத் தனக்குள் தீர்மானம் செய்து கொள்கிறார். இவர்கள் செயல்களை விளக்க பல நிலைகள் — கவனிப்பு, மறதி, வாக்கிய நீளம், பேசும் சூழ்நிலை, பேசுபவர் — கேட்பவர் மனப்பாங்கு என்று எண்ணிறந்த பல நிலைகளைப்பற்றி நாம் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இப்பல நிலைகளுக்கு எல்லாம் அடிப்படையாக இருப்பது பேசுபவர் — கேட்பவர் மனங்களிலே பொதிந்து கிடக்கும் மொழியைப் பற்றிய அறிவு ஆகும். இதை உள்ளறிவு என்று சொல்லலாம்.

இவ்வுள்ளறிவின் விவரங்களை மொழியைப் பேசுபவர்களும் கேட்பவர்களும் தங்களை அறியாமலேயே கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே எழுதப் படிக்கத் தெரியாதவரும் தமிழிலே பெயர்ச்சொல் தொடர் என்ற சொல் பெயரடையும் பெயரும் என்ற வரிசையிலேயே பயன்படுத்துகிறார்கள். இந்த உள்ளறிவின் துணையாலேயே நாம் எண்ணிறந்த வாக்கியங்களை உண்டு பண்ணவும் புரிந்து கொள்ளவும் முடிகிறது. இந்த உள்ளறிவுதான் ஒரு மொழியில் ஒலிக்கும் பொருளுக்கும் இருக்கும் இயல்பான தொடர்பைத் தீர்மானிக்கிறது.

மொழியியலில் நம்முடைய நோக்கம் இந்த உள்ளறிவை, மொழியைப் பேசுபவரின் இயல்பான திறமையை விவரிப்பதாக இருக்கவேண்டும். இத்திறமை ஒலிக்கும் பொருளுக்கும் ஒரு மொழியில் இருக்கும் இயற்கையான தொடர்புதான் என்றோம். இந்த இயற்கையான திறமையை நாம் எப்படிப் புரிந்து கொள்வது? இத்திறமையைப் புரிந்துகொள்ள மொழியைப் பேச குழந்தைக்கு எவ்வாறு முடிகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்நூலின் முதற் பகுதியில் குழந்தைகள் மூளையில் இயல்பாகவே பேசும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன என்றோம் அல்லவா? இவ்வாற்றலைக்கொண்டு குழந்தை எவ்வாறு ஒரு குறிப்பிட்ட மொழியைக் கற்கிறது என்று காண வேண்டும். ஒரு குழந்தையால் வாக்கியங்களை உண்டாக்கும் விதிகளையும் அவற்றைப் புரிந்து கொள்ளும் விதிகளையும் எப்போது உள்ளடக்க முடிகிறதோ அப்

போது அக்குழந்தை அம்மொழியைக் கற்று விட்டது என்று சொல்லலாம். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட மொழியைக் குறுகிய காலத்தில் யார் துணையும் இல்லாமல் அதனுல் கற்றுக் கொள்ள முடிகிறது; இதற்குக் காரணம் என்ன? மனிதர்கள் எல்லா நாடுகளிலும் மொழியைப் பேசுகிறார்கள். அப்படி இருக்க நாம் ஏன் குழந்தையின் மூளையில் மனித மொழியின் பொது இயல்புகள் ஒளிந்து கொண்டு இருக்கின்றன என்று எண்ணக் கூடாது? இப்படி மறைந்து கிடக்கும் பொது இயல்புகளின் துணையால் குழந்தை தான் வந்து பிறந்திருக்கிற கூட்டத்தின் மொழியை விரைவிலேயே கற்று விடுகிறது என்றே தோன்றுகிறது.

இவ்விளக்கம் சிலருக்குப் புராணம் படிப்பது போல இருக்கலாம். ஆனுல் உலக மொழிகளின் பொதுவான இயல்புகளை மொழியியல் அறிஞர்கள் அறிவார்கள். பலவகைகளில் வேறுபட்ட மனித சமுதாயங்கள் மொழிகளின் வெளித் தோற்றத்தாலும் வேறுபாட்டாலும் பல்வேறு மொழி இயல்புகளைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றன. இப்பொது இயல்புகள் இருவகையாக இருக்கின்றன. முதல் வகையில் வாக்கியங்கள், உயிரொலிகள், மெய்யொலிகள், வினை, பெயர் என்றவாறுள்ள பருப்பொருள் இயல்புகளும் இரண்டாவது வகையில் சொற்றொடர்கள் அமையும் அமைப்புக்களும், வாக்கிய மாற்றுக்கள் முதலியனவும் அடங்கும் என்று சொல்லலாம். இவை எல்லா மொழிகளிலும் பயன்படும் இயல்புகள் ஒரு மொழிக்கு மட்டும் சொந்தமானதில்லை.

பொதுவியல்புகள் குழந்தையிடம் இயல்பாகவே குடிகொண்டிருப்பதால் அதன் பிரச்சினை அது வந்து பிறந்திருக்கிற மொழியின் இயல்புகளை இப்பொது இயல்புகளைக் கொண்டு புரிந்து கொள்வதாகும். இத்தகைய முறையால்தான் குழந்தை எளிதில் மொழியைக் கற்றுவிடுகிறது என்று மாற்றிலக்கணக்காரர் கருதுகின்றனர்.

இனி மொழியின் இலக்கணம் குறைந்த பட்சம் என்ன என்ன இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பார்க்கலாம். பொதுவாக இலக்கணத்தை வாக்கியங்களின் கோவை என்று முன்பே சொன்னேம். மனிதன் தன் வாழ்நாளில் உண்டு பண்ணும் வாக்கியங்களுக்குக் கணக்கே இல்லை என்றும் சொன்னேம். பிறந்த குழந்தை பேசத்தொடங்குவதில் இருந்து அது மனிதனாகி மாளும் வரை பேசியிருக்கிற எல்லா வாக்கியங்களையும் நம்மால் குறித்துக் கொண்டு விட முடியாது. அப்படியே கணக்கிகள் (computer) துணையால் நாம் எல்லா வாக்கியங்களையும் சேர்த்து வைத்துவிட முடியும் என்றாலும் ஒரு மனிதனுடைய வாக்கியங்களும், அவன் வாழ்ந்து பேசிய சூழ்நிலைகளும் இன்னொரு மனிதனுடைய நிலையில் இருந்து எவ்வளவோ மாறுபட்டு இருக்கும். அதனால் முந்திய மனிதனின் வாக்கியங்களில் இருந்து நாம் தெரிந்து கொள்வது அடுத்த மனிதர்களுக்குப் பொருந்த முடியாது. இதனால் இரு நிலைகள் நமக்குத் தெரிகின்றன. முதலில் ஓர் அளவுக்கு உட்பட்ட வாக்கியங்களில் இருந்தே மனிதர்களுடைய பிற எல்லா வாக்கியங்களை

யும் உண்டுபண்ணக் கூடிய முறையை நாம் காண வேண்டும்.

முன்பே மனிதனைப் பேசும் இயந்திரமாக உருவகித்துக் கொண்டோம். இந்த இயந்திரத்தின் உள் அமைப்பு ஓர் அளவுக்கு உட்பட்டதாகவும், ஆனால் அது உண்டுபண்ணும் வாக்கியங்களோ கணக்கில் அடங்கா அளவுக்கு உள்ளது என்றும் நாம் தீர்மானிக்க வேண்டும். நம்முடைய இலக்கணமும் இவ்வாறு ஓர் அளவுக்கு உட்பட்டதாக ஆனால் கணக்கில் அடங்காத வாக்கியங்களை உண்டு பண்ணும் தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும்.

மூன்றாவது மிக முக்கியமான குணம் ஆகும். மேலே நாம் குறித்தபடியான இலக்கணத்தைத் தயாரிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த இலக்கணம் அளவுக்கு உட்பட்டதுதான்; எல்லையில்லா வாக்கியங்களைத் தயாரிக்க முடியும்தான். ஆனால் அவ்வாக்கியங்கள் நாம் ஆராய்கின்ற மொழியின் இயல்பைப் பிரதிபலிக்காவிட்டால் என்ன பயன்? அதாவது நம் இலக்கணம் தான் தயாரிக்கிற வாக்கியங்களை மொழியின் இயல்புக்கு ஏற்றவாறு உண்டுபண்ண உதவ வேண்டும். முன்பு காட்டிய மழையில் காய்ந்தேன்; வெயிலில் நனைந்தேன் என்ற வாக்கியங்களைப் பாருங்கள். இது இலக்கண அமைப்பில் தமிழ் வாக்கியங்கள் என்பதை இயற்கையான நம் உள்ளறிவு சொல்கிறது. ஆனால் பொருள் அமைப்பிலோ இது தமிழ் மொழிக்கு முரண்பாடாக இருக்கிறது.

இவ்வாருன வாக்கியங்களே இலக்கணப் பொருத்த மான வாக்கியங்கள் என்று சொன்னலும், பொருட் பொருத்தம் இல்லாதவை என்றுதான் சொல்வோம். இன்னுமொரு எடுத்துக்காட்டைப் பாருங்கள். மாடு முரட்டு முட்டியது என்ற வாக்கியத்தின் பொருளே நாம் ஒருவாறு புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாக்கி யத்தின் பொருளே எப்படியோ புரிந்துகொள்ளுகிறோம். ஆனல் வாக்கிய அமைப்பு இலக்கணப் பொருத்தம் உடையது அல்ல என்பதையும் அறிவோம். முரட்டு மாடு முட்டியது என்பதே இலக்கணப் பொருத்தம் உடைய வாக்கியம் என்பதை நம் உள்ளறிவு சொல் கிறது. இலக்கணப் பொருத்தமில்லாத வாக்கியங்களே இலக்கணப் பொருத்தம் உடைய வாக்கியங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் திறமையும் பொருட் பொருத்தத்தைக் காட்டும் திறமையும் நம் இலக் கணத்திற்கு இருக்க வேண்டும் என்பதை இதன் வழி யாக அறிகிறோம்.

சொற்றொடர் இயலின் முன் பகுதியில் வாக்கி யத்தைப் பல தொடர்களாகப் பிரித்து ஆராய்ந்தோம். இம்முறையின் குறைகளையும் முன்பே சொன்னேம். இம்முறையின்படி 'இளங்கோ பள்ளிக்கூடம் போகி ருன்' என்ற வாக்கியத்தில் இளங்கோ செய்வான் நிலையில் இயங்கும் பெயர்ச்சொல் தொடர்; போகிருன் பயனிலை; பள்ளிக்கூடம் செயப்படுபொருள் என்று ஆகிறது. இந்த வாக்கியம் எளிய வாக்கியம்.

'கடைக்குப் போவேன் என்று சொல்லிவிட்டு இளங்கோ பள்ளிக்கூடம் போனன்' என்ற வாக்கியத்

தைப் பாருங்கள். இதில் (நான்) கடைக்குப் போவேன் என்ற ஒரு முழு வாக்கியமும்; என்று சொன்னான் என்பதின் மாற்றமும், இளங்கோ பள்ளிக் கூடம் போனான் என்ற முழு வாக்கியமும் இருக்கின்றன. இதை முந்திய முறை அப்படியே எடுத்துக் கொண்டு விளக்க முயன்று குழப்பம் விளைவித்தது. இதே வாக்கியத்தை, கடைக்குப் போவேன், பழம் வாங்கி வருவேன், கத்தரிக்காய் வாங்கி வருவேன், வாழைக்காய் கொண்டு வருவேன் என்று சொல்லி விட்டு இளங்கோ பள்ளிக்கூடம் போனான் என்றும் மாற்ற முடியும். அதாவது சிறிய வாக்கியத்திற்குள் இன்னும் பல வாக்கியங்களை பொதித்துவிட முடியும். இம்முறைகளை நாம் முன்பு விவரித்த முறைகள் செய்யத் தவறி விட்டன என்றே சொல்ல வேண்டும்.

பின்கண்ட தமிழ் வாக்கியத்தைக் கவனியுங்கள். இளங்கோ பள்ளிக்கூடத்திற்குப் போகிறான். இதன் அமைப்பைப் பின்வரும் விருமரம் காட்டுகிறது.



இதைப் பின் கண்ட முறையாலும் எழுதலாம்.

1. வாக்கியம் → பெ. சொ. தொ. + வி. சொ. தொ
2. வி. சொ. தொ. → பெ. சொ. தொ + வி
3. பெ. சொ. தொ → பெயர் (வேற்றுமை)
4. பெயர் → இளங்கோ, பள்ளிக்கூடம்
5. வேற்றுமை → கு
6. வினை → போகிறான்

→ (அம்புக்குறி) இதை இவ்வாறு திருப்பி எழுதுக என்ற பொருளைத் தருகிறது. மேற்கண்ட விதிகள் வாக்கியத்தின் உறுப்புக்களை எப்படி எழுதலாம் என்று காட்டுகிறது. மீண்டும் திருப்பி எழுதுவோம். இப்போது முதல் விதி வாக்கியத்தை பெ. சொ. தொ. ஆகவும் வி. சொ. தொ. ஆகவும் திருப்பி எழுதுகிறது. எனவே



என்று கிடைக்கிறது. இரண்டாம் விதி வி. சொ. தொ. வை பெ. பொ. தொ. வாகவும் அதையடுத்து வி யாகவும் திருப்பி எழுதுகிறது. எனவே



என்று கிடைக்கிறது.

மூன்றும் விகுதி பெ. சொ. தொ. வை பெயர் ஆகவும் அதை அடுத்து வேற்றுமை இருக்குமானால் வேற்றுமையையும் திருப்பி எழுதுகிறது. இதுவரை நம்மிடம் இருக்கிற வரிமரத்தில் இரு பெ. சொ. தொ. இருக்கின்றன. ஒரு பெ. சொ. தொ. இடப்புறத்தில் வாக்கிய மேட்டுக்கு நேரடியாகக் கீழே இருக்கிறது. இதில் வேற்றுமை இல்லை. என்வே பெயர் மட்டும் எழுதுவோம். இரண்டாவது பெ. சொ. தொ. மேட்டுக்கு நேரடியாகக் கீழே இருப்பது. இதில் பெயரும் வேற்றுமையும் இருக்கின்றன. எனவே பெயரையும் வேற்றுமையையும் திருப்பி எழுதுவேபம். எனவே இப்போது நமக்குப் பின்வரும் வரிமரம் கிடைக்கிறது.



அடுத்த விதி பெயரை இளங்கோ என்றும் பள்ளிக்கூடம் என்றும் எழுதுகிறது. இடப்புறம் இளங்கோவையும் வலப்புறம் பள்ளிக்கூடத்தையும் எழுதுகிறோம். இப்போது வரிமரம் இப்படியாகிறது.



வேற்றுமையை 'கு' என்று திருப்பி எழுத பின் வரு மாறு வரிமரம் தோன்றுகிறது.



கடைசி விதி வினையை, போகிறான் என்று திருப்பி எழுத நம் வரிமரத்தின் தோற்றம் பின்வருமாறு ஆகிறது.



மேற்கண்ட வரிமரத்தில் பல செய்திகளை நாம் விளக்க வில்லை அவற்றைப் பின்னால் பார்க்கலாம். முதலில் விதிமுறைகள் எழுதுவதில் ஏற்படும் சில ஐயங்களைக் காணலாம். வாக்கியம் மொழியடிப்படை என்பதாலும் நாம் நேரடியாக உணர்வதாலும் அதற்கு விளக்கம் தேவையில்லை. எல்லா விஞ்ஞானங்களிலும் சில உண்மைகளை முதலில் கேள்விக்கு இடமில்லாத உண்மைகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஆராய்ச்சி முன்னேற முடியும். அதன் அடிப்படையில் வேறுபல உண்மைகளையும் நாம் காண முடியும். மாற்றிலக்கண முறையிலும் வாக்கியத்தின் நிலை இதுதான்.

பெ. சொ. தொ, வி. சொ. தொ என்று எழுதுவதில் வாதப் பிரதிவாதம் இல்லை. ஆனால் ஏன் இரண்டாவது விதி வி. சொ. தொ வை விரித்து எழுத வெண்டும்? ஏன் பெ. சொ. தொ வை விரித்து எழுதக் கூடாது? ஒரு முக்கியக் காரணம் வி. சொ. தொ வுக்கு உள்ளே பெ. சொ. தொ இருக்கிறது. வி. சொ. தொ வை விரித்து எழுத பெ. சொ. தொ. கிடைக்கும். பின்னால் ஒரே விதியால் பெ. சொ. தொ வை விரித்து எழுதிவிடலாம். மூன்றுவது விதியில் எந்த இடத்தில் பெ. சொ. தொ. வைப் பெயரும் வேற்றுமையும் உடையதாக எழுதுவது என்பதும், எந்த இடத்தில் பெயர் மட்டுமே எழுதுவது என்பதும் தெளிவில்லை. இத் தெளிவின்மையைப் பின்னால் வருகின்ற விதிகள் தெளிவுள்ளதாக ஆக்க வேண்டும்.

அடுத்துப் பெயரை விரித்து எழுதும்போதும் ஏன் முதலில் இளங்கோவை எழுத வேண்டும ஏன் பள்ளிக் கூடத்தை இரண்டாவது இடத்தில் எழுத வேண்டும் என்பதற்கு முகாந்தரம் தேவைப்படுகிறது. இக் கேள்விகளில் பலவற்றிற்கு மாற்றிலக்கண அறிஞர்கள் பதில்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல வற்றிற்குப் பதில் இப்போது இல்லை. ஆராய்ச்சி பெருகப் பெருகப் பதில்கள் நமக்குக் கிடைக்கலாம்.

இனி இளங்கோ பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னான் என்ற தமிழ் வாக்கியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் இரு வாக்கியங்கள் இருக்கின்றன. ஒன்று இளங்கோ சொன்னான் என்பது ஆகும்; இன்னொன்று நான் பள்ளிக்கூடம் போகிறேன் என்பது


வாக்கியம்
பெ. சொ. தொ
வி. சொ. தொ
பெ. சொ. தொ
வி
வாக்கியம்
சொன்னான்
பெ. சொ. தொ
வி. சொ. தொ
பெயர்
பெயர்
பெ. சொ. தொ
வி
மேற்கோள்
இளங்கோ
நான்
பெயர்
பள்ளிக்கூடம்
போகிறேன் என்று

ஆகும். இவ்விரண்டு வாக்கியங்களையும் என்று என் கிற 'மேற்கோள்' சொல்லியன் இணைத்து வைக்கிறது. இதன் முழு உருவம் என்ன? இளங்கோ — நான் பள்ளிக்கூடம் போகிறேன் — என்று சொன்னன் என் பது ஆகும். இவ்வாக்கியத்தை எப்படி விதிகளால் காட்டுவது?

இளங்கோ — நான் பள்ளிக்கூடம் போகிறேன் — என்று சொன்னன். வினைச்சொல் தொடரை நாம் விரித்து எழுதும்போது பெயர்ச்சொல் தொடர் என்றும் வினை என்றும் எழுதினோம் அல்லவா? அப் பெயர்ச் சொல் தொடரை நாம் இப்போது பெயர்ச்சொல் வேற் றுமை என்று விரித்து எழுதாமல் வாக்கியம் என்று விரித்தெழுத வேண்டும். அப்படி விரித்து எழுதிக் கிடைத்த வாக்கியத்தை மீண்டும் பெ. சொ. தொ, வி. சொ. தொ என்று விரித்தெழுத நமக்கு இன்னொரு வாக்கியம் முந்திய வாக்கியத்திற்குள் பொதிந்து கிடப் பதைத் தெரிவிக்க முடிகிறது. இனி விதிகளைப் பார்க்கலாம்:

முதல் விதி: வாக்கியம் → பெ. சொ. தொ +
வி. சொ. தொ.

2-ம் விதி: வி. சொ. தொ. → பெ. சொ. தொ + வி

3-ம் விதி: பெ. சொ. தொ → வாக்கியம்
பெயர் → இளங்கோ, நான், பள்ளிக்கூடம்

வேற்றுமை → கு

வினை → போகிறேன், வினை

இவ்விதிகளை விரித்து எழுத நமக்குப் பின்கண்ட வரி மரம் கிடைக்கிறது.

முதல் விதி:



3-ம் விதிவரை வந்தவுடன் அதன் வினைவாக நமக்கு வாக்கியம் என்பதே கிடைக்கிறது. இது முழு முதல் அல்லவா? இதனை விரித்தெழுத முதல் விதியே துணை செய்ய வேண்டும்.

எனவே :



நம்முடைய எடுத்துக்காட்டு வாக்கியத்தில் இரண்டு வாக்கியங்களே பொதிந்து கிடக்கின்றன. எனவே அவ்வாக்கியத்தை விளக்க மேற்கண்டவை போதுமானது. முதலில் ஒரு வாக்கியமும், அதற்குள்ளே இன்னொரு வாக்கியமும் படைத்துக் கொண்டோம். அதனால் இப்போது பெயர்ச்சொல்லை அதன் வாக்கியமல்லாத பிற உறுப்புக்களை வெளிக்காட்ட வேண்டி விரித்து எழுத வேண்டும். முன்பு நாம் பார்த்த விதியின்படி அது பெயர் (வேற்றுமை) ஆகும். இவ்விதி

யும் வாக்கியமும் பெ. சொ. தொ வுக்கு கீழே எழுதப் பட வேண்டும். ஏனென்றால் இரண்டும் பெ. சொ. தொ விலிருந்தே விரித்து எழுதப்படுகின்றன. ஆனால் வாக்கியமும் இவ்விதியும் ஒரே நேரத்தில் பயன்பட வில்லை. வாக்கியம் முதலில் எழுதப்படுகிறது; அதன் பின் இவ்விதி பிரித்து எழுதப்படுகிறது. அல்லது இந்த விதி மட்டுமோ, அன்றி வாக்கிய விதி மட்டுமோ பயன் படுகிறது. இதைக் காட்ட

பெ. சொ. தொ → { வாக்கியம் / பெயர் (வேற்றுமை) } என்று எழுதலாம்.

இதன் பொருள் இவ்விரண்டு வரிசைகளில் ஏதாவது ஒன்றே விரித்து எழுதப்பட வேண்டும் என்பதாகும். இவ்விரண்டையும் ஒரே சமயத்தில் பெ. சொ. தொ ஆக விரித்து எழுத முடியாது என்பது ஆகும்.

இப்போது நமக்கு வேண்டியது என்ன? முதலில் பெ. சொ. தொ வை வாக்கியமாக விரித்து எழுதி விட்டோம். நமக்கு இரு வாக்கியங்களே தேவை. அதனால் இப்போது இருக்கிற பெ. சொ. தொ க்களை இரண்டாம் பிரிவு விதியால் விரித்து எழுத வேண்டும். அப்படி விரித்து எழுத, பின்கண்ட வரிமரம் நமக்குக் கிடைக்கிறது.



மொத்தத்தில் இப்போது நமக்குக் கிடைக்கும் வாக்கியம் 'இலங்கோ – நான் பள்ளிக்கூடம் | கு | போகிறேன் – சொன்னேன்' என்பதாகும். இதில் இரண்டு முக்கியக் குறைகள் உள்ளன. முதலில் இதில் மேற்கோள் சொல் இல்லை. இம் மேற்கோள் சொல்லை நாம் வினைச்சொல் தொடரிலிருந்து விரித்து எழுத வேண்டும். அப்படி விரித்து எழுதினால் பின்கண்ட வரிமரம் நமக்குக் கிடைக்கிறது.



நமக்கு வேண்டிய வாக்கியம் என்ன? இளங்கோ பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னேன் என்பது தானே. ஆனால் இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் வாக்கியமோ இளங்கோ நான் பள்ளிக்கூடம் கு போகி றேன் என்று சொன்னேன் என்பது ஆகும். அதாவது இப்போது நம்மிடம் இருக்கும் வாக்கியம் இருவகை களில் வேறுபட்டு இருக்கிறது. முதல் வகையில் பள்ளிக்கூடம் கு என்பது அத்துச் சாரியைப் பெற்று பள்ளிக்கூடத்துக்கு என்று ஆக வேண்டும். இந்த அத்துச்சாரியை பெறும் விதியை ஒலியன் இயல் விதிக ளோடு சேர்த்து விடலாம். தமிழிலே எண்ணிறந்த சொற்கள் ஒலியன் இயல் அடிப்படையில் அத்துச்

சாரியை பெறுகின்றன. இரண்டாவது குறை நான் என்ற சொல் இருப்பது ஆகும். இதை நீக்கி விட்டால் நமக்கு 'இளங்கோ பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னான்' என்ற வாக்கியம் கிடைக்கிறது. இதை எப்படிச் செய்வது?

பள்ளியில் செய்வினை வாக்கியத்தைச் செயப் பாட்டு வினையாக்கும் பயிற்சி பெற்றது நினைவிருக் கிறதா? ஆங்கிலத்தில் active voice ஐப் passive voice ஆக்குவதும் passive voice ஐ active voice ஆக ஆக்குவதும் செய்திருக்கிறோம் அல்லவா? அதை மாற்றல் அல்லது மாற்றம் செய்தல் என்று சொல்லலாம். மொழியை ஐந்துறுப்பாகப் பிரித்து ஆராய்ந்த அறிஞர்கள் மொழி யில் பயன்படும் இந்த இயல்பைப் பெரிதாக எண்ண வில்லை. ஆனால் வாக்கியத்துள் வாக்கியம் பொதிந்து கிடப்பதும் அவ்வாக்கியங்கள் செய்வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் வினாவாகவும், விடையாக வும், எதிர்மறை வாக்கியமாகவும் இன்னும் பிறவாக வும் மாறுவதையும் நாம் புறக்கணிக்க முடியாது. ஒரு சிறு வாக்கியத்தில் இருந்து எவ்வளவு பெரிய வாக்கி யத்தையும் நம்மால் உண்டு பண்ண முடியும். அச் சிறு வாக்கியத்தையே வேறுபல விதங்களாகவும் நம் மால் சொல்ல முடிகிறது. இது மொழியின் இயற்கை என்பதை நாம் அறிவோம். இவ்வியற்கையைக் காட்ட மாற்றிலக்கணக்காரர் மாற்றல் விதிகளைக் கையாளுகிறார்கள்.

பின்கண்ட ஆங்கில வாக்கியங்களைப் பாருங்கள்.

1. I gave him a book.

2. The book was given by me to him.
3. Did I give him a book?
4. I did not give him a book.
5. Wasn't a book given by me to him?
6. Didn't I give him a book?

முதல் வாக்கியத்தின் பொருள் எப்படியோ எல்லா வாக்கியங்களிலும் பல விதங்களில் வந்திருக்கிறது. இவ்வாக்கியங்கள் பல வகைகளைச் சேர்ந்தன என்பதைச் சொல்ல வேண்டுமா? முதல் வாக்கியத்தை நாம் passive voice ஆக மாற்றினால் இரண்டாம் வாக்கியம் கிடைக்கிறது. முதல் வாக்கியத்தை கேள்வியாக மாற்றினால் மூன்றும் வாக்கியமும், எதிர்மறையாக மாற்றினால் நான்காம் வாக்கியமும், எதிர்மறை passive voice ஆக்கினால் ஐந்தாம் வாக்கியமும் எதிர்மறையைக் கேள்வியாக மாற்றினால் ஆறும் வாக்கியமும் நமக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு பல மாற்றங்கள் அடைய முடிகிற முதல் வாக்கியத்தை அடிப்படை வாக்கியம் என்று சொல்ல வேண்டும். இதை மாற்றப் பயன்படும் விதிகளை மாற்றல் விதிகள் என்று சொல்ல வேண்டும்.

மாற்றல் விதிகள் வாக்கிய வகைகளை மாற்ற மட்டும் பயன்படவில்லை. முந்திய எடுத்துக்காட்டில் 'நான்' என்ற பதத்தை நீக்க நாம் மாற்றல் விதியைக் கையாளலாம் என்றோம். அது போலவே சில சொற்களைச் சேர்க்கவும் மாற்றல் விதிகளைக் கையாள முடியும். எடுத்துக்காட்டாக 'நான்' என்ற இடத்தில் 'தான்' வர வேண்டும் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அதாவது நமக்கு வேண்டிய வாக்கியம் 'இளங்கோ தான் பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னான்' என்று வைத்துக் கொள்வோம். இப்போது 'நான்' என்னும் தன்மை மூவிடத்துப் பெயர் தான் ஆக வேண்டும். நான் என்பதை முதலில் நீக்கி விட்டு நாம் தான் என்ற சொல்லியஜைச் சேர்க்கிறோம். இவ்வாறு சேர்ப்பதையும் மாற்றல் விதிகள் செய்யலாம். ஆனால் எந்த வகையிலும் மாற்றல் விதிகள் வாக்கியத்திற்குப் புதுப்பொருஜைச் சேர்க்க அனுமதிக்கக் கூடாது. இளங்கோ நான் பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னான் என்ற வாக்கியத்திற்கும் இளங்கோ தான் பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னான் என்ற வாக்கியத்திற்கும் வேற்றுமை இல்லையல்லவா? வாக்கியத்தின் பொருஜை மாற்றுவது என்பதில் வாக்கியத்தை விஞவாகவோ மேற்சொன்ன மற்ற வாக்கிய வகைகளாகவோ மாற்றுவதைச் சேர்க்கக் கூடாது. இவை இலக்கண அமைப்பின் அடிப்படையில் ஒரு வாக்கியத்திற்கும் இன்ஞொரு வாக்கியத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன. அடிப்படை வாக்கியத்தின் பொருளில் எந்த மாற்றமும் இல்லை என்றே கொள்ள வேண்டும்.

மாற்றல் விதிகஜைப் பொதுவாக ஆறு வகையாகச் சொல்லலாம். அவற்றைப் பின் வருமாறு விளக்க முடியும்.

1. நீக்கல்:- $a + b \rightarrow b$ (அல்லது $a \rightarrow \phi$ ஒன்றுமில்லாமை)
2. பதில் வைத்தல்:- $a \rightarrow b$

3. விரித்தல்:- a → b + c

4. குறைத்தல்:- a + b → c

5. கூட்டல்:- a → a + b

6. வரிசை மாற்றல்:- a + b → b + a

மனிதனுல் எண்ணிறந்த வாக்கியங்களைப் பேசவும் விளங்கிக் கொள்ளவும் முடியும் என்று முன்பு சொன்னேனே. அவன் அன்ருட வாழ்வில் பயன்படுத்துவதற்கும் அவன் உள்ளறிவுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் சொன்னேனே. எண்ணிறந்த வாக்கியங்களை உண்டு பண்ணும் திறமையும் புரிந்து கொள்ளும் திறமையும் ஒரு பக்கமாகவும், அவன் வாய் வழியாய் அன்ருட வாழ்வில் வெளிவரும் வாக்கியங்களை இன்னெரு பக்கமாகவும் கொள்ள வேண்டும். உள்ளறிவின் அடிப்படையில் வாக்கியத்தின் உள்ளமைப்பு ஏற்படுத்தப் படுகிறது. மனதிலே ஏற்படும் கருத்தை வாக்கிய அமைப்பாக உள்ளறிவு ஏற்படுத்துகிறது என்று சொல்லலாம். இக்கருத்துக் கோவைகள் உருவம் பெற்று வாக்கியத்துக்குள் வாக்கியமாகப் பொதிந்து நமக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு நமக்கு கிடைக்கிற வாக்கியங்களின் அமைப்பை வெளியமைப்பு என்று சொல்ல வேண்டும். நமக்கு வெளியாகக் கிடைத்த வாக்கியம் 'இளங்கோ பள்ளிக்கூடம் போகிறேன் என்று சொன்னன்' என்பதுதான். ஆனல் அதன் உள்ளமைப்போ இரு வாக்கியங்களை இளங்கோ சொன்னன், நான் போகிறேன் என்ற இரு வாக்கியங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பதையும் இவ்விரு வாக்கியங்களும்

மாற்றல் விதிகளால் பற்றுசு வைக்கப்பட்டுக் கிடப்பதை யும் கண்டோம். இவ்வாறு மனதில் இருக்கும் கருத்துக்கள் உள்ளமைப்புப் பெற்று, அதன் பின் மாற்றல் விதிகளால் பற்றுசு செய்யப்பட்டு வெளி யமைப்புக்களாக வெளியே உச்சரிக்கப்படுகின்றன. வெளியே கிடைக்கும் வாக்கியங்களுடைய வெளி யமைப்புக்கும் உள்ளே நாம் மனதைச் செலுத்தினால் தான் நமக்கு ஒரு வாக்கியத்தின் உள்ளமைப்புத் தெளிவாகும் என்று சொல்லலாம்.

இந்த உள்ளமைப்பு வாக்கியங்களைப் பிரதிபலிப் பதே அடிப்படை உறுப்பு ஆகும். இந்த அடிப்படை உறுப்பு வாக்கியத்தின் உள்ளமைப்பை முதலில் தருகிறது. இந்த உள்ளமைப்பின் மேல் மாற்றல் துணை உறுப்பு தன் விதிகளைக் கொண்டு மாற்றம் செய்விக் கிறது. அதன் பின் சொற்களஞ்சிய உறுப்பு வேண் டும் சொற்களைத் தருகிறது. இச் சொற்களின் ஒலி யமைப்பை ஒலியன் இயல் உறுப்பும், பொரு ளமைப்பைப் பொருளியல் உறுப்பும் கொடுக்கின்றன. இப்போது நாம் முழுவாக்கியத்தையும் பேசுகிற மாதிரி பெறுகிறோம் என்று சொல்லலாம்.

எடுத்துக்காட்டாக 'இளங்கோ நான் பள்ளிக் கூடம் போகிறேன் என்று சொன்னான்' என்ற வாக்கி யத்தை மீண்டும் பார்க்கலாம். இதன் உள்ளமைப்பை இரு வாக்கியங்கள் என்று சொன்னோம். அவை 'இளங்கோ சொன்னான்' என்பதும் 'நான் போகிறேன்' என்பதும் ஆகும். இவ்விரண்டில் முந்தியதில் பிந்தியது பொதிந்து கிடக்கிறது. நம்முடைய அடிப்

படை உறுப்பு விதிகள் பின் வருமாறு இருக்கும். இவ் விதிகளை முன்பே விளக்கி இருக்கிறோம்.

வாக்கியம் → பெ. சொ. தொ. + வி. சொ. தொ.
வி. சொ. தொ. → பெ. சொ. தொ + வி

இதுவரை சொற்றொடர் இயலில் ஆராயப்படும் செய்திகளைச் சுருக்கமாகக் கண்டோம். ஆங்காங்கே கவனமாகக் காண வேண்டிய செய்திகளையும் குறித்துக் கொண்டோம். மாற்றிலக்கண முறையில் முற்பகுதியில் ஒலியன் இயல் உறுப்பையும் முந்திய பகுதியில் சொற்றொடர் இயல் உறுப்பையும் கண்டோம். மேற்சொன்னவை எல்லாவற்றையும் அறிமுகம் என்ற முறையிலே மேம்போக்காகவே கண்டோம் இனி நாம் காணவேண்டியது பொருளியல் உறுப்பே. ஆனால் பொருளியல் உறுப்பைப் பற்றிய கருத்துக்கள் எதுவும் சரியாக இல்லை. இவை யாவும் இன்றுவரை குழப்பமான நிலையிலே இருந்து வந்திருக்கின்றன. மாற்றிலக்கணக்காரர் பொருள் மொழியிலே பயன் படும் முக்கியத்தைத் தெளிவாக நிலைநாட்டி விட்டார் கள். ஆனால் பொருளியல் உறுப்பின் அமைப்பையோ, அவ்வமைப்புக்கள் எவ்வாறு பிற உறுப்புக்களோடு சேர்ந்து பயன்படுகின்றன என்பவற்றையோ குறிப்ப பதில் மிகவும் கருத்து வேற்றுமைப் படுகிறார்கள். ஒரு சில மாற்றிலக்கணக்காரர்கள் பொருளியலே முதன்மை பெறுகின்றது என்றும் மனிதரின் அடிப் படை அறிவு பொருள் இயல் இயல்புகளையே சேர்ந் திருக்கின்றன என்றும் நினைக்கிறார்கள். இக்கருத்துக்

களில் பல இன்னும் தொடக்க நிலையிலே இருக்கின்றன; சிலவற்றிற்குத் தக்க ஆதாரம் இல்லை. மேலும் நம் நோக்கம் அறிமுகமே என்பதால் ஆழப் புகாமல் மொழியுறுப்பு ஆராய்ச்சிகளை இத்துடன் நிறுத்திக்கொள்ளலாம்.

6. மொழிப் பரிமாற்றம்

மொழியின் அவசியமான, முக்கியமான வேலை மனித இனத்தின் செய்திப் பரிமாற்ற வேலையாகும். இன்னும் சொல்லப்போனால் மொழிதான் மனிதனுக்குக் கிடைத்துள்ள செய்திப் பரிமாற்ற இயந்திரங்களுள் முதன்மையானதும் மிகவும் முக்கியமானதும் ஆகும். ஆகவே மொழி உறுப்புக்களைப் பற்றித் தெரிந்து கொண்ட பின்னர் நாம் மொழிப் பரிமாற்றத்தைப் பற்றியும், இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு பற்றியும் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். கீழ் வரும் பகுதிகளில் மொழிப் பரிமாற்றத்தைப் பற்றி விளக்கமாகப் பார்க்கலாம்.

'செய்திப் பரிமாற்றம்' என்பது செய்தியை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கோ அல்லது ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவருக்கோ அனுப்பும் முறையேயாகும். மொழியானது சில ஒலிக் கூறுகள், அவற்றின் தொடர்கள் ஆகியவற்றின் மூலம் செய்திகளைப் பரிமாறுகிறது. செய்தி அனுப்பும் முறையிலும் செய்திபெறும் முறையிலும் செய்தியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் அளவுக்கு 'குழுக்குறி' என்று பெயர்.

இக்குழுக் குறிகள் ஒலிக்கூறுகளாகவோ அல்லது அவற்றின் தொடர்களாகவோ அல்லது அவற்றின் திரள்களாகவோ அமைகின்றன. செய்திப் பரிமாற்றத்தில் உள்ள குழுக்குறிகள் பொருளுடையதாக இருப்பினும் பொருளற்றதாக இருப்பினும் அவை அனைத்தும் 'செய்தி' என்றே சொல்லப்படுகின்றன. ஆனால் இவற்றைப் பெற்று, பின் செயல்படுத்தும் போது இவை அனைத்தும் பொருளுணர்த்துவனவாகவே அமைய வேண்டும்.

செய்திப்பரிமாற்றக் கொள்கை

செய்திப்பரிமாற்றக் கொள்கைக்கு வித்திட்டவர் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி C. E ஷானன் என்பவரே ஆவார். கடந்த சில ஆண்டுகளில் இவர் தோற்றுவித்த இச் செய்திப் பரிமாற்றக் கொள்கை மிக விரைவாகவும் வெற்றிகரமாகவும் செவ்வனே வளர்ந்துள்ளது. பல் வேறுபட்ட செய்திப்பரிமாற்ற அமைப்புகளையும் அவற்றின் மூலம் செய்திகளை எப்படி அனுப்புவது, அவ்வாறு அனுப்பப்பட்ட செய்திகளை எப்படிப் பெறுவது என்ற முறைகளையுமே இக் கொள்கை தெளிவாக விளங்குகிறது.

செய்திப் பரிமாற்ற அமைப்பு

செய்திப்பரிமாற்றம் நிகழும் போது அதில் பயன் படுத்தப்படும், ஒரு குறிப்பிட்ட முறையில் அமைக்கப் பட்டுள்ள பொறி (இயந்திரம்), செய்திப் பரிமாற்ற அமைப்பு என்று சொல்லப்படும். செய்திப் பரிமாற்றம்

பல வகையாக பல முறைகளில் நிகழ்கின்றது. இவ் வகை ஒவ்வொன்றிற்கும் செய்திப் பரிமாற்ற அமைப்பு என்று பெயர். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட பொறி அமைப்புக்களால் (இயந்திரங் களால்) நிகழ்கின்றன. இவை அனைத்தும தனித் தனியான செய்திப் பரிமாற்ற அமைப்புக்கள் என்றே சொல்லப்படும். எடுத்துக் காட்டாக தந்தி அனுப்பும் முறை, தொலைபேசி முறை போன்றவைகள் எல்லாம் தனித்தனியான செய்திப் பரிமாற்ற அமைப்புக்களே யாகும்.

விளக்கப்படம் 1 ஒருதனியான செய்திப் பரிமாற்ற அமைப்பை விளக்குகின்றது.

ஒவ்வொரு செய்திப்பரிமாற்ற அமைப்பிலும் ஒரு பிறப்பிடமும் ஒரு சேரிடமும் இருத்தல் வேண்டும். இவை இரண்டையும் 'செய்தி செல்லும் வழி' இணைக் கிறது. செய்தி அனுப்பும் பொறி செய்திகளை இந்தச் செய்தி செல்லும் வழியின் மூலமாகத்தான் அனுப்பு கிறது. செய்தி பிறப்பிடத்திலிருந்து செய்தி அனுப்பும் பொறிக்கு வருகிறது. இங்கிருந்து செய்தி 'செய்தி பெறும் பொறிக்கு' வந்து சேருகிறது (அனுப்பப் படுகிறது). செய்தி அனுப்பும் பொறி இவற்றைக் (செய்தியைக்) குழூக்குறிகளாக மாற்றிச் செய்தி பெறும் பொறிக்கு அனுப்புகிறது. இக்குழூக்குறிகள் செய்தி செல்லும் வழியில் அனுப்பப்படுகின்றன. அதன் வழி இக்குழூக்குறிகள் செய்தி பெறும் பொறியை வந்து அடைகின்றன. செய்தி பெறும் பொறியில்தான் இக் குழூக்குறிகள் அவற்றின் சரி

விளக்கப்படம் :- 1


1
2
3
4
5
பிறப்பிடம்
செய்தி அனுப்பும் பொறி
செய்தி செல்லும் வழி
செய்தி பெறும் பொறி
சேரிடம்
பேசுபவர்
கேட்பவர்
செய்தி
குறியீடு
குறியீடு
செய்தி

யான வடிவங்களுக்கு மாற்றப்படுகின்றன. பின் இவை செய்திகளாகச் சேரிடத்தை வந்து அடைகின்றன. இந்த வகையில் மேற்சொன்னபடி பிறப்பிடம், செய்தி அனுப்பும் பொறி, செய்தி செல்லும் வழி, செய்தி பெறும் பொறி, சேரிடம் ஆகிய ஐந்து உறுப்புக்களும் ஒன்று சேர்ந்த ஒருவகைச் செய்திப் பரிமாற்ற அமைப்பிற்கு 'முழுமையான செய்திப் பரிமாற்ற அமைப்பு' என்று பெயர். ஆகவே மேலே சொல்லப்பட்டுள்ள ஐந்து உறுப்புக்களும் ஒவ்வொரு வகை செய்திப் பரிமாற்ற அமைப்பிலும் நிச்சயம் இருக்கும்.

மொழிப்பரிமாற்றம்

மக்கள் தங்களுக்குள் எண்ணிறந்த கருத்துக்களை, செய்திகளை மொழியின் மூலம் பகிர்ந்து கொள்கிறார்கள். இதுவும் ஒருவகைச் செய்திப் பரிமாற்றமே. இதனைப் பேச்சுப் பரிமாற்றம் என்கிறோம். மொழிப் பரிமாற்றத்தில் முக்கியமாகப் பயன்படுத்தப்படுவது பேச்சு மொழியே ஆகும். எழுத்து மொழியின் மூலமும் பேச்சு மொழியின் மூலமுமே மக்களிடையே செய்திப் பரிமாற்றம் நடை பெறுகிறது என்பதை மறுக்க முடியாது.

விளக்கப்படம் 2 இவ்வமைப்பைத் தெளிவாகக் காட்டுகிறது.

மேலே சொல்லப்பட்ட செய்திப் பரிமாற்ற அமைப்பில் மனித மூளை செய்திப் பரிமாற்றத்திற்குப் பிறப்பிடமாக அமைகிறது. மனிதனின் ஒலிப்பொறி செய்திகளை ஒலிக் கூறுகளாகவோ அல்லது அவற்றின் தொடர்

விளக்கப்படம்:- 2


1
2
3
4
5
பிறப்பிடம்
செய்தி அனுப்பும் பொறி
வழி காற்று
செய்தி பெறும் பொறி
சேரிடம்
பேசுபவர்
கேட்பவர்
ஒலி அலைகள்
மனித மூளை
குறியீடு
குறியீடு
மனித மூளையின் உணர்வுப்பகுதி
மனிதனின் ஒலிப்பொறி
செவி

களாகவோ அல்லது திரள்களாகவோ அனுப்புகிறது. செய்தி அனுப்பும் பொறியின் இச்செயலுக்குக் குழுக்குறிகளை அனுப்பும் முறை என்று பெயர். இவ்வாறு அனுப்பப் படும் செய்தி, (குழுக்குறிகள்) செய்தி செல்லும் வழியான காற்று மண்டலத்தில் செல்லும்போது ஒலி அலைகளாக மிளிர்கின்றன. இந்த ஒலியலைகள் செய்தி பெறும் பொறியான மனிதனுடைய செவியை அடைகின்றன. மனிதனுடைய செவி இவற்றைக் குழுக்குறிகளாகவே பெறுகின்றது. இங்கு செவி செய்தி பெறும் பொறியாக இயங்குகிறது. பிறகு இவை அங்கு உணர்வு அலைகளாக மாற்றப் பட்டு மூளையின் உணர்வுப் பகுதியை அடைகின்றன. மூளையின் உணர்வுப் பகுதி இவற்றைச் செய்திகளாக மாற்றி உணர்கிறது. இதுவே செய்தி சேருமிடமாகும். செய்தி பெறும் பொறியின் இச் செயலுக்குக் குழுக்குறிகளை மாற்றிப் பெறும் முறை என்று பெயர். இம் முறைச் செய்திப் பரிமாற்றத்தையே மொழியியல் அறிஞர்கள் மனித இனத்தின் செய்திப் பரிமாற்ற அமைப்பு என்று சொல்கிறார்கள்.

மனித மொழியில் எழுத்து மொழியின் மூலமும், பேச்சு மொழியின் மூலமும் செய்திகள் பரிமாறப் படுகின்றன. எழுத்து மூலம் செய்திகள் பரிமாறப் படுவதற்கு ஆங்கிலத்தை எடுத்துக் காட்டாகக் கொள்வோம். ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துக்கள் இருக்கின்றன அல்லவா? ஒவ்வோர் எழுத்தும் ஒரு குறிப்பிட்ட செய்தியை அனுப்புவதாக வைத்துக் கொள்வோம். இப்போது இதன் மூலம் இருபத்தாறு

செய்திகள் கிடைக்கும். இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து செய்திகள் அமைகின்றன என்று கொள்வோம்.

இப்போது நமக்கு கிடைக்கும் செய்திகளின் எண்ணிக்கை ஐந்நூற்று எழுப்பத்தாறு வகைகளில் இருக்கும். மூன்று எழுத்துக்கள் சேர்த்துச் செய்திகள் அமைகின்றன என்றால் நமக்குக் கிடைக்கும் எண்ணிக்கை 14976 வகைகளில் இருக்கும். இவ்வாறு கிடைப்பவற்றைச் செய்தி அளவு என்பார்கள். இச் செய்தி அளவுகளைத் துண்டு அல்லது அலகு என்னும் கருத்தால் அளவிடுகிறார்கள்.

துண்டு என்பதை எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்பதைப் பார்க்கலாம். ஒரு செய்திப் பரிமாற்ற அமைப்பின் மூலம் வெளிப்படுத்தப்படும் செய்தியின் அளவு சாதாரணமாக இரு முறைகளில் வெளிப்படுத்தலாம். இதை ஆங்கிலத்தில் **binary unit** என்றும் **binit** அல்லது என்றும் குறிப்பிடுவார்கள்.

மொழிப் பரிமாற்றத்தைக் கணித முறையில் அளவிடும் போது நான்கு முக்கியக் கருத்துக்கள் பயன்படுகின்றன. அவை மொத்தச் செய்தி அளவு, உயர்மட்டச் செய்தி அளவு, செய்தி அளவின் விகிதம் மற்றும் மிகை ஆகும்.

மொத்தச் செய்தி அளவு என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரும் ஒலியன்களால் வெளிப்படுத்தப் படும் செய்தி அளவாகும். உயர்மட்டச் செய்தி அளவு என்பது ஒரு குறிப்பிட்ட மொழியில் பயன்படுத்தப்

படும் ஒலியன்கள் வெளிப்படுத்தக் கூடிய செய்தி அளவாகும். செய்தி அளவின் விகிதம் மொத்தச் செய்தி அளவிற்கும் உயர் மட்டச் செய்தி அளவிற்கும் உள்ள விகிதாசாரமாகும். மிகை என்பது மொத்தச் செய்தி அளவிலிருந்து செய்தியளவின் விகிதா சராத்தைக் கழிக்கக் கிடைக்கும் மீதியாகும்.

மேற்கண்டவற்றைக் கணக்கிடப் பல முறைகள் இருக்கின்றன. முதலில் ஓர் எழுத்து அல்லது ஓரொலியன் அமைப்பின் மூலம் வெளிப்படுத்தப் படும் செய்தியின் அளவைக் கணக்கிடலாம். இரண்டா வது ஈரெழுத்து அல்லது ஈரொலியின் தொடரமைப்பு மூலம் வெளிப்படுத்தப்படும் செய்தியின் அளவைக் கணக்கிடலாம். அல்லது மூன்றெழுத்து அமைப் பின் மூலமோ அல்லது மூன்று ஒலியன்களின் தொடரமைப்பின் மூலமோ வெளிப்படுத்தப் படும் செய்தியின் அளவைக் கணக்கிடலாம். இவ்வாறு செய்தியின் அளவைக் கணக்கிட இம்மூன்று முறை களும் இப்போது கையாளப் பட்டு வருகின்றன.

மேலே கணக்கிடப் பட்ட எண்ணிக்கைகளைக் கொண்டு ஓரொலியின் அமைப்பு, ஈரொலியன் அமைப்பு, மூவொலியன் அமைப்பு ஆகியவற்றின் விகிதாச்சார நிலையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சூத்திரத்தின் உதவியால் கணக்கிடலாம்:

$$p_{(\ )} = {}^{n}/_{N}$$

இங்கு 'n' என்பது ஒரு குறிப்பிட்ட ஒலியனின் மொத்த வருகை எண்ணிக்கையும், 'N' என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் பயன்படுத்தப் படும் ஒலியன்களின் மொத்த எண்ணிக்கையும் குறிப்பதாகும்.

ஒவ்வொரு குறிப்பிட்ட ஒலியனும் வெளிப்படுத்தும் செய்தியின் அளவைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சூத்திரத்தின் மூலம் அறியலாம்.

$$i_{(\ )} = -\log_2 p_{(\ )}$$

இச் சூத்திரத்தில் i என்பது ஒரு குறிப்பிட்ட ஒலியனால் வெளிப்படுத்தப்படும் செய்தியின் அளவையும், p என்பது அந்தக் குறிப்பிட்ட ஒலியனின் விகிதாசார நிலையையும் குறிக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் பயன்படுத்தப்படும் ஒலியன்களால் வெளிப்படுத்தப்படும் மொத்த செய்தி அளவைக் கணக்கிடுதல் அவசியம். இந்த மொத்த செய்தி அளவைக்கணக்கிட

$$I = \sum_{i=1}^{n} p(i) \log p(i)$$

என்ற சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு மொழியில் அல்லது மொழிக்கூட்டில் பயன்படுத்தப்படும் ஒலியன்கள் அனைத்தும் வெளிப்படுத்தக் கூடிய உயர் மட்ட செய்தி அளவைப் பின்வரும் சூத்திரத்தால் அறியலாம்.

$$I^1 = n \log \frac{1}{n}$$

இங்கு (இச்சூத்திரத்தில்) 'n' என்பது ஒரு குறிப்பிட்ட மொழியில் பயன்படுத்தப்படும் ஒலியன்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

மேலே கணக்கிடப்பட்டுள்ள மொத்த செய்தியளவு, உயர்மட்ட செய்தியளவு இவற்றைக் கொண்டு செய்தியளவின் விகிதம், மிகை ஆகியவற்றை அறியலாம்.

1. செய்தியளவின் விகிதம்

$$E = \frac{I}{I^1}$$

இங்கு 'E' என்பது செய்தியளவின் விகிதத்தைக் குறிக்கிறது. I என்பது மொத்த செய்தியளவையும் I^1 என்பது உயர்மட்டச் செய்தி அளவையும் குறிக்கின்றன.

2. மிகை

$$R = (1 - E)$$

இச்சூத்திரத்தில் R என்பது மிகையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மிகை

மிகை என்பது ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியாகக் கணக்கிடப்படுகிறது. மிகை அளவுகளைக்

கொண்டு அம் மொழிகளின் திறன் ஒப்புமையைத் தீர்மானிக்க முடிகிறது. பொதுவாக ஒரு மொழியின் மிகை அளவு மிகுந்தால் அதன் திறன் ஒப்புமை குறை கிறது. மாறுக ஒரு மொழியின் மிகை அளவு குறைந் தால் அம்மொழியின் திறன் ஒப்புமை அதிகரிக்கிறது.

திறன் ஒப்புமை

செய்திகளை வெளிப்படுத்தும் ஆற்றல் மொழிக்கு மொழி, கிளைமொழிக்குக் கிளைமொழி வேறுபட்டுக் காணப்படுகிறது. சில மொழிகள் அல்லது கிளைமொழி கள் குறைந்த அளவு ஆற்றல் உடையனவாகவும் வேறுசில அதிக அளவு ஆற்றல் உடையனவாகவும் உள்ளன. இந்த ஆற்றலை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நமக்கு அம் மொழிகளின் அல்லது கிளை மொழிகளின் திறன் ஒப்புமை தெரிய வருகிறது.

'மிகை'யின் அளவைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட செய்தியை வெளிப்படுத்துவதும் மொழிகளின் திறன் ஒப்புமையையோ அல்லது ஒரே மொழியின் கிளை மொழிகளின் திறன் ஒப்புமையையோ கண்டறிய முடியும். ஒரு செய்தி அனுப்பப்படும் போது அதில் மிகை அளவு அதிகமாக இருந்தால் அதன் திறன் ஒப்புமை குறைகின்றது. ஆனால் அதே செய்தியை அனுப்பும்போது மிகை அளவு குறைந்தால் அதன் திறன் ஒப்புமை அதிகரிக்கிறது.

இதன்படி தெலுங்கில் உள்ள இரு கிளைமொழி களின் திறன் ஒப்புமை ஆராயப்பட்டுள்ளது[1]. அதே போல் ஐந்து திராவிட மொழிகளின் (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு) திறன் ஒப்புமையும் கணக்கிடப் பட்டுள்ளது.[2] இந்த ஆராய்ச்சிக் கணக்கீட்டுக்களின்படி தமிழ் மொழியில் காணப்படும்

By comparing the redundancies of D_1 and D_2 (D_1 stands for standard Telugu and D_2 stands for Coimbatore dialect of Telugu) the relative efficienices of the same are decided. In general if the redundancy is increased, the efficiency of the system falls.

Another type of comparison is based on the lexical items involved. In this we estimate the communicability between the two dialects on the basis of the lexical items common to both the dialects and those peculiar to one dialect only. If the two dialects have many lexical items in common, communicability between them is high and if common items are negligible in number communicability is reduced to a minimum, and the dialects are more like two different languages.

Ref:– C. F. Hockett, *'A Manual of Phonology'* p. 218 [196]

1. K. Karunakaran 'Relative efficiencies of standard Telugu and Coimbatore dialect of Telugu' [unpublished M. A. Thesis submitted to A. U. 1964].

2. Here we estimate the relative efficiencies of the five Dravidian languages viz, Tamil, Malayalam, Telugu,

மிகையின் அளவு மிகவும் குறைந்த ஒன்றாகும். அதாவது (0.24) என்பதாகும். அப்படியெனின் தமிழ் மொழி மற்ற மொழிகளொடு ஒப்பிடும் போது திறன் ஒப்புமையில் சிறந்து விளங்குகிறது. கன்னடம், துளு ஆகிய இருமொழிகளில் காணப்படும் மிகையின் அளவுகள் ஏறக்குறைய சமமாகவே உள்ளன. இம் மொழிகளில் காணப்படும் மிகையின் அளவுகள்

Kannada and Tulu on the basis of the redundancy values. The redundancy values are obtained on the basis of the Mathematical theory of communication applied to these five languages.

List of redundancy values obtained

i) Tamil — 0.214
ii) Kannada — 0.265
iii) Tulu — 0.269
vi) Telugu — 0.29
v) Malayalam — 0.309

The order of efficiency of these five languages is as follows:–

1. Tamil 2. Kannada 3. Tulu 4. Telugu and 5. Malayalam.

Ref : K. Karunakaran 'Lexicostatistics and Information theory as applied to Dravidian', paper presented in the *Seminar on Dravidian Linguistics*–II, Annamalainagar [1969.]

முறையே 0.265-ம் 0.269-ம் ஆகும். இதிலிருந்து இவ் விரண்டு மொழிகளும் ஒரே மாதிரியான திறன் ஒப் புமையுடையனவாக உள்ளன என்பதை அறிகிறோம். மலையாளம், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் காணப்படும் மிகையளவுகள் அதிகரித்துக் காணப்படு கின்றன. இதற்குக் காரணம் இம்மொழிகளில் பயன் படுத்தப்படும் ஒலியன்களால் வெளிப்படுத்தப்படும் உயர்மட்டச்செய்தி அளவு மிக அதிகமாக உள்ளதே யாகும். மேலும் மலையாளம், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் பயன்படுத்தப்படும் ஒலியன்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகும். கீழே கொடுக்கப் பட்டுள்ள வரிசை இவ்வைந்து திராவிட மொழிகளின் திறன் ஒப்புமை வரிசையாகும். 1. தமிழ் 2. கன் னடம் 3. துளு 4. தெலுங்கு 5. மலையாளம்.

1962-ம் ஆண்டில் சில இந்திய எழுத்து மொழி களின் 'திறன் ஒப்புமை' புள்ளிவிவரக் கணக்கீட்டு முறையில் ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ளது.

மொழிக்கூறுகளின் திறன் ஒப்புமை அவ்வவற் றிற்கே உரிய சிறப்புச் சொற்கூறைப் பொறுத்தும் நிர்ண யிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு குறிப்பிட்ட கூறுமொழியில் ஒரு பொருளைக் குறிக்கத் தனிச் சொற் கள் இருக்கலாம். அதே பொருளைக் குறிக்க மற்றொரு கூறுமொழியில் தனிச் சொற்கள் இல்லாமல் இருக் கலாம். அப்போது ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கூறைப் பயன்படுத்தி அப்பொருளைச் (செய்தியை) உணர்த்து கிறோம். இங்கு அதிகரிக்கும் 'மிகை'க்கு ஏற்ப 'திறன்

ஒப்புமை' குறைகிறது. இவ்வகையிலும் திறன் ஒப்புமை ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

இற்றைய நிலையில் உலக எல்லை நாளுக்கு நாள் சுருங்கி வருகிறது. நாம் குறைந்த காலத்தில் நிறைந்த அளவு செயல் படவேண்டியுள்ளது.

இவற்றிற்கு மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது மிகவும் அவசியம். இத்தொடர்பு பெரும் பாலும் மொழிப்பரிமாற்றத்தினாலேயே நடக்கிறது எனலாம். மொழிப்பரிமாற்றத்தில் குறைந்த அளவு சக்தியில் அதிக அளவு பயன்பெற வேண்டுமானால் 'மிகை' குறைய வேண்டும். இதற்குத் 'திறன் ஒப்புமை' அதிகமுள்ள மொழி தேவைப்படுகிறது.

மேலே கண்ட முறை, திறன் ஒப்புமை அதிக முள்ள மொழியை அல்லது கிளைமொழியைத் தேர்ந் தெடுக்கவோ அல்லது மிகையைக் குறைத்துக் கொண்டு ஒரு மொழியின் திறன் ஒப்புமையை அதி கரிக்கவோ நமக்குப் பெரிதும் உதவி புரிகின்றது.

7. எழுத்து முறைகள்

இந்திய மொழிகளுக்குப் பொதுவான எழுத்து முறை வேண்டுமா, வேண்டாமா என்ற வாதப்பிரதி வாதம் சிறிது காலமாக வீரியத்தோடு உயிர்த்தெழுந் திருக்கிறது. பொதுவான எழுத்து முறையாக எந்த எழுத்துமுறையைப் பயன்படுத்துவது என்ற பிரச் சினையும் பெரிதுபட்டிருக்கிறது. இந்நேரத்தில் எழுத்து முறையைப் பற்றிய சில பொதுவான உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு மொழியின் ஒருவகை வெளிப்பாடுதான் எழுத்துமுறை. எழுத்து முறைக்கும் மொழிக்கும் இரண்டறக் கலந்த உறவு முறை இல்லை. மொழிக் கும் எழுத்து முறைக்கும் உடன் பிறந்த உறவு இல்லை என்பதைப் பல கீழ்த்திசை நாட்டு மொழிகளுக்கு மேல்திசை எழுத்து முறையான ரோமன் எழுத்து முறை பொருந்துவதாலும் முற்றிலும் வேருன, பல வகையில் முரண்பாடான ஆப்பிரிக்க மொழிகளை மிக எளிதாக ரோமன் எழுத்துக்களில் இயல்பாக எழுது

வதாலும் தெரிந்து கொள்ளலாம். பொதுவாக மொழியல்லா மற்றக் காரணங்களே எழுத்து முறை அமைவதற்குக் கிழக்கு இந்தியாவின் திபேத்திய சீன மொழிகளுக்கு அடிப்படையாக இருந்திருக்கின்றன. வங்காளம் வைணவம் மணிப்பூரிகள் ஒற்றுமையில் லாமல் ஒவ்வாததாக இருந்தாலும் வங்காள எழுத்து முறையைச் சிக்கெனப் பிடிக்கச் செய்துவிட்டதும், நாடோடிக் கூட்டமாய் வாழ்ந்த காட்டு நாகர்கள் வரலாற்றுப் போக்கினுல் ஆங்கில முறையக் கைக் கொண்டதும் நல்ல எடுத்துக்காட்டுக்களே.

மொழியின் அடிப்படையான இலக்கண அமைப் பைக் காட்டும் கருவிதான் எழுத்து முறை. இதனுல் எழுத்து முறை அம்மொழியின் அடிப்படை அமைப் புக்கு ஏற்றதாகவே இயல்பினுல் அமையும். செயற் கையான எழுத்து முறையும் அவ்வியல்பை அனு சரித்தே அமைய வேண்டும். உண்மையில் இந்நிய திக்கு உட்பட்டு எத்தனே வேண்டுமானுலும் எழுத்து முறைகளேச் செயற்கையாக அமைத்துக் கொள்ள லாம்.

எல்லா மொழிகளும். எழுத்து முறையைக் கொண்டிருக்கவில்லே. சில பண்டு தொட்டே எழுத்து வடிவம் பெற்றவை. சில அண்மைக் காலத்திலே பெற்றிருக்கலாம். மற்றும் பல இன்னும் எழுதப்படா மொழிகளாகவே இருந்து வருகின்றன. பண்டைக் காலந்தொட்டே பழக்கத்தில் இருக்கின்ற எழுத்து வடிவமானுலும் சரி, அண்மையில் ஏற்பட்டவை ஆனு

லும் சரி, முழுக்க முழுக்க அறிவியல் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. என்றாலும் பழக்கத்தினால் அவை அவ்வம் மொழிகளுக்குப் பொருந்துவனவாக அமைந்து விடுகின்றன. முன்னுக்குப் பின் முரண்பாடும் ஒழுங்கான சீரமைப்பும் இல்லாத எழுத்து முறை கூட எழுதுவதற்கும் படிப்பதற்கும் சரியானதாக, எளிதானதாகப் பழக்கத்தினால் அமைகின்றது. அம்மொழிகளைப் பேசுபவர்களுக்கும் எழுத்து முறையில் சிக்கன வடிவங்கள் சரியாகத் தெரியும். அதாவது ஓர் எழுத்திலே சில வேண்டாத பகுதி கூடுதலும் குறைதலும் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. எழுத்திலே எந்த எந்த உறுப்பு மிக இன்றியமையாதன, அர்த்தத்தை மாற்றி அனர்த்தம் விளைவிக்கக் கூடியன என்பதை அம்மொழி பேசுபவர்கள் அறிவார்கள். தமிழ் அகரத்தின் கொண்டைச்சுழிப்பு இல்லாவிட்டாலும் தமிழ் மக்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியும் அல்லவா? அதைப் போலவே எழுத்து வரியில் பிழை இருப்பினும் பொருள் நோக்கி அதைச் சரிசெய்து கொள்வதும் அம்மொழி பேசுகிறவர்களுக்கு முடிகிற காரியமே. ஆனால் ஒவ்வொரு மொழியின் எழுத்து முறையும் ஒரு திட்டவட்டமான ஒழுங்குக்கு உட்பட்டே செல்கிறது என்பதை மறக்கக் கூடாது. அங்கங்கே சிலபல விதிவிலக்குகள் இருந்தாலும் பொதுவாக எல்லா மொழி எழுத்து முறைகளும் திட்டத்திற்கு உட்பட்டே செல்கின்றன் என்று சொல்ல வேண்டும். ஒலி முறைக்கும் எழுத்து முறைக்கும் எவ்வளவோ முரண்பாடுகள் இருந்தும்

ஆங்கிலம்கூட எழுத்துச் சேர்க்கையில் ஒரு திட்ட வட்டமான முறையையே கொண்டிருக்கிறது.

எழுத்து முறை மூன்று வகைப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஒரு வகை. தமிழ், இந்தி போன்ற மொழிகளில் ஒரு வகை. சீனம் போன்ற மொழிகளில் மற்றும் ஒரு வகை. ஆங்கிலம் போன்ற எழுத்து முறையைத் தனி எழுத்து வடிவம் எனலாம். இம்முறையில் பொருளை வேற்றுமைப் படுத்தக் கூடிய இன்றியமையாத ஒவ்வொரு ஒலிக்குறிப்பும் ஓர் எழுத்து உண்டு. தமிழ், அதாவது, முக்கிய ஒலி என்றால் ஓர் எழுத்து இலக்கண முறையில் சென்றால் உயிர் எழுத்து என்றும் மெய்யெழுத்து என்றும்தான் உண்டு. உயிர்மெய் என்று உயிரையும் மெய்யையும் சேர்த்து அசையாக்கி எழுதும் முறை இல்லை. இப்படி அசையாக்கி எழுதும் முறைதான் அசை எழுத்து வடிவம் என்பது. இதில் உயிர், மெய், உயிர்மெய் என்று உண்டு. க, கா, கி என்றபடி விரிந்து செல்வது இம் முறை. மூன்றுவதான முறை சித்திர எழுத்துக்கள். சித்திர எழுத்துக்கள் என்பதைவிடச் சொல் எழுத்து முறை என்பது மிகவும் சரியானது. இம் முறையில் ஒவ்வோர் எழுத்தும் ஒரு சொல்லைக் குறிப்பதாக அமையும். ஆனால் துணையான குறிகளும் இம் முறையில் இருப்பதால் சொற்பிரயோகம் அம்மொழியை இயல்பாகப் பயன்படுத்துபவர்களுக்குச் சுலபமாகி விடுகிறது. சீன மொழியின் எழுத்து முறை இதற்கு நல்ல உதாரணம்.

எழுத்துக்களுக்கும் மொழிகளுக்கும் இரண்டறக் கலந்த உறவு முறை இல்லை என்றாலும் காலப் போக்கில் பண்பட்டுப் பிணைப்பினால் இணையான உறவுமுறை இருப்பதை மறுக்க முடியாது. ஒரு மொழி பழங் காலந்தொட்டே எந்த வகையான எழுத்து முறையைக் கையாண்டபோதும் அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு மிக எளிதாகத் தான் ஆகிறது. இதற்குக் காரணம் பழக்க வழக்கமே. பொதுவாக மொழிகள் இடமிருந்து வலம் நோக்கி எழுதப்படுபவை. உருதுவை எழுதுவது உருது பேசாத மனிதருக்குக் கடினமே, உருது மனிதர் உருதல்லாத பிற மொழி எழுதக் கற்பதும் கடினமே என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

மூன்று முறைகளில் எம்முறை பழங்காலத்திலிருந்து ஒரு மொழியில் பழக்கத்தில் இருக்கிறதோ அம் முறையைக் கையாளுவதில் தவறில்லை. ஆனால் புதிதாக எழுத்து முறை தோற்றம் செய்யப்படுகிற மொழிகளில் தனி எழுத்து வடிவத்தையே மொழியியலார் பரிந்துரை செய்வார்கள். இதற்கு உலகின் பல மொழிகள் இம்முறையில் இருக்கின்றன என்பது மட்டும் காரணமல்ல. அச்சு வேலைகளுக்கும், தந்தி வேலைகளுக்கும், மற்றும் பிற செய்தித் தொடர்புகளுக்கும் தனி எழுத்து வடிவம் மிகவும் பயனுடையதாகத் தெரிகின்றது என்பது மிக முக்கியம். புதிய முறையை உருவாக்கும் போது அம்முறை விஞ்ஞான அடிப்படையில் அமைகிறதா என்று கவனிக்க வேண்டும்; இம் முறையின் மூலமாக விரைவாகவும், நன்றாகவும் எழுதப்

படிக்க வசதி எற்படுமா என்றும் பார்க்க வேண்டும்; ஏற்படுத்தப் போகிற எழுத்து முறை எல்லா மக்களுக்கும் ஏற்றதாகவும் தேசிய உணர்ச்சிக்கு மாறுபடாததாகவும் இருக்கிறதா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அம்மொழியில் சிறிதாக ஆங்காங்கே பழக்கத்தில் இருக்கிற எந்த விதமான புராதன எழுத்து முறையையும் புறக்கணிக்கிற வகையில் அமையக் கூடாது; எல்லாவற்றிற்கும் மேலாக அது மொழியின் இயல்பான அமைப்புக்கு உட்பட்டு அதை வெளிக் காட்டும் கருவியாக அமைய வேணடும்; இல்லையேல் எம்முறையும் பயனில்லைதான்.

ஒரு மொழியின் எழுத்து முறையை மற்றொரு மொழிக்குப் பயன் படுத்துவதில் இரு நிலைகள் உள்ளன. இரணடு மொழிகளுக்கும் பண்டைக்காலந் தொட்டே தனித்தனியாக பழைய எழுத்து முறைகள் இருத்தல்; ஒரு மொழிக்கு இருந்து இன்னொரு மொழிக்கு எழுத்து முறை இராமல் இருத்தல். எழுத்து முறைகள் பண்பாட்டைச் சேர்ந்தன என்று முன்பு சொன்னேம். அதற்கு முன்பே, எழுத்து முறைகள் மொழியின் அடிப்படை அமைப்பைப் பொறுத்தே இருக்கவேண்டும். இரண்டும் மிக மிக இன்றியமையாதவையே. இவ்விரண்டையும் திருப்திப்படுத்துவதாக இருந்தால்தான் மொழியியலார் ஒத்துக்கொள்வார், ஒத்துக்கொள்வதும் ஒத்துக்கொள்ளாததும் வேறு பல காரணங்களைச் சேர்ந்தது. காரணங்கள் நியாயமானவையா இல்லையா என்பதை மொழியியலார் சொல்வதில்லை.

இந்தச் சமயத்தில் இந்திய மொழிகளைப் பற்றிப் பார்ப்பதும் ஏற்றதுதான். இந்தியாவில் பதினைந்து தேசிய மொழிகள் உள்ளன. அவற்றுக்குள் ஒற்றுமை வேற்றுமை இருந்தாலும் பல எழுத்து முறைகள் இருக்கின்றன. இப்பல எழுத்து முறைகளில் இரண்டு வகை உண்டு. முதல் வகையில் தமிழ் மட்டுமே உள்ளது. இரண்டாவது வகையில் மற்ற மொழிகள் எல்லாம் அடங்குகின்றன. திராவிட மொழிகளில் வாயு அழுத்த ஒலிகள், 'ஹ' கர ஒலிகள் அமைப்பிலே முழுக்கப் பொருந்தாவிட்டாலும், தற்பொழுது மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளின் எழுத்து முறைகளில் ஏறிவிட்டன. அத்துடன் பல சொற்களும் அமைந்து அவை நிலைத்த இடம் பெறுகின்றன என்றே சொல்ல வேண்டும். ஆனால் தமிழில் மட்டும் எழுத்து முறையில் மட்டுமல்லாது மொழியமைப்பிலும் வாயு அழுத்த ஒலிகள் முதன்மையான இடத்தைப் பெறவில்லை. தமிழ் மொழிக்காக மலையாள எழுத்து முறையையோ, இந்தி எழுத்து முறையையோ பயன் படுத்துகிறோம் என்று கொள்ளுங்கள். அதில் உள்ள வாயு அழுத்த ஒலிகளையும் ஒலிமிகு ஒலிகளையும் சொல்லிக் கொடுக்காவிட்டாலும்கூடத் தமிழ் மொழியை எழுதும் போது அவ்வொலிகளின் எழுத்துக்கள் எழுதப்படும். அங்கு, பஞ்சு, முண்டு, பந்து, கம்பம் முதலியவற்றில் உள்ள க, ச, ட, த, ப ஆகிய ஒலிமிகு ஒலிகள் ஆகும். அவை தமிழில் முதன்மையானவை இல்லை. அதனால் விஞ்ஞான அடிப்படையில் பார்த்தால் இவற்றிற்கு எழுத்து முறையில் இடமில்லை. ஆனால் பிற எழுத்து முறை

மூலம் எழுதும் போது அந்த மொழியில் இவற்றின் உரிய உண்மையான ஒலி இருப்பதால் அவ்வொலியே எழுதப்படும். சிறிதே ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் கூட மேற்கண்ட சொற்களை ஆங்கிலத்தில் எழுதும்போது முறையே g, j, d, th, b என்பவற்றையே பயன்படுத்துகிறார்கள். அதைப் போலவே பிற இந்திய மொழியைப் பயன்படுத்தினாலும் இதுவே நிகழலாம். அதாவது சிறப்பல்லாத, அடிப்படையில் பொருந்தாத ஒலிகள் எழுதப்பட்டுப் பின்பு நாளடைவில் அவை அலங்காரமாகவோ அல்லது வேறெப்படியோ மொழியில் நிலைத்து விடும். அதைப் போலவே தமிழ் மொழியின் எழுத்துமுறையைப் பிற இந்திய மொழிகளில் பயன்படுத்த முடியாது.

இரண்டாவது, இதுவரை எழுத்து முறை இல்லாத மொழிகளுக்கு எழுத்துருவம் கொடுப்பது ஆகும். இது காலச் சூழ்நிலைகளையும் எழுத்துருவம் கொடுப்பவரையும் பொறுத்தது. ஆனால் மொழியின் அடிப்படை மற்றுமுள்ள (முன்பே குறிப்பிட்டுள்ள) சமூகக் காரணங்களை மனதில் கொண்டே அமைக்க வேண்டும். பொதுவாக உலக அரங்கில் தனி எழுத்து வடிவத்தையே பின்பற்றுவதுடன், அவ்வடிவத்தை ரோமன் எழுத்து முறையிலே குறிக்கும் பழக்கம் இருந்து வருகிறது. உலக ஒலியியல் கழகத்தின் எழுத்து முறையைப் பின்பற்றியே பொதுவாக அமைக்கின்றார்கள். என்றாலும் சிலர் ஆர்வம் மிகுதியாலோ அல்லது வேறெந்த காரணத்தாலோ தங்கள் தங்களுக்குப் பிரியமான எழுத்து முறைகளைப் பயன்படுத்த முற்படுகிறார்கள்.

நல்ல உதாரணமாக 'ஹோ' முதலிய மொழி களுக்கும் நேஃபா மற்றும் நாகநில மொழிகளுக்கும் தேவநாகரி எழுத்து முறையைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதைச் சொல்லலாம். உலக ஒலியியல் கழக எழுத்து முறையை விட்டு இதைப் பயன்படுத்து வது, பிற மொழிக்காரர்கள் இதுவரை இம்மொழியில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சியை அறிந்து கொள்ளத் தடையாகும் என்பதோடு, அம்மொழி பேசுபவர்களே அவர்கள் அறியாமலே அசை எழுத்து முறையைக் கையாள வைப்பதாகும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். பொதுவாக விஞ்ஞான உலகின் சங்கேதக் குறிகள் எப்போதும் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான உருவிலும் கட்டுத்திட்டத்திலும் இருப்பது நல்லதல்லவா?

ஒன்றிரண்டு எழுத்து முறைகளைப் படிப்பதால் திறமை குறைய இடமிருக்கும் என்றும், கற்பதும் கடினம் என்றும் ஒரு நம்பிக்கை பரவலாக இருக்கிறது. இது எவ்வகையிலும் பொருத்தமில்லாதது. எழுத்து முறையைக் கற்பதால் மொழி கற்றதாகாது. உண்மை யில் நம் மொழி ஆசிரியர்கள் செய்யும் பெருந்தவறு எழுத்து முறையைச் சொல்லிக் கொடுத்த பின்பே மொழியைச் சொல்லிக் கொடுப்பதுதான். மொழி கற்பது வேறு; அதற்கென்று தனியான பயிற்சி முறை இருக்கிறது. எழுத்தைக் கற்பதென்பது வேறு; அதற் கென்றும் தனியான பயிற்சிமுறை இருக்கிறது. மொழிபோலவே எழுத்துக்களும் தமக்கென ஒரு சீரான அமைப்பைக் கொண்டிருக்கின்றன. தமிழில்

ஒன்றிரண்டு முரண்கள் இருந்தாலும் பொதுவாக ஒரு விதமான ஒழுங்கிலேதான் உயிர்மெய் எழுத்துக்கள் எழுதப்படுகின்றன. இதைப் போலவே பிறமொழிகளிலும் எழுதப்படுகின்றன. என்றாலும் தாய்மொழியின் எழுத்துமுறை பிற மொழியைக் கற்கும்போது கற்கப்படுகிற மொழியின் எழுத்து முறையைப் பாதிக்கிறது. ஆங்கில எழுத்துக்களைச் சற்று வலப்புறம் நோக்கிச் சாய்த்து எழுத வேண்டும். ஆனால் பெரும் பாலான தமிழ் மக்கள் தமிழ் போலவே குண்டு குண்டாக நேரே எழுதி விடுகிறார்கள். அதைப் போலவே ஆங்கிலேயர்களும், இந்தி மொழிகாரர்களும் பிறரும் தங்கள் எழுத்து முறை போலவே தமிழ் எழுத்தையும் எழுதி விடுகிறார்கள். வட இந்தியாவில் வட இந்தியர்களாலேயே எழுதப்படும் தமிழ் அறிவிப்புப் பலகைகளில் இதைத் தெளிவாகக் காணலாம். இது எழுத்து உருவம் சம்பந்தப்பட்டது. இதைப் போலவே, பிற எழுத்து முறையைப் பயன்படுத்தும் போதும் தாய் மொழிச் சாயையை அம்மொழி மீது ஏற்றி விடுவதும் உண்டு.

தமிழில் தகரம் டகரம் பெற்ற இருவகைத் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதும் போது தமிழ்ச் சாயையைக் காணலாம். டகரத்தைக் குறிக்கப் பெரும் பாலும் d யையும் தகரத்தைக் குறிக்கப் பெரும்பாலும் th ம் பயன்படுத்துகின்றனர். டகரம் இரட்டிக்கும் போது tt, dd பயன்படும் எல்லா இடத்திலும் டகரம் குரல் நிறை ஒலியாகவே இருக்கிறது. இரட்டிக்கும் போது குரலில்லா ஒலியாக இருப்பதால் குரலில்லா

ஒலியான t இரட்டிக்கும் இடத்தில் எழுதப்படுகிறது, அதாவது உணர்கிறவாறே ஆங்கில எழுத்து முறையை எழுதிவிடுகிறார்கள். தமிழ்ச் சாயையை அக்கு வேறுக பிரித்து ஆங்கில மொழி எழுத்து முறையில் விளக்கி விடுகிறார்கள். அத்துடன் வடீ நா ஒலியான தமிழ் டகரத்தை வேறுபட்ட t, d உடன் ஒற்றுமைப்படுத்திவிடுகிறார்கள். தமிழிலே தகரத்தைப் பெரும்பாலும் th என்று எழுதுகிறார்கள். ஆனால் இந்தி முதலியவற்றில் தகரம் t என்றே எழுதப்படுகிறது. th என்பதும் dh என்பதும் பிற h சேர்ந்த எழுத்துக்களும் வாயு அழுத்த ஒலிகளாகவே உச்சரிக்கப்படுகின்றன. தமிழ் th சேர்ந்த எழுத்தை அவர்கள் உச்சரிக்கும் போதானாலும் சரி, think, thing, theatre, thief போன்ற ஆங்கிலச் சொற்களைச் சொல்லும் போதானாலும் சரி th என்பதை வாயு அழுத்த ஒலியாகவே பேசுகிறார்கள். அதாவது தாய் மொழி எழுத்து முனறயை ஆங்கில எழுத்து முறையில் எழுதும் போதுள்ள அனுபவத்தையே ஆங்கிலத்தை உச்சரிக்கும் போதும் திருப்புகிறார்கள். இது தவறல்ல; தவிர்க்க முடியாத நியதியே.

8. மொழிகளைப் பாகுபடுத்தும் முறைகள்

உலகத்தில் பேசப்படும் மொழிகள் மூவாயிரத்துக் கும் மேலானவை என்று குத்து மதிப்பாகக் கணக் கெடுத்திருக்கிறார்கள். இம் மொழிகளைப் பல்வேறு தலைப்புக்களின் கீழ் அடக்குவது பல செய்திகளை நமக்குத் தெரிவிக்கும். எடுத்துக்காட்டாக இந்திய மொழிகள் என்று சொல்லும் போது மேற்சொன்ன மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகளில் ஒரு பகுதி யைத் தனியாகப் பிரித்துவிடுகிறோம். அப்படிப் பிரித்த பிறகு மேலும், திராவிட மொழிகள், ஆரிய மொழிகள், சீன-திபேத்திய மொழிகள், முண்டா மொழிகள் என்று பிரித்துவிட முடியும். இப்படிப் பல வகைகளில் பிரிப் பதால் ஒவ்வொரு பிரிவின் இயல்புகளையும் நாம் தெளி வாக அறிந்துகொள்ள முடியும்.

ஒரு கணக்கிலடங்காச் செய்தியை இவ்வாறு பல தலைப்புக்களின் கீழே கொண்டு வந்து ஆராய்கிற முறை

மொழி இயலுக்கு மட்டும் உரிமையான தன்று. எல்லா அறிவியல் கலைகளிலும் இம்முறையைப் பயன்படுத்தி வியக்கும் படியான முன்னேற்றங்களை அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். உண்மையில் அறிவியல் கலையில் இருந்தே மொழியியல் கலை இம்முறையைக் கடன் வாங்கி இருக்கிறது.

மூவாயிரத்திற்கும்மேலான உலக மொழிகளை எந்த முறையில் பல்வேறுகப் பிரிப்பது? தற்கால மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் குறைந்தது நான்கு வகைகளிலே மொழிகளைப் பிரித்து ஆராய்கிறார்கள். அம்முறைகள் பின் வருமாறு:-

முதலாவது:- குடும்ப அடிப்படையில் மொழிகளைப் பிரிப்பது; திராவிட மொழிக் குடும்பம், ஆரிய மொழிக் குடும்பம், செமிட்டிக் மொழிக்குடும்பம் என்று பல வகைகளில் மொழிகளை இனங்காட்டுவது; இது குடும்ப அடிப்படையில் மொழிகளைப் பிரிக்கும் முறையைச் சேர்ந்தது ஆகும். இந்த முறையின் இன்றியமையாத இயல்பு—நாம் ஒரு குடும்பமாகக் குறிக்கிற மொழிகள் வரறாற்று அடுப்படையில் ஒன்றுக்கொன்று உறவு கொண்டிருக்க வேண்டும். அந்த வரலாற்று முறை உறவும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற முறையிலேயே அமைந்திருக்க வேண்டும். ஆரிய மொழியும், தமிழும் பன்னெடுங்காலமாக ஒன்றுக் கொன்று உறவு கொண்டதாக இருப்பினும், இரண்டு மொழிகளையும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்று சொல்ல முடியாது. அதாவது தமிழும் ஆரியமும் ஒரு

பொதுவான மொழியில் இருந்து தோன்றவில்லை. இரண்டுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகள் பல. அவ்வேற்றுமைகள் மிகவும் அடிப்படையானவை. அவ்வடிப்படையான வேற்றுமைகள் இரண்டு மொழிகளையும் தனியாகவே பிரித்து வைக்கின்றன. ஆனால் தமிழையும், மலையாளத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிற அறிஞர்கள் அவற்றிற்கு இடையிலே காணப்படும் ஒற்றுமைகள் மிகவும் அடிப்படையானவை என்று நிலைநிறுத்துகிறார்கள்; அவற்றிற்கு இடையிலே காணப்படும் வேற்றுமைகள் மேம்போக்கானவையே என்றும் நிலைநிறுத்துகிறார்கள். இவற்றிற்கு இடையில் உள்ள உறவு வரலாற்று முறையானது; மேலும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற உறவும் கொண்டது.

இந்தக் குடும்ப அடிப்படையில் இந்திய நாட்டில் வழங்கும் மொழிகளைப் பிரித்தோம் என்றால் நான்கு மொழிக்குடும்பங்கள் கிடைக்கின்றன. அவை முண்டா மொழிக் குடும்பம், சீன-திபேத்திய மொழிக் குடும்பம், திராவிட மொழிக்குடும்பம், மற்றும் (இந்திய) ஆரிய மொழிக் குடும்பம் என்பவனவாகும். முண்டா மொழிக் குடும்பத்து மொழிகள்— ஆந்திரா, ஒரிசா, பீஹார் மற்றும் வங்கம் முதலிய மாநிலங்களிலே பேசப்படுகின்றன. சோரா, முண்டாரி, சந்தாலி என்கிற மொழிகளும் இக் குடும்பத்தைச் சேர்ந்தவையே. அந்தமானில் பேசப்படுகிற நிக்கோபார் மொழியும் இக் குடும்பத்தைச் சேர்ந்ததே, என்றும் பல ஆராய்ச்சியாளர்கள் கொள்வார்கள். இம் மொழிகளுக்குக் குடும்ப அடிப்படையில் உறவு கொண்டுள்ள

பல மொழிகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பேசப் படுகின்றன. எடுத்துக்காட்டாக வியட்னும் மொழி களையும் கம்போடியா மொழிகளையும் சொல்லலாம். ஆனால் முண்டா மொழிக் குடும்பத்திற்கும், பின் சொன்ன மொழிகளுக்கும் இடையே உள்ள உறவு முறைகள் இன்னும் தெளிவாக அறுதியிடப்படவில்லை.

முண்டா மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவரே முதலில் இந்தியத் துணைகண்டத்துக்குள் வந்தனர் என்பார் கிரியர்சன் என்ற அறிஞர். ஆனால் இவை யனைத்தும் யூகங்களே அல்லாமல் உண்மையில், கியர்சனின் கருத்து உண்மைக்கு மாறானது என்று தக்க ஆதாரங்களோடு அழுத்தமாக வாதாட முடியும்.

கியர்சனின் கருத்துப்படி முண்டா மொழி பேசு பவர்களுக்குப் பிறகு சீன-திபேத்திய மொழிக் குடும் பம் வருகிறது. செய்தி இதழ்களில் பலமாக அடிபடும் நாகர்களுடைய மொழிகளும், மணிப்புரி மொழியும், மிசோ மொழியும் அதைச் சார்ந்த பல்வேறு மொழி களும் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பேசப்படு கின்ற சீன திபேத்திய மொழிக் குடும்பமாகும். இக் கிழக்குப் பகுதி மொழிகளை திபேத்திய-பர்மா மொழி கள் என்று சொல்லுகிறோம். பர்மிய மொழிக்கும் இவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நேபாள பகுதியிலும், இமாசலப் பிரதேசத்திலும் பேசப்படும் மொழிகளும் சீன-திபேத்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தனவையே. இம் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும்

மொழிகளின் எண்ணிக்கையும்; அவைபரவி இருக்கிற நிலப் பரப்பும் பெரிய அளவே என்று சொல்ல வேண்டும்.

கிரியர்சனின் கருத்துப்படி மூன்றாவது இடம் பெறும் மொழிக் குடும்பம் திராவிடமொழிக் குடும்பம் ஆகும். இந்தியாவின் தென் மாநிலங்களில் மட்டுமில்லாது வடநாட்டு மாநிலங்களில் பலவற்றிலும் திராவிட மொழிகளைப் பேசுபவர்கள் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகிறார்கள். பல நூறாயிரமக்கள் 'கோண்டி' என்னும் மொழியை — திராவிட மொழியை வடநாட்டில் பேசுகிறார்கள். அதேபோல் 'பிராகுயி' மொழியும் வடநாட்டில் பேசப்படுகிறது. இவையும் இன்னும் பல செய்திகளும் நம் எல்லாருக்கும் தெரியும்.

இத்திராவிட மொழிகளுக்கும் பிற மொழிக்குடும்பங்களுக்கும் உள்ள உறவு முறைகள் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உலவுகின்றன. வெளிநாட்டு அறிஞர்கள் பலர் திராவிட மொழிகளுக்கும் ஃபின்னோ – உக்ரிக் மொழிக் குடும்பத்திற்கும் தொடர்பு உண்டு என்றும் இரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். ஆங்கிலேய அறிஞரான பர்ரோவும் ருசிய அறிஞரான ஆண்ட்ரோனேவும் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ஆனால் நம் நாட்டு அறிஞர்களில் பலர் திராவிட மொழிகளுக்கும் பிற மொழிக் குடும்பங்களுக்கும் குடும்ப உறவு அமைந்ததில்லை என்றே கருதுகிறார்கள். இக் கருத்துக்கள் யாவும் யூகங்களே; இறுதியான முடிந்த முடிவுகள் என்று சொல்லமுடியாதன.

இந்திய ஆரிய மொழிகள் இந்தியாவின் வட மாநிலங்களில் பேசப்படுகின்றன. இந்தி, மராத்தி, குசராத்தி, வங்காளி, பஞ்சாபி, ஓரியா முதலிய மொழிகளும் இன்னும் பலவும் அவற்றின் தாயான வடமொழியும் இம்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையே.

இம்மொழிக்குடும்பத்திற்கு வெளிஉறவு தெளிவாக இருக்கிறது. ஐரோப்பிய, பெர்சிய மொழிகளைச் சேர்ந்தவையே இக் குடும்ப மொழிகளும். பழங்கால இலத்தின், கிரேக்க மொழிகளும் இவற்றோடு நெருங்கிய உறவு கொண்டவையே. அறிஞர்கள் பலர் இம்மொழிக்குடும்பத்தின் உறுதியான, வெளிப்புற உறவு பற்றியும், மேலும் பல காரணங்கள் கொண்டும், இம்மொழிக்குடும்பம் பன்னெடுங்காலத்திற்குமுன் இந்தியாவில் நுழைந்தது என்று சொல்கிறார்கள். மற்றுமொரு முக்கிய இயல்பையும் மனதிலே கொள்ள வேண்டும். முண்டா, திராவிட, சீன – திபேத்திய மொழிக்குடும்பங்களில் மட்டுமே பழங்குடி மக்கள் பேசும் மொழிகள் இருக்கின்றன; (இந்திய) ஆரிய மொழிக்குடும்பத்தில் பழங்குடி மக்கள் பேசும் மொழி இருப்பது விவாதத்திற்கு உரிய செய்தி ஆகும்.

மொழிகளைப் பாகுபடுத்துவதில் பயன்படும் இன்னொரு முறை மொழிகள் பரவியிருக்கும் நிலப்பரப்பைச் சேர்ந்தது. ஆப்பிரிக்க மொழிகள் என்ற சொற்றொடரை நாம் ஆப்பிரிக்கக் கண்டத்தில் பேசப்படும் எல்லா மொழிகளையும் குறிக்கப் பயன்படுத்துகிறோம். ஆசிய மொழிகள் என்றதும் ஆசியாவில்

பேசப்படும் எல்லா மொழிகளையும் உலகத்தின் பிற மொழிகளில் இருந்து பிரித்து விடுகிறோம். ஆப்பிரிக்க மொழிகள் அனைத்தும் ஒரேமொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை அல்ல; அதைப் போலவே ஆசிய மொழிகளும் ஒரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தன அல்ல என்பதையும் நாம் அறிவோம். அச்சொற் றொடர்கள் அவை வழங்கப்படும் நிலப்பரப்பை ஒட்டியே அழைக்கப்படுகின்றன. இவ்வாறு மொழிகளைக் கூறுவதற்கும் ஒரு வரன்முறை உண்டு; மொழி இயலில் ஆப்பிரிக்க மொழிகள், ஆசிய மொழிகள் என்று மிகவும் பரந்த அளவில் குறிப்பதோடு, இந்தியமொழிகள், இந்தோனேசிய மொழிகள் என்பன போல — நாடுகள் குறித்தும் வழங்குவார்கள்; இப்படிக் குறுகிய எல்லையைக் குறிக்கும்போது அப்படிக் குறிக்கப்படுகிற மொழிகளுக்குள் வழங்கும் நிலப்பரப்பு போக, அமைப்பு முறைகளில் ஒற்றுமை இருக்கவேண்டும்; அப்படிப்பட்ட ஒற்றுமை இருந்தாலேயே மேற்கண்ட சொற்றொடர்களைப் பொருள் உள்ளதாகப் பயன்படுத்தலாம்.

இந்திய மொழிக் கூட்டங்களைக் குறிக்க (Indic) இண்டிக் என்ற சொல்லை ஆங்கிலத்தில் பயன்படுத்துகிறார்கள். இது ஆரிய மொழிக்குடும்பத்தையோ, திராவிட மொழிக்குடும்பத்தையோ குறிக்காமல் இந்திய — மொழிகள் அனைத்தையும் நிலப்பரப்பை ஒட்டிக் குறிக்கும். இப்படிக் குறிப்பதில் பொருள் இருக்கிறது. இம்மொழிகள் பலவகைகளில் வேறுபட்டுத் தனித்தனி மொழிக்குடும்பமாக இருந்த

போதிலும் ஒன்றுக்கொன்று பல அமைப்பு முறைகளில் ஒற்றுமையுடன் இருக்கின்றன. தமிழிலே எழுவாய் முதலிலும் செயப்படுபொருள் அடுத்தும் அதன் பின் பயனிலையும் வருவது வழக்கம். இதே முறை (இந்திய) ஆரிய மொழிகளிலும் இருப்பதுடன், முண்டா மொழி களிலும் வருகின்றது. இதற்கு என்ன காரணம் சொல்ல முடியும்? அவை வேறு வேறு மொழிக்குடும்பங்களாக இருந்தபோதிலும் பேசும் நிலப்பரப்பு ஒன்றுக் கொன்று அருகே இருப்பதால், தொன்றுதொட்டுத் தொடர்பு செழித்துக் கொண்டு கொடுப்பு நடை பெற்றிருக்கிறது என்றே சொல்ல முடியும். இப்படி நிலப்பரப்பின் அடிப்படையில் நாம் இந்திய மொழி களின் பொதுவான இயல்புகளைக் கண்டுகொண்டு பிற நிலப்பரப்பு மொழிகளோடு ஒப்பிட்டு மொழிகளைப் பிரிக்க முடியும். எடுத்துக்காட்டாக எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற முறைமை இந்திய மொழிகளுக்குப் பொதுவானவை என்று கண்டோம். இவ்வுண்மையை ஐரோப்பிய மொழியான ஆங்கிலத் தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். எழுவாய் முதலிலும், பயனிலை அடுத்தும், செயப்படுபொருள் கடைசியிலுமே வருவது ஆங்கில வழக்கம். பெரும்பாலான ஐரோப் பிய மொழிகளின் இயல்பு இத்தகையதே.

இரண்டாவது — இந்திய மொழிகள் என்றதும் சீன-திபேத்திய மொழிக்குடும்பத்தையும் சேர்த்துக் கொள்வதாக ஆகிறது. ஆனால் அது அவ்வளவாகப் பொருந்துவதில்லை என்பதே இங்கு சொல்லப்படும் கருத்தாகும். மற்ற இந்திய மொழிகளுக்கும் சீன

திபேத்திய மொழிகளுக்கும் இடையே தொடர்பு பல, ஒற்றுமைகள் பல இருப்பினும் அவ்வொற்றுமைகள் திராவிடத்திற்கும் ஆரியத்திற்கும் உள்ள ஒற்றுமை போலவோ, திராவிடத்திற்கும், முண்டாவிற்கும், ஆரியத்திற்கும் இடையில் காணப்படும் ஒற்றுமை போலவோ மிகப் பரந்த அளவில் ஆனதில்லை.

சீன திபேத்திய மொழிக்குடும்பம் பேசப்படுகின்ற நிலப்பரப்பை உற்று நோக்கினால் அவை ஆற்றெழுக்குப் போல அமைந்திருப்பதைக் காணலாம். அப்பரப்பு கிழக்கு ஆசிய நாடுகளோடு சேர்ந்தே போகிறது. தாய்லாந்து, பர்மா, கம்போடியா, லாவோஸ் முதலிய நாடுகளில் பேசப்படும் பல மொழிகளும், சீன மொழிகளும் சேர்ந்து ஒரு தனி மொழிக் குடும்பமாகவும், நிலப்பரப்பு இயல்பாகவும் அமைகின்றன. திபேத்திய மொழிகளும், பூட்டான், சிக்கிம், நேபாளம் (நேபாளியும் அது தொடர்ந்த பிறவும் தவிர்த்து) ஆகிய பகுதிகளின் மொழிகளும், நாகர்நாடு, மணிப்பூர், அசாமின் பல பகுதிகள், நேஃபா முதலிய பகுதிகளின் மொழிகளும் இப்பெரு நிலப்பரப்பைச் சேர்ந்தவையே. இப்பரப்பிலே மொழிக்குடும்பமும், நிலப்பரப்பும் ஒன்றுக்கொன்று பின்னிவிடுகின்றன. எந்த அளவுக்கு இந்திய நாட்டின் சீன-திபேத்திய மொழிகள், பிறநாட்டுச் சீன-திபேத்திய மொழிகளில் இருந்து வேறுபடுகின்றன என்பது இன்னும் உறுதியாகவில்லை. ஆனால் அண்மையில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சியின் படி பார்த்தால் ஆரிய மொழிகளோ, திராவிட மொழிகளோ முண்டா மொழிகளைப் பாதித்து உள்ள அள

வுக்குச் சீன-திபேத்திய மொழிகளோப் பாதிக்கவில்லை என்றே தோன்றுகிறது. இம்முடிவு மிகப்பெரிய அளவில் நாகர் மொழிகளுக்கும், குக்கி-சின் மொழிகளுக்கும் பொருந்தும்.

இந் நிலப்பரப்பு அடிப்படையில் மொழிகளைப் பிரிப்பது குடும்ப அடிப்படையில் மொழிகளைப் பிரிக்கவும் பல நேரங்களில் பயன்படும் ஓர் எளிய எடுத்துக் காட்டாகப் பலுசிஸ்தானத்தில் பேசப்படும் பிராகூய் மொழியை எடுத்துக் கொள்வோம். தென்னிந்திய திராவிட மொழிகளுக்கும் பிராகூய்க்கும் உள்ள ஒற்றுமை அறிஞர்களால் நிறுவப்பட்டிருக்கிறது. என்றாலும் இவ்வொற்றுமையை மிக எளிதிலே நாம் கண்டு கொள்ள முடியாது. திராவிட மொழி தவிர்த்துப் பிற மொழிக் குடும்பங்களோடும் ஒற்றுமையை நிறுவ முயலலாம். என்றாலும் பேசுகிற நிலப்பரப்பு ஆரிய மொழிகளோடும், திராவிட மொழிகளோடும் இணைந்து நிற்கிறது. இரண்டோடும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆரிய மொழிகளோடு உள்ள ஒற்றுமையைவிட, திராவிட மொழிகளோடு உள்ள ஒற்றுமை தெள்ளத் தெளிவாகிறது. இவ்வாறு சிக்கல் அவிழ்ப்பதில் நிலப்பரப்பு முறையும் பயன்படுகிறது.

அதுபோக ஒரு மொழிக்குள்ளேயே நிலப்பரப்பு முறை பொருள் நிறைந்ததாகவும் அமையும். சென்னைத் தமிழ், நெல்லைத் தமிழ் என்பன தமிழ் மொழியின் பேச்சு வழக்குகளே என்றாலும் இரண்டுக்கும் இடையே உள்ள ஒற்றுமையும் வேற்றுமையும் பொருள்

நிறைந்தவை. இவ்வியல்புகளே நிலப்பரப்பில் பிரித்துக் காட்டுவது தெளிவாக்குகிறது.

மொழிகளைப் பிரிப்பதற்குப் பயன்படும் மூன்றுவது முறை சமுதாய மொழியியல் முறையாகும். இம்முறையில் நான்கு இயல்புகளை அளவு கோலாகப் பயன்படுத்தி உலக மொழிகளை ஏழு வகையாக மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் பிரிக்கின்றனர். முதலாவது அளவுகோல் — ஒரு மொழியின் வழக்கு பலகாலமாக இருக்கிறதா அல்லது திடீரென்று முளைத்து விட்டதா என்பது. மனித மொழிகள் எல்லாவற்றிற்கும் வரலாறு உண்டு. இவை இருக்கின்ற நிலை, வரலாற்றுச் சேர்ந்ததே. ஆனால் சில செயற்கை மொழிகளை எடுத்துக் கொள்ளுங்கள். சுரா என்பது நியூயார்க் அறிஞர் ஒருவர் படைத்திருக்கிற செயற்கை மொழி. அது முந்திய காலத்தில் பேசப்படவில்லை. அது திட்டமிடப்பட்டு முளைத்திருக்கிற செயற்கை மொழி.

இரண்டாவது அளவு கோல் — ஒரு மொழி நிலை நிறுவப்பட்டதா இல்லையா என்பது. பள்ளிச் சிறுவர்கள் ககரத்தைக் கொண்டும், இகரத்தைக் கொண்டும் திடீர்திடீரென்று தங்களுக்குள் மறைவு மொழிகள் படைத்துக் கொள்கிறார்கள். ஹவாய், மெலனேசியா, தென் அமெரிக்கத் தீவுகள் பலவற்றில் ஆங்கிலமும் மற்றுமொரு வட்டார மொழியும் சேர்ந்து புதிய வணிக மொழிகள் தோன்றி இருக்கின்றன. இவை அனைத்தும் இயற்கையாக அமைந்துள்ள மொழிகளில் இருந்து பல வகைகளில் மாறுபடுகின்றன

— இவற்றிற்கு இயற்கை மொழியில் அமைந்து காணப் படுகிற நிலைத்த இயல்பு இல்லை; யாரும் இவற்றைத் தாய் மொழியாகப் பேசுவதில்லை; சீரான அமைப்பும் இருப்பதில்லை; பேசுபவர் நிலைக்கும், தேவைக்கும் தகுந்து மாறித் தோற்றம் அளிப்பது பொதுவாக இயற்கை மொழிகளைவிடப் பெரிய அளவில் இம்மொழி களில் காணப்படும்

மூன்றாவது அளவு கோல் — மொழிகள் இயங்கும் தன்மை வாய்ந்தனவா என்ற அடிப்படை ஆகும். எல்லாருக்கும் தெரிந்த எடுத்துக்காட்டான வடமொழி யையும் தமிழையும் எடுத்துக் கொள்வோம். வட மொழி வழக்கு இழந்த மொழி; அப்படியே யாராவது வலியப் பேசினாலும் அதைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுபவர் இல்லை. தமிழோ பேச்சு வழக்கில் இருக்கும் மொழி என்பதோடு அதைத் தாய் மொழி யாகக் கொண்டுள்ளவரும் இருக்கின்றனர். இதே அடிப்படையில் பார்த்தால் பழங்கால இலத்தின், கிரேக்கம் முதலிய மொழிகளுக்கு இயங்கும் தன்மை இல்லை என்றாகிறது.

நான்காவது அளவு கோல் — ஒரு மொழியின் சொற்களும் இலக்கண அமைப்பும் அம்மொழியின் முந்திய நிலையை ஒட்டி நிகழ்வதா இல்லையா என்பது. தமிழ் மொழியின் இன்றைய இலக்கண அமைப்பும் சொற்களும் பல வகைகளில் தொல்காப்பியர் காலத் தில் இருந்து மாறுபட்டாலும், இன்றைய சொற்களை யும், இலக்கண அமைப்பையும் முந்திய நிலையான தொல்காப்பியர் காலத்தோடு இயற்கையாக,

இயல்பாக ஒட்டிக்காட்டிவிட முடியும். மேலும் இரண்டு நிலைக்கும் ஒரு வரன்முறையான தொடர்பையும் நிறுவிவிட முடியும். ஆனால் நாம் முன்பு சொன்ன ஹவாய் — ஆங்கில மொழியை எடுத்துக்கொள்ளுங்கள். ஹவாயன் மொழிக்கும் இந்த மொழிக்குமோ, ஆங்கில மொழிக்கும் இந்த மொழிக்குமோ வரையிடப்பட்ட, திட்டவட்டமான, தெளிவான முந்திய நிலையோ, இயல்பான, இயற்கையான, தொடர்போ இல்லை; அத்தொடர்பை எடுத்துக் காட்டிவிட முடியாது.

மேற்கண்ட அளவுகோல்களை வில்லியம். ஏ. ஸ்டுவர்ட் (1962 : 15–19) என்பார் விளக்குகிறார். அவருடைய அளவுகோல்களைப் பயன்படுத்தி, எடுத்துக்காட்டாகப் பின்வரும் அட்டவணையில் தெரிந்த மொழிகள் சிலவற்றைப் பிரித்துக் காட்டலாம்.

இந்த அட்டவணைக்கு முடிந்த முடிவுகளை ஏற்றிவிடக் கூடாது. பல மொழிகள் பல்வேறு நிலைகளில் அமையலாம். மலையாள நாட்டு யூதர்களுக்கு யூதமொழி (எபிரேயம்) வெறும் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் மொழிதான்; ஆனால் யூத நாட்டில் வாழ்பவருக்கோ அதே மொழி நிறுவல் நிறைந்த மொழியாகி விடுகிறது. மேலும் இப்பிரிவுகளுக்குள் உயர்வு தாழ்ச்சி கற்பிப்பது அறிவியலுக்குப் புறம்பான செய்தி. மேலே கண்ட அட்டவணையைக் கவனித்துப் பார்த்தால் என்னென்ன வகைகளுக்கு என்னென்ன இயல்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும்.

வரலாறு	நிறுவனம்	இயங்கு தன்மை	சீர்மை	வகை	எடுத்துக்காட்டு
+	+	+	+	நிறுவல்	தமிழ்
+	+	−	+	செம்மொழி	வடமொழி
+	−	+	+	வட்டார மொழி	தமிழ் நாட்டில் தெலுங்கு
+	−	+	−	இயற்கையான செயற்கை மொழி	புது மெலனேசியன்
+	−	−	−	வணிகமொழி	ஹவாய் வணிக மொழி
−	+	−	±	செயற்கை மொழி	சரார
−	−	−	±	ஓரோ ஓர் (marginal)	வீட்டுக்குள் மட்டும் பேசுகிற மொழி

மொழிகளைப் பிரிப்பதில் பயன்படும் நான்காவது முறை மொழிகளின் வரலாற்றுத் தொடர்பையோ உறவையோ, அவை வழங்கும் நிலப்பரப்பையோ, அவற்றின் சமுதாய இயல்புகளையோ கணக்கில் கொள்ளாமல், மொழிகளின் அமைப்புகளையே, அவ் வமைப்புக்களின் இயல்பையே கணக்கில் கொள் கிறது. எடுத்துக்காட்டாக, 'தாய்' மொழியின் சொற்றொடர் அமைப்பையும் ஆங்கில மொழியின் சொற்றொடர் அமைப்பையும் ஒப்பிட்டு ஆராய்ந்து இரண்டும் ஒன்றுபட்டால் ஒரு குழுவின் கீழ்க்கொண்டு வருவது. இப்படி ஒன்றுபடுவது தற்செயலான ஒற்றுமையாகவும் இருக்கலாம். மேற்சொன்ன வர லாறு முதலிய காரணகாரியங்கள் எதையும் கருதாமல் இப்பிரிவு முறை ஆராய்ச்சி செய்யும்.

மொழியின் அமைப்பில் ஒலிகள் இருக்கின்றன; அவ்வொலிகள் சொற்களாக அமைகின்றன; சொற்கள் சொற்றொடராக அமைகின்றன; அச்சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பொருள் உண்டு; இவை போக ஒலிக்கின்ற முறையிலேயே ஒரு சொல்லுக்குப் பல பொருள் தர முடிகிறது; மேலும் இயற்கை ஒலிக் குறிப்புக்கள் பல — ளொள் ளொள் போன்றும், கா கா போன்றும் சடசட, மடமட போன்றும் — மொழியிலே பயன்படுகின்றன. இவ்வியல்புகளின் அடிப்படையில் உள்ள ஒற்றுமைகளை நோக்கி மொழிகளைப் பலவாறு பிரிக்க முடியும்.

இந்தியாவில் பேசப்படும் மொழிகளை ஒலி அடிப்படையில் பாகுபடுத்தினால் தமிழ்மொழி ஒரு

புறமும், மற்ற மொழிகள் எல்லாம் இன்னொரு புறமும் அமையும் — காற்றழுத்த (aspirated) ஒலிகள் தமிழில் இல்லை, மற்ற எல்லா இந்திய மொழிகளிலும் உள்ளன என்று சொல்லி விடலாம். இவ்வொலியியல் அடிப்படையிலேயே இன்னும் பல பிரிவுகளைச் செய்து விடலாம். பஞ்சாபி, சீன-திபேத்திய மொழிகளோடு சேர்ந்து ஒரு குழுவாக அமையும். மேலும் அசைச் சொற்கள் அமைகின்ற முறையைக் கவனித்தால் தமிழும், குக்கி-சின் மொழிகளும் ஒரு குழுவாகத் தோன்றும் - இவ்விரண்டு வகை மொழிகளிலும் சொல்லுக்கு முதலில் இருமெய்யெழுத்துக்கள் வருவதில்லை என்று (தற்காலிகமாகச்) சொல்லலாம்.

சொல்லியல் அடிப்படையில் பகுத்தாலும் பல பிரிவுகளைச் செய்துவிட முடியும் — தமிழும் இந்தியும் ஒரு குழுவாகத் தோன்றும் — வினையின் இறுதியில் பால் குறிக்கப்படுவதால். ஆனால் மலையாளமொழி தனிக்குழுவாகவே இயங்கும். முண்டா மொழிகளும் இந்தி முதலிய மொழிகளும் குக்கி-சின் முதலிய மொழிகளும் இன்னும் பிறவும் மூன்றும் இடத்தில் பால் குறிப்பதில்லை; தமிழிலோ அது கட்டாயம். முண்டா மொழிகள் மற்ற எல்லா மொழிகளிடத்தில் இருந்தும் வேறுபடுகின்றன — முண்டா மொழிகள் சிலவற்றில் விகாலம் காட்டுவதோடு அமையாது செயப்படுபொருளையும் காட்டும் முறையும் இருக்கிறது.

சொற்றொடர் அமைப்பின் அடிப்படையில் மொழிகளைப் பிரித்தோம் என்றால் திராவிட மொழி

களும், இந்திய-ஆரிய மொழிகளும் ஒரே குழுவைச் சேர்ந்து விடலாம். எடுத்துக்காட்டாக பெயரடை தமிழில் பெயருக்கு முன்பு வருவது வழக்கம். அது போலவே இந்தி முதலிய மொழிகளிலும் வரும். ஆனல் முண்டா மொழிகளிலும் திபேத்திய-சீன (பர்மிய) மொழிகளிலும் பெயரடை பெயருக்குப் பின்னே வரும் வழக்கம் இருக்கிறது. இதன் அடிப்படையில் பின் சொல்லப்பட்ட இரு மொழிக் குடும்பத்தையும் ஒரு குழுவாகக் கொள்ளலாம். தமிழிலும் இந்தியிலும் (பொதுவாக) விஜை த்தொடரில் காலம் காட்டும் விகுதி யோடு பால் காட்டும் விகுதிகளும் வருகின்றன. ஆனல் குக்கி-சின் மொழிகளில் பால்காட்டும் விகுதிகள் வருவதில்லை. அதற்குப் பதிலாக இடமே காட்டப்படும்.

பொருளின் அடிப்படையிலும் மொழிகளைப் பிரிக்கலாம். மொழியின் அமைப்புக்கேற்றவாறு அது தெரிவிக்கின்ற முறைலேயே நாம் உலக நடப்புக்களை அறிகிறோம், உணருகிறோம், காண்கிறோம்என்று வோர்ஃப் என்ற அறிஞர் கருதினர். அது உண்மை யாகுமானல் (இல்லை என்பதே தற்காலக் கொள்கை) நாம் பொருளின் அடிப்படையில் மொழிகளைப் பிரிக் கலாம். அப்படியே உண்மை இல்லாவிட்டாலும் எண்ணுப் பெயர்களின் துணைகொண்டு மொழிகளைப் பலவாருகப் பிரிக்க முடியும்.

மேற்கண்டவை நான்காவது முறையின் சில பகுதிகள். இந்த முறை மற்ற மூன்று முறைகளைப் போல் அல்லாமல் மொழி அமைப்பையே கொண்டு மொழி

களைப் பிரிப்பது என்று முன்பே சொன்னேம். அதிலி ருந்து ஆராய்ச்சியின் பொருள் — ஆராய்ச்சிக்கு உட் படும் பொருளின் எல்லைக்கோடு நன்றாகத் தெளிவாகக் கிழிக்கப்பட்டுள்ளது என்று தோன்றும். அப்படித் தெளிவாக வரையறுக்கப்பட்டுவிடுவதால் இம்முறை யின் முடிவுகள் மிகத் தெளிவானதாகவும், அறிவியல் அடிப்படையில் தகுதிசிறந்ததாகவும் தோன்றும். ஆனால் நடை முறையில் அமைப்பை விளக்குவதிலும், ஒற்றுமை வேற்றுமைகள் காண்பதிலும் ஆராய்ச்சி யாளர் பலவாறுகக் கருத்து வேற்றுமை கொள்கிறார்கள். இந்த உண்மை நிலையை நாம் எப்போதும் மனதில் கொண்டபடியேதான் நமக்குக் கிடைக்கும் முடிவுகளை எடைபோட வேண்டும்.

இதுவரை மொழிகளைப் பிரிப்பதில் நான்கு வகை களைக் கண்டோம். முதல் முறையாகக் குடும்ப அடிப்படையில் பிரிப்பதையும், இரண்டாவதாக நிலப் பரப்பு அடிப்படையில் பிரிப்பதையும், மூன்றுவதாகச் சமுதாய மொழியியல் கருத்தைச் சார்ந்து பிரிப்பதை யும், நான்காவது மொழி அமைப்பில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமை குறித்துப் பிரிப்பதையும் கண்டோம். மேலும் அவ்வம் முறைகளின் இயல்பு களையும் கண்டோம்.

இறுதியாக இரண்டு செய்திகளைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். மேற்கண்ட நான்கு முறைகளும் தனித்தனியாக ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை யாக இயங்குவதில்லை. ஒன்றின் முடிவுகள் இன் னொன்றுக்குத் துணைபுரியலாம். எடுத்துக்காட்டாகக்

குடும்பமுறையின் முடிவுகளை உறுதிப்படுத்தவோ, விளக்கவோ, நிலப்பரப்பு முறையும், மொழி அமைப்பு முறையும் பெரும்பாலும் பயன்படும். இரண்டாவது இம் முறைகளின் அடிப்படையில் காணப்படும் முடிவுகளை உயர்வு தாழ்வு என்ற கண்ணோட்டத்தில் அணுகக் கூடாது. மொழிகளை இவ்வாறு பிரிப்பது மேற்கொண்டு செய்திகளை விளங்கிக் கொள்வதற்கும் விளக்கிக் கொள்வதற்கும் பயன்பட வேண்டும்; மொழிகளுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கு அறிவியல் முறையைப் பயன்படுத்த முடியாது.

9. கிளைமொழியியல்

மொழியால் மனிதன் சிந்திக்கிறான்; மொழியால் மனிதன் பேசுகிறான்; மொழியால் மனிதன் எழுதுகிறான். இம் மூன்றுமே மொழியாராய்ச்சிக்கு மிகவும் முக்கியம்தான். பேசுவதற்கு முந்தியது சிந்தனை; பேச்சுக்குப் பிந்தியது செயல்; செயலுக்கு அடுத்தது மனிதனின் மற்ற சிந்தனைகள். ஆகையால் மொழி ஒரு சங்கிலித் தொடர்புச் செய்கை. இச் சங்கிலித் தொடர்புச் செய்கையில் நடு நாயகமானது பேச்சு. அந்தப் பேச்சு ஒலிவடிவமானது. பல மொழிகள் பலவகை ஒலிகளை உடையனவாக இருக்கின்றன. பல மக்கள் பலவகையான ஒலிகளை உச்சரிக்கிறார்கள். ஒரேமொழி பேசும் மக்கள்கூட ஓர் ஒலியை ஒரே விதமாக உச்சரிப்பதில்லை. ஒரு மனிதன்கூட ஓர் ஒலியை இருமுறை நூற்றுக்கு நூறு ஒப்புமையோடு உச்சரிப்பதில்லை.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு தனி மனிதனுல் பேசப்படும் பேச்சு வழக்கிற்கு தனிமனிதப் பேச்சு

வழக்கு என்று பெயர். அதேபோல ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்களாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்தவராலோ பேசப்படும் பேச்சுவழக்கிற்குக் கிளைமொழி என்று பெயர். ஒருதனிமனிதனால் பேசப்படும் பேச்சு வழக்கில் கூட வேற்றுமைகளைக் காணமுடிகிறது. ஒரு தனிமனிதனே ஒரு இடத்தில் அல்லது ஒரு நேரத்தில் அல்லது ஒருநிலையில் ஒருவகையான பேச்சுவழக்கையும், மற்ற நேரங்களில் வேறு வகையான பேச்சு வழக்கையும் கையாளுவதைக் காணமுடிகிறது. இது தனிமனிதப் பேச்சு வழக்கிலுள்ள தனிநடையைக் காட்டுகிறது.

கிளை மொழியியல் என்பது பல்வேறு கிளைமொழிகளைப் பற்றியும் அவற்றிற்குள்ள உறவு முறைகள், வேறுபாடுகள் இவைகளைப் பற்றியும் கூறுகின்ற மொழியியலின் ஒரு பிரிவாகும். ஒரு குறிப்பிட்ட காலத்தில பயன்படுத்தப்படும் ஒரு மொழியின் பல கிளைமொழிகளைப் பற்றிய படிப்பை விளக்கக்கிளை மொழியியல் என்று கூறுவர்.

பேச்சு வழக்கில் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பு. பேச்சு வேறுபாடுகள் கிளைமொழிகளுக்கிடையே நிறைந்து காணப்படுகின்றன. இதற்குத் தக்க பல காரணங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, ஒரு மாவட்டக்காரர் இன்னொரு மாவட்டக்காரருடன் பேசும்போது இருவருடைய பேச்சு வழக்குகளிலும் வேறுபாடுகளிருப்பதை

நன்கு உணர முடிகிறது. அதேபோல் படித்தவர் படிக்காதவரிடம் பேசும்போதும் இருவர் பேச்சு வழக்குகளிலும் வேறுபாடுகள் நிறைந்திருப்பதைக் காண முடிகிறது. மற்றும் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர் மற்றோரினத்தைச் சார்ந்தவரிடம் பேசும் போதும் அவர்களின் பேச்சு வழக்குகளில் வேற்றுமைகள் ஏற்படுவதை உணர்கிறோம். மேலும் நகரத்தைச் சார்ந்தவர் நாட்டுப்புறத்தாரிடம் பேசும்போதும் மேற் கூறியபடி பேச்சு வேற்றுமைகள் நிறைந்தே காணப் படுகின்றன. இவ்வாறு காணப்படும் பேச்சு வேற் றுமைகள் ஒரு சாரார்க்கு மட்டும் ஏற்படும் ஒருவழி அனுபவமல்ல ; இருசாரார்க்கும் ஏற்படக்கூடிய இருவழி அனுபவம் என்றும் கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்ட பேச்சு வேற்றுமைகள் மக்களி டையே வேறுபாட்டை மட்டும் காட்டுவதல்ல; இவை மக்களிடையே உயர்வு தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்தி விடுகின்றன. மேலும் இந்த வகையான பேச்சு உயர்ந்தது என்ற எண்ணம் மேலோங்கி மக்களிடையே செல்வாக்குப் பெற்று பெரும் பாலோரை அவ்வகையில் பேசும்படிச் செய்து விடு வதையும் நாம் காண்கிறோம்.

கல்கத்தாவில் பேசப்படுகின்ற வங்காளமொழி செல்வாக்கு வாய்ந்ததாக எண்ணப் படுவதால், இலக்கியங்களிலும், சமூக அந்தஸ்துப் பெற்றவர்களிட மும் அந்த வகையான வங்காளமொழி (சலித்-பாஷா) செல்வாக்குப் பெற்று வளர்ந்து வருகிறது. ஆனால்

தமிழ் நாட்டில் சென்னைத் தமிழை இழிவானதாகவே கருதுகின்றனர். தமிழகத்தில் அந்தந்த மாவட்டத் தமிழ் அந்தந்த மாவட்டத்தாரால் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் இதற்கிடையில் பொதுவான, எல்லாரும் எளிதில் பின்பற்றக்கூடிய தமிழ், போக்கு வரத்துச் சாதனங்களின் சாதகத்தாலும், செய்தி பரவும் வகைகளாலும், கல்வி பரவுவதாலும், மற்றும் இக்கால விஞ்ஞான முன்னேற்றத்தாலும் மெல்ல மெல்ல உருவாகிவருகிறது என்பதை எவ்வும் மறுக்க முடியாது.

பேச்சு வேற்றுமைகளிருப்பது நியாயமே. எல்லா மொழிகளிலும் பேச்சு வேறுபாடுகள் காணப்படு கின்றன. இப்பேச்சு வேறுபாடுகளின்படி ஆங்கில மொழியும் மற்றும் பல மொழிகளும் பல்வேறு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதை ஹான்ஸ்ஹூரத் என்ற அமெரிக்க மொழியியல் அறிஞரின் 'நியூ இங்கி லாந்து மொழிகளின் வர்ணனை' என்ற நூலில் தெளி வாகக் காணமுடிகிறது. அதேபோல் ஜி. ஏ. கிரியர் ஸனின் 'இந்திய மொழிகள் பற்றிய வர்ணனை' யிலும் இவற்றைக் காணலாம்.

பேச்சு மொழி வேறுபாடுகளை இன்று பல மொழி யியல் அறிஞர்கள், குறிப்பாகக் கிளைமொழியாராய்ச்சி யாளர்கள் மிகவும் உற்சாகமாகவும், தீவிரமாகவும் ஆராய்ந்து வருகின்றனர். ஏனென்றால் பேச்சு வேறு பாடுகள் மனிதனின் உள்ளக்கிடக்கை, சமூகத்தில் அவனது பங்கு, அவனுடைய ஆசைகள், எண்ணங்

கள், சிந்தனைகள், மற்றும் செயல்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவதுடன் அவன் சார்ந்திருக்கும் குழுவையும் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.

இந்தியாவைப் பொறுத்த வரையில் சாதி வேற்றுமையும், இடவேற்றுமையும் கிளைமொழிப் பாகுபாட்டில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இதைத் 'தெற்காசியாவில் மொழிக் கூறுபாடுகள்' என்ற நூல் தெளிவாக்குகிறது. ஒரே ஊரில் பலர் வசிக்கிறார்கள்; பல இனத்தவர்கள் வசிக்கிறார்கள். வசிப்பவர்கள் எல்லோரும் ஒரேவிதமாகப் பேசுவதில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர் ஒரு வகையாகவும், மற்றொரு இனத்தைச் சார்ந்தவர் வேறொரு விதமாகவும் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட வேறுபாடுகளையெல்லாம் பல மொழியியலறிஞர்கள் கூர்ந்து கவனித்து ஆராய்ந்து தெளிவாக எடுத்துச் சொல்லியுள்ளார்கள். இன்றும் கூர்ந்து கவனித்து வருகிறார்கள்.

மைசூர் மாநிலத்தில் பெங்களூர் பகுதியில் பேசப்படும் கன்னட மொழியின் இரு கிளைமொழிகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் ஆராயப்பட்டுள்ளன. இவ்விரு கிளைமொழிகளும் இரு வேறுபட்ட சாதியினரால் பேசப்படுபவையாகும். ஒரு கிளை மொழியை ஒக்கிலியர் சாதியைச் சேர்ந்தவர்களும் மற்றொரு கிளைமொழியைப் பிராமணர் சாதியைச்சேர்ந்தவர்களும் பேசுகின்றனர். இக்கிளைமொழிகளுக்கிடையே காணப்படும் பேச்சு வேறுபாடுகள் மூன்று வகையாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. அவை

காரணம்:- 1. ஒலியன் மாற்றங்கள், 2. சொல்லியன் மாற்றங்கள் 3. சொல் மாற்றங்கள் என்பவைகளாகும். இம்மாற்றங்கள் எடுத்துக்காட்டுக்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பி என்பது பிராமணர் பேசும் கிரீமொழியையும், ஒ என்பது ஒக்கிலியர் பேசும் கிரீமொழியையும் குறிக்கும்.

ஒலியன் மாற்றங்கள்

		பி	ஒ	
1.		/tzɔ̄/	/pjā/	
	எ. கா.	kɔ̄fi	kāpi	காப்பி
		ḍazan	ḍajan	டஜன்
2.		/o/	/a/	
	எ. கா.	āgolla	āgalla	ஆகாது
3.		/h/	/ɸ/	
	எ. கா.	hāku	āku	போடு
4.		/š/	/s/	
	எ. கா.	šānti	sānti	சாந்தி
5.		/ē/	/yā/	
	எ. கா.	pēṭe	pyāṭe	பேட்டை

சொல்லியன் மாற்றங்கள்

1. நான்காம் வேற்றுமைச் சொல்லியன்

	பி	ஒ	
	—ge, -kke	—ke	
எ. கா.	ūṭa-kke	ūṭ-ke	சாப்பாட்டிற்கு
	pēṭe-ge	pyāṭ-ke	பேட்டைக்கு

2. ஏழாம் வேற்றுமைச் சொல்லியன்

பி	ஒ
—alli	—āgi

எ. கா. baṇḍy-alli baṇḍy-āgi வண்டியில்

சொல்மாற்றங்கள்

	பி	ஒ	
1.	matte	mante	மறுபடியும்
2.	togo	teko	எடு
3.	huḷi	yesru	கரி
4.	hēge	yeṅge	எப்படி
5.	sumne	sumke	சும்மா

6.	yešṭu	yēsu	எவ்வளவு
7.	horḍu	voḷdu	புறப்படு
8	ūṭamāḍu	uṇṇu	உண்
9.	bombe	gombe	பொம்மை
10.	bāglu	bāklu	கதவு

கல்வியால், தொழில் நிலையால், வாழ்க்கை முறையால், புதுக் குடியேற்றங்களால், தனித்து வாழும் வாழ்க்கையால், போக்குவரத்துச் சாதனங் களால், பொருளாதார நிலையால், சமூக அமைப் பால், வியாபார முறையால் பேச்சு நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கிறது என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இவ்வாறு பேச்சு மாறுபட்டு வருகிறது என்பதை 'இந்திய மொழிகளின் வர்ணனை' மிகவும் தெளிவாக விளக்குகிறது. மேலும் ஒரே சாதியைச் சேர்ந்தவர் பல இடங்களில் எவ்வாறு பேச்சு வகையில் மாறுபடுகின்றனர் என்பதையும் மொழியியல் அறிஞர் கள் இன்று ஆராய்ந்து வருகிறார்கள். இடத் தொலைவு களாலும் சுற்றுப்புறச் சூழ்நிலையாலும் மற்ற சாதியைச் சேர்ந்தவரின் தொடர்பாலும் பேச்சு வேற்றுமை ஏற்பட்ட வண்ணம் உள்ளது.

கிளைமொழியியலில் நான்கு மிக முக்கியமான பிரிவு கள் உண்டு.

அவைகளாவன:-

1. கிளைமொழிக் கேள்வித்தாள்.

2. கிளைமொழி இலக்கணம்.

3. கிளைமொழி அகராதி.

4. கிளைமொழி வரை படங்கள்.

கிளைமொழிகளைப் பற்றிய பேச்சுக் குறிப்புகளைத் தொகுப்பவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது கிளைமொழிக் கேள்வித்தாளேயாகும். இக் கேள்வித் தாளில் மிக முக்கியமான எல்லாச் செய்திகளும் அடங்கிவிடும். அந்தந்த வட்டார, சாதி, சமூக, பொருளாதார, பூகோள அடிப்படைகளில் அக் கேள்வித்தாள் அமைக்கப்பட்டிருக்கும். கேள்வித் தாளில் கேட்டிருப்பவை பெரும்பாலும் அந்தந்த பகுதி மக்களுக்குத் தெரிந்தவைகளாகவும், அவர் களின் பேச்சு வழக்கில் இருப்பவைகளாகவும், வேற்றுமைகாட்டக் கூடியவை என்று எண்ணப் படுபவைகளாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, கடலும் கடல் சார்ந்த இடமுமென்றால் அவைகளைச் சார்ந்திருக்கும் பொருளைக் குறித்தும், காடும் காடு சார்ந்த இடமுமென்றால் அங்கு அமைந்திருக்கும் பொருட்களைக் குறிப்பவைகளைப் பற்றியும், விவசாயம் மிகுந்த பகுதியென்றால் விவசாயம் பற்றிய சொற்களைப்

பற்றியும், தொழிலாளர் மிகுந்த பகுதியென்றால் தொழில்களையும், சங்கங்களையும் பற்றிய சொற்களைக் குறித்தும்; மற்றும் உறவுமுறைச் சொற்கள், உடலுறுப்புக்கள்பற்றிய சொற்கள் போன்றவைகளைக் குறித்தும் கேள்வித்தாள் அமைந்திருக்கும். இக் கேள்வித்தாளில் உள்ள கேள்விகள் நேர்முகமானவையாகவும், மறைமுகமானவையாகவும் அமைந்திருக்கும்.

கிளைமொழிக்கான செய்திகளைத் தொகுக்குமுன் மொழியியல் ஆராய்ச்சியாளர் முக்கியமான இரண்டு செயல்களை முடிவு செய்ய வேண்டும்.

1. கிளைமொழியைப் பற்றிய செய்திகளைத் தொகுக்கத் தேர்ந்து எடுக்கப்பட வேண்டிய இடம்.

2. கிளைமொழிகளைப் பற்றிய செய்திகளைச்சேகரிக்கத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தகவலாளி.

தேர்ந்தெடுக்கப்படவேண்டிய இடம் பொருளாதார, சமுதாய, கலாச்சார நிலைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகஇருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படவேண்டிய தகவலாளியின் கல்வி, வயது, ஊர்வாசம் போன்றவைகளைக் கொண்டு தகவலாளியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதன் பிறகே கிளைமொழிபற்றிய செய்திகளைக்கேள்வித் துணை கொண்டு சேகரிக்க வேண்டும்.

மொழியியல் ஆராய்ச்சியாளர் ஒவ்வொரு இடத்திற்கும் செல்வார்; ஒவ்வொரு சாதியாரையும் அணுகு

வார்; பல்வேறு தொழில் செய்பவர்களையும் பார்ப்பார். ஒவ்வொரு பிரிவிலும் வயதுக்குழுவுக்குத் தகுந்த மாதிரி அவருடைய கேள்விகளும் அணுகும் முறைகளும் அமைந்திருக்கும். ஒவ்வொரு பொருளின் பெயரையும் அதை உச்சரிக்கும் முறை மாறுபடாமல் சரியாகக் கேட்டுக் குறித்துக் கொள்வார். பதிவு நாடா (tap-recorder) இருக்குமானால் பேச்சுகளைப் பதிவு செய்து கொள்வார். ஒரு வார்த்தை பலபொருளைக் குறிப்பதையும், பல பொருளுக்கு ஒரு வார்த்தை பயன்படுவதையும் சேகரிப்பார். ஒலியன் மாறுபாடுகளிலிருந்து தொடங்கி வாக்கிய முடிவுவரையிலும் அவருடைய கவனம் இருந்துகொண்டிருக்கும். சொற்கள், வாக்கியங்கள், சொல்லடுக்கு, உரையாடல், கதை போன்றவைகள் கிளைமொழியைப் பற்றி அவர் சேகரித்த தொகுப்பில் அடங்கியிருக்கும்.

2. கிளைமொழி இலக்கணம்

ஒரு மொழியின் இலக்கணத்தைப் போலவே ஒரு கிளைமொழியின் இலக்கணமும் அமைந்திருக்கும். ஒரு கிளைமொழியின் இலக்கணத்தில் கீழ்க்கண்ட பகுதிகள் அடங்கியிருக்கும்.

1. ஒலியன் இயல்.
2. சந்தி.
3. சொல்லியன் இயல்.
4. சொற்றொடரியல்.

ஒலியனியலில் அந்தக் கிளமொழியிலுள்ள ஒலியன்களைப் பற்றியும் அவை வந்து வழங்குகின்ற முறைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கும். சந்திப் பகுதியில் பல்வேறுபட்ட விதிகள் அவை உபயோகப் படும் வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாகக் கொடுக்கப் பட்டிருக்கும். சொல்லியனியலில் இரு பெரும் பிரிவு கள் உண்டு. ஒன்று பெயர் பற்றியது; மற்றொன்று வினை பற்றியது. இவ்விரண்டிலும் வரும் இலக்கணக் குறிப்புகளைப் பற்றியும் அவற்றில் வரும் சொல்லியன் களைப் பற்றியும் அவை வந்து வழங்குகின்ற முறை களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கும். சொற்றொ டரியலில் வாக்கிய அமைப்புக்கள் போன்றவை பற்றிச் சொல்லப்பட்டிருக்கும்.

3. கிளமொழி அகராதி

கிளமொழி அகராதியில் அக்கிளை மொழியின் சொற்களஞ்சியம் கொடுக்கப்பட்டிருக்கும். சொற் களஞ்சியத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு அகர வரிசையில் தொடங்கிக் கொடுத்தல் வேண்டும்.

சொற்களஞ்சியம்

வரிசை எண்	சொல்		பொருள்
1.	*aḷi*	(அடி)	beat
2.	*a:ḷu*	(ஆடு)	play
3.	*iḷi*	(இடி)	thunder
4.	*i:ḷḷi*	(ஈட்டி)	spear

5.	uppu	(உப்பு)	salt
6.	u:ru	(ஊர்)	village
7.	eṭu	(எடு)	take
8.	e:ḷu	(ஏழு)	seven
9.	oṉṟu	(ஒன்று)	one
10.	o:ṭu	(ஓடு)	run
11.	kaṭṭu	(கட்டு)	tie
12.	ca:ti	(சாதி)	caste
13.	tale	(தலை)	head
14.	na:ḷu	(நான்கு)	four
15.	pa:ṭu	(பாடு)	sing
16.	ma:ṭu	(மாடு)	cow
17.	ya:ru	(யார்)	who
18.	yeṇṭu	(இரண்டு)	two
19.	la:pō	(இலாபம்)	gain
20.	va:	(வா)	come

4. கிளைமொழி வரைபடங்கள்

இவ்வாறு தேடி அலைந்து சேகரிக்கப்பட்டவற்றை மாவட்ட வாரியாக மொழியியலார் அலசி ஆராய்ந்து, அந்தந்த மாவட்டப் பேச்சுக்குத் தனித்தனியான அமைப்பைச் சேர்க்கிறார். தனித்தனியான கிளைமொழி இலக்கணங்களை உருவாக்கி, சொற்களஞ்சியங்களின் அகராதிகளை உண்டாக்குகிறார். இவைகளை ஒப்பிட்டு நோக்கும்போது அக்கிளைமொழிகளுக்

கிடையேயுள்ள ஒலியன் மாற்றங்கள், சொல்லியன் மாற்றங்கள், சொல்மாற்றங்கள், வாக்கிய அமைப்பின் மாற்றங்கள் முதலியன தெளிவாகக் கிடைக்கும்.

இம் மாற்றங்கள் கிளைமொழிகளைப் பாகுபடுத்துவதற்குப் பயன்படும். இவ்வாறு ஒரு கிளைமொழியையும், இன்னொரு கிளைமொழியையும் பிரிக்கப் பயன்படும் ஒலியியல் மாற்றங்களை வரைபடங்கள் மூலம் காட்டலாம். வரைபடங்களில் இம்மாற்றங்களைக் கோடுகளின் வாயிலாகவே காட்டுதல் வேண்டும். இக்கோடுகளைக் கிளைமொழிப்பாகுபாட்டுக் கோடுகள் என்பர். இக் கிளைமொழிப்பாகுபாட்டுக் கோடுகளில் மூன்று வகையுண்டு.

1. கிளைமொழிப் பாகுபாட்டு இணை கோடுகள்.
2. கிளைமொழிப் பாகுபாட்டு ஒருமையக் கோடுகள்.
3. கிளைமொழி பாகுபாட்டுக் கோடுகளின் கற்றை.

இவ்வரை படங்களிலே இடத்திற்கு இடம் கிளை மொழி மாறுபடுவதைக் குறிக்கலாம். இந்த வரை படங்கள் செய்வதற்குத் தனியான கொள்கைத் திட்டங்கள் உள்ளன. இது ஒரு தனிக்கலை. இக்கலை அமெரிக்க மொழியியல்வாதிகளிடையே மிகுந்து காணப்படுகிறது. மலேசியாவில் பேசப்படும் தமிழ் வகைக்குக் கூட வரைபட விளக்கம் ஆராய்ந்து தரப் பட்டுள்ளது.

இதுதவிர, கிளை மொழியியலில் எவ்வாறு பல கிளை மொழிகள் தம்முள் உள்ள உறவுகளால் ஒன்றுகச் செயல்படுகின்றன என்பது பற்றியும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இது, அக்கிளை மொழி களின் சொற்களஞ்சியத்தில் அவற்றிற்குள்ள பொது வான சொற்களின் அடிப்படையிலும், அவை மக்க ளிடையே பயின்று வழங்கும் முறையிலுமே நிர்ண யிக்கப் படுகிறது. கிளை மொழிகளுக்கிடையே காணப்படும் பொதுவான சொற்களின் எண்ணிக்கை சதவீதம் கூடினால் அவை ஒரு மொழியின் மொழிக் கிளைகளே என்பதை எளிதில் கூற முடிகிறது. இது தவிர புள்ளிவிவரக் கணக்கீட்டு முறையிலும், கணித முறையிலும், இதை நிர்ணயிக்க ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

மொழியியல் ஒரு விஞ்ஞானம். அதைப் பயன் படுத்துவது ஒரு தனிக் கலை. ஆகையால் அதன் பிரி வான பேச்சு வகைகளையும், கிளை மொழிகளையும், அவற்றிடையே காணப்படும் உறவு முறைகள், வேறு பாடுகள் போன்றவற்றையும் ஆராய்தல் மிகவும் இன்றியமையாததாகும். கல்வி நாளுக்கு நாள் பரவிக் கொண்டிருப்பதால் மக்கள் இடம் விட்டு இடம் வேலைக்கும் கல்விக்குமாகச் செல்கிறார்கள். அப்படி மாவட்டங்கள், மாநிலங்கள் விட்டுச் செல்லும்போது, போகக்கூடிய இடங்களின் மொழி வகைகளைப் புரிந்து கொள்வது மக்களை எளிதில் புரிந்து கொள்ளச் செய்யும்; கல்வியின் தரத்தை உயர்த்தும்; மொழி யின் வளத்தை இன்னும் பெருக்கிச் சொல்லமைப்பை

யும் எண்ணிக்கையையும் கூட்டி, மொழியை விவேக மாகப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலைத் தரும்; எல்லாவற்றிற்கும் மேலாக மொழிப் பூசல்களின் தேவையின்மையைத் தெளிவாக்கி அடிப்படைகளை நன்கு அறியச் செய்யும். இவையெல்லாம் சொல் வதற்குக் குறைவாகவும், குறைகள் உள்ளவையாக வும் தோன்றலாம். ஆனால் காலப்போக்கில் இவற் றின் நன்மைகளை எல்லாரும் அறிவார்கள் — உணர்வார்கள்.

கலைச்சொல்லகராதி

தமிழ் — ஆங்கிலம்

அக அமைப்பு	Central system
அசை	Syllable
அசை முடி	Peak of a syllable
அசை முதல்	Onset of a syllable
அசையா உறுப்புக்கள்	Points of articulation
அசையீறு	Coda of a syllable
அசையும் உறுப்புக்கள்	Articulators
அட்டவணை	Chart
அடிப்படைச்சொல்	Base form
அடிப்படைப்பகுதி	Base component
அடிப்படையுறுப்பு	,,
அடிப்படை வாக்கியம்	Kernal sentence
அடுத்து நிற்பவை	Immediate constituents
அண்ணம்	Palate

அரையுயிர்	Semi vowel
அழுத்தம்	Stress
அளவை	Length
இசை	Intonation
இசை மட்டம்	Pitch level
இடப்பெயர்	Pronoun
இடம்	Person
இட வேற்றுமை	Regional difference
இடை	Mid
இணைக்கும் வினை	Copula
இணைச்சொல்	Compound
இதழ்	Lips
இதழ் குவி	Rounded
இதழ் குவியா	Unrounded
இயங்கு தன்மை	Vitality
இயல்பு இசை	Leval pitch
இயற்கையான செயற்கை மொழி	Creole
இரட்டைக்கிளவி	Reduplication
இலக்கண அமைப்பு	Grammatical structure
இலக்கண உறுப்பு	Grammar
இலக்கணப் பிரிவுகள்	Grammatical categories
இழு இயல்பு	Strident feature
ஈரொலி	Diphthong

உட்கிடை அமைப்புக்கள்	Deep structure
உதட்டொலி	Labial sound
உதடு	Lips
உயர் இசை	High pitch
உயர் – இடை	Higher-mid
உயர் – கீழ்	Higher-low
உயர்மட்டச் செய்தியளவு	Maximum information
உயிர் நூல்	Biology
உயிரியல்பு	Vocalic feature
உயிரொலி	Vowel
உரசல் ஒலி	Fricative
உரசல் தடையொலி	Affricate
உரசொலி	Fricative
உள் மாற்றம்	Replacement
உள் விகுதி	Infix
உள்ளமைப்பு	Deep structure
உள நூல்	Psychology
எண்	Number
எண்ணிக்கையளவு	Frequency or functional load
எதிர் நிற்குமியல்பு	Contrast
எதிர் பெயரடைவு	Negative
எழுத்து மொழி	Written language
ஒப்புமை மொழியியல்	Comparative linguistics

ஓரே ஓர்	Marginal
ஒலி	Phone/Sound
ஒலி உருவம்	Phonetic shape
ஒலி ஒற்றுமை	Phonetic similarity
ஒலியலைகள்	Sound waves
ஒலியன்	Phoneme
ஒலியன் சேர்க்கை	Phonemic cluster
ஒலியன் மாற்றங்கள்	Phonemic differences
ஒலியனியல்	Phonemics
ஒலியனியல் உறுப்பு	Phonological component
ஒலியியல்	Phonetics
கண்டுபிடிப்பு முறை	Discovery procedure
கணக்கிகள்	Computer
கிளைமொழி	Dialect
கிளைமொழி அகராதி	Dialect dictionary
கிளைமொழி இலக்கணம்	Dialect grammar
கிளைமொழிக் கேள்வித்தாள்	Dialect questionnaire
கிளைமொழிப் பாகுபாட்டு இணைக் கோடுகள்	Parallal isoglases
கிளைமொழிப் பாகுபாட்டு ஒரு மையக் கோடுகள்	Concentric isoglosses
கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள்	Isoglosses
கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளின் கற்றை	Bundle of isoglosses

கிளைமொழியியல்	Dialectology
கிளைமொழி வரைபடங்கள்	Dialect atlas
கீழ்	Low
கீழ் இசை	Low pitch
கீழ் - இடை	Lower – mid
கீழ் – மேல்	Lower - high
குரல் இயல்பு	Voiced feature
குரல் நிறைந்த ஒலி	Voiced souud
குரல்வளை	Larynx
குரலில்லா ஒலி	Voiceless sound
குவி இயல்பு	Rounded feature
குழுக்குறி	Code
குழுக்குறிகளை அனுப்பும் முறை	Encoding
குழுக்குறிகளை மாற்றிப் பெறும் முறை	Decoding
குற்றியல் ஒலி	Short sound
குறிப்பு வினை	Appellative verb
குறியீடு	Sign
குறைத்தல்	Substraction
கூட்டல்	Addition
கூட்டுச்சொல்	Compound
கேட்பவர்	Hearer
சாதி வேற்றுமை	Social difference

சார்பியைச் சொல்லியன்	Bound morpheme
சிக்கன விதி	Principle of Economy
சிறப்பியல்புகள்	Distinctive features
சீரமைப்பு விதி	Principle of neatness of pattern
செம்மொழி	Classical language
செய்தி	Information
செய்தி அனுப்பும் பொறி	Transmitter
செய்தி செல்லும் வழி	Channel
செய்திப் பரிமாற்றம்	Communication
செய்திப் பரிமாற்ற அமைப்பு	Communication system
செய்திப் பரிமாற்றக் கொள்கை	Information theory
செய்தி பெறும் பொறி	Receiver
செய்தியளவின் விகிதம்	Relative entropy
செய்வான் தொடர்	Noun phrase
செய்வினை	Active voice
செயப்படுபொருள்	Object
செயப்பாட்டு வினை	Passive voice
செயற்கை மொழி	Artificial language
சேர்க்கைச் சார்பியை	Conjunctive particle
சேரிடம்	Destination
சொல் மாற்றங்கள்	Lexical differences
சொல்லடுக்கு	Paradigm

சொல்லாக்கம்	Derivation
சொல்லியல் நடைமுறை	Morphological process
சொல்லியன்	Morpheme
சொல்லியன் இயல்/சொல்லியல்	Morphology
சொல்லியன் மாற்றங்கள்	Morphological differences
சொல்லொலியன்	Morphophoneme
சொல்லொலியன் இயல்	Morphophonemics
சொற்களஞ்சியம்	Lexicon
சொற்பொருள் சேர்க்கை	Inflection
சொற்றொடர்	Sentence/Phrase
சொற்றொடர் அமைப்பு	Phrase structure
சொற்றொடர் உறுப்பு	Syntactic component
சொற்றொடரியல்	Syntax
தகவலாளி	Informant
தடையொலி	Stop
தலைமை	Head
தனிச்சொல்லியன்	Free morpheme
தனிநடை	Style
தனிமனிதப் பேச்சு வழக்கு	Idiolect
திணைப்பெயர்	Gender noun
திறன் ஒப்புமை	Relative efficiency
துணை வினை	Auxiliary verb
துலங்கு இயல்பு	Sonorant feature

தொடர் இயல்பு	Continuant feature
நடு	Central
நா உயரம்	Tongue height
நிறுவல் மொழி	Standard language
நிறுவனம்	Standard
நீக்கல்	Deletion
நீட்டல் ஒலி	Long sound
பதில் வைத்தல்	Replacement
பயனிலைத் தொடர்	Predicate phrase
பல்	Dental
பல்லீறு	Alveolar
பல்லும் இதழும்	Labio - dental
பற்றுசு	Transformation
பற்றுசுப் பகுதி	Tronsformational component
பால்	Gender
பிறப்பிடம்	Source
பிறப்பியல்பு	Manner of articulation
பின்	Back
பின் பெயரடைவு	Post – adjective
பின்வரும் இடப்பெயர்	Post – position
பின் விகுதி	Suffix

பின்னண்ண ஒலி	Velar sound
பின்னண்ணம்	Velum
புள்ளிவிவரக் கணக்கீட்டு முறை	Statistical computation method
புற அமைப்பு	Peripheral system
பெயர்	Noun
பெயர்ச்சொல்	,,
பெயர்ச்சொல் தொடர்	Noun phrase
பெயரடை	Adjective
பெயரடைச் சொல்	Adjectival noun
பெயரடைத் தொடர்	Adjective phrase
பேச்சுப் பரிமாற்றம்	Human communication
பேச்சு மொழி	Spoken language
பேச்சு வழக்கு	Speech habits
பேச்சு வேற்றுமை	Speech variation
பேசுபவர்	Speaker
பொருள் உருவம்	Semantic shape
பொருளதிகார உறுப்பு	Semantic component
பொருளதிகாரம்	Semantics
மனநூல்	Psychology
மனிதனின் ஒலிப்பொறி	Human speech mechinary

மாற்றல் துணையுறுப்பு/மாற்றல் பகுதி	Transformational sub-component
மாற்றிலக்கணக்காரர்	Transformationalists
மாற்றிலக்கணம்	Transformational Grammar
மாற்றிலக்கண முறை	Transformational approach
மாற்றுச் சொல்	Allomorph
மாற்று விதிகள்	Transformational rules
மாற்றொலி	Allophone
மாறி வழங்கும் இயல்பு	Complementation
மிகை	Redundancy
முகட்டு இயல்பு	Coronal feature
முழு மாற்றம்	Supletion
முழுமையான செய்திப் பரிமாற்ற அமைப்பு	Idealized Communication system
முன்	Front
முன் வரும் இடப்பெயர்	Preposition
முன் விகுதி	Prefix
மூக்கியல்பு	Nasal feature
மூக்கின ஒலி	Nasal sound
மூக்கினமாதல்	Nasalization
மூக்கொலியன்	Nasal phoneme
மூச்சு நிறைந்த ஒலி	Aspirated sound
மூச்சு நிறையா ஒலி	Unaspirated sound

மெய்யியல்பு	Consonantal feature
மெய்யொலி	Consonant
மெய்யொலியன்	Consonant Phoneme
மேல்	High
மேற்கோள்	Quotation
மொத்தச் செய்தி அளவு	Total amount of information
மொழிப் பரிமாற்றம்	Language Communication
மொழியியல்	Linguistics
வட்டார மொழி	Regional language
வணிக மொழி	Pidgin
வரலாற்று மொழியியல்	Historical Linguistics
வரன்முறை ஒலியனியல்	Systematic Phonemics
வரன்முறை ஒலியியல்	Systematic Phonetics
வருடொலி	Flap
வளநா ஒலி	Retroflex sound
விகிதாசார நிகழ்வு	Probability
விகுதி	Affix
விகுதி சேர்த்தல்	Affixation
விரித்தல்	Expansion
விளக்கக் கிளைமொழியியல்	Descriptive Dialectology
விளக்க மொழியியல்	Descriptive Linguistics
விளி	Vocative

விறைப்பு இயல்பு	Tense feature
வினை/வினைச்சொல்	Verb
வினைச்சொல் தொடர்	Verb Phrase
வினையடை	Adverb
வினையாலணையும் பெயர்	Participial noun
வெளிப்படை	Surface level
வெளியமைப்பு	Surface Structure
வெளியியல்பு	Anterior feature
வேற்றுமை	Case
லகர ஒலி	Lateral sound
ரகர ஒலி	Trill sound

உதவிய நூல்கள்

1. Agesthialingom, S., (1967) *A Generative Grammar of Tamil*
2. Bloomfield, L., (1933) *Language*
3. Channon, C. E., & Weaver, W., (1945) *The Mathematical Theory of communication*
4. Cherry, C., (1957) *On Human Communication*
5. Chomsky, N., (1957) *Syntactic Structures*
6. Chomsky, N., (1965) *Aspects of the theory of Syntax*
7. Chomsky N., & Halle, M., (1968) *The sound patterns of English*
8. Ferguson, C. F., & Gumperz, J. J., (1960) 'Linguistic Diversity in South Asia,' *IJAL* Vol. 26, No. 3

9. Gleason, H.A., (1955) *An Introduction to Descriptive Linguistics*

10. Greenberg, J.H Osgood, C. E. & Jenkins, J. J., (1963) 'Memorandum' in the *unniversals of Language*

11. Grierson, G. A., (1931) *Linguistic survey of India*

12. Hall R. A., (1964) *Introductory Linguistics*

13. Harris Z. S., (1951) *Structural Linguistics*

14. Heffner, R. M. S., (1960) *General Phonetics*

15. Hockett C. F., (1958) *A Course in Modern Linguistics*

16. Hockett, C. F., (1960) 'A manual of Phonology' *IJAL*, Vol. 23

17. Jakobson, R., & Halle, M., (1956) *Fundamentals of Language*

18. Kaiser, L., (1957) *Manual of Phonetics*

19. Karunakaran, K., (1969) 'A Descriptive grammar of the dialect of the Kollimalai tribes' (unpublished Ph. D. thesis

submitted to Annamalai University)

20. Lenneberg, E. H., (1964) 'A Biological perspective of Language', In *New Directions in the study of Language*

21. Lenneberg, E. H., (1966) 'The Natural History of Language' in *The Genesis of Language*

22. Miller, G. A., (1951) *Language and Communication*

23. Moulton, W. G., (1960) *The Sounds of English and German*

24. Murugaiyan, K., (1970) 'Tolkappiar's conception of phonetics' (paper presented in the 'Seminar on Tolkappiyam' held in Annamalainagar.)

25. Nida, E. A., (1946) *Morphology — The Descriptive Analysis of words*

26. Osgood, C. E., & Sebeok — *Psycholinguistics* Reader

27. Pike, K. L., (1943) *Phonetics*

28. Pike, K. L., (1947) *Phonemics: A technique for Reducing Languages to writing*

29. Postal, P. M , (1967) *Aspects of Phonological Theory*

30. Saussure, F. D., (1959) *Course in General Linguistics*

31. Saporta, S., (1961) *Psycholinguistics* Readers

32. Thomas, O., (1969) *Transformational Grammar and the teacher of English*

33. Thirumalai, M. S., (1967) 'A comparative phonemic study of Tamil and Hindi unpublished D. Phil. thesis submitted to Calcutta University)

34. Vigotsky, L. S., (1962) *Thought and Language*

35. Weinreich, U., 'Language in contact' in Saporta's *psycholinguistics* Reader.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	4	வாழியாரோ	வாழியரோ
2	8	மாடனும்	மானுடம்
2	3	வுயிரே என்ரூர்''	வுயிரே'' என்ரூர்
26	8	அவர்களுடை	அவர்களுடைய
61	1	தந்தான்	வந்தான்
61	4	rediculing	ridiculing
68	15	[Vt:ŋgɛ]	[Vi:ŋgɛ]
111	12	எடுத்துகாட்டாக	எடுத்துக்காட்டாக
132	9	வேண்டுமு	வேண்டும்
133	13	லாக்கத்திற்கும்	சொல்லாக்கத் திற்கும்
141	5	உறிவோம்	அறிவோம்
141	16–17	என் என்னும்	என்னும்
168	17	விணைசசொல்லத்	விணைச்சொல்லத்
170	11	பொருட்தெளிவால்	பொருள்தெளிவால்
173	12	.சோ.	.செ.
173	12	.சோ.	.செ.
174	17	பெயச்சொல்	பெயர்ச்சொல்

179	14	மற்ற	மாற்ற
182	21	முறையில்	முறை
183	18	முறையில்	முறை
186	26	இயல்புகள்	இயல்புகள்;
191	11	காட்டுகிறது	காட்டுகின்றன.
191	19	பெ.பொ.தொ.	பெ.சொ.தொ.
192	7	மூன்ரும் விகுதி	மூன்ரும் விதி
192	11	என்வே	எனவே
192	15	எழுதுவேபம்	எழுதுவோம்
208	1	விதிதள்	விதிகள்
208	5	சொற்றெடர்	சொற்ரெடர்
211	20	விளங்குகிறது	விளக்குகிறது
217	14	வெளிப்படுத்தலாம்	வெளிப்படலாம்
218	11	ஈரொலியின்	ஈரொலியன்
218	20	ஓரொலியின்	ஓரொலியன்
219	2	எண்ணிக்கையும்	எண்ணிக்கையையும்
219	4	எண்ணிக்கையும்	எண்ணிக்கையையும்
227	20	எல்லாமொழிகளும்.	எல்லாமொழிகளும்
235	24	பயன்படுத்து கின்றன	பயன்படுகின்றன
253	17	முறைலேயே	முறையிலேயே
275	18	parallal isoglases	parallel isoglosses